"இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம்"

நூலாசிரியர்

அ. வா. முஹ்சீன்

# இங்ஙினையும் ஒரு மஹ்சர்



வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம்"

நூலாசிரியர்

**அ. வா. முஹ்சீன்**

# இங்ஙினெயும் ஒரு மஹ்சர்

வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**INGINAUM ORU MAHZAR** *(Tamil)*

❍ By: A W. Muhseen ❍ First Edition : 11 June 2010 ❍ Cover Design and Layout : Nowfar alm ❍ Published By : Kalaham Publication, Main Cross Road, Valaichchenai - 05. Tel: +94 65 2257176, Mob: +94 77 3657428, +94 71 5123482 Email : kalahamsi@yahoo.com ❍
Copyright : Kalaham Publication ❍ Printed By : A J print (Dehiwala) ❍

ISBN : 978-955-0397-00-6

Prize : 200/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்,

பொறுமெயிரெ வடிவமாகெ வாழ்ந்து, மௌத்தாகி விட்டெ
பெரியெ ராத்தா உம்மு ஹபீபாவுக்கும்,

எங்களொடெயே வாழ்ந்து, எங்கெளெ வளத்து,
எங்களுக்கு இன்னொரு உம்மாவா இரிந்து
மௌத்தாகி விட்டெ உம்மம்மா சல்ஹா பீவிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரெ ................................... v

இதற்குள் நாம் ................................ vi

அணிந்துரை........................................ vii

01 ................................. கொலிசங்கன்னா

09 ..................................................... சம்ஹூன்

20 .................................................... பீமன் நசீர்

30 ............................ என்டெ மொதெல் காதெல்

41 ............................... இங்ஙினெயும் ஒரு மஹ்சர்

67 ...................................... ஒன்னும் வெளெங்கேலெ

75 ..................................................... ரெண்டு தெசெ

84 ........................................................... மத்தம்மா

92 ......................................................... வறுவெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரெ...

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்!

ஏற்கனவே நா எழுதினெ, 'சோனக தேசம்', 'இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம்' ஆகியெ பொத்தகங்கள்ரெ தொடெச்சியா இந்தெப் பொத்தகம் வெளி வரூது. முந்தினெ ரெண்டு பொத்தகத்திலெயும் 'சோனக மொழி' என்டெ கருத்தெ முன்வெச்சி விவாதிச்சிரிந்தேன். இப்பெ இந்தெப் பொத்தகத்திலெ முத்துலும் சோனக மொழியிலேயே எல்லாக் கதெயயும் எழுதியிரிக்கேன்.

இந்தெக் கதெயெல்லாம், இலெங்கெயிரெ கிழெக்கு மாகாணத்திலெ இரிக்கிறெ மூதூர்லெ வாழ்றெ முஸ்லிம்கள் பேசிரெ மொழி வழக்கிலெ எழுதப்பட்டிக்கி. இது சோனக மொழியிரெ ஒரு சின்னெத் துண்டுதான். இதெப் படிக்கிறெ மத்தெ எடெங்கள்லெ வாழ்றெ சோனகர்கள், தாங்கெ கதெக்கிறெ மொறெக்கும் இந்தெக் கதெகள்லெ உள்ளெ மொறெக்கும் எடெயிலெ இரிக்கிறெ ஒத்துமெ, வேத்துமெயெ ஒத்துப் பாக்கெ ஏலும். அதன் மூலமா, நம்மெடெ சோனக மொழிக்கானெ ஒரு உறுதியானெ அத்திவாரத்தெப் போடெ ஏலும். இந்தெப் பொத்தகத்தெ எழுதினத்துக்கானெ நோக்கமும் அதுதான்.

இந்தெப் பொத்தகத்த வெளியிட்டிரிக்கிறெ 'கலகம்' பதிப்பகத்தாருக்கும், குறிப்பா சகோதரர் ஏ.என்.எம்.றிழாக்கும் என்டெ நன்றிகள். மேலும், இந்தெப் பொத்தகத்தெ வடிவமெச்சி, இது வெளிவாறத்துக்கானெ எல்லா வேலெயெயுஞ் செஞ்செ சகோதரர் ஏ.எல்.எம்.நௌபருக்கு என்டெ மனம் நெறெஞ்செ நன்றிகள்.

*அ.வா.முஹ்சீன்.*
*836, பாளையூற்று*
*திருகோணமலை.*
*0263262341,*
*0718275932, 0772180170*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதற்குள் நாம்...

இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம் நூலாசிரியர் அ.வா.முஹ்சீன் அவர்களின் 'இங்கினெயும் ஒரு மஹ்சர்' சிறுகதைத் தொகுதியை வெளியிடுவதில் கலகம் மகிழ்ச்சியடைகின்றது. ஒரு சமூகம் தன்னை அடையாளப்படுத்தும் அடிப்படை அடையாளங்களான இனம், மதம், மொழி ஆகியவற்றுக்குள்ளால் இலங்கை முஸ்லிம்களுக்கான மொழி அடையாளம் நம்பிக்கையான முறையில் பேசப்படாத சூழலில் அ.வா.முஹ்சீன் இவ்வுரையாடலை தொடக்கிவைத்துள்ளார். இதன் பிரதிபலிப்புகள் இச்சிறுகதைகளாக எழுதப்பட்டுள்ளன. இம்முயற்சியை கலகம் வாசகர்முன் கொண்டுவருகின்றது.

கலகம், சிறு சஞ்சிகைகளை பிராந்திய ரீதியில் வெளியிட்டுக்கொண்டிருக்கும் வேளையில் இச்சிறுகதைத் தொகுதியை தனது முதலாவது புத்தக வெளியீடாகக் கொண்டுவருகின்றது. இலங்கையில் புத்தகம் வெளியிடும் அதே சிரமங்களுடன் இச்சிறுகதைத் தொகுதியும் வெளிவருகின்றது.

*அன்புடன்*

*செயற்பாட்டாளர்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை...


............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................

இப்படிக்கு

*(உன்னைவிட இந்தப் புத்தகத்திற்கு அணிந்துரை எழுதும் தகுதி யாருக்கிருக்கிறது?)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலிசங்கன்னா

கொலிசத்துக்கு பன்னெண்டு வயசி இரிக்கக்குள்ளெதா அவ மொதெமொதெலா அவடெ உம்மாவொடெ புள்ளெபேறு பாக்கெ போனா. அப்பெ அவ பெரியாளா பீத்து ஒள்ளூப்ப நாள்தா இரிக்கிம். கொலிசத்திடெ உம்மாக்கு அப்பெ ஒடெம்பு நல்லா இல்லாமெ பீத்திது. அதாலெ இம்புட்டு காலமா தான் பாத்து வந்தெ மருத்துவிச்சி தொழிலெ தன்டெ மவளுக்கு சொல்லிக் குடுக்கெ அவ முடிவு செஞ்சா.

கொலிசத்திரெ மொதெலாவது அனுபவம் சரியானெ அரிகண்டமா இரிந்திச்சி. எரெத்தெமு நாத்தமு கத்துவச் சத்தமு சேந்து கொலிசத்துக்கு சத்தி வந்திட்டு. கொள்ளப்பக்கமா பீத்து சத்தி எடுத்துப்புட்டு வந்தா. பொறவு போவெப்போவெ எல்லாம் பழகிப் பீத்திது. கொலிசத்துக்கு பதினாலு வயசிலெ கலியாணம் நடந்திச்சி. அடுக்கடுக்கா அவெக்கு அஞ்சி புள்ளெயொளு பொறெந்திச்சி. எல்லா புள்ளெயொளுக்கும் அவெடெ உம்மாதான் மருத்துவம் பாத்தா. சரியா அவெக்கு இருவெத்திரெண்டு வயசி வரெக்குள்ளெ அவெடெ உம்மாவாலெ புள்ளெப்பேறு பாக்கேலாமெ பீத்திது. அதுக்கு பொறவு கொலிசந்தா இந்தெ வேலெயெ பொறுப்பெடுத்தா.

பம்முஸ் மூட்டத்துக்குள்ளெ கொலிசத்துக்கு இருவெத்தஞ்சி வயசி. ஜப்பாங்காரெ போட்டெ குண்டுலெ வெள்ளெக்காரனெல்லா பயந்து பீத்தா. ஆக்களெல்லா ஓடிப்பீத்து கோட்டெயாத்து பள்ளிக்கொடத்துக்குள்ளெ இரிந்தாகெ. அப்பெ அந்தெ பள்ளிக்கொடத்தொடெ ஒட்டுனாப்பலதா ஆசுபத்திரி இரிந்திச்சி. அதிலெ இரிந்தெ வேதெக்காரெ மருத்துவிச்சியெல்லாம் பயத்திலெ ஓடிப் பீத்தாளொலு. அந்தெ நேரெத்திலெ கொலிசந்தா அங்கெ இரிந்தெ வெள்ளெக்காரெ டாக்குத்தருக்கு ஒதெவியா இரிந்தா. அந்தெ மூட்டத்திலெ நாலு பேருக்கு புள்ளெ பொறெந்திச்சி. கொலிசந்தா அவகளுக்கெல்லாம் மருத்துவம் பாத்தா. அவ வேலெ செஞ்செ மொறெயெப் பாத்து அந்தெ வெள்ளெக்காரெ டாக்குத்தர் அவவெ அதுக்குப் பொறவு அந்தெ ஆசுபத்திரிலேயே வேலெ பாக்கும்படி கேட்டாரு. ஆனா கொலிசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்கு ஒத்துக்கேலெ.

"ஐயா எனெக்கி இப்பிடியெல்லா ஒரு எடெத்திலெ அடெஞ்சி கெடெந்து வேலெ செய்யெ புறியமில்லெ." என்டு சொல்லிப்புட்டு அவ ஊட்டுக்கு வந்துட்டா.

புள்ளெப்பேறு பாத்தத்தாலெ கொலிசத்துக்கு பெரியெ வருமானம் எதுவுங் கெடெக்கேலெ. மொதெல்லெ ஒரு ரெண்டு மூனு ரூவா காசும் பொறவு வெள்ளாமெ வெட்டு நேரெத்திலெ ஒள்ளுப்பங்கானு நெல்லுங் குடுப்பாகெ. வெள்ளாமெச் செய்யாதெ ஊட்டுலெ அதுவுமில்லெ. என்டாலும் கொலிசம் ஒருநாளுங் காசெயோ இல்லாட்டி நெல்லெயோ எதிர்பாத்து அந்தெ வேலெயெ செய்யேலெ. அவக்கு அது ஒரு கட்டாயக் கடமெயாவே பீய்த்துது. எங்கெடெ ஊரிலெ இரிக்கிறெ கனக்கெப் பேர் அவ புள்ளப்பேறு பாத்து பொறெந்தாக்கள்தா.

ஆறுங் கடலுந்தா கொலிசத்துக்கு சாப்பாடு குடுத்திச்சி.பால்தொறெயிலயு கடக்கரெயிலயு புடிக்கிறெ மீனும் எடுக்கிறெ மட்டியுந்தான் அவடெ வாழ்க்கெயெ கொண்டு போவெ ஒதெவி செஞ்சிச்சி. மீன் புடிக்கிறத்துக்கு அவக்கு வலெயோ இல்லாட்டிக்கி தூண்டலோ தேவெப்படாது. தன்டெ முந்திச்சீலெயாலெயே மீனெயெல்லா வடிச்சி புடிச்சிப்புடுவா. அந்தமாரித்தா மட்டி எடுக்கக்குள்ளெயு. அவ ஒரு நாளுங் கத்திக்கம்பெல்லா கொண்டு போறெதில்லெ. கால் பெருவிரலாலயோ இல்லாட்டிக்கி உள்ளங்காலாலயோ தடவிப் பாத்தே மட்டியெ எடுத்துப்புடுவா.

ஒருதரக்கம் இப்பிடி மீன்புடிச்சிக்கிட்டு வரெக்குள்ளதா அந்தெச் சம்பவம் நடெந்திச்சி. புடிச்செ மீனெயெல்லா முந்திச்சீலயிலெ கட்டி எடுத்துக்கிட்டு கொலிசம் ஊட்டுக்கு வந்திக்கிட்டிரிந்தா. அப்பெ மஹ்ரிபர்ரெ நேரெமா பீய்த்திது. அவ கபுறடிக்காட்டுக்குள்ளாளெ வந்திக்கிட்டிரிந்தா. அவ ஒரு நாளுமே எதுக்கும் பயப்பிர்ரதில்லெ. பக்கீரப்பாடெ கபுறடியெ தாண்டி வந்திக்கிட்டிரிக்கக்குள்ளெ பின்னாலெ யாரோ வாறெமாரி சத்தம் கேட்டிச்சி. கொலிசம் திரும்பிப் பாத்தா. ஒரு பொம்புளெ. அந்த பொம்புளெயெ இதுக்கு முந்தி அவ ஒருநாளும் கண்டதில்லெ.

"யாரிடி நீ?"

அந்தெ பொம்புளெயெ பாத்து கொலிசம் சத்தமா கேட்டா. ஆனா அவ மறுமொழி சொல்லாமெ கொலிசத்துக்கு கிட்டெ வந்து அவவெ கட்டிப்புடிச்சா. கொலிசத்துக்கு ஒடெம்பெல்லா நடுங்கி பீய்த்திது.

"பயப்புடாதெ. நா ஜின். ஒனெக்கி ஒதெவி செய்யத்தா வந்திக்கே. இனிமெ நீ புள்ளெப்பேறு பாக்கக்குள்ளெ ஒனெக்கி நா ஒதெவியா இரிப்பே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிப்புட்டு அந்தெ பொம்புளெ பீய்த்தா. அவ எங்காலெ போனா, எப்புடிப் போனா எண்டு கொலிசத்துக்கு தெரியேலெ. கொலிசம் ஒரே ஓட்டமா ஊட்டெ வந்தா. அவ அதெப்பத்தி யாருக்கிட்டயுஞ் சொல்லேலெ. ஆனா அன்டு ராவு முத்துலு அவக்குச் சரியானெ காச்சல் அடிச்சிது. நெத்திரெயிலெ அவ ஒரு சாங்கமா வாய் உலாத்திக்கிட்டு இரிந்தா.

ரெண்டு மூனு நாள்லெ கொலிசம் எல்லாத்தயு மறந்திட்டா. ஒரு மாசத்துக்கு பொறவு வவுத்து மம்மறாயன் காக்காடெ பொஞ்சாரிக்கு புள்ளெப்பேறு பாக்கெ சொலிசம் பீத்திரிந்தா. அந்தெ மனுசி ஒடெம்பெல்லா வீங்கி, நல்லா பெருத்துப் பீத்திரிந்தா. கடுந்நோக்காட்டுலெ அவ கத்திக்கிட்டிரிந்தா. கொலிசம் அவடெ வவுத்தெ தடவிப் பாத்தா. புள்ளெ குறுக்காலெ கெடெந்திச்சி. பன்னீர்கொடம் ஒடெஞ்சி, ஓடிக்கிட்டிரிந்திச்சி. எப்பிடியாவது ஒடெனடியா புள்ளெயெ வெளியாலெ எடுக்கணும். எடுக்காட்டிப்போனா புள்ளெக்கும் தாய்க்கும் ஆபத்து. இப்பிடி ஒரு நெலெமெயெ கொலிசம் இப்பதா மொதெமொதெலா பாக்கிறா. என்ன செய்யிறேன்டு தெரியாமெ நிக்கெக்குள்ளெ அவெடெ கையெ யாரோ பின்னாலெ இரிந்து புடிச்சமாரி இரிந்திச்சி. திரும்பி பாத்தா. கபுறடிக்காட்டுக்குள்ளெ பாத்தெ அதே பொம்புளெ.

"நா சொல்றெமாரி செய்."

அவ சொன்னா. கொலிசம் அவ சொன்னமாரியெல்லா செஞ்சா. மொதெல்லெ அவடெ வவுத்தெத் தடவி, புள்ளெயிரெ தலெப்பக்கத்தெ ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா அமெத்தி அமெத்தி கீழெ கொண்டு வந்தா. பொறவு கையெ நல்லா உள்ளெ உட்டு, அந்தெ புள்ளெயிரெ தலெயெ புடிச்சி இழுத்து எடுத்தா. மம்மராயன் காக்காடெ பொஞ்சாதி நோக்காடு தாங்கேலாமெ கீசி கத்திக்கிட்டு மயங்கிப் பேய்த்தா. கடெசியிலெ புள்ளெயுந் தாயும் பொழெச்சிக்கிட்டாகெ.

அதுக்குப் பொறவுதா தனக்கு ஜின் வாசலாத்து வந்திரிக்கி என்டெதெ கொலிசம் ஒணந்தா. ஆனா அதெப்பத்தி அவ யாருக்கிட்டயு சொல்லேலெ. அந்த பொம்புளெ ஜின்னு அவக்கிட்டெ எப்பவு இரிக்கிறதில்லெ. எப்பவாவது கஸ்டமானெ புள்ளெப்பேறு இரிக்கக்குள்ளதா அது அவக்கிட்ட வரு.

இன்னொரு தரக்கம் ஒரு மனுசிக்கு புள்ளெப்பேறு. அது கொறெமாசப் புள்ளெ. புள்ளெ வவுத்துக்குள்ளயே மரிச்சிப் பீத்திது. அப்பவு அந்தெ ஜின்தா, அந்தெ புள்ளெயெ எப்பிடி எடுக்கிறெ என்டெதெ சொல்லிக் குடுத்துது. தாயெ மொழெங்கால்லெ குந்தியிருக்கெ வெச்சி, அவெக்கு பின்பக்கமா நின்டு, வவுத்தெ நீவி நீவி அந்தெ புள்ளெயெ வெளியெ எடுத்தா. அப்பிடியொரு புள்ளெயெ அதுக்கு முந்தியோ பிந்தியோ ஒரு நாளும் கொலிசம் காணேலெ. அதிடெ தலெ நொழுக்கு நொழுக்கென்டு இரிந்திச்சி. கண் ரெண்டும் வெளியெ பிதுங்கி தள்ளிக்கிட்டிரிந்திச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்கு வாயெல்லாம் சப்பட்டயா ஒட்டி பீத்திரிந்திச்சி. வவுறு பெருத்து கையுங் காலும் ஈக்குச்சிமாரி இரிந்திச்சி. அதெப் பாத்தா ஒரு மனிசப் பொறெவியாவே தெரியேலெ. சுத்துலு ஒரு வாலாந்தவெக்கட்டமாரியே அந்தெ புள்ளெ இரிந்திச்சி. அந்தெ புள்ளெயெ வேறெ யாருக்கிட்டெயு காட்டாமெ ஒடனெயே அடக்கிப்புட்டாகெ.

• • •

பெருவெள்ளத்துக்குள்ளெ கொலிசாத்தாக்கு நாப்பது வயசி முடிஞ்சிட்டு. கொலிசாத்தாடெ மாளெயு அந்தெ வெள்ளம் அடிச்சிக்கிட்டு பீய்த்திது. அந்தெ மாளுக்குள்ளெ ஒன்னும் பெரிசா இரிக்கேல்லதா. ரெண்டு ஓலெப்பாய், ஒரு தலெவாணி, ஒரு வெத்திலெத் தட்டம், ஒள்ளுப்பம் உடுப்பு, அதுபோகெ நாலஞ்சி சட்டி, பானெ. இம்புட்டுத்தா அவெக்கிட்டெ இரிந்தெ சொத்து. அதெ எல்லாத்தயுமே வெள்ளம் கொண்டு பீய்த்திது.

வெள்ளம் வடியெ நாலஞ்சி நாளா பீய்த்திது. அதுக்குப் பொறவு ஊருலெ வவுத்தாலயும் சத்தியும் வந்திட்டு. கனெக்கச் சின்னப் புள்ளெயொளு மௌத்தாப் பீய்த்திரொளு. கொலிசாத்தாடெ புருசனும் கடெசிப் பொடியனும் மௌத்தாப் பீத்தாகெ. ரெண்டு மூனு மாசத்துக்கு கூப்பன் கடெயிலெ சும்மா சாமா குடுத்தாகெ. நீட்டு நீட்டு மிச்சாட் அரிசி, கறுத்தச் சீனி, மாசி, பருப்பு என்டு கனெக்கச் சாமான் குடுத்தாகெ. ஒள்ளுப்ப நாள்லயே வாழ்க்கெ மறுவாடியு முந்தினமாரி வந்திட்டு. அதுக்கு பொறவு கொலிசாத்தா கல்யாணம் முடிக்காமாலெயே கடெசிவரெக்கும் வாழ்ந்தா.

இப்பெ ஊரிலெ பெரியெ ஆசுபத்திரி கட்டி, தனியா ஒரு புள்ளப்பேறு வாட்டும் கட்டியிருந்தாகெ. என்டாலும் வேதெக்காரெ பொம்புளெயொளு மத்திரந்தா ஆசுபத்திரிக்கு புள்ளெப் பெறெப் போனாகெ. சோனவ பொம்புளெயொளு யாரும் அங்கெ போறெதில்லெ. எப்பவும்போலெ கொலிசாத்தாதா அவெகளுக்கெல்லாம் புள்ளெப்பேறு பாத்தா.

ஒருதரக்கம் ஒட்டி நெய்னாடெ பொட்டெக்கி வவுத்து நோ வந்திட்டு என்டு கொலிசாத்தாக்கு ஆள் அனுப்பினாகெ. கடெவாயிலெ சாறு வழிஞ்சோடெ, வெத்திலெயெ சப்பிக்கிட்டு கொலிசாத்தா வந்தா. அந்தெ பொட்டெக்கி அது தலெப்புள்ளெ. பாயிலெ கெடெந்து துடிச்சிக்கிட்டு இரிந்தா.

"புருசனொடெ படுக்கக்குள்ளெ நோக்காடு தெரியேலியாம் - இப்பெ புள்ளெப்பேறு என்டெ ஒடனே கெடெந்து துடிக்கிறவாம்."

கொலிசாத்தா சிரிச்சிக்கிட்டு பாட்டு படிச்சா. ஆனா அந்தெ பொட்டெயிரெ வவுத்தெ தொட்டுப் பாத்தெ பொறவுதா நெலெமெ சிக்கல் என்டு அவக்கு வெளெங்கினிச்சி. புள்ளெ குறுக்காலெ கெடெந்திச்சி. ஒட்டி நெய்னாடெ பொட்டெ சின்னாள். வயசுங் கொறெயெ. அதோடெ தலெப்புள்ளெ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலிசாத்தா தனெக்குத் தெரிஞ்செ எல்லா மொறெயெயு செஞ்சி பாத்தா. ஒன்னுஞ் சரி வரேலெ. தலெ திரும்பெ மாட்டேன்டுட்டுது.

கொலிசாத்தாக்கு ஒன்னும் வெளெங்கேலெ. இனிமெ என்ன செய்யிறெ என்டு யோசிச்சிக்கிட்டு இரிக்கக்குள்ளெ அவெக்கு பின்னாலெ அந்த ஜின் வந்து நின்டிக்கிட்டு இரிந்திச்சி.

"நா சொல்றெமாரி செய்."

அது சொன்னிச்சி. அந்தெ ஜின் சொன்னமாரியே கொலிசாத்தா செஞ்சா. மொதெல்லெ கையெ உள்ளெ உட்டு முன்னுக்கு தெரிஞ்செ அந்தெ புள்ளெயிரெ கையெ முறிச்சா. பொறவு அந்தெ புள்ளெயெ ஒள்ளுப்பம் அசெச்சிப்புட்டு, அதுடெ காலெமுறிச்சா. அதுக்கு பொறவுதா அந்தெ புள்ளெயிர தலெயெ மடெக்கி, கீழெ கொண்டு வந்து, புள்ளெயெ வெட்டெயாலெ எடுக்கெ ஏண்டிச்சி. புள்ளெ மௌத்தாப் பீத்திது. ஆனா தாய் ஒரு கொறெயுமில்லாமெ தப்பிட்டா. அதுக்கு பொறவு சொத்தி நெய்னாடெ பொட்டெக்கி நாலு புள்ளெ பொறெந்திச்சி. நாலும் சொகெப் பிரசவந்தா. நாலுக்கும் கொலிசாத்தாதா மருத்துவம் பாத்தா.

• • •

இப்பயெல்லாம் கொலிசங்கன்னாவெ புள்ளப்பேறு பாக்கெ கனெக்கெப் பேர் கூப்புர்ரெதில்லெ. ஊரிலெ இரிக்கிறெ ஆசுபத்திரியெ நல்லா பெரிசா கட்டிக்காகெ. டாக்குத்தர்மாரும் நாலஞ்சி பேர் இரிக்காகெ. ஏதாவது சீரியஸ் என்டா மலெவூர்லெ இரிக்கிறெ பெரியாஸ்பத்திரிக்கி அனுப்பிர்ராகெ. ஆனா என்னென்டா, இப்பெ கசனாப் பேருக்கு ஒப்பரேசன் பண்ணித்தான் புள்ளெயெ எடுக்கிறாகெ. அதுக்கு பொறவு ஒப்பரேசன் பண்ணினெ பொம்புளெ இன்னொரு தரக்கந்தான் புள்ளெப் பெறேலுமா.

கொலிசங்கன்னாக்கு இப்பெ நல்லா வயசாப் பீய்த்திது. என்டாலும் அவகடெ ஒருமெ இன்னுங் கொறெயேலெ. இப்பவு அவகெ எடெக்கெடெ மீன் புடிக்க, இல்லாட்டி மட்டி எடுக்க போறாகதா. முந்திமாரி இல்லாட்டியும் ஒள்ளுப்பங்கானு என்டாலும் அவகெ மீன் புடிக்கிறாகதா. அவகடெ புள்ளெயொளும் பேரெப் புள்ளெயொளும் எம்புட்டுத்தா சொன்னாலு அவகெ கேக்கெ மாட்டாகெ.

"சும்மா போங்கெ புள்ளெயளா. என்டெ ஒடெம்பிலெ தெம்பு இரிக்கி மட்டு நா ஏராவரு செஞ்சிக்கிட்டுத்தா இரிப்பே."

வெத்திலெச் சாத்தெத் துப்பிக்கிட்டு அவகெ
உறுதியா சொல்லிப்புட்டாகெ.

என்டாலும் காலம் முந்திமாரி இல்லெ. இப்பெ நெலெமெ மாறி பீய்த்திது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருலெ அடிக்கடி பெரெச்சினெ. எல்லாம் இந்தெ புலித் தூமெயாலெ வாறெ பெரெச்சினெதா. கொலிசங்கன்னாடெ நடுவுள்ளெ மருமவனெ புலி சுட்டுக் கொன்டு பொட்டானொளு. அவெ ஒரு வாய்பேசா அப்பாவி. கொள்ளி எடுக்கயென்டு றாக்குழிப் பக்கம் போனெவந்தான். அதுக்குப் பொறவு அவெ உசிரோடெ வரவேயில்லெ. ரெண்டு நாளெக்கி பொறவுதா, மாம்புஞ்சா ஆத்துக்குப் பக்கத்திலெ ஒரு பத்தைக்குள்ளெ இரிந்து சூட்டுக் காயத்தோடெ அவென்டெ மையத்தெ எடுத்தாகெ.

அதுக்கு பொறவு கொலிசங்கன்னா ஆத்துக்கோ இல்லாட்டி கடக்கரெக்கோ மீன் புடிக்கப் போறெதில்லெ. கொளெத்தெ போறத்துக்கும் இப்பெ கண்டங்காட்டு பக்கம் அவ போறதில்லெ. அவடெ மூத்த பேரென், ஊட்டுலயெ கக்கூஸ் கட்டிக்கான். அதுக்குள்ளெ போறது மொதெல்லெ கஷ்டமாத்தா இரிந்திச்சி. ஆட்டுமாலுக்குள்ளெ காத்து படப்பட கொளத்தெபோறெ மாரி இல்லத்தா. என்டாலு இது அவக்கு இப்பெ பழகிப் பேய்த்திது.

இப்பெ ஊரிலெ ஒவ்வொரு நாளும் எதென்டாலு ' நடந்துக்கிட்டே இரிக்கி. ஒன்னு யாரயென்டாலு கொன்டுர்ரானொளு, இல்லாட்டி கடத்தி பேத்திர்ரானொளு. அதுவுமில்லாட்டி எங்கயென்டாலு களவெடுக்கிறானொளு. முன்னெயமாரி இப்பெ யாரு வெள்ளாமெச் செய்யிறேல்லெ. முஸ்லிமாக்கள்ரெ வயலபெல்லா தமிழனொளுதா செய்யிறானொளு. வெள்ளாமெ வெட்டுனத்துக்கு பொறவு ஒள்ளுப்பம் ஆயம் கொண்டு வந்து கொடுக்கிறானொளு. அதுவு சிலாக்கள்தா. மத்தாக்கள் ஒன்னுமே குடுக்கிறேல்லெ.

கொலிசங்கன்னாடா மூத்தெ மவளும் நடுவுள்ளெ மவளும் மூத்தெ பேரெனும் வெளிநாட்டுக்குப் பீய்த்தாகெ. ஊரிலெ கனெபேர் இப்பெ வெளிநாட்டிலதா இரிக்கிறாகெ. கொலிசங்கன்னாடெ பேரென், அவடெ மாளெ இடிச்சிப்புட்டு அந்தெ எடெத்திலெ ஒரு சின்னெ கல்ஊடு கட்டிக் குடுத்திக்கா. அந்தெ ஊட்டெ மட்டெயாலெ மேயாமெ, அதுக்கு சீட் போட்டுக் குடுத்திக்கா. வெளிநாட்டுக்குப் பீய்த்திரிக்கிறெ ரெண்டு மவெள்ரெ ஊட்டுலயும் டீபி பொட்டி இரிக்கி. அதுக்குள்ளெ என்னென்னமோ தெரீரு. கொலிசங்கன்னாக்கு இப்பெ தூரெ இரிக்கிறெ சாமானெல்லா கண்ணுக்கு தெரீதில்லெ. என்டாலும் அவ அந்தெ பொட்டிக்கு கிட்டெ பீய்த்து நின்டுக்கிட்டு, அதிலெ தெரியிறதெ செத்தெ சாமத்துக்கு பாப்பா. பொறவு வாசல் குந்திலெ இரிந்திக்கிட்டு வெத்திலெ போடெத் தொவெங்கிடுவா. அவடெ பேரெப் புள்ளெயொளும் பக்கத்து புள்ளெயொளும் ஒரே ஒரெயெ அந்த டீபி பொட்டியத்தா பாத்திக்கிட்டு இரிக்கிமொளு. அதாலெ அவ இந்தெ டீபி பொட்டிக்கு 'செய்த்தான் பொட்டி' என்டு பேரும் வெச்சிப்புட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் ராவு ஒம்பது மணி இரிக்கும். அப்பதா ரேடியோவுலெ செய்தி சொல்லெத் தொவெங்கியிரிந்திச்சி. திடீரென்டு குண்டு மொளெங்கிறெ சத்தம் கேட்டிச்சி. பொறவு வெடிச்சத்தம். வெடியென்டா சும்மா கிம்மா வெடியில்லெ. காது கன்னம் வெக்கேலாதெ வெடி. ஆக்களெல்லாம் சத்தம் போட்டுக்கிட்டு அங்காலயும் இங்காலயும் ஓடினாகெ.

"புலி வந்திட்டா. ஊட்டெயெல்லா எரிக்கிறா."

எங்ஙினெ பாத்தாலும் இந்தெச் சத்தந்தான். எல்லாரும் பள்ளிவாசலுக்குள்ளெ ஓடிப் பீய்த்து இரிந்தாகெ. பள்ளிவாசலுக்குள்ளெ சரியானெ சனம். அம்புட்டு பேரும் அதுக்குள்ளெ நிக்கிறத்துக்கே எடெமில்லெ. சின்னெப் புள்ளெயொளெல்லாம் கீசிக் கத்தத் தொவெங்கிட்டுதொளு. ஊரெல்லாம் நெருப்பு பத்தி வெளிச்சமாவும் பொகெயாவும் இரிந்திச்சி.

அந்தெ நேரெத்திலெ பாத்து சுருட்டு முஸ்தவா காக்காடெ மகளுக்கு வவுத்து நோக்காடு வந்திட்டு. அந்தெ நெலெமெயிலெ அவவெ ஆசுபத்தரிக்கி கொண்டு போறெத்துக்கும் எந்தெ வழியுமில்லெ. சுருட்டு முஸ்தவா காக்காவும் அவர்ரெ மருமவனும் பதறிக்கிட்டு இரிந்தாகெ. புள்ளெ பொர்ரத்துக்கு இன்னும் நாலு நாள் இரிந்திச்சி. மலெயிலெ பெரியாஸ்பத்திரியிலெ ஒப்பரேசன் பண்ணித்தா புள்ளெயெ எடுக்கணுமென்டு சொல்லியிரிந்தாகெ. நாளெக்குத்தா அவவெ மலெயாஸ்பத்திரிக்கி கூட்டிக்கிட்டு போவெ இரிந்தாகெ. அதுக்குள்ளெ இப்பிடி நடந்து, இப்பெ அவெக்கு வவுத்து நோவும் வந்திட்டு. அப்பதா கொலிசங்கன்னா சொன்னாகெ.

"அடியேய். பொட்டெடெயெ ராசாத்தம்பிடெ ஊட்டுக்கு கூட்டிக்கிட்டு வாங்கடி"

பள்ளிவாசலுக்கு பக்கத்திலெதா ராசாத்தம்பி நானாட ஊடு. அந்த ஊட்டுக்கு முஸ்தவா காக்காடெ மகளெ கூட்டிக்கிட்டு போனாகெ. செத்தெ சாமத்திலெ ஒரு குஞ்சிப் புள்ளெ கத்திறெ சத்தம் பள்ளிவாசலுக்குள்ளெ இரிந்தெ எல்லாருக்கும் கேட்டிச்சி.

• • •

கொலிசங்கன்னாவெ நா பீத்துப் பாக்கக்குள்ளெ, அவகெ ஒரு பாயிலெ படுத்துக் கெடெந்தாகெ. இப்பெ அவகெலாலெ எழும்பி நடக்கேலா. அவகெளுக்கு ரெண்டு கண்ணும் முழுசா தெரியாமாப் பீய்த்திது. வரெண்டு, வெள்ளெயாப் போனெ கண்ணிலெ இரிந்து தண்ணி வடிஞ்சிக்கிட்டிரிந்திச்சி. வாய் மத்திரம் இப்பவு வெத்திலெயெ சப்பிக்கிட்டுத்தா இரிந்திச்சி.

அந்தெ ஊர்த்தாயிரெ கதெயெ எங்கெ ஊருக்கு யாபகப்படுத்தணுமென்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா எடுத்தெ முடிவு, காலம் கடந்ததோ என்டு எனெக்கி சந்தேகம் வந்திட்டு. அம்புட்டு தூரத்துக்கு கொலிசங்கன்னா வருத்தப்பட்டுக் கெடெந்தாகெ. என்டாலு நா கேட்டெ செலெ கேள்விக்கு அவகெ ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா மறுமொழி சொன்னாகெ. கதெச்சிக்கிட்டிரிக்கக்குள்ளெயே தான் கதெக்கிறத்தெ மறந்து பீய்த்திடுவாகெ. பொறவு மறுவாடியும் அவகெ உட்டெ எடெத்தெ யாபகப்படுத்தி, அவகெளெ கதெக்கப் பண்ணணு. என்டாலுந் தன்டெ வாழ்க்கெயெ அவகெளாலெ சரியாச் சொல்லெ முடிஞ்சிது.

"அது சரி கன்னா. அந்தெ ஜின்னுக்கு பொறவு என்ன நடெந்திச்சி."

நா கேட்டே.

"அரா. அரு பீத்திரு. ஒரு தரக்கம் ராவுலெ நா ஊட்டுலெ தனியா இரிந்தே. அப்பெ மஹ்ரிபுக்கும் இசாவுக்கும் எடெப்புட்டெ நேரம். அப்பெ அரு வந்திச்சி. வந்து எனெக்கி முன்னாலே இரிந்திச்சி. இரிந்துக்கிட்டு எனெக்கிட்டெ சொன்னிச்சி.

"நா போறெ. இனிமெ நா ஒனெக்கிட்டெ வரெ மாட்டே. ஒன்னாலெ ஏன்டெமாரி நீ ஒன்டெ வேலெயெ செஞ்சிக்கெ."

என்டு சொல்லிப்புட்டு என்னெப் பாத்துச் சிரிச்சிப்புட்டு அரு பீத்திரு. அருக்குப் பொறவு அரு வரவேயில்லெ."

"கன்னா ஒன்னு கேக்கணு. ஒரு கொறெமாசெ புள்ளெயெ எடுத்தீங்கென்டு சொன்னிங்கதானே. அது யார்ரெ புள்ளெ கன்னா?

"இல்லெ தம்பி. அரெல்லா சொல்லப்படாரு தம்பி. நா இன்டெக்கி வரெக்கு அரெப்பத்தி யாருக்கிட்டயு சொல்லேலெ. இப்பிடி கசனா இரிக்கி தம்பி. ஆனா என்டெ உசிருள்ளெ வரெக்கும் அரெப்பத்தியெல்லா நா யாருக்கிட்டெயுஞ் சொல்லெ மாட்டே."

கொலிசங்கன்னா களெச்சி பீய்த்தாகெ. என்னொடெ கதெச்சிக்கிட்டிரிந்தமாரியே அவகெ நெத்திரெ கொண்டுட்டாகெ. நா அங்ஙினெ இரிந்து போறெத்துக்கு எழும்பினே. கொலிசங்கன்னாடெ மூத்தெ பேரென் அப்பதா அங்ஙினெ வந்தா. ஒரு மாசத்துக்கு முந்தித்தா அவெ சவூதியிலெ இரிந்து வந்திக்கா. அவெனெ என்னாலெ மதிக்கெ முடியேலெ. நல்லா தெளிஞ்சி பெரியாளா இரிந்தா. என்னெ பாத்து அவெ மருவாதியா சிரிச்சா. அவென்டெ கையிலெ ஒரு சின்னெ டெலிபோன் இரிந்திச்சி.

◀ *2006*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்ஹூன்

எப்பெவும் போலெ இந்தெத் தரக்கமும் கனெநாள் கழிச்சுத்தா ஊருக்கு பீத்திருந்தே. குந்திலெ இரிந்து வெத்திலெ சப்பிக்கிட்டிருந்தெ கன்னாதான் என்னெ மொதெமொதெல்லெ கண்டாகெ. வெரெலுக்குள்ளாளெ வெத்திலெ சாத்தெ துப்பிக்கிட்டு அவெகெ என்னெ வரவேத்தாகெ.

"வாடா தம்பி. இப்பரா ஒனெக்கி கண் தெரிஞ்சிரா?"

மொகெம் நெறெஞ்செ சிரிப்பொடெ கன்னா சொன்னாகெ. பேக்கெ குந்திலெ வெச்சிப்புட்டு அவகெளுக்கு பக்கத்திலெ பீத்து இரிந்தே. உம்மம்மா என்டெ தலெயெ தடவிக் குடுத்தாகெ. அந்தெ தடவுவயிலெ நெறெஞ்செ அன்பு தெரிஞ்சிச்சி.

"என்னடா தம்பி மசிரெல்லா கொட்டிப்புட்டுரு. இப்பெ ஒன்னெ பாத்தாக்கா சுத்துலும் அப்பாமாரித்தா இரிக்கா."

கன்னாக்கு எப்பவும் என்னிலெ நல்லெ விருப்பம். அதுக்கு அவெகெ சொல்றெ காரணம், நா அப்பாமாரியே இரிக்கிறனாம். அப்பாக்கு என்னிலெ நல்லெ விருப்பமா. நா பொறெந்தெ நேரெத்திலெ என்னெ பாத்து அப்பா சொன்னாகலா.

"அடேய். இஞ்செ பாருங்கடா இவெனெ. இவெ பால் புக்கெக் கட்டிமாரி இரிக்கான்டா."

அப்பாவெ எனெக்கி யாபகமில்லெ. நா ஒரு மூணு வயசா இரிக்கக்குள்ளெயே அப்பா மௌத்தா பீத்தாகலா. ஆனா கன்னாக்கு எப்பவும் அப்பாவெ பத்தித்தா கதெ. அதுவு நா வளரெ வளரெ அப்பாடெ சாங்கத்திலெயே இரிந்தத்தாலெ, கன்னா எனெக்கிட்டெ எப்பவும் அப்பாவெப் பத்தியே சொல்லிக்கிட்டிரிப்பாகெ. ஒரு பெரியெ மோட்டெ சைக்கிளுக்கிட்டெ அப்பா நிக்கிறெமாரி எடுத்தெ ஒரு கறுப்பு வெள்ளெ போட்டோவெ கன்னா இப்பவும் பத்திரமா வெச்சிருக்காகெ. எங்கெடெ ஊரிலெயே மொதெமொதெல்லெ மோட்டெ சைக்கிள் வெச்சிரிந்தது எங்கெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாதானாம். அப்பா சரியானெ ஒசெரமாம். சரியானெ சண்டியராம். எங்கெடெ ஊருலெ இருந்தெ கெணெத்தடி பாட்டிக்கு அப்பாதா தலெவரா.

கெணெத்தடி பாட்டியெப் பத்தி கன்னா கனெக்கெ கதெயெல்லாம் எனெக்கிச் சொல்லியிரிக்காகெ. கெணெத்தடி பாட்டி இரிந்தெ காலத்திலெ எங்கெடெ ஊரிலெ ஒரு கள்ளனும் இரிக்கேலியா. கெணெத்தடி பாட்டி ஆக்களெ கண்டா எல்லாருக்கும் அம்புட்டுப் பயமாம். அவெகெ எல்லாருக்கும் வெளெயாட்டுத் தெரியுமாம். கலியாணெ ஊட்டுலெயெல்லா சீனெடி, செலெம்படி, கம்படி எல்லா நடெத்திறெ இந்தெ கெணெத்தடி பாட்டி ஆக்கள்தானாம். கெணெத்தடி பாட்டியிலெ எல்லாராலேயு சேரேலாதாம். எங்கெடெ ரோட்டிலெ இரிந்தெ எனெல்வாவெ மரத்துக்கு கீழெ முந்தி ஒரு பென்னாம் பெரியெ கல்லு இரிந்திச்சாம். அந்தெக் கல்லெ யாரு தூக்கிறாகளோ அவெகதா கெணெத்தடி பாட்டியிலெ சேரேலுமாம். •

ஒரு வெள்ளாமெ வெட்டு நேரெத்திலெ, கட்டு கட்டுறத்துக்காகெ நார் வெட்டெப் போவெக்குள்ளதா அப்பா மௌத்தா போனாகெ. ஒரு மரத்துக்குக் கீழெ பத்தெக்குள்ளெ இரிந்தெ நல்லெ பாம்பு அவெகெளெ கடிச்சுப்புட்டுது. கடியெ வாங்கிக்கிட்டு, மோட்டெ சைக்கிள்லெ ஏர்றத்துக்கு அப்பா வந்திருக்காகெ. ஆனா அவெகெளுக்கு ஏலாமெ பீத்திது. மோட்டெ சைக்கிள் சாத்தியமாரி இரிக்கெ, அதுக்கு பக்கத்திலெ வாயெல்லா நொரெயா உழுந்து கெடெந்தெ அப்பாவெ கனெ சாமத்துக்கு பொறவுதா ஆக்கள் கண்டிருக்காகெ. அப்பாடெ மையத்தத்தா அந்தாக்கள் ஊட்டுக்கு கொண்டு வந்தாகெ.

ஒள்ளுப்ப நேரம் எல்லாருக்கிட்டயும் கதெச்சிப்புட்டு, கொண்டு வந்திருந்தெ சில்லெறெக் காசெயெல்லா ராத்தாமார்ரெ புள்ளெயொளுக்கிட்டெ குடுத்தே. ஒவ்வொரு நாளும் வேலெக்குப் போறெ நேரெத்திலெ பஸ்ஸிலெயும் சாமா வாங்கக்குள்ளெயும் எனெக்கிக் கெடெக்கிறெ சில்லெறெ காசெயெல்லா ஒரு ஜேம் போத்தலுக்குள்ளெ போட்டு வெப்பே. ஊருக்கு வரெக்குள்ளெ அதெ எடுத்து வந்து இந்தெ சின்னாக்களுக்கு குடுப்பே. எப்பிடியும் நானூறு, அஞ்நூறு ரூவா மட்டிலெ சேரும். புள்ளெயொளுக்கு ஒரே சந்தோசந்தா.

குளிச்சுப்புட்டு பெரியெ ராத்தா குடுத்தெ தேத்தண்ணியெ குடிச்சே. ஊருக்கு வந்தா எப்பவு தேத்தண்ணிதா. எங்கெடெ ஊர் தண்ணியிலெ போர்ரெ தேத்தண்ணிக்கு வாறெ ருசி வேறெ எங்ஙினெயும் வராது. தேத்தண்ணியெ குடிச்சிப்புட்டு, என்டெ கூட்டாளிமாரெ பாக்கப் பீத்தே.

ராச்சாப்பாட்டுக்கு குஞ்சாத்தா புட்டும் வெள்ளானமும் ஆக்கியிரிந்தா. செக்கெலுக்குப்பட்டெ கயெமீனும் செத்தெலும். காஞ்செ கொச்சிக்காயெ தட்டிப் போட்டு, இலுமிச்சம் புளியுஞ் சேத்து வெள்ளானம் காச்சிரிந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனெநாளக்கி பொறவு வவுறு நெறெயெ தின்டுபுட்டு, குந்திலெ வந்து இரிந்தே. வெத்திலெயெ சப்பிக்கிட்டு கன்னாவும் வந்திட்டாகெ. ராத்தாமார், அவகெடெ புள்ளெயொள் என்டு எல்லாரும் வளெச்சிரிக்கெ கதெ தொவெங்கிட்டு. கன்னாதா கனெக்கெ கதெச்சாகெ. நல்லெ முஸ்பாத்தியா கதெ பீத்திக்கிட்டு இரிக்கக்குள்ளெ கன்னா சொன்னாகெ.

"தம்பி. ஒனக்கொரு சங்கரி தெரியுமாடா?. நம்மடெ சம்மூ. அவெ மௌத்தாப் பீத்தான்டா."

என்டெ நெஞ்சிலெ யாரோ ஓங்கி அடிச்சமாரி இரிந்திச்சி.

"எப்பமா?"

"போனெ மாசென்டா. சொத்தி அனிவாவு அவென்டெ பொடியனு சம்முனெ கொன்டுபுட்டாங்கடா."

என்னாலெ நம்பவே ஏலாமெ பீத்திரு. சம்முனெயும் யாருங் கொல்லேலுமா?!

"மூசினொடெ சம்முனுக்கு சரியானெ எரெக்கம்."

எனெக்குஞ் சம்முனுக்கும் எடெயிலானெ நட்பெப் பத்தி கன்னா மத்தாக்களுக்கு சொல்லிக்கிட்டிருந்தாகெ.

கனெ நேரெத்துக்கு எனெக்கி நெத்திரெ வரெயிலெ. முப்பது வரிசத்துக்கு முந்தினெ யாபகத்தினாலெ நா சூழப்பட்டே. என்டெ சிறு பிராயம் அதிடெ எளெங்கன்டு துடிப்பொடெ எனெக்குள்ளெ வாடிப்பாச்சல் காட்டெத் தொவெங்கிட்டு.

• • •

எங்களுக்கெல்லாம் அப்பெ சம்மூன் ஒரு பெரியெ வீரென். என்னெப் பாக்கெ சம்மூனுக்கு ஒரு ஆறேழு வயசி கூடெ. கறுத்தெ ஒடெம்பொடெ அவெ நல்லெ தெடெகாத்திரமா இரிப்பா. அவெ அம்புட்டு ஒசெரம் இல்லெ. இப்பெ பாத்தா அவெ என்னெவுடெ கட்டெதா. ஆனா முப்பது வரிசத்துக்கு முந்தி ஈக்குச்சியாட்டம் இரிந்தெ எனெக்கி சம்மூன் பெரியெ ஆஜானுபாகாட்டம் தெரிஞ்சா. உண்மெயா எனெக்கிச் சம்முனெப் பாத்தா ஒரு மனிசனாட்டம் தெரியிரேல்லெ. கறுத்தனிவா காக்காடெ கேப்பெ மாடுமாரித்தா அவெ தெரிஞ்சா. ஒரு தரக்கம் கறுத்தனிவா காக்கா ரெண்டு கேப்பெ மாடு வாங்கிட்டு வந்தாரு. ஊர்லெ இரிந்தெ எல்லாரும் அதெப் பீத்து பாத்தாகெ. வளெஞ்செ, நல்லெ ஒரெபுடியானெ நீட்டுக் கொம்பு, ஒவ்வொரு கொம்புலயும் வெள்ளியாலெ மூடி போட்டிருந்திச்சி. ஒசெரமானெ ஏரி, கழுத்திலெ மணிக் கோர்வை தொங்கிக்கிட்டு இருந்திச்சி. அதிடெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சாமணி இருந்தெ எடெத்திலெ நீளெமானெ தோல் தொங்கிக்கிட்டு இருந்திச்சி. அந்தெ மாடு ரெண்டும் பென்னாம் பெரிசா இரிந்திச்சி. அதெப் பாத்து எல்லாரும் மலெச்சி போனோ. அதெ வண்டிலிலெ பூட்டினாக்கா, வால்வண்டில் தரெயொடெ தட்டிக்கிட்டு நின்டிச்சி. அம்புட்டு ஒசெரமா இரிந்திச்சி அந்த ரெண்டு மாடும். அதிலெ ஒரு மாடு ஒள்ளுப்பம் கூடெ கறுப்பா, நிமிந்தெ பார்வெயொடெ இரிந்திச்சி. அதெப் பாக்கக்குள்ளெ எனெக்கி சம்முனெ பாக்கிறமாரியே இரிந்திச்சி.

சம்முனுக்கு தெரியாதென்டு எதுவுமில்லெ. எல்லா மரத்திலயு அவெ ஏறுவா. எம்புட்டு ஒசெரமானெ தென்னெ மரமென்டாலு அவெ தடெ போடாமத்தா ஏறுவா. குனிஞ்செ நெலெயிலெ, நடெந்து போறெமாரி ஒரு செக்கனுக்குள்ளெ மரத்திலெ ஏறிப்புடுவா. இடிமண் தொறெயிலெ குளிக்கெப் போவெக்குள்ளெ, நடு ஆத்துக்கு நீஞ்சி பீத்து, அப்பிடியே அசெயாமெ நிப்பா. கனெசாமத்துக்கு அப்பிடி நிப்பா. சரியானெ தாப்பமு சுளியுமுள்ளெ அந்தெ எடெத்திலெ சம்முனுக்கு மட்டுந்தா அப்பிடி அசெயாமெ நிக்கெ ஏலும்.

என்ன வெளெயாட்டென்டாலும் சம்முன்டெ பாட்டிதா எப்பவும் வெல்லும். ஜாடி, கிட்டி, சில்லுக்கோடு, கெப்டென் கெப்டென் ஸ்டெபோட், ரெட்டெ கீக்கம்... இப்பிடி எல்லா வெளெயாட்டிலெயும் சம்முன்டெ பாட்டிக்குத்தா வெத்தி. ரெட்டெ கீக்கம் பொத்தக்குள்ளெ சம்முன்டெ பாட்டியெ சேந்தெ எல்லாரயும் மத்தெ பாட்டி ஆக்கள் தொட்டுப்புடுவானொளு. ஆனா சம்முனெ மத்திரம் யாராலுந் தொடெ ஏலாது. அவெ தென்னெ மரத்திரெ வட்டுக்குள்ளெ ஏறி ஒழிச்சிக்கிட்டு இரிப்பா. இனி சம்முனெ பிடிக்கேலா என்டு எல்லாரும் முடிவெடுத்திருக்கக்குள்ளெ ஒத்தருக்குந் தெரியாமெ அவெ எறெங்கி வந்து கென்னெயெ தொட்டுப்புடுவா. கடெசியா அவென்டெ பாட்டிக்குத்தா வெத்தி.

இப்பிடி எல்லாந் தெரிஞ்செ சம்முனுக்கு சைக்கிள் மத்திரம் ஓடெ தெரியா. உண்மெயா அவெ சைக்கிள் ஓடெப் பழகேலியா, இல்லாட்டி அவெனுக்கு சைக்கிள் ஓடெ விருப்பமில்லியா என்டு எனெக்கித் தெரியா. நோஞ்சானா இரிந்தெ நானே அப்பெ சைக்கிள் ஓடெப் பழவிட்டே. ஆனா சம்மூன் சைக்கிள் ஓடி ஒரு நாளு நா பாக்கேலெ. அவெனுக்கிட்டெ சைக்கிளும் இரிக்கேலெ. எம்புட்டு தூரமென்டாலு அவெ நடெயிலேயே பீத்திருவா. கனெநாளக்கி பொறவு ஒரு தரக்கம் எனெக்கி மாஸ்டர் வேலெ கெடெச்சி, பள்ளிக்கொடத்துக்கு நான் பஸ்ஸிலெ பீத்துக்கிட்டிரிந்தே. அப்பெ மூனாங்கட்டெ மலெக்கிட்டெ, சம்மூன் நடந்து பீத்துக்கிட்டு இரிக்கிறத்தப் பாத்தே. சம்மூன் தன்னிலெயும் தன்டெ ஒடெம்பு பெலெத்திலெயுந்தா நம்பிக்கெ வெச்சிரிந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மூன் பள்ளிக்கொடத்துக்கு போனானா இல்லியா என்டு எனெக்கித் தெரியா. அவென ஒரு நாளும் நா பள்ளிக்கொடத்திலெ கண்டதில்லெ. ஆனா, ராவுலெ, நிலா வாறெ காலத்திலெ அவெ எங்களுக்கெல்லா மாஸ்டரா இரிப்பா. அவெ ஒரு எழுத்தெச் சொல்லுவா. நாங்கெ ரோட்டிலெ இருந்து. புழுதி மண்ணிலெ அந்தெ எழுத்தெ எழுதுவோ. அதுக்கு சம்மூன் மாக்ஸ் போடுவா. யார் வடிவா, சோடிச்சு எழுவுறமோ அவருக்குத்தா கூடெ மாக்ஸ்.

சூது வெளெயாடெக்குள்ளெயும் சம்முந்தா எப்பவு வெல்லுவா. தச்செலா அவெ தோத்து போனாலு, யாரெயு போகெ உடெமாட்டா. வென்டெவெ சம்முனுக்கு காசு கடன் குடுக்கணு. அந்தெ காசெ வெச்சி சம்மூன் மறுவாடியு சூது வெளெயாடுவா. சம்மூன் வெல்லு மட்டும் இந்தெ கடன் குடுத்து வெளெயார்ரெ நெலெமெ தொடெந்திக்கிட்டே இரிக்கிம்.

சம்முனுக்கு எல்லாருமே பயந்தா. அவெனொடெ சண்டெக்கி போறெத்துக்கு ஒத்தருக்குந் துணிவில்லெ. ஒருதரக்கம் அவனுக்கும் நண்டுகுஞ்சி காக்காடெ ராசிக்குக்கும் சண்டெ. ஒரு கட்டத்திலெ ராசிக்கெ கீழெ தள்ளிப்புட்டு, அவென்டெ வெதெக் கொட்டெயெ சம்மூன் புடிச்சிக்கிட்டா. அப்பெ ராசிக் கத்தினெ கத்துவெயெ இப்பெ நெனெச்சாலு ஒடெம்பு பதறிது. இன்னொரு தரக்கம் மட்டெ நெயினாடெ பெயெலெ ஒரு தென்னெ மரத்திலெ கட்டி வெச்சி, அவென அடிமட்டெயாலெ சம்மூன் ஓங்கி ஓங்கி அடிச்சத்தெ நாங்கெ எல்லாரும் சுத்தி நின்டு பாத்தம். அவனுக்கு ஏ சம்மூன் அடிக்கிறானென்டு மொதெல்லெ எங்களுக்கு வெளெங்கேலெ. பொறவுதா சம்முன்டெ வாயிலெயிருந்து வந்தெ சொல்லெ வெச்சி காரணத்தெ கண்டுபுடிச்செ.

"எனெக்கிக் களவெடுக்கிற மத்திரம் புடிக்காரு."

இதெச் சொல்லிச் சொல்லியே மட்டெ நெயினாடெ பெயெலெ சம்மூன் அடிச்சா. அதுக்கு பொறவுதா எங்களுக்கு ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா வெவெரம் புடிபட்டிச்சி. கொஞ்சக் காலமா சம்முனும், மட்டெ நெயினாடெ பெயெலுஞ் சேந்து களவெடுத்து வந்திருக்கானொளு. ராவு மட்டெ நெயினாடெ பொடியெ, சம்முன்டெ மாலுக்குள்ளெ இரிந்தெ காசெயெல்லா எடுத்துக்கிட்டு ஓடிட்டா. காத்தாலெயொடெ சம்மூன் அவென தேடிப் புடிச்சி, இழுத்து வந்து, தென்னெ மரத்திலெ கட்டிப்புட்டு இந்தெ அடி அடிக்கிறா.

சம்முனெ பாத்து ஆக்கள் மத்திரம் பயப்புடேலெ. நாயும் பயந்திச்சி. சம்முனெக் கண்டா நாயெல்லா வாலெ பின்னங்காலுக்கெடெயிலெ வளெச்சி, சொருவிக்கிட்டு மெலிசா முனுங்கிக்கிட்டு நிக்கும். சம்முன்டெ மணெத்தெ அறிஞ்சே கனெக்கெ நாய் அந்தெ எடெத்தெ உட்டு ஓடிரும். சம்முனுக்கிட்டெ இரிந்து ஓடித் தப்பெ ஏலாது என்டு நாயெல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தெ அனுபவத்தாலெயெ அறிஞ்சிருந்திச்சி. ஒரு தரக்கம் சம்மூன் கூப்பிடக்குள்ளெ ஒரு நாய் வராமெ ஓடிப் பீத்திது. சம்மூன் அதெத் தெரெத்திப் போனா. கனெநேரெத்துக்கு பொறவு, அவெ அந்தெ நாயெ ஒரு கயித்திலெ கட்டி இழுத்துக்கிட்டு வந்தா. மூத்திரெக் கொளெத்துக்கு பக்கத்திலெ நின்டெ பூவரசெ மரத்திலெ அதெ கட்டிப்புட்டு, ஒரு அரெ மணித்தியாலத்திக்கிட்டெ அந்தெ நாயெ சம்மூன் அடிச்சா. பொறவு அவெ ஒரு சூட்டுக் கொழெலெ கொண்டு வந்தா. அந்தெ நாய்க்கு பக்கத்திலயே நெருப்பு மூட்டி. அதிலெ அந்தெ சூட்டுக் கொழெலெ காச்சி "ச" என்டு அந்தெ நாயிரெ முதுவுலெ அவெ குறி சுட்டா. அலெறி நடுங்கினெ அந்தெ நாய் அதுக்குப் பொறவு சம்முனெ எங்கெ கண்டாலு, அவெ சொல்றெ வரெக்கு அப்பிடியே நிக்கும்.

சம்மூன் நல்லெ பெலெசாலியா இரிந்தா. ஒரு தரக்கம் கையெ பின்னுக்கு கட்டிக்கிட்டு, ஒரு சாக்கு நெல்லெ பல்லாலெ கடிச்சி, தூக்கி, நடந்து காட்டினா. ஒரு பாதிச் செங்கக்கல்லெ மேலெ எறிஞ்சிபுட்டு, அது கீழெ வரெக்குள்ளெ அதெ காலாலெ ஓங்கி அடிப்பா. அந்தெப் பாதிக் கல், ஆகாசத்திலெ துண்டு துண்டா செதெறிப் பறக்கு.

இப்பிடி எல்லாரும் பயப்பிடும்படியாவும், நல்லெ பெலசாலியாவும் இருந்தெ சம்மூன் ரெண்டு பேருக்கு மத்திரம் பயப்புட்டா. ஒராள், அவென்டெ மாமா சண்டியன் குஞ்சித் தம்பி காக்கா. அவெரு தடிச்செ, முறுக்கினெ மீசெ வெச்சிரிந்தாரு. அவெரு எப்பெயு சாறனெ அடித்தொடெ தெரியெ மடிச்சிக் கட்டியிரிப்பாரு. அவெரு தடெக்கு தடெக்கென்டு நடந்து வாறெத்தெ கண்டெ ஓடனெயெ நாங்கள்லா ஓடுருவோ. அப்பிடிப்பட்டவரெ பாத்து சம்மூன் பயப்பிட்டதெ என்னாலெ புரிஞ்சிக்கெ முடிஞ்சிது. ஆனா கபீர்ராசாக்கு சம்மூன் பயம் என்டு எனெக்கித் தெரியெ வரெக்குள்ளெ என்னாலெ அதெ நம்பவே முடியேலெ. கட்டெயாவும் நல்ல தெளிவாவும் இரிந்தெ கபீர்ராசா ஒரு அப்பாவி. சிரிப்பெத் தவிரெ வேறெ ஒன்டெயு அவென்டெ மொகெத்திலெ காணேலா. அப்பிடிப்பட்டெ கபீர்ராசாக்கு சம்மூன் பயம் என்டு என்டெ கூட்டாளிமார் சொன்னெத்தெக் கேட்டு எனெக்கிச் சரியானெ ஆச்சரியமா இரிந்திச்சி.

ஆனா அதெ நேரடியாவே காண்றெ வாய்ப்பு எனெக்கி ஒரு தரக்கம் கெடெச்சிது. சம்மூனுக்கும் கபீர்ராசாக்கும் சண்டெ என்டு கத்திக்கிட்டு கனெக்கப் பேர் ஆலமரத்தடிச்சந்தியெ நோக்கி ஓடுனத்தப் பாத்து, நானு அவெனொளுக்கு பின்னாலெ ஓடுனே. சந்தியிலெ இரிந்தெ ஆலமரத்துக்கு கீழெ கபீர்ராசா நின்டுக்கிட்டு இரிந்தா. ஒள்ளுப்பந் தள்ளி சம்மூன். நேரெடிச் சண்டைக்கானெ எந்தெ சாங்கமு அங்கினெ தெரியேலெ. ஒள்ளுப்பொ நேரத்துக்கு பொறவு, ஆலமரத்துக்கு கீழெ பீத்து கபீர்ராசா இரிந்தா. அப்பதா சம்மூன், "உய்" என்டு கத்திக்கிட்டு, கபீர்ராசா இரிந்தெ எடெத்தெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடியத் தாண்டி, அடுத்தெ பக்கத்துக்கு பீத்து நிண்டா. கிட்டத்தட்டெ ஒரு அரெ மணித்தியாலமா இப்பிடியே அந்தெக் கோழிச் சண்டெ நடெந்திச்சி. கபீர்ராசாக்கிட்டெ சம்மூன் போகெவேயில்லெ. சம்முனெ நோக்கி கபீர்ராசா போவெக்குள்ளெ, சம்மூன் பின்னாலெ போனா. இனிச் சண்டெ நடக்காது என்டெ முடிவொடெ நாங்கெ எல்லாரும் அங்கிருந்து பீத்தம். எனெக்கி ஒள்ளுப்பம் சங்கடமாத்தா இரிந்திச்சி. சம்முனெ பத்தி என்டெ மனசிலெ இரிந்தெ பெரியெ எடெம் ஒள்ளுப்பம் கொறெஞ்செமாரி இரிந்திச்சி. அதுக்கு பொறவு கபீர்ராசாவெ கண்டா எனெக்கி ஒரு பயங்கலந்தெ மருவாதி வந்திரும்.

மத்தாக்களுக்கு சம்மூன் எப்பிடியிருந்தாலும் என்னொடெ அவெ எரெக்கமாவே இரிந்தா. வெளெயார்ரெ நேரெத்திலெ, ஆக்கள் புறிக்கக்குள்ளெ சம்மூன் எப்பவு தன்டெ பக்கத்துக்குத்தா என்னெ எடுப்பா. அது எனெக்கிப் பெரியெ கெப்பறா இருந்திச்சி. என்டெ வயசாக்களுக்கு என்னிலெ புறாமெயயும் குடுத்திச்சி. சூது வெளெயாடி முடியக்குள்ளெ நா வெளெயாடாட்டியு சம்மூன் எனெக்கும் கடெசிக்காசி தருவா. ரெண்டு, மூனு தரக்கம் அவெ எனெக்கி பொரிச்செ எறெச்சியுந் தந்திக்கா. ஒவ்வொரு ராவு, இசாவுக்கு பாங்கு சொல்லி செத்தெ சாமத்திலெ, சம்மூன் எங்கெடெ ஊட்டெக் கடந்து போவா. பீச்செக் கையாலெ சாறனெ ஒசெத்தி பிடிச்சிக்கிட்டு, சோத்து கையெ விசுக்கிக்கிட்டு அவெ நடந்து வருவா. அவென்டெ வாய் முணுமுணுத்துக்கிட்டு இரிக்கு. நல்லா கவனிச்சாத்தா அவெ பாட்டு படிக்கிறா என்டு வெளெங்கு. விசுக்கிக்கிட்டு வாறெ சோத்துக் கையிரெ வெரெல் எப்பவு மூடினெமாரியே இரிக்கும். அந்தெ கைக்குள்ளெ பேப்பராலெ சுத்தினெ பொரிச்செ எறெச்சிப் பார்சல் இரிக்கும். ரோட்டு பக்கமா இரிக்கிற எங்கடெ ஊட்டு குந்துலெ நா கன்னாவொடெ இரிப்பே. என்னெ கண்டதும் சம்மூன் பாட்டெ நிப்பாட்டிப்புட்டு கேப்பா.

"என்ன மூசி?"

"என்னடா சம்மூ. இப்பரா ஊட்டெ போறியா?"

கன்னாதா கதெயெத் தொவெங்குவாகெ.

"ஓ! நமக்கு இப்பரா வேலெ முடிஞ்சிக்கி."

சம்மூன் இழுத்து இழுத்து மறுமொழி சொல்லுவா. அவெ ஒரெமா கதெக்கெ மாட்டா. ராசியம் கதெக்கிறெமாரி வாய்க்குள்ளெ முணுமுணுப்பா. செத்தெ சாமத்துக்கு பொறவு அவெ பீத்திருவா. எப்பவாவது ஒரு தரக்கம் சோத்துக் கைக்குள்ளெ இரிக்கிறெ பார்சலெ விரிச்சி எனெக்கி ஒரு பொரிச்செ எறெச்சி துண்டெத் தருவா.

"இந்தா மூசி. இதெத் தின்னு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்குமே கெடெக்காதெ பாக்கியம் அது. கடும் ருசியா இரிக்கிறெ அந்தெ எறெச்சி துண்டு எனெக்கிச் சுவனத்துச் சாப்பாடுமாரி இரிக்கும். சம்முனுக்கு என்னிலெ மத்திரம் ஏன் அப்பிடியொரு விருப்பம் என்டு எனெக்கித் தெரியேலெ. இன்டெக்கி வரெக்கும் அதுக்கானெ காரணமு எனெக்கி வெளெங்கேலெ. ஒருவேளெ என்டெ நோஞ்சா உருவம் அவெனுக்கு என்னிலெ எரெக்கத்தெ ஏற்படுத்தியிருக்கலா. இல்லாட்டி அவெனுக்கு என்னிலெ பாலியல் ரீதியானெ விருப்பம் இரிந்திரிக்கலாம். சம்மூன் ஆம்பிளெயாக்களோடெ போறெ என்டு செலாக்கள் எனெக்கிட்டெச் சொல்லியிருக்கானொளு. ஆனா, ஒருநாளும் அவெ எனெக்கிட்டெ அப்பிடி நடந்துக்கிட்டதில்லெ.

சம்மூன் சரியானெ ஓர்மெயானவெ. குறிப்பா ரெண்டு சம்பவம் இப்பவும் என்டெ யாதிலெ இரிக்கி. ஒரு தரக்கம் எல்லாரும் ரோட்டிலெ இரிந்து கதெ சொல்லிக்கிட்டு இரிக்கக்குள்ளெ 'மூத்திரம் முடுக்குரு'' என்டு சொல்லிப்புட்டு, ஒள்ளுப்பந் தள்ளியிருந்தெ கானுக்குள்ளெ சம்மூன் மூத்திரம் பேஞ்சா. ஒரு மனிசனாலெ அம்புட்டுச் சாமத்துக்கு மூத்திரம் பேயெ ஏலும் என்டெத்தெ அன்டுதா நா என்டெ கண்ணாலெ கண்டே. கறுத்தெ அனிவா காக்காடெ கேப்பெ மாடு மூத்திரம் பேஞ்செமாரித்தா கனெசாமத்துக்கு சம்முனும் மூத்திரம் பேஞ்சா. தேங்கி நின்டெ கான் தண்ணிக்குள்ளெ மூத்திரம் பீத்து உழுந்தெ சத்தம் ஒரு அஞ்சி நிமிசத்துக்கு எந்தெவிதெ கொறெவுமில்லாமெ கேட்டுக்கிட்டேயிருந்திச்சி. அதுக்கு பொறவுதா அந்தெச் சத்தம் ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா கொறெஞ்சிது.

இன்னொரு தரக்கம் மத்தியானம் போலெ, "சம்முனெ கட்டி வெச்சிக்கி" என்டு கத்திக்கிட்டு கனெக்கப் பேர் ஓடுனானொளு. நானும் அவனொளுக்கு பின்னாலெ ஓடுனே. முத்தவெளிக்குக்குக் கிட்டெ ஒப்பிலாமணி அண்ணன்டெ பள்ளெவரவெக்குள்ளெ கனெக்க ஆக்கள் நின்டுகிட்டிரிந்தாகெ. நெருக்கியடிச்சிக்கிட்டு என்ன நடக்குதென்டு பாத்தே. வயலுக்குள்ளெ களிமண் தரெயிலெ சம்மூன் தலெகுப்புறெ கெடெந்தா. அவென்டெ கை பின்னாலெ கட்டப்பட்டிரிந்திச்சி. ராசங்காக்காடெ சலீம், சம்முன்டெ தலெயெ தரெயொடெ சேத்து காலாலெ மிதிச்சிக்கிட்டு இரிந்தா. நூறு, கபீர், கலீல், நாசீர் என்டு கனெக்க பேர் கம்பொடெயும், கொட்டானொடெயும் சம்முனெச் சுத்தி நின்டுக்கிட்டு இருந்தானொளு. மனவருத்தம் தாங்கேலாமெ அந்தெ எடெத்தெ உட்டு நா போவு மட்டு, ராசாங்காக்காடெ சலீம் சம்முன்டெ தலெயெ தரெயொடெ சேத்து மிதிச்சிக்கிட்டே இரிந்தா. சம்முன்டெ மூக்கு, வாய் கண்ணெல்லா மண்ணுக்குள்ளெ பூந்துட்டு. மனவருத்தமா இரிந்தெ அந்தெ நேரெத்திலெயு சம்முன்டெ ஓர்மெயெ நெனெச்சி எனெக்கிச் சரியானெ ஆச்சரியமா இரிந்திச்சி. இம்புட்டுச் சாமத்துக்கு அவெனாலெ எப்பிடி மூச்சு உடாமெ இரிக்கேலுது?! சூது வெளெயாடெக்குள்ளெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்முன் காட்னெ அட்டகாசத்தெ பொறுக்கேலாமெ, இவனொளெல்லா சேந்து செய்தெ திட்டமிட்டெ கூட்டுத் தாக்குதல் நடவடிக்கதா அது.

ஒரு தரக்கம் சம்முன் செறெயிலெ இரிந்து திரும்பி வந்திருந்தா. அவெனெப் பீத்து நா பாத்தே. பொலிசிக்கிட்டெ புடிபட்டது, கோட்டுக்கு கொண்டு போனது, செறெயிலெ நடந்தது எண்டு முத்துலயும் எனெக்கிட்டெ அவெ சொன்னா.

"மூசி. கூழ்முட்டெ மம்மறாயங் காக்கா இரிக்காரில்லவா. அவெர்ரெ ஊட்டுலெ இரிந்து, ராவு ரெண்டு மணிக்கிட்டெ ஒரு அண்டாவெ தூக்கிக்கிட்டு வந்தே. கம்மாலப்பாடெ ஓடெக்குள்ளெ வரெக்குள்ளே பொலிஸ்காரெ என்னெ புடிச்சிப்புட்டா. ஓடுவமெண்டுரா பாத்தே. கனெக்கெப் பொலிஸ் இரிந்தராலெ ஓடேலாமெ பீத்திரு.

அவெனொளு என்டெ தலெயிலெ அண்டாவெ வெச்சி பொலிஸ்டேசனுக்கு நடெக்கச் சொன்னானொளு. அங்கெ பீத்து சேருமட்டு பின்னாலெ இரிந்து அடிச்சிக்கிட்டே வந்தானொளு. ரெண்டு நாளெக்கி பொறவு, என்னெ கோட்டுக்கு கொண்டு போனானொளு. அதுக்கு பொறவு என்னெ அன்ரஸ்பொரெத்திலெ இரிந்தெ செறெயிலெ போட்டானொளு. எனெக்கி அந்தெ எடெம் புடிக்கேலெ மூசி. ஒரு நாள் என்ன செஞ்சேனெண்டாக்கா, நடுச்சாமத்துக்கு பொறெவு மதலுக்கு பக்கத்திலெ நின்டெ பெரியெ அரசமரத்திலெ ஏறி, உச்சிக்கு பீத்தே. அந்தெ மதல் பதினாறு அடி ஒசெரம். மத்தெப் பக்கத்தாலெ எறெங்கிறத்துக்கு ஒண்ணுமேயில்லெ. மதல்ரெ உச்சியிலெ இரிந்து நா கீழெ பாஞ்சிட்டே. செத்தெ சாமத்துக்கு எனெக்கி ஒன்னுமே வெளெங்கேலெ. என்டெ சூத்து ஒடெஞ்சி போனெமாரி இரிந்திச்சி. பொறெவு எழும்பி ஓடெத் தொவெங்கினே. விடியக்காத்தாலெயொடெ எனெக்கிச் சரியானெ பசியா இரிந்திச்சி. ஒரு தேத்தண்ணி கடெக்குள்ளெ பீத்து, தேத்தண்ணி குடிக்கக்குள்ளெ பொலிஸ்காரனொளு வந்திட்டானொளு. அங்ஙினெயே வெச்சி அவெனொளு எனெக்கி அடிச்சானொளு. அடியெ வாங்கிக்கிட்டு நா அந்தெ அடியேலா எண்ணினே மூசி. அவெனொளு எம்பத்தினாலு அடி அடிச்சானொளு."

ஆனா சம்முனிலெ எந்தெ மாத்தமும் தெரியேலெ. செறெயிலெ இரிந்துமாரியோ, இல்லாட்டி இம்புட்டு அடிவாங்கினெமாரியோ அவெ தெரியேலெ. சுத்துலும் கறுத்தெ அனிவா காக்காடெ கேப்பெ மாடுமாரியே அப்பவு அவெ இரிந்தா. இப்பிடியாப்பட்ட சம்முனெ ரெண்டு பேர் சேந்து கொன்டு பொட்டானொளு. மௌத்திலெகுடி சம்முன்டெ ஒருமெ கொஞ்சமுங் கொறெயேலெ.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாலஞ்சி மாசத்துக்கு முந்தி சூது வெளெயாடெக்குள்ளெ சொத்தி அனிவாக்கு, சம்மூன் இருநூறு ரூவா கடனா குடுத்திக்கா. கனெநாளா பீத்தும் சொத்தி அனிவா அதெ திருப்பி குடுக்கேலெ. கொஞ்செ நாளெக்கி முந்தி சொத்தி அனிவாவெ சம்மூன் அடிச்சிப்பொட்டா. காலம் இப்பெ மாறிப் பீத்திது என்டெத்தெ சம்மூன் சரியா புரிஞ்சிக்கேலெ. கையாலெ இல்லாட்டி கம்பாலெ அடிச்சி சண்டெ புடிக்கிறெதெல்லா இப்பெ இல்லெ. இப்பெ தோக்கு வந்திட்டு. முப்பது வரிசெ கால மாத்தம் சண்டெ புடிக்கிறெத்தயும் மாத்திப்புட்டுது. முந்தியாப்பலெ இப்பெ யாருங் கையாலெ சண்டெ புடிக்கிறெதில்லெ. யாரொடெயாவது கடும் பெரெச்சினெ வந்தா, இப்பெ கொலெதா நடெக்கிது. அதுவும் ஆமியிலெ இரிக்கிறெ ஒருத்தன்டெ வாப்பாக்கு யாராவது அடிச்சாக்கா அதுக்கு அந்தெ மகெ பழிவாங்காமெ இரிக்கெ மாட்டா. சம்முனுக்கு இதெல்லா சரியா வெளெங்கியிருக்காதுதா. அவென்டெ வட்டம் சின்னது. அவெனுக்கு வாப்பா இல்லெ. உம்மாவுமில்லெ. அவெஞ் சின்னாளா இரிக்கக்குள்ளெயெ அவெங்கெ ரெண்டு பேரும் மௌத்தா பீத்தாகெ. ராத்தாமார்தா அவெனெ வளெத்தெ. அவெ வளந்து பெரியாளாப் போனத்துக்குப் பொறெவு அவெ ராத்தாமாரொடெயுஞ் சேர்ரெதில்லெ. தென்னெ மரத்திலெ ஏறி தேங்கா ஆஞ்சி குடுக்கிறெ, சூது வெளெயார்ரெ, வாய்ப்பு கெடெச்சா சின்னெச் சின்னெ களவு. இவ்வளவுதா அவென்டெ ஒலெகம். கடெசியா ஒரு தமிழ்ப் பொம்புளெயொடெ அவெ குடும்பம் நடத்தி வந்தானாம். இப்பிடிப்பட்டெ சம்முனுக்கு குடும்பப் பாசத்தெப் பத்தியோ இல்லாட்டி மாறிப் பீத்திரிக்கிறெ இப்பத்தெயெ நெலெமெயெப் பத்தியோ அம்புட்டுத் தூரம் புரிஞ்சிரிக்காதுதா.

அன்டெக்கி மஹ்ரி பர்றெ நேரெத்திலெ சம்மூன் ஊட்டுக்கு நடெந்து பீத்திக்கிட்டிரிந்தா. செய்லத்தாத்தாடெ கடெயிலெ பாண் வாங்கிப்புட்டு, அவெ ரோட்டுக்கு வரெக்குள்ளெ, பெரியெ வெடிச்சத்தத்தொடெ தன்டெ விலாப்பக்கத்திலெ நெருப்புப் பத்தி எரியிறாப்பலெ அவெ ஒணந்தா.

"யார்ரா புண்டெயாண்டி."

ஒரெமானெ நோக்காட்டிலெ கையெ வீசிக்கிட்டு அவெ திரும்பக்குள்ளெ அவென்டெ பொறெடியிலெ இரும்புக் கம்பியாலெ ஒரு அடி உழுந்திச்சி. சம்மூன் நெலெ கொலெஞ்சி மண்ணிலெ உழுந்திட்டா. தனக்கு மேலெ சொத்தி அனிவாவும் அவென்டெ பொடியனும் நிப்பதெ சம்மூன் கண்டா. பொடியன்டெ கையிலெ ஒரு சின்னெத் தோக்கு.

"புண்டெயாண்டி ஒங்கெளெ கொல்லுவன்டா."

சம்முனாலெ முணுமுணுக்கெ மத்திரந்தா முடிஞ்சிது. தோக்கெ இடுப்பிலெ சொருகிப்புட்டு, வாப்பாடெ கையிலெ இரிந்தெ இரும்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பியெ வாங்கினெ சொத்தி அனிவாடெ பொடியெ, பொருத்து பாத்து சம்முனெ அடிக்கெத் தொவெங்கினா. தலெ, கழுத்து, கழுத்து, தலெ என்டு அவெ மாத்தி மாத்தி அடிச்சா. கடெசியா வாப்பாவும் மகனும் அங்கிருந்து பீத்தாகெ.

சம்முன்டெ விலாப் பக்கத்திலெ இரிந்து எரெத்தம் வழிஞ்சி, மண்ணிலெ ஊறிக்கிட்டிருந்திச்சி. அவென்டெ மொகெமெல்லா வீங்கி, பொடெச்சி கறுத்து பீத்திது. கண் வெளியே தள்ளியிரிந்திச்சி. அவென்டெ வாய் முணுமுணுத்துக்கிட்டிருந்திச்சி.

"தண்ணீ, தண்ணீ."

செயிலத்தத்தா குடுத்தெ தண்ணியெ குடிக்கிறெ நெலெமெயிலெ சம்மூன் இல்லெ. ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா அவென்டெ துடிப்பு அடெங்கி பீத்திது. மௌத்திலயும் அவென்டெ சோத்துக் கை மூடித்தா இரிந்திச்சி. இப்பெ அந்தெக் கைக்குள்ளெ காஞ்செ, புழுதி நெறெஞ்செ தெருமண் இரிந்திச்சி.

◂ 2006.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீமன் நசீர்

நா சின்னாளா இரிக்கெக்குள்ளெயே எனெக்கி பீமன் நசீரெத் தெரியும். அப்பெ எனெக்கி ஒரு எட்டு வயசிக்கிட்டெ இரிக்கும். அப்பெதா அவென்டெ ஊட்டாக்கள் எங்கெடெ பக்கம் குடி வந்திருந்தாகெ. அவெனுக்கு அப்பெ ஆறு வயசி மட்டுக்கு இரிக்கு. அப்பெ அவெனெ நசீரென்டு மத்திரந்தா கூப்பிர்றெ. பீமன் என்டெ பேரு, ஆப்தீன் நானா அவெனுக்கு பொறவு வெச்செ பட்டெப் பேர். எங்கெடெ பக்கத்திலெ ஆக்களுக்கு பட்டெப்பேர் வெக்கிறத்திலெ ஆப்தீன் நானாதா கடியாள். எப்பிடித்தா அவெரு ஆக்களுக்கு பட்டெப்பேர் வெக்கிறாரோ தெரியா. அவெரு வெக்கிறெ பட்டெப்பேர் அந்தந்தெ ஆக்களுக்கு கனக்கா பொருந்திரும். எங்கெடெ ஊர்லெ ஒத்தர் ஆக்களொடெ கதெக்கக்குள்ளெ அறுத்தம் திருத்தமா கதெப்பாரு. அவெருக்கு என்.எம்.பெரேரா என்டு ஆப்தீன் நானா பட்டெப்பேர் வெச்சாரு. எனெக்கி இன்டெக்கி வரெக்கு அவெரெ என்.எம்.பெரேரா என்டுதா தெரியும். அவெர்டெ உண்மெயானெ பேர் கனெக்கெ பேருக்குத் தெரியா. அதேமாரி இன்னொத்தனுக்கு ஐ.ஆர்.சீ என்டு பட்டெப்பேர் வெச்சாரு. அவெ இப்பெ களெவெடுத்து திரியிறா.

ஆப்தீன் நானா நசீருக்கு பீமன் என்டு பட்டெப்பேர் வெக்கெக்குள்ளெ அதுக்கு என்ன அறுத்தம் என்டு எனெக்கித் தெரியா. பொறவு ஆறாம் வகுப்பு படிக்கக்குள்ளதா, தமிழ் புஸ்தகத்திலெ மகாபாரதக் கதெயெப் பத்தி எழுதியிரிந்திச்சி. அப்பெதா அதிலெ வாறெ பீமன் சரியானெ பெலெசாலி என்டு தெரிஞ்சிச்சி. உண்மெயா நசீர் நல்லெ பெலெசாலிதா. அவெ சின்னெ ஆள்லெ இரிந்தே நல்லெ தொக்கெயா இரிப்பா. நல்லா பாரந் தூக்குவா. அப்பவே அவெ பத்துக் கொத்து நெல்லெ தலெயிலெ வெச்சிக்கிட்டு மெல்லுக்கு கொண்டு போவா குத்திறத்துக்கு. அவெ பெலெசாலியா இரிந்தத்தொடெ நல்லெ புத்திசாலியாவு இரிந்தா. மொதெமொதெல்லெ அவெனெ நா பாக்கக்குள்ளெ அவெ தன்டெ நானாவொடெ இப்பிடி கதெச்சிக்கிட்டிரிந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானா எனெக்கிட்டெ ரெண்டிசம் இரிக்கி. இரிலெ ஒரு சரத்துக்கு றசிக்கு வாங்கி திம்போ. மத்தெச் சரத்துக்கு முட்டாஸ் வாங்கி திம்போ."

கண்ணெப் பெரெட்டிப் பெரெட்டி அவெ கதெச்சதெக் கேக்கெ எனெக்கிச் சரியானெ புதுனெமா இரிந்திச்சி. என்னெ உடெ சின்னெப் பொடியன் எப்பிடி ஐடியா சொல்றான் என்டது எனெக்கி பெரியெ புதுனெமாத்தா அப்பெ இரிந்திச்சி. அதுக்கு பொறவு ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா நானும் நசீரும் கூட்டாளியா பீத்தோ. நாங்கெ கூட்டாளியா போனத்துக்கு அலெரி கொட்டெ வெளெயாட்டுத்தா காரணம். எங்கெடெ ஊட்டெ ஒரு அலரி மரம் இரிந்திச்சி. அது கனெக்கெ பூத்து, காய்க்கும். அதாலெ எனெக்கிட்டெ எப்பெவு கனெக்கெ அலெரி கொட்டெ இரிக்கும். அலெரி கொட்டெ வெளெயாடெக்குள்ளெ நா கனெக்கெ கொட்டெ வெச்சிரிப்பே. எனெக்கிட்டெ இரிந்தெ அலெரி கொட்டெயெப் பாத்து நசீர் என்னொடெ கொம்மனி சேந்திட்டா. அதுக்குப் பொறவு நாங்கெ ரெண்டு பேரு நல்லெ கூட்டாளியா பீத்தோ.

என்டாலு நசீரும் நானும் நெருக்கமா போறெத்துக்கு பறக்கிறெ வெளெயாட்டுத்தான் ஒரு முக்கியமானெ காரணமா இரிந்திச்சி. ஒருதரக்கம், நா பின்னேரெத்திலெ விதாப்பாடெ வளவுக்குள்ளெ வெளெயார்றத்துக்கு பீத்திரிந்தே. அப்பெ அங்ஙினெ கனெக்கெ பேர் சிரிச்சிக்கிட்டு நின்டானொளு. நா என்னென்டு பாக்கிறத்துக்கு அங்ஙினிக்குள்ளெ போனெ. என்னெக் கண்டதும் கோணெத்தலெயெ நபீர் கேட்டா.

"டேய் மூசீ. ஒனெக்கிப் பறக்கெ விருப்பமா?"

எனெக்கி ஒன்னும் வெளெங்கேலெ. பொறவு பொக்கெ நாசீர் சொன்னா.

"இஞ்செ பார்ரா. நாங்கெல்லா பறந்துபுட்டுத்தா இரிக்கோ. விருப்பமென்டா வா. இல்லாட்டி உடு"

அங்ஙினெ இரிந்தெ நெலெமெயெ பாத்து எனெக்கிப் பறக்கிறத்துக்கு ஆசெ வந்திட்டு. ஒரு நீட்டு கம்பு, ரெண்டு சொளெவு, சணெல் எல்லாம் அங்ஙினெ இரிந்திச்சி. நா சரி என்டு சொன்னதும் எல்லாருங் கையெத் தட்டிச் சிரிச்சி, என்னெ உச்சாகப்படுத்திக்கிட்டு என்னெச் சுத்தி நின்டானொளு. மொதெல்லெ கோணத்தலெயன் ஒரு நீட்டு கம்பெ எடுத்து, என்டெ கையெ நீட்டெச் சொல்லி, அந்தெ கம்பெ என்டெ முதுவுப் பக்கத்திலெ வெச்சி, ரெண்டு மொழெங்கையயும் கம்பெயுஞ் சேத்து இறுக்கிக் கட்டினா. பொறவு, ரெண்டு சொளெவெயும் எடுத்து, என்டெ ரெண்டு கைப்பக்கத்திலெயும் வெச்சி கட்டினா. எனெக்கென்டா என்னென்டு சொல்லேலாதெ ஒரு ஒணெத்தி. ஒரு பக்கம் சந்தோசமாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிந்திச்சி. மத்தப் பக்கம் பயமாவும் இரிந்திச்சி. எல்லா முடிஞ்சதும் கோணைத்தலெயன் சொன்னான்.

"எல்லாரும் இப்பெ கை தட்டுங்கெ. இந்தா மூசி பறக்கெப் போறா"

சொல்லிப்புட்டு, அப்பிடியே என்டெ சாறனெ கெளெஞ்சி உட்டுட்டா. என்டெ சாறங் கெளெஞ்சி அப்பிடியே கீழெ உழுந்துட்டு. நா உலியாணத்தொடெ நின்டே. சுத்தியிரிந்தெ எல்லாரு கையெ தட்டி கூ போட்டானொளு,

"ஓடி வாங்கெ, ஓடி வாங்கெ மூசி பறக்கிறா"

நா தெகெச்சி பீத்தே. என்ன நடெக்கிதென்டு எனெக்கி வெளெங்கெவே இல்லெ. என்னாலெ கையெ மடிக்கவோ, கீழெ உழுந்தெ சாறனெ எடுக்கவோ முடியேலெ. வெக்கத்தாலெ என்டெ ஒடெம்பு கூசிப் பீத்திது. ஒடெம்பு நடுங்கி, வேத்துப் பீத்திது. கடுங்கோவெத்திலெ கீசிக் கத்தினே.

"ஒம்மா ஓத்தவனொளா, கையெ அவுத்துடுங்கடா"

ஆனா யாருங் கையெ அவுத்து உடேலெ. என்னெச் சுத்திச் சுத்தி, கையெத் தட்டிக்கிட்டு சிரிச்சி சிரிச்சி வந்தானொளு. என்டெ கோவெம் இப்பெ கத்துவெயா மாறிட்டு. வெப்புசாரத்திலெ ஏசி, ஏசிக் கத்தெத் தொவெங்ஙினே. அப்பதா அங்ஙினெ வந்தெ நசீர் எனெக்கி ஒதெவி செஞ்சா. அவெ என்டெ சாரனெ எடுத்து என்டெ இடுப்பிலெ உடுத்தினா.

"டேய் பீமா, அங்காலெ போடா"

பொக்கெ நாசீர் நசீர்ரெ தலெயிலெ குட்டினா. ஆனா நசீர் குட்டெ வாங்கிப்புட்டு, என்டெ கைக்கட்டெ அவுத்தா. நா வெக்கத்திலயு, வெப்புசாரத்திலயு அங்ஙினெ இரிந்து ஊட்டெ ஓடிப் பீத்தே. அதுக்குப் பொறவு ஒரு கெழெமெ கழிச்சித்தா நா ரோட்டுக்கு வந்தே. அந்தெ நேரெத்திலெ நசீர் எனெக்கிச் செஞ்செ அந்தெ ஒதெவி, என்டெ மனசிலெ எப்பவு மறெயாமெ இரிந்திச்சி. அதுக்கு பொறவு நசீர்ரெ நெருங்ஙின கூட்டாளியா நா மாறிட்டெ.

அலெரிக் கொட்டெ வெளெயாட்டிலெ நசீர் புருசு புருசா ஐடியாவெல்லாம் எடுப்பா. வழக்கமா நாங்க நீட்டா இரிக்கிற, இல்லாட்டி நல்லெ தொக்கெயா இரிக்கிறெ கொட்டெயத்தா கையானுக்கு எடுப்போ. ஆனா ஒருதரக்கம் நசீர் என்ன செஞ்சானென்டாக்கா, ஒரு ஈயத்துண்டெ எடுத்து, அதெ ஒரு அலரி கொட்டெக்குள்ளெ பூத்தி, அதெக் கையானா கொண்டு வந்தா. அதாலெ எறிஞ்சா நாலஞ்சி கொட்டெக்கி மேலெ கோட்டுக்கு வெளியாலெ பீத்திரும். எப்படித்தா பீ ஓட்டு ஓட்டினாலும் அவெ அந்தெ ஈயக்கையானாலெ லேசா வெளியேத்தி எல்லாரயு வென்டுபுடுவா. இன்னொரு தரக்கம், எங்கெடெ ரோட்டுக்கு தார் ஊத்தெக்குள்ளெ, அவெ ஒள்ளுப்பந் தாரெ எடுத்து உருட்டி, அலெரிகொட்டெயெ ரெண்டா ஒடெச்சி அந்தெ தார் கட்டியிரெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டு பக்கமும் கொட்டெயிரெ ரெண்டு பாதியெயும் நல்லா ஓட்டி கொண்டு வந்தா. அந்த கையானெப் பாக்கக் கறுப்பாவுஞ் சரியானெ மொத்தமாவு இரிந்திச்சி. அந்தக் கையான் பட்டாலே கொட்டெயெல்லா பறக்கெத் தொவெங்கிட்டு. அதெப் பாத்து, எங்களுக்கெல்லாம் பெரியெ கொழெப்பமாப் பீத்திது. அதாலெ எல்லாருமாச் சேந்து அலெரி கொட்டெ வெளெயாட்டிலெ புருச் சட்டமெல்லாம் போடெ வேண்டி வந்திட்டு.

நசீர் ஒரு நல்லெ கொணமுள்ளவனா இரிந்தா. அவெ நல்லெ தொக்கெயா இரிந்தாலும் யாரொடெயும் அவெ சண்டக்கி போனெதில்லெ. என்னமாரி பிரெச்சினெ வந்தாலும் அவெ சிரிச்சே சாமாளிச்சிப்புடுவா. அவெ கோவிச்சி யாரும் பாத்ததில்லெ. எதுக்கென்டாலும் அவெ ஓட்டுத்தா. எங்கெ கூப்பிட்டாலும் வருவான். என்ன செய்யிறென்டாலும் அவெனுக்கு ஒந்தான். ஆனா கூடாதெ வேலெயென்டு தெரிஞ்சா அதுக்கு அவெ ஓம்படெ மாட்டான். என்டாலும் சாப்பாட்டு வெசெயத்திலெ மத்திரம் அவெ கள்ளத்தனம் பண்ணுவா. எங்கெயாவது பாலும் பழமும் குடுக்கக்குள்ளெ அவெ கொறெஞ்சது ரெண்டு தரக்கமாவது வேங்கிக் குடிச்சிப்புடுவா. அதேமாரி ஆசிறா கொளெக்கட்டெ குடுக்கக்குள்ளயு எங்கெளெயெல்லா உடெ கூடெ கொளெக்கட்டெ வேங்கிப்புடுவா. பன்னெண்டாம் மௌலத்து ஓதெக்குள்ளெயும் அப்பிடித்தா. ஒரு லைன்லெ நின்டு நாரிசா வாங்கிப்புட்டு, மறுவா மத்தெ லைன்லயு நின்டு நாரிசா வாங்கிப்புடுவா.

நசீர் வடிவா சுன்டியல் கட்டுவா. எங்ஙினெயாவது தேடித்தேடி வடிவானெ கெவெர் கம்பெ கொண்டு வந்திருவா. பொறவு சைக்கிள் டியூப்பெ வெட்டி அதாலெ அந்தெ கெவெரெ வடிவா வரிவா. நாங்கள்லா தையல் கடெக்கி பீத்து மிஞ்சினெ துணியிலதா மரெக்காந்தொலி தைப்போ. ஆனா நசீர் என்ன செய்வானென்டா தடிச்செ பெட்சீட் இல்லாட்டி பழெயெ வாரிலதா மரக்காந்தொலி செய்வா. செலெநேரத்திலெ எதென்டாலுங் குருவியெ அடிச்சா அதிடெ எரெத்தத்தெ எடுத்து, சுன்டியல்லெ பூசுவா. நானும் நசீரும் கனெக்கத் தரக்கம் குருவி அடிக்கப் பீத்திரிக்கம். எனெக்கென்டா கனக்கா லெக்குப் பாத்து அடிக்கத் தெரியா. ஆனா, நசீர் நல்லா அடிப்பா. அவெந்தா ரெண்டு மூனு தரக்கம் குருவி அடிச்சிரிக்கா. அதெத் தக்பீர் பண்ணி, நெருப்பு மூட்டி சுர்ரெ வேலெயயும் அவெந்தா செய்வா. அதோடெ 'தாயெப் பழிச்சாலுந் தண்ணியெயெப் பழிக்கப்படாரு' என்டதெ அவந்தா எனெக்கிச் சொல்லித் தந்தா. ஒரு தரக்கம் குருவி அடிக்கெப் பீத்துக்கிட்டு இரிக்கக்குள்ளெ எங்கெ ரெண்டு பேருக்கும் நல்லா தண்ணித்தாவம் வந்திட்டு. அங்ஙினெ ஒரு எடெத்திலெயும் கெணறு இரிக்கேலெ. அப்பதா ஒரு மடுவுக்குள்ளெ ஒள்ளுப்பந் தண்ணியிரிந்தத்தெ நாங்கெ பாத்தோ. எனெக்கென்டா அதெக் குடிக்கெ ஒள்ளுப்பமும் மனமில்லெ. ஆனா, 'தாயெப் பழிச்சாலு தண்ணியெப் பழிக்கப்படாரு' என்டு சொல்லிப்புட்டு நசீர் அதெக் குடிச்சான். அதுக்கு பொறவு நானும் அதெக் குடிச்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதெக் குடிச்சத்தாலெ எங்களுக்கு ஒன்னுஞ் செய்யேலெ.

ஒருநாள் நானும், நசீரும் குருவி அடிக்கப் பீத்திக்கிட்டு வரெக்குள்ளெ பீச்சூத்தன் லாபிர் எங்களொடெ தணுவெத் தொவெங்கிட்டா. நாங்கெ சும்மாதா வந்திக்கிட்டு இரிந்தோ. அவெந்தா என்டெ சுண்டியலெ இழுத்து பறிக்கப் பாத்தா. நா உடேலெ. நானு இழுத்துப் புடிச்சிக்கிட்டே. அப்பதா நசீர் சொன்னா.

"ஏண்டா அவென்டெ சுண்டியலெ பறிக்கிறா?"

"நீ யாரோய் அரெக் கேக்கெ?"

பீச்சூத்தன், நசீரெப் பாத்து சத்தமாக் கேட்டான்.

"ஏ, நா கேக்கப்படாரா? அவெ என்டெ கூட்டாளி."

"கூட்டாளியும், பூட்டாளியும். நீ ஒன்டெ வேலெயெப் பாத்துக்கிட்டுப் போ ஓய்!"

அப்பிடித் தொவெங்கினெ வாய்த்தக்கம் கடெசியிலெ நசீருக்கும் பீச்சூத்தனக்கும் எடெயிலெ சண்டெயா மார்ரெ அளவுக்கு பீத்திது. ரெண்டு பேருக்கும் நடுவுலெ நா பீத்து நின்டுக்கிட்டு ரெண்டு பேரெயு சண்டெ புடிக்காமெ தள்ளித் தள்ளி உட்டே. எனெக்கி நல்லாத் தெரியு. சண்டெ வந்தா பீச்சூத்தந்தா வெல்லுவா. நசீருக்கும் அது தெரியும். பள்ளிக்கொடத்திலயு பீச்சூத்தனுக்கு எல்லாரும் பயம். கனெநேரெமா ரெண்டு பேரு வாயாலயெ சண்டெ புடிச்சிக்கிட்டிரிந்தாகெ. டக்கென்டு பீச்சூத்தன் சொன்னா.

"சும்மா கரெச்சிக்கிட்டு இரிக்காமெ வா ஓய் சண்டெ புடிச்சிப் பாப்போ."

இந்தெத் தரக்கம் அவென்டெ கொரெல் கடுஞ் சத்தமா கேட்டிச்சி. நா பயந்து பீத்தே. இனிச் சண்டெதா. பீமன் வாங்கெப் போறா. எனெக்கென்டா இந்தெ சண்டெயெல்லா புடிக்கத் தெரியா. எனெக்கி இப்பெ ஒடெம்பு நடுங்கத் தொவெங்கிட்டு. அப்பதா நசீர் உறுதியாச் சொன்னா.

"ஓங்கெடெ ஊடு கிட்டெ"

எனெக்கு அப்பதா அந்தெ உண்மெ தெரிஞ்சிச்சி. நசீர்ரெ ஊட்டெ உடெ பீச்சூத்தன்டெ ஊடு ஒள்ளுப்பங் கிட்டத்தா இரிந்திச்சி. ஆனா பீச்சூத்தன் உடேலெ.

"அப்பெ வா. முத்தவெளிக்குப் பீத்து சண்டெ புடிப்போ."

முத்தவெளிக்கா! அது எம்புட்டுத் தூரத்திலெ இரிக்கி! அங்கெ பீத்துச் சேர்ரத்துக்குள்ளெயே விடிஞ்சி பீத்திரும். எனெக்கி என்ன செய்யிரென்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியேலெ. இரிக்கிறெ சாங்கத்தெப் பாத்தா பீச்சூத்தன் உடெமாட்டான் போலெத்தாந் தெரீரு. என்டாலும் நசீர் இப்பவும் அப்பதெமாரியெ உறுதியாச் சொன்னா.

"முத்தவெளிக்கு போனாலும் ஒங்கடெ ஊடுதா கிட்டெ"

அது உண்மெதா. பீச்செக்கைப் பக்கம் நசீர்ரெ ஊடு. சோத்துக்கை பக்கம் பீச்சூத்தன்டெ ஊடு. முத்தவெளியு சோத்துக்கைப் பக்கந்தா இரிக்கி. அப்பெ அவென்டெ ஊடு கிட்டெத்தான். கடெசியா சண்டெ நடெக்கேலெ. ஒருமாரி பீச்சூத்தன் பீத்தா. போவெக்குள்ளெ நசீர்ரெப் பாத்து அவெஞ் சொன்னா,

"போ ஓய்! பயந்தாங்கோலி!"

இப்பிடியெல்லாம் ஒரு அஞ்சி வரிசம் மட்டுக்கு நாங்கெ ரெண்டு பேருங் கூட்டாளியா இரிந்தோம். பொறவு அவென்டெ குடும்பத்தாக்கள் பள்ளிவாசல் தெருவுக்குக் குடி பீத்தாகெ. அதுக்கு பொறவு நாங்கெ ரெண்டு பேரும் பாக்கிறது நல்லா கொறெஞ்சி பீத்திது. அவெ பள்ளிக்கொடத்துக்கு வாறெத்தையும் நிப்பாட்டிப்புட்டா. எப்பவாவது கண்டா ஆளாளப் பாத்து சிரிச்சிப்புட்டு பீத்திருவோ. அம்புட்டுத்தான்.

பெரியாளாப் போவெப் பேவெ பீமன் நசீர் எங்கெடெ ஊர் முத்துலும் ஒரு முஸ்பாத்தியானெ ஆளா மாறிட்டான். அவென்டெ கதெயே பகிடிதா. அவெ கனெக்கெக் கதெக்கெ மாட்டான். ஆனா கதெக்கிறெ முத்துலும் பகிடிதா. சாடெயா தலெயெ குனிஞ்சமாரி அவெ மெதுவாத்தா கதெப்பா. அவென்டெ மொகெம் எப்பவுஞ் சிரிச்சமாரித்தா இரிக்கும். அவெ கொஞ்செப் பேரெ சேத்து ஒரு புட்போல் டீமெ உண்டாக்கினா. அதுக்கு "பஸார் டீம்" என்டு பேர் வெச்சா. பீமன் நசீர்ரெ பஸார் டீம் வெளெயாடுதென்டா அன்டெக்கி முத்தவெளியிலெ சனெந்தா. எல்லாரும் நசீர்ரெ பகிடியெ பாக்கத்தா போவோம். தனக்குக் கெடெக்கிறெ போலெ அடிச்சிப்புட்டு அவெ வெளியிலெ இரிக்கிறெ எங்கெளெப் பாத்துச் சொல்லுவா.

"பார்வெயாளெப் பெருமக்களே! உணர்ச்சிவசப்படாரிங்கெ."

"பார்வெயாளெப் பெருமக்களே! கை தட்டுங்கெ."

முத்தவெளி முத்துலும் அவெ துள்ளித் துள்ளி ஓடித் திரீரெ சாங்கத்தப் பாத்து அங்கினெ இரிக்கிறெ எல்லாருமே உழுந்து உழுந்து சிரிப்போம்.

நாங்கள்லா படிச்சிக்கிட்டு இரிக்கிறெ காலத்திலயே நசீர் கலியாணம் முடிச்சிட்டா. அதுவுங் காதல் கலியாணம். ஒரு நாள் ராவெயிலெ நாங்கெ கொஞ்சப் பேர் ரோட்டிலெ இரிந்து கதெச்சிக்கிட்டிரிந்தோம். அப்பெ நசீர் தன்டெ பொஞ்சாரியெக் கூட்டிக்கிட்டு அங்காலெ போனா. போவெக்குள்ளெ எங்கெளுக்கிட்டெ வந்து அவெ ராசியமா சொல்லிப்புட்டுப் போனா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன பாக்கெ கடும் புறாமெயா இரிக்கிமே."

எங்களுக்கு என்ன சொல்றதென்டே தெரியேலெ. அவெஞ் சொன்னது சரிதா. வெள்ளெயா, நல்ல வடிவா இரிந்தெ அவென்டெ பொஞ்சாரியப் பாக்கெ எங்களுக்கு உண்மெயா புறாமெயாத்தா இரிந்திச்சி. பொறவு கனெக்கெத் தரக்கம் அதெச் சொல்லிச் சொல்லி நாங்கெ சிரிச்சி மாண்டிரிக்கோம்.

பீமன் நசீர் பகிடியானெ ஆளா மத்திரம் இரிக்கேலெ. ஊரிலெ வன்செயல் வந்தத்துக்குப் பொறவு, ஊர்காவல் படெயிலெ சேந்து, தோக்கு தூக்கினெ மொதெல் ஆளாவும் அவெ இரிந்தா. ராப்பட்டா ஒரு ஒத்தெக் கொழெல் தோக்கெத் தூக்கிக்கிட்டு, இன்னும் நாலஞ்சி பேரொடெ ஊரெச் சுத்திக் காவல் பாக்கத் தொவெங்கிடுவா. அந்தெ நேரெத்திலெ அவெ பகிடியானெ ஆளா இரிக்கிறதில்லெ. சிரிச்சுக் கதெச்சாலும் ஆள் சீரியஸாத்தா இரிப்பா. ஒரு தரக்கம் அவெ தோக்கெத் தூக்கிக்கிட்டு போவெக்குள்ளெ ஒரு கொமர் பொட்டெ அவெனெ பாத்து,

"என்ன நசீர். பாரத்துக்கா தோக்கெத் தூக்கிக்கிட்டு போறா"

என்டு நக்கலாக் கேக்கெ, அவெனுக்கு கோவம் வந்திட்டு. தோக்கெத் தூக்கி அந்தெ பொட்டெயிரெ தலெக்கு மேலாலெ சுட்டுப்புட்டா. வெடிச்சத்தத்தெக் கேட்டு, செத்தெ சாமத்துக்கு அந்தெ எடெம் அப்பிடியே ஒறெஞ்சி பீத்திது. அந்தெ பொட்டெ கீசிக் கத்திக்கிட்டு ஓடிட்டு.

இன்னொரு தரக்கம் மாடு மேய்க்கப் போனெ புக்கெக் காக்காவெ ரெண்டு நாளா காணேலெ என்டு கதெ அடிபடத் தொவெங்கிட்டு. அவெரெ புலி கொன்டுபொட்டா என்டு பொறவு தெரிஞ்சி பீத்திது. ஊர்லெ எல்லாருக்கும் சரியானெ ஆத்திரம். புக்கெக் காக்கா ஒரு அப்பாவி மனிசன். ஒத்தெக்கால் வழக்கமில்லாதெ ஆள். அதோடெ தமிழாக்களொடதா அவெருக்கு மிச்சம் பழக்கம். அப்பிடியாப்பட்டெ ஒராளக் கொன்டுட்டானொளு என்டது பெரியெ ஆத்திரத்துக்குரியெ சங்கதியாப் பீத்திது. ரெண்டு நாளெக்கிப் பொறவு, ஆட்டுமால் பக்கம் நாத்தமா இரிக்கி என்டு கதெ வந்திச்சி. எல்லாருக்கும் விசெயம் வெளெங்கிட்டு. ஆனா அங்கினெ போறத்துக்குத்தா ஒத்தரு முன்னுக்கு வரேலெ. கடெசியா சாறனெ மடிச்சிக் கட்டிக்கிட்டு நசீர்தா முன்னுக்கு போனா. வெட்டுக்காயத்தொடெ, உப்பிப் பீத்திரிந்தெ புக்கெக் காக்காடெ மையத்தெக் கண்டு புடிச்சி கொண்டு வாறத்துக்கு நசீர்தா முன்னுக்கு நின்டான்.

இந்தியெ ஆமி வந்தெ மூட்டத்திலெ நசீர் நல்லெ சந்தோசத்திலெ திரிஞ்சா. இந்திய ஆமியெ ஏமாத்திறதா அவென்டெ வேலெ. ஒரு தரக்கம் நாலஞ்சி சீக்கியனொளு நசீரெப் புடிச்சி மெய்யரிசப்பாடெ தென்னெந் தோட்டத்துக்குள்ளெ கூட்டிப் பீத்து தேங்கா ஆஞ்சி தரும்படி சைகெயாலெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியிருக்கானொளு. நசீருக்கு மரம் ஏறெத் தெரியுந்தா. ஆனா அந்தெ ஆமிக்காரனொளுக்கு தேங்கா ஆஞ்சி குடுக்கெ அவெனுக்கு விருப்பமில்லெ. அதாலெ அவெ அவெனொளப் பாத்து இங்கிலிசிலெ சொன்னா.

"நோ ஏறெல் போய்."

"ஏறா போய்?"

ஒன்னும் வெளங்காமெ ஆமிக்காரெ நசீரெப் பாத்து கேக்கெ, அவெ கையெ ஆட்டிப்புட்டு சாரனெ மடிச்சிக் கட்டினவந்தா. அதுக்கு பொறவு அங்ஙினெ ஆளெக் காணேலெ. அந்தல், ஆள் பறிஞ்சிட்டா.

இன்னொரு தரக்கம் ராவெயிலெ சென்டியிலெ இரிந்தெ ரெண்டு கூர்க்காக்காரெ ஆமிக்காரனொளு நடுச்சாமத்திலெ நெத்திரெ கொன்டுட்டானொளு. ரெண்டு பேரும் நெத்திரெ கொல்றத்தெ நசீரும் அவென்டெ சுட்டாளிமார் ரெண்டு பேரும் கண்டுட்டானொளு. சத்தம் காட்டாமெ மெல்லவா மெல்லவா பீத்து ரெண்டு பேர்ரெ தோக்கெயும் எடுத்துக்கிட்டு வந்திட்டானொளு. அடுத்தெ நாள் முழிச்சி பாத்தெ ஆமிக்காரனொளு தோக்கு களவு போனெத்தப் பாத்து பதறிப் பீத்தானொளு. சத்தம் போட்டுக்கிட்டு அங்காலெ போனெ எல்லாருக்கும் கண்டெமாரி அடிச்சானொளு. பொறவு ஆமிப் பெரியாள் வந்து கேட்டா. ஆனா யாருக்கும் ஒன்னுந் தெரியா. அதாலெ யாரும் ஒன்னுஞ் சொல்லேலெ. நசீர் தோக்கெக் குடுக்கயுமில்லெ.

இலெங்கெ ஆமி கொஞ்சக் காலமா கபுறடிக் காட்டுக்குள்ளெ சென்றி போட்டுக்கிட்டு இருந்தானொளு. அப்பெ ஒரு தரக்கம் நசீர் கபுறடிக் காட்டுக்குப் பக்கத்திலெ இரிந்தெ கொளெத்துக்குப் பக்கத்திலெ ஒரு மொழெக்கட்டெயிலெ தன்டெ மாட்டெ கட்டிப்புட்டு வந்தா. அப்பெ மஹ்ரிபர்ரெ நேரெமாப் பீத்திது. சென்றியிலெ நின்டெ ஒரு ஆமிக்காரன் நசீரெப் புடிச்சிட்டான்.

"ஏய், கொஹெதெ கீயெ?"

ஆனா நசீருக்கு சிங்களமென்டெ சாமானே தெரியா. என்டாலும் அவெ எந்தெத் தயக்கமுமில்லாமெ ஆமிக்காரனுக்கு பதில் சொன்னான்.

"ஓம் மாத்தயா கொளெத்தடிக்குத்தா பீத்துக்கிட்டு வாரே"

நசீர் சொன்னது ஆமிக்காரனுக்கு வெளெங்கேலெ. அவெனுக்கு கோவெம் வந்திட்டு.

"கொளத்து. மொகடதெ கிவ்வே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நசீர் அப்பவும் பயப்பிடேலெ. தெகிரியமா பதில் சொன்னான்.

"ஓம் மாத்தெயா. மொளெக்கட்டேலதா மாட்டெக் கட்டிக்கெ."

ஆமிக்காரனுக்கு கோவெம் தலெக்கேறிட்டு.

"ஒயா கௌதெ ஓய்!"

அப்பவும் நசீர் பதில் சொன்னான்.

"ஓம் மாத்தயா. கவுத்தாலெதா கட்டிக்கே"

"ஒயாடெ பிஸ்ஸுதெ?"

ஆமிக்காரென்டெ கொரெல்லெ தெரிஞ்செ கோவெத்தப் பாத்து நசீர் ஒள்ளுப்பம் பயந்து பீத்தான். என்டாலும் அவெ இந்தெத் தரக்கமும் தெகிரியமாப் பதில் சொன்னான்.

"ஓம் மாத்தயா, மாடு பிச்சிக்கிட்டுப் பீத்திரு. அதாலதா பெரிய கவுத்தாலெ அதெ கட்டிக்கே."

"பளயாங் ஓய்!"

ஆமிக்காரன் தோக்கெ தூக்கி பின்பக்கதத்தாலெ அடிக்கெ முந்தி அந்தெ எடெத்தெ உட்டு நசீர் ஓடி வந்திட்டான்.

• • •

நசீர் மௌத்தாப் போறெத்துக்குக் கொஞ்செ நாளெக்கி முந்தி நா ஊருக்கு பீத்திரிந்தே. ஊர் கடுமெயா கொழெம்பியிரிந்தெ நேரெம். ஒவ்வொரு நாளும் ஒரு கொலெ இல்லாட்டிக்கி ஒரு கடத்தல் என்டு எங்கெடெ ஊர்லெ ஏதாவது ஒன்னு நடந்துக்கிட்டே இரிந்திச்சி. ஒரு மஹ்ரிபட்டெ நேரெத்திலெ நா ரோட்டாலெ பீத்திக்கிட்டு இரிக்கக்குள்ளதா பீமன் நசீரெப் பாத்தே. கனெ காலத்துக்கு பொறவு இப்பதா அவெனெப் பாக்கிறே. கையிலெ ஷொட் கன்னெத் தூக்கிக்கிட்டு அவெ எனெக்கி எதுக்கெ வந்திக்கிட்டிரிந்தா. என்னெக் கண்டதுஞ் சிரிச்சா. அதே கொழெந்தத்தனமானெ பகிடிச் சிரிப்பு.

"சேர். நீங்கள்லா இந்தெ ஊருக்கு வராதிங்கெ சேர். நம்மெடெ ஊர்லெ நெலெமெ இப்பெ நல்லா இல்லெ. நாங்கெ இங்ஙினிக்குள்ளெ இரிந்து எப்பிடியாவரு பாத்துக்கிறஞ் சேர்."

பழைய கூட்டாளித்தனம் மாறி மருவாரியொடெ நசீர் எனெக்கிட்டச் சொன்னா. அவெ அப்பிடிச் சொன்னது, என்னெக் கடுமெயா பாதிச்சிட்டு. நா வெளியூர்லெ பாதுகாப்பா இரிக்கிறே என்டெத்தெ அவெ குத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டினெமாரி இரிந்திச்சி. நா வெக்கிப் பீத்தே. அவெனுக்கு மறுமொழி சொல்லாமெ சிரிச்சிப்புட்டு நா அங்ஙின இரிந்து பீத்தே.

அதுக்கு ஒரு மாசத்துக்கு பொறவு அவென்டெ மௌத்துச் செய்தியெக் கேள்விப்பட்டே. அவென்டெ மௌத்தெ மத்திரமில்லெ, அவெனொடெ சேத்து இன்னு நூத்துக்குக் கூடுதலானெ ஆக்கள்றெ மையத்துச் செய்தியும் வந்திச்சி. எக்கெச்சக்கமானெ ஆக்களெ ஏத்திக்கிட்டுப் போனெ லோஞ்சி கடெல்லெ தாண்டத்திலெ அந்தெ லோஞ்சிலெ இரிந்தெ கனெக்கெ பேர் மௌத்தா பீத்தாகெ. அதிலெ நசீரும் ஓராள்.

சொந்தக்காராக்கள், கூட்டாளிமார், ஒன்னா படிச்சாக்கள், பக்கத்து ஊட்டாக்கள் என்டு மௌத்தாப் போனாக்களெ பத்தினெ மனவருத்தத்திலெ என்டெ மனசி ஒறெஞ்சி பீத்திரிந்திச்சி. ஒரு கெழமையா ஒன்னுஞ் செய்யெ முடியேலெ. படுத்தாலும் முழிச்சிரிந்தாலும் அந்தெ மௌத்தாலிகள்றெ மொகெந்தா கண்ணுக்குள்ளெ தெரிஞ்சிக்கிட்டிரிந்திச்சி. அந்தெ மொகெங்கள்லெ நசீர்டெ கொழெந்தத்தனமானெ சிரிச்செ மொகெம் செத்தெ சாமத்துக்கு ஒரு தரக்கம் வந்து வந்து பீத்துக்கிட்டிரிந்திச்சி.

◀ டிசம்பர், 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்டெ மொதெல் காதெல்

அப்பெ எனெக்கிப் பதினாலு வயசிதா. நா படிச்செ பள்ளிகொடத்திலெ ஆம்புளெப் புள்ளேலும் பொம்புளெப் புள்ளேலும் ஒன்னாத்தா படிச்சம். என்டாலும் அந்தெ பொட்டெயெ இதுக்கு முந்தி ஒரு நாளும் நா எங்கெடெ பள்ளிக்கொடத்திலெ கண்டெதில்லெ. அப்பெ நா நல்லா படம் பாப்பே. அனேகமா எங்கெடெ ஊர் தியேட்டர்லெ போர்றெ எல்லாப் படத்தெயும் நா பாத்திக்கே. ஊட்டெ தெரியாமத்தா படத்துக்கு போவெ. ஒரு தரக்கம், தியாகராஜ பாகவதர்ரெ படவிழா என்டு சொல்லி, எங்கெடெ ஊர் தியேட்டர்லெ தொடெந்து அவெர்டெ படத்தெயே போட்டாகெ. மொதெல் படம் அம்பிகாபதி. ஆறெரெ மணி ஷோக்கு நா போனெ. படம் இழுத்து இழுத்து பீத்திக்கிட்டிரிந்திச்சி. ஒம்பது மணியாவும் பீத்திது. அப்பதா அம்பிகாபதி நூறு பாட்டுப் பார்றத்துக்காகெ அரசருக்கு முன்னாலெ இரிந்தாரு. எனெக்கி நெலெமெ வெளெங்கிப் பீத்திது. நூறு பாட்டும் முடிஞ்சி, படமு முடியிரென்டா பத்து. பதினொரு மணியாப் பீத்திரு. அதுக்குப் பொறவு நம்மடெ நெலெமெ பெரியெ கஷ்டமா பீத்திரும். அதாலெ அப்பவே எழும்பி ஊட்டெ வெளிக்கிட்டிட்டே. என்டாலும் ஊட்டெ பீத்துச் சேரெ ஒம்பதரெ மணியெ தாண்டிட்டு. ஊட்டெ எல்லாருக்கும் சங்கதி தெரிஞ்சிட்டு. ஊட்டெ பீத்துச் சேந்ததும், பெரிய நானா ஒரு கொட்டானாலெ ரெண்டு அடி போட்டான்.

என்டாலும் இந்தெ அடியெல்லா என்டெ படம் பாக்கிற ஆசெயெ கொறெக்கேலெ. எப்பிடியென்டாலுங் காசி சேத்துக்கிட்டு படம் பாக்கப் பீத்திக்கிட்டே இரிந்தே. அப்பெ பள்ளிக்கொடத்திலெ பிஸ்கேட் தருவாகெ. அதெ நா தின்னெ மாட்டே. மூனு பிஸ்கேட்டெயும் அஞ்சி சதத்துக்கு வித்துப்புடுவே. இப்பிடி அஞ்சி நாளெக்கி வித்தா இருவெத்தஞ்சி சதம் வரும். ஊட்டிலெ நா ஒரு கோழி வெச்சிரிந்தே. அது உர்றெ முட்டெயெ வித்தா முப்பத்தஞ்சி சதம் கெடெக்கும். இதெ உடெ செலெ நேரத்திலெ காத்தாலெயொடெ ஒன்னுந் தின்னாமெ உம்மாக்கிட்டெ காசெ வாங்கிட்டு பீத்திருவே. உம்மா பத்து சதம் தருவாகெ. இப்பிடி பலமாரி காசி சேத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கெடெ தியேட்டர்லெ போர்றெ எல்லாப் படத்தெயும் பாத்திடுவெ.

இப்பிடி ஒரு நரக்கம் ஞாயித்து கெழெமெயிலெ மெட்னி பாக்கெ போவெக்குள்ளதா அவவெ மொதெ மொதெலா பாத்தே. அவ சந்தியகாலெக்கும், வேதெக்காரத்தெருவுக்கும் எடெயிலெ இரிந்தெ ஒரு குட்டி ஒழுங்கெக்குள்ளெ ஒரு காகிதப்பூ மரத்திலெ பூ ஆஞ்சிக்கிட்டு இரிந்தா. அவ போட்டுக்கிட்டு இரிந்தெ முழுச் சட்டெயும் அந்தக் காகிதப்பூவும் ஒரே நெறெமாத்தா இரிந்திச்சி. அவவெ பாத்ததும் நா அசந்து பீத்தே. அவ ரோஸ் நெறெத்திலெ ஒரு ஹூர்லின் பொம்புளெமாரி இரிந்தா. அவடெ ஒடெம்பு முத்துலும் அழகு தெளிச்சிரிந்திச்சி. அலெமாரி இரிந்தெ தலெமுடியெ நடு வாங்கு பிரிச்சி ஒத்தெப் பின்னல் போட்டிரிந்தா. தலெமுடி நெறெஞ்சி இரிந்தத்தாலெ அவடெ நெத்தி சின்னனாத் தெரிஞ்சிச்சி. அவடெ கண்ணுஞ் சின்னதுதா. ஆனா அது எப்பெயும் சிரிச்சிக்கிட்டு இரிந்திச்சி. கீழ் நெமெயொடெ தொவெங்கி அவடெ சொக்கு குமிஞ்சிரிந்திச்சி. ரெண்டு சொக்குக்கு எடெயிலயும் இரிந்தெ நேரானெ மெல்லிய மூக்கும், அதுக்குக் கீழெ இரிந்தெ ஒதெடும் எப்பவுஞ் சிரிச்சிக்கிட்டே இரிந்திச்சி. பதினஞ்சி வருசத்துக்கு பொறவு அவவெ நா கடெசியா பாக்கிறதுக்கு முந்தி வரெ அவடெ மொகெத்திலெ இரிந்து, அந்தெச் சிரிப்பு ஒரு நாளும் இல்லாமெப் போனெதில்லெ. நா அவவெ மொதெலாவதா பாத்தெ அந்தெ நேரெத்திலெ அவ தாவெணியெல்லாம் போடேலெ. அவடெ கழுத்து நல்லா நீளமா இரிந்திச்சி. அவ சரியானெ மெல்லிசாவும் ஒசெரமாவும் இரிந்தா.

நா அந்தெ ஒழுங்கெக்குள்ளெ போவெக்குள்ளெ, பூவெ ஆஞ்சமாரியே அவ என்னெப் பாத்தா. கழுவித் தொடெச்சமாரி இரிந்தெ அவடெ மொகெத்திலெ சிநேகத்தனமானெ சிரிப்பு தெரிஞ்சிச்சி. அவடெ சொக்குலெ குழி உழுந்திச்சி. நா சிலித்துப் பீத்தே. என்னென்டு தெரியாமெ என்டெ ஒடம்பு நடுங்கிப் பீத்திது. இப்பிடியும் ஒரு அழகா! இவ யாரு? என்னாலெ நடெக்கெ முடியேலெ. திரும்பிப் திரும்பி பாத்தே. அவ இப்பவும் பூ ஆஞ்சிக்கிட்டுத்தா இரிந்தா. அன்டெக்கி என்னாலெ ஒழுங்கா படம் பாக்கெ முடியேலெ. அந்த பொட்டெதா என்டெ கண்ணுக்குள்ளெ இரிந்தா.

மத்தநாத்து பள்ளிக்கொடத்துக்கு போனத்திலெ இரிந்து என்டெ வாழ்க்கெ முழுசா மாறி பீத்திது. எங்கெடெ வகுப்பு சேர், பரீத் சேருக்கிட்டெக் குடுக்கெச் சொல்லி எனெக்கிட்டெ ஒரு புஸ்தகத்தத் தந்தாரு. அதெ எடுத்துக்கிட்டு நா பரீத் சேரெத் தேடி வகுப்பு வகுப்பா போனே. அவெரு ஏழாம் வகுப்பிலெ இரிந்தாரு. அவெருக்கிட்டெ புஸ்தகத்தெக் குடுத்துப்புட்டு திரும்பக்குள்ளதா அந்தெ ஆச்சரியம் காத்துக்கிட்டு இரிந்திச்சி. நேத்துப் பாத்தெ அந்தெ பொட்டெயெ அந்தெ வகுப்பிலெ பாத்தே. இம்புட்டு காலமா என்டெ கண்ணிலெ அவெ எப்பிடி படாமெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிந்தா என்டு நெனெக்கெ எனெக்கித் தெகெப்பா இரிந்திச்சி. அவவெப் பாத்ததும் நேத்துமாரியே என்டெ ஒடம்பு நடுங்கிப் பீத்திது. தடுமாறிக்கிட்டு அங்ஙினெயிரிந்து வந்தே. அப்பெயிலெ இரிந்து நா வேறாளா பீத்தே. என்டெ நடெவெடிக்கெ முத்துலும் மாறிப் பீத்திது.

அவ இரிந்தெ வகுப்பு என்டெ வகுப்பு இரிந்தெ கட்டிடத்திலெ இரிந்து வேறெ கட்டிடத்திலெ இரிந்திச்சி. ஆனா ஏதாவது ஒரு காரணத்தெ வெச்சி நா அடிக்கடி அந்த கட்டிடத்துக்கு போவெத் தொவெங்ஙினே. டாப்பெ வெக்கெ, சோக்கு வெக்கெ, டஸ்டர் தேடி என்டு கனெக்கெக் காரணம் எனெக்கி கெடெச்சிது. ஒவ்வொரு தரக்கமும் அந்த ஹோலுக்குள்ளெ போவெக்குள்ளெ கடெக்கண்ணாலெ அவ இரிக்கிறெ எடெத்தெப் பாப்பே. மனசி கெடெந்து அடிக்கும். பொறவு எடெவேளெ வரும். வழக்கமா நா கெண்டீனிலெ ஒன்னும் வாங்கிறெதில்லெ. எனெக்கிச் சாப்பாட்டெ உடெ படந்தா முக்கியம். ஆனா இப்பவெல்லா நா கென்டினெச் சுத்திச் சுத்தி வரெத் தொவெங்ஙினே. பள்ளிக்கொடத்திலெ இரிந்தெ கெணெத்தெயுஞ் சுத்திச் சுத்தி வரெத் தொவெங்ஙினே. எங்ஙினயாவது அவவெப் பாத்தாப் போதும் என்டு என்டெ மனசி துடிச்சிக்கிட்டிரிந்திச்சி.

சரியா ரெண்டு நாளெக்கிப் பொறவுதா அவடெ பேரெ நா தெரிஞ்சிக்கிட்டே. எடெவேளெ நேரெத்திலெ அவ தண்ணி குடிக்கெ கெணெத்தடிக்கு போறெத்தெ நா பாத்தே. நெஞ்சி துடிக்கெ, சல்லி மரத்துக்கு பக்கத்திலெ நின்டுக்கிட்டு அவவெ பாத்தெ.

"அலிமா கெரியா வாடி"

எனெக்கிப் பின்னாலெ இரிந்து ஒரு கொரெல் கேட்டிச்சி.

"பொறுடி வாரே"

தண்ணி குடிக்கெ வாளிக்கிட்டெ வாயெ கொண்டு போனெவெ மறுமொழி சொல்லெக்குள்ளதா அவடெ பேர் எனெக்கித் தெரிஞ்சிச்சி.

அலிமா! அந்தெ பேரெ நெனெக்கெ நெனெக்கெ ஒடெம்பு குளுந்து. சிலித்துப் பீத்திரும். எந்தெப் பாடம் படிச்சாலும் அந்தெ பேர்தா முன்னுக்கு வந்திச்சி. விஞ்ஞான சேர் அலுமினியத்திடெ அணு எண்ணெச் சொல்லக்குள்ளெ எனெக்கி அலிமாடெ றோஸ் நெறெந்தா யாதுக்கு வந்திச்சி. சித்திரெப் பாடத்திலெ உருவங் கீறெக்குள்ளெ எனெக்கி அலிமாடெ சுருட்டெ முடி யாதுக்கு வந்திடும். அவக்கு நல்லெ சுருண்டெ முடி. அதுக்கு எண்ணெயெப் பூசி, படியெ வாந்திரிப்பா. எண்ணெ பூசினெ அந்தெ முடி வெயில் படெக்குள்ளெ பளெபளென்டு மின்னிக்கிட்டு இரிக்கும். அவடெ பேரு தெரிஞ்சத்துக்கு பொறவு ஆனாவுலெ தொவெங்கிறெ எல்லா எனெக்கிப் புடிச்சிப் பீத்திது. அலுவா, அயலெ, அம்மி என்டு எதெப் பாத்தாலு அதிலெயெல்லாம் அலிமாதா தெரிஞ்சா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனெக்கி இப்பெ நெத்திரெயெல்லாங் கொறெஞ்சி பீத்திது. ராவுலெ கனெசாமத்துக்குப் பொறவு நெத்திரெ கொண்டாலும், நெத்திரெ முழுக்கெ மினாந்தா. அந்த மினாமிலெ அலிமா தண்ணி குடிச்சிக்கிட்டு இரிப்பா, இல்லாட்டி பூவாஞ்சிக்கிட்டு இரிப்பா, இல்லாட்டி சில்லுக்கோடு வெளெயாடுவா. நெத்திரெ இல்லாதெ நேரெத்திலெயு அவடெ நெனப்புத்தா. அவவும் நானும் எப்பிடியெப்பிடியெல்லாம் இரிக்கணுமென்டு நெனெச்சிக்கிட்டே இரிப்பே. லாஞ்சிலெ போவெக்குள்ளெ, பாதாளமலெயிலெ லாஞ்சி தாண்டு, நானும் அவவும் மத்திரந் தப்பி, அந்தெ மலெயிலெ ஒருங்கணும். அவக்கு மீன் புடிச்சி சுட்டுக் குடுத்து அவவெ பாதுகாக்கணும் என்டு ரோசிப்பே. இல்லாட்டி அவவெ ஒரு கதிரெயிலெ இருக்கெ வெச்சி, அவடெ கால் நெறெயெ மல்லியப் பூவெயும் ரோஜாப் பூவெயும் அள்ளிப் போடணுமென்டு ரோசிப்பே. அந்தளவுக்கு அவ எனெக்குள்ளெ ஒரு தூய்மெயானெ ஆளா நெறெஞ்சிரிந்தா.

எனெக்கிப் படிப்புக் கொறெஞ்சி பீத்திது. மொனிட்டர் என்டெத்தாலெ ஏதாவது காரணத்தெச் சொல்லிப்புட்டு அலிமா இருந்தெ கட்டிடப் பக்கத்துக்குத்தான் ஒரே பீத்திக்கிட்டிரிந்தே. என்டாலும் எடெவேளெயெ உடெ அவவெ மத்தெ நேரெத்திலெ பாக்கிறதென்டா கடுங்கஸ்டமா இரிந்திச்சி. இப்பிடி நா கஸ்டப்பட்டு இரிக்கக்குள்ளதா எனெக்கி ஒரு கூட்டாளி வந்து வாச்சான். அவெனும் என்டெ வகுப்புத்தா. ஆனா இதுக்கு முந்தி அவெனொடெ எனெக்கி அம்புட்டு ஒறெவு இரிக்கேலெ. ஒரு நாள், எடெவேளெக்கு பொறவு அவெ என்டெ வாழ்க்கெயிலெ ஒரு முக்கியமானெ ஆளா மாறிட்டா.

எப்பவும்போலெ அன்டெக்கும் எடெவேளெ நேரெத்திலெ அலிமா போறெ பக்கமெல்லா நானும் பீத்திக்கிட்டு இரிந்தே. அப்பதா கோணெவாயன் இக்பால் அலிமாவொடெ கதெக்கிறத்தெப் பாத்தெ. அதுவுஞ் சும்மா கதெக்கேலெ. ஆளுக்காள் அடிச்சி, சிரிச்சிக்கிட்டுத்தா கதெச்சாகெ. 'அடெ இந்த கோணெவாயனுக்கு இவவெ தெரிஞ்சிக்கி' எனெக்கிக் கடுஞ் சந்தோசமா பீத்திது. எடெவேளெ முடிஞ்சதும் கோணவாயனுக்கிட்டெப் பீத்து சும்மா கதெ குடுத்தே.

"என்னடா அந்தெப் பொட்டெயொடெ லவ்வா?"

இக்பால் ஒன்னும் வெளெங்காமெ என்னெ பாத்தா.

"என்ன ஒன்னுந் தெரியாரெ ஆளாட்டம் பாக்கிறா? ஒங்கெடெ வெளெயாட்டெல்லாம் எனெக்கித் தெரியாதென்டா நெனெச்சா? யார்ரா அந்தெப் பொட்டெ?"

"எந்தெப் பொட்டடா"

உண்மெயா அவெ தெகெச்சித்தா பீத்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எடெவேளெ நேரெத்திலெ கையெல்லாம் புடிச்சி வெளெயாடினியெ. யார்ரா அவ?"

இப்பெ கோணெத்தலெயெ சிரிச்சா.

"அலிமாவெயா சொல்றா. அவ என்டெ சாச்சிடெ புள்ளெடா!"

எனெக்கி இப்பெ ஒரு வழி கெடெச்சிட்டு. பெரியெ காட்டுக்குள்ளெ சிக்கி, மாட்டிக்கிட்டவனுக்கு வழி கெடெச்செமாரி, இப்பெ எனெக்கி அலிமாவெ தெரிஞ்சிக்கிறத்துக்கு வழி கெடெச்சிட்டு.

அதுக்குப் பொறவு இக்பாலும் நானும் நல்லெ கூட்டாளியாப் பீத்தோ. நா தந்திரமாத்தா அவெனெ கூட்டாளி புடிச்சே. அவெ அம்புட்டுக் கெட்டிக்காரனில்லெ. அதிலெயும் அவெனுக்கு கணக்கு பாடம் துண்டா ஏறாது. அவெனுக்கு கணக்கு சொல்லி குடுக்கிறமாரி ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா அவெனெ கூட்டாளி புடிச்சே. பள்ளிக்கொடெம் முடிஞ்சத்துக்கு பொறவும் எங்கெடெ ஒறெவு தொடெந்திச்சி. அஸருக்கு பொறவு பள்ளிவாசல்லெ இரிந்து நா அவெனொடெ வந்திடுவே. ரெண்டு பேரும் ஒள்ளுப்ப நேரெம் பொய்யர் மடத்திலெ இரிந்து அங்ஙினெ கதெக்கிறெத்தெக் கேப்போ. இல்லாட்டி 'சொனாப்பானால்' வெளெயாட்டப் பாப்போ. அப்படியே அஞ்சி மணியா பீத்திரும். அதுக்குப் பொறவுதா பொம்புளெப் புள்ளெயொளெல்லா தண்ணி அள்ளெ வரெத் தொவெங்குவாகெ.

எங்கெடெ ஊரிலெ ரெண்டு பெரியெ கெணெறு இரிந்திச்சி. ஒன்னு கோட்டெயாத்து கெணெறு, மத்தது மெல்லுக் கெணெறு. இந்தெ ரெண்டு கெணெத்திலெயும் இரிக்கிறெ தண்ணி சரியானெ ருசி. இந்தெ தண்ணியக் குடிச்சிப் பழகினாக்களுக்கு வேறெ தண்ணியெ குடிச்சா நல்லா இரிக்காது. அம்புட்டு ருசி அந்தெ ரெண்டு கெணெத்து தண்ணிக்கும். பின்னெரப் பட்டுட்டா, இந்தெ ரெண்டு கெணெத்தடியிலயும் பொம்புளெ புள்ளெயொள்தான். பச்செ, செவெப்பு, மஞ்சள், நீலம் என்டு எல்லாக் கலர்லெயும் பாவாடெ சட்டெ போட்டுக்கிட்டு கொடங்கொடமா தண்ணி அள்ளிக்கிட்டு போவுமொளு. இசாவுக்கு வாங்கு சொல்றெ மட்டுக்கும் அங்ஙினெ சனமாத்தா இரிக்கும். சின்னெப் புள்ளெயொள்ளெ இரிந்து கலியாணம் முடிச்செ பெரியெ பொம்புளெவரெ பாட்டி பாட்டியா ஆக்கள் கெணெத்தடிக்கு வந்திக்கிட்டே இரிப்பாகெ.

இதிலெ உள்ளெ சங்கதி என்னென்டாக்கா. அந்தெ நேரெத்திலெ பொம்புளெ ஆக்கள் மத்திரம் வாறேலெ. எளெந்தாரிப் பொடியனொளுக்கும் அதுதான் நேரெம். நடந்துஞ் சைக்கிள்லெயும் பொடியந் தெரெவெளியொளு வந்து, பீத்துக்கிட்டே இரிப்பானொளு. பொம்புளெப் புள்ளெயொளப் பாக்கிறெ, நக்கலடிக்கிறெ, சிரிக்கிறெ என்டு அந்தெ எடெம் இசா மட்டுக்கும் பெரிய கலகலப்பாத்தா இரிக்கும். இப்பெ இந்தெக் கூட்டத்துக்குள்ளெ ஓராளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் மாறிட்டே. அலிமா தண்ணி அள்ளெ வாறெ நேரெம் எனெக்கித் தெரிஞ்சிட்டு. அவ சரியா அஞ்சி மணிக்கு மொதெலாவது கொடெந் தண்ணி அள்ளெ வருவா. அந்தோனியார் கோயில்லெ மணி அடிச்சி ஓள்ளுப்ப நேரெத்தாலெ அவ வருவா. நா என்ன செய்வெனென்டா, பொய்யர் மடத்திலெ இரிந்து மெதுவா நழுவி, பக்கத்திலெ இரிக்கிறெ எங்கெடெ பள்ளிக்கொடத்துக்குள்ளெ பீத்திருவே. அதுக்குள்ளெ ஒரு எடெம் இரிந்திச்சி. அதிலெ இரிந்து பாத்தா கெணெத்திலெ தண்ணி அள்றெ ஆக்கள், கெணெத்தடியிலெ நின்டு கதெக்கிறெ ஆக்கள் என்டு எல்லாரயும் பாக்கலாம்.

அலிமா வந்தெ ஒடெனெயே தண்ணி அள்ளிக்கிட்டு பீத்திரெ மாட்டா. கொடெத்தெ வெச்சிப்புட்டு அங்ஙினெ நிக்கிறெ மத்தெப் பொட்டெயொளொடெ கதெச்சி, சிரிச்சிக்கிட்டே இரிப்பா. அவக்கு ஆண்டவன் எப்பிடித்தா அம்புட்டு சிரிப்பெ குடுத்தானோ தெரியா. தண்ணி அள்ளிக்கிட்டு போவும்வரெ அவ சிரிச்சிக்கிட்டே இரிப்பா. அவ ஒவ்வொரு நாளும் மூனு கொடந் தண்ணி அள்ளெ வருவா. அந்த மூனு தரக்கமும் நா சுவனபதியிலதா இரிப்பே. எந்தெக் கவெலெயுமில்லாமெ, எதெப்பத்தினெ ரோசினெயும் இல்லாமெ அலிமாவெயே நா பாத்துக்கிட்டு இரிப்பே. இப்பிடியே கெழெமெக் கணக்கிலெ நடந்துக்கிட்டு இரிந்திச்சி.

இதுக்குள்ளெ என்ன நடந்திச்சென்டா, கொஞ்சக் காலமா அலிமாவெ காணேலெ. அவ பள்ளிக்கொடத்துக்கும் வரேலெ. தண்ணி அள்ளவும் வரேலெ. நா செத்தே பீத்தே. அவவெ பாக்காமெ எனெக்கி ஒன்னும் ஓடேலெ. என்ன நடந்திச்சென்டு தெரியேலெ. யாருக்கிட்டெயுங் கேக்கவும் ஏலா. ஏனென்டா அலிமாவுலெ எனெக்கி இரிக்கிறெ காதெல் ஒத்தருக்குந் தெரியா. அதெ நா யாருக்குஞ் சொல்லவும் விரும்பேலெ. அது எனெக்கி மட்டுந்தா தெரிஞ்செ சங்கதி. இந்தெ நெலெமெயிலெ எப்பிடி நா மத்தாக்களுக்கிட்டெ விசாரிப்பே? இக்பாலுக்கிட்டெகுடி நா கேக்கேலெ. கேட்டா அவெனுக்கும் வெளெங்கிடும். இப்பிடியாப்பட்டெ நெலெமெயிலெ நா நெலெவெசெரென்மாரி அங்ஙினெயும் இங்ஙினெயும் திரிஞ்சிக்கிட்டே இரிந்தெ. எங்ஙினெயென்டாலு அவடெ மொகெந் தெரியுமா என்டு தேடித் திரிஞ்சே.

கடெசியா ஒரு ரெண்டு கெழெமெக்கு பொறவு அவெ கெணெத்தடிக்கு தண்ணி அள்ளெ வந்தா. அவவெ பாத்ததும் எனெக்கி மூச்சே நின்ர்றும்போலெ இரிந்திச்சி. கத்துவெ வாறெமாரி இரிந்திச்சி. 'இம்புட்டு காலமா எங்கம்மா போனா' என்டு கேட்டு கத்தணும் போலெ இரிந்திச்சி. அலிமா இப்பெ தாவெணி போட்டிரிந்தா. ஒள்ளுப்பம் ஒடெம்பு கூடி, நல்லா செவெந்து பீத்திரிந்தா. கண்ணெச் சுருக்கிக்கிட்டு சிரிக்கிறெ அந்தெச் சிரிப்பு ஒள்ளுப்பங் கொறெஞ்சமாரி தெரிஞ்சிச்சி. அவ சிரிக்கக்குள்ளெ இப்பவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொக்கிலெ குழி உழுந்திச்சிதா. ஆனா அவ முந்திமாரி சத்தம்போட்டுச் சிரிக்கேலெ. தலெயெ கவுன்டுக்கிட்டு வெக்கம் வந்தெமாரி அவ சிரிச்சா. ஆனா எனெக்கி இதெல்லா ஒரு பெரிசாத் தெரியேலெ. அவளெ கண்டது மத்திரம் எனெக்கி போதும். மத்தெ ஒன்னும் எனெக்கி வாணாம்.

இப்பிடியே யாருக்குந் தெரியாமெ என்டெ காதெல் எனெக்குள்ளெ வளெந்திக்கிட்டு இரிந்திச்சி.

இப்பிடி இரிக்கக்குள்ளதா ஒரு நாள் என்டெ காதெலெப் பத்தி இக்பாலுக்கிட்டெச் சொல்லி, அவென்டெ ஒதெவியக் கேப்பமென்டு நா முடிவு செஞ்சே. வழமெயமாரி அஸருக்கு பொறவு ரெண்டு பேரும் வந்திக்கிட்டு இரிக்கக்குள்ளெ நா அவெனுக்கிட்ட கேட்டே.

"டேய் மச்சா! எனெக்கொரு ஒதெவி செய்வியாடா?"

வெக்கமும் தயக்கமும் ஒன்னாச் சேரெ, வாய் விலாத்தினெமாரி திக்கி திக்கி கேட்டே. என்டெ கொரெல் எனக்கே கேக்கேலெ. அம்புட்டு தூரத்துக்கு அது நடுங்கி, சின்னனாக் கேட்டிச்சி.

இக்பால் என்னெ ஒருமாரியா பாத்தா. அவெனுக்கு ஒன்னு வெளெங்கேலெ.

"என்னடா இப்பிடி கெடெந்து நடுங்கிறா?"

எனெக்கி எப்பிடிச் சொல்றேன்டு தெரியேலெ. வாய்க்குள்ளெ துப்பனியெல்லா வத்திப் பீத்திது. நாக்கு தொண்டெக்குள்ளெ ஒட்டிட்டு.

"இல்லெடா. எனெக்கி... எனெக்கி.... அலிமாவுலெ விருப்பன்டா."

ஒடெம்பெல்லா வேத்து விறுவிறுக்கெ ஒருமாரி சொல்லிட்டே.

இக்பால் என்னெ ஒருமாரி பாத்தா. அவென்டெ மொகெத்திலெ சரியானெ ஆச்சரியந் தெரிஞ்சிச்சி. பொறவு சோத்தக்கையெ மடிச்சி, என்டெ வவுத்திலெ சாடெயா குத்திப்புட்டுச் சொன்னா.

"டேய் நீ சரியானெ ஆள்றா"

அதுக்குப் பொறவு, அலிமாக்கிட்டெ எப்பிடி என்டெ காதலெ சொல்றேன்டு நாங்கெ ரெண்டு பேருங் கனெநேரமா ரோசிச்சோ. கடெசியா நா அவக்கு கடிதம் எழுவுறெ என்டும், அதெ அவெ அலிமாக்கிட்ட குடுக்கிறெ என்டும் முடிவு செஞ்சோ.

பொறவு என்னெ, ரெண்டு நாளா எனெக்கி நெத்திரெ இல்லெ. என்னமாரி எழுவுற என்டுதா ரோசினெ. கொப்பித்தாளெ கிழிச்சி கிழிச்சி போட்டர்தா மிச்சம். உருப்படியா ஒரு கடிதமும் வரேலெ. கடெசியிலெ இப்பிடி எழுவுனே.

என்டெ இருதயத்திலெ நெறெஞ்சிரிக்கிறெ அலிமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா ஒன்னெ விரும்புறே. ஒனெக்கு என்னிலெ விருப்பமென்டா இக்பாலுக்கிட்டெச் சொல்லு. விருப்பமில்லாட்டி இந்தெக் கடிதத்தெக் கிழிச்சிப்புடு.

இப்படிக்கு,
மூசீன்.

வடிவானெ எழுத்திலெ அச்சடிச்சமாரி எழுவி, இக்பாலுக்கிட்டெ குடுத்தே. அவெ அதெ வாசிச்சி பாத்தா. அப்பெ என்டெ ஒடெம்பெல்லா வெக்கெத்தாலெ கூசிப் பீத்திது. தலெயக் கவுன்டுக்கிட்டே. வாசிச்சிப்புட்டு அவெஞ் சொன்னா.

"நா இதெ குடுக்கிறே மச்சா!"

அதுக்கு பொறவு என்டெ நிம்மதியெல்லாம் பீத்திது. நாஞ் செஞ்சது சரியா என்டு, என்டெ நெஞ்சி துடிச்சிக்கிட்டே இரிந்திச்சி. கடிதத்தெ பாத்ததும் அலிமா என்ன செய்வா? தச்செலா அவடெ உம்மாக்கிட்டெச் சொல்லிக் குடுத்தா என்ன செய்யிறெ? மானமெல்லாம் பீத்திருமே! அதுக்குப் பொறவு ஊருலெ எப்பிடி தலெ காட்றெ? ரோசிச்சி, ரோசிச்சி மண்டெ வெடிச்சிடும் போலெ இரிந்திச்சி.

மத்தநாத்து பள்ளிக்கொடத்துக்கு இக்பால் வரேலெ. என்ன நடந்திச்சி என்டு எனெக்கித் தெரியேலெ. எடெவேளெ நேரெத்திலெ மறெஞ்சி மறெஞ்சி அலிமாவெ பாத்தே. அவ எப்பவுமாரித்தா இரிந்தா. பின்னேரந் தொழுவுறத்துக்கும் இக்பால் வரேலெ. எனெக்கி அன்டெக்கி ராவும் நெத்திரெ இல்லெ. ஆனா மத்தநாத்து அவெ பள்ளிக்கொடத்துக்கு வந்தா. நா அவெனுக்கிட்டு பீத்து ராசியமா கேட்டே.

"டேய் கடிதத்தக் குடுத்திட்டியா?"

"இல்லெடா"

"அதெக் குடுக்காதெ. அதெ எனெக்கிட்டத் தா"

"ஏன்டா?"

"வாணான்டா. எனெக்கி பயமா இரிக்கி."

அதுக்குப் பொறவு ஒரு நாளும் என்டெ காதெலெப் பத்தி அலிமாக்கிட்ட நா சொல்லவே இல்லெ. மாசம், வரிசம் என்டு நாள் பீத்துக்கிட்டு இரிந்திச்சி. நாள் போவெப் போவெ ஒவ்வொத்தனும் என்டெ அலிமாவப் பத்தி புருப் புரு கதெயெல்லா சொன்னானொளு. சவெண்டல் றபீக்கொடெ அவக்கு காதெல், வெள்ளெயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தௌபீக்கொடெ காதெல், குணம் கஸ்ஸாலியொடெ காதெல் என்டு ஏதாவது ஒரு காதெல் கதெ அவவெப் பத்தி வந்துக்கிட்டே இரிந்திச்சி. ஒவ்வொரு மொறெயும் அதெக் கேக்கக்குள்ளெ என்டெ மனசி வெடிச்சிப் பீத்திரும். ராவேலெ படுக்கக்குள்ளெ கண்ணாலெ தண்ணி வடிஞ்சி, தலெவாணியெ நனெச்சிப்புடும். அலிமா இம்புட்டுப் பேரெ காதெலிக்கிறா என்டெத்தாலெ எனெக்கி கத்துலெ வரேலெ. அலிமா காதலிக்கிறா என்டு சொல்றெ ஒத்தனும் நல்லவெயில்லெ. எல்லானும் இன்னு நாலஞ்சி பேரெ லவ் பண்றெ ஆக்கள்தா. இது ஏன் அலிமாக்குத் தெரியாமெ இரிக்கி? அலிமாவெ நெனெக்கெ நெனெக்கெ எனெக்கி பாவமாவும் எரெக்கமாவும் இரிந்திச்சி. அவ எத்தினெ பேரெ விரும்பினாலும் எனெக்கிக் காரியமில்லெ. அவவுலெ எனெக்கி இரிக்கிறெ காதெல் ஒள்ளுப்பமும் கொறெயாது.

ஒரு தரக்கம் புஹாரி அன்டு நா, அலிமாவெ தேடிக்கிட்டு இரிந்தே. புஹாரிக்கு ஆடு, மாடு குடுத்தெ ஆக்கள்ரெ பேரெ, சிம்மக்கொரலோன் பளீல் நானா லவ்ஸ்பீக்கர்லெ சொல்லிக்கிட்டிரிந்தாரு.

"செய்யதாமது ஹாஜியார் ஒரு எருமெ, மாடு. நெயினாக்கண்டு காக்கா ஒரு நாகு, அப்துல்சலாம் ஹாஜியார் ஒரு கன்னிப் பொட்டெ, சாகுல் ஹமீது நானா ஒரு சாவல்"

கடும் உற்சாகத்தொடெ பளீல் நானா அறிவிச்சிக்கிட்டு இரிந்தாரு. ரோட்டு முழுக்கெ சின்னாக்களும் பெரியாக்களுமென்டு சுசனாச் சனம். ஆம்புளெயொள், பொம்புளெயொள் என்டு எல்லாரும் நேத்திக்கடன் குடுக்கிறத்துக்கும் நார்ஸா வாங்கிறத்துக்கும் சோத்துப் பார்சல் வாங்கிறத்துக்கும் வந்து பீத்திக்கிட்டு இரிந்தாகெ. சனமென்டா முடியிறெ பாடா இல்லெ. ஐஸ்பழம் விக்கிறாக்கள்ரெ கோன் சத்தமும், சின்னப்புள்ளெயொள்ரெ கத்துவெச் சத்தமும் சர்வத்துக் கடெயிலெ இரிந்து வாறெ பாட்டுச் சத்தமும் சர்வத் கலக்கிறெ சத்தமும் அந்தெ எடெத்தெ முத்துலா நெறெச்சிரிந்திச்சி.

ஆனா எனெக்கி இதிலெயெல்லாங் கவெனம் போவேலெ. என்டெ யாது முத்துலும் அலிமா எங்கினெ இரிக்கிறா என்டெத்திலதா இரிந்திச்சி. கடெசியா ஒரு ஊட்ரெ கடப்படிக்கு பின்னாலெ அவ நிக்கிறத்தப் பாத்தே. வடிவானெ, பூப்போட்டெ பாவாடெயும், பச்செத் தாவெணியும் போட்டு கடும் வடிவா அவ இரிந்தா. நா ஒரு சர்வத் கடெக்குப் பக்கத்திலெ பீத்து நின்டு அவவெ பாத்துக்கிட்டு இரிந்தே. செத்தெ சாமஞ் செல்லெ அவ ஐஸ்பழம் வாங்கினா. அதெ வாங்கி ஒரு தரக்கம் சூப்பிப்புட்டு, அதெ யாருக்கோ நீட்டினா. நா அவ நீட்டினெ பக்கம் திரும்பிப் பாத்தே. ஒரு போக்குளெ காலெக் குத்தினெமாரி, குணம் கஸ்ஸாலி சைக்கிள்லெ நின்டுக்கிட்டு இரிந்தா. அவெ கையெ நீட்டி அதெக் கேக்கெ, அலிமா ஒரு சின்னெப் பொம்புளெப் புள்ளெக்கிட்டெ அந்தெ ஐஸ்பழத்தெக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடுத்தா. அந்தெப் புள்ளெ அதெக் கொண்டு பீத்து கஸ்ஸாலிக்கிட்டெக் குடுத்திச்சி. அதுக்கு பொறவு நா அங்ஙினெ நிக்கேலெ. தாங்கெ ஏலாதெ மனவருத்தத்தொடெ அங்ஙினெ இரிந்து பீத்தே.

• • •

கனெக்கெ வரிசத்துக்கு பொறவு இடுப்பிலெ ஒரு புள்ளெயெ வெச்சிக்கிட்டு, மத்தெப் புள்ளெயிரெ கையெப் புடிச்செமாரி நடெ வரெம்பாலெ அலிமா நடெந்து வாறெதெப் பாக்கிறெ மட்டும் என்டெ காதெலெ நா அவக்கிட்டெ சொல்லவேயில்லெ. கிட்டெத்தட்டெ பதினஞ்சி வரிசத்துக்கு பொறவுதா நா அலிமாவெ மறுவாடியு பாத்தே. படிப்பெல்லாம் முடிஞ்சி, வெளியூரிலெ வேலெ பாத்து, எப்பெவாவது ஊட்டுக்கு வந்து போவெக்குள்ளதா ஊரிலெ நடந்தெ சங்கதியயெல்லா அறியெ முடிஞ்சிச்சி. அப்பிடி ஒருதரக்கம் வந்திரிக்கக்குள்ளதா அலிமாக்கு கலியாணம் முடிஞ்செ சங்கதியெ அறிஞ்சே. அதுவும் அவ என்னொடெ படிச்செ மூக்கோடி மாஹிரத்தா கலியாணம் முடிச்சிரிந்தா. அவெ ஒரு உருப்படாதெ பெயெல். சூது, களவு என்டு எல்லாக் கெட்டெ வேலெயுஞ் செய்வா. அவெனெப் பீத்து அலிமா கலியாணம் முடிச்சா என்டெத்தெ நெனெக்கெ என்டெ நெஞ்செல்லா வெடிக்கிறெமாரி இரிந்திச்சி. அந்தெத் தரக்கம் நா ஊரிலெ கனெநாளெக்கி நிக்கேலெ. கெரியா ஊரிலெ இரிந்து பீத்தே. அதுக்கு கனெகாலத்துக்கு பொறவுதா அவவெ அந்தெ நடெவரம்புலெ பாத்தெ.

அவவெ பாத்ததுமெ நா மதிச்சிக்கிட்டெ. இம்புட்டுக் காலத்துக்குப் பொறவும், அவ அப்பிடியதா இரிந்தா. இப்பெ சீலெ உடுத்தியிருந்தா. என்னெப் பாத்ததும் அவ சிரிச்சா. இருவது வரிசத்துக்கு முந்தி, அவவெ நா மொதெமொதெல்லெ பாக்கக்குள்ளெ இரிந்தெ அந்தெச் சிரிப்பு அப்பிடியே இரிந்திச்சி. சிரிக்கக்குள்ளெ இப்பெயும் அவடெ சொக்கிலெ குழி உழுந்திச்சி. ஆனா அவக்கிட்டெ முந்தி இரிந்தெ அந்தெ மனசி நெறெஞ்செ சந்தோசத்தெ இப்பெ காணேலெ. ஒரு கனெமானெ கவெலெ அவக்குள்ளெ நெறெஞ்சிரிந்தத்தெ ஒணெந்தே. அவவெ பாத்து நானுஞ் சிரிச்செ. இவ்வளவு காலத்திலெயு இன்டெக்கித்தா அவவும் நானும் நேருக்கு நேரா ஆளெயாள் பாத்து சிரிச்சிரிக்கம்.

"ஒங்கெளெ கண்டு எம்புட்டுக் காலமா பீத்திது!"

நா தெகெச்சிப் பீத்தே. மொதெல் தடெவெயா அலிமா என்னொடெ கதெச்சிரிக்கா. என்னாலெ மறுமொழி சொல்லெ முடியேலெ.

"பீத்துக்கிட்டு வாறே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதா இப்பவுஞ் சொன்னா. நா தலெயெ மத்திரந்தா ஆட்டினே. வாயிலெயிருந்து வாத்தெ ஒன்னும் வரேலெ. மனசி கெடெந்து துடிச்சிது. தொண்டெ கட்டிப் பீத்திது. திரும்பிப் பாத்தே.

ஒரு புள்ளெயெ இடுப்பிலெ வெச்சிக்கிட்டு, மத்தெப் புள்ளெயிரெ கையெப் புடிச்சமாரி அவ அந்தெ நடெவரம்பாலெ நடந்து பீத்திக்கிட்டு இரிந்தா. நா அவவெ எப்பிடியெல்லா விரும்பியிருந்தே என்டது அவக்கு தெரியுமா என்டு எனெக்கு தெரியேலெ. மூனு தங்கச்சிமாருக்கு நானாவாவும், குடும்பத்திலெ மூத்தெ ஆம்புளெப் புள்ளெயாவும் வடிவில்லாமலும் பொறெந்தெ ஒத்தனுக்கு காதெலெல்லாம் வரப்படாது. சொக்கிலெ வடிஞ்செ தண்ணியெத் தொடெச்சிப்புட்டு என்டெ ஊட்டெ நோக்கி நா போனே. கடெசி தங்கச்சிரெ மாப்பிளெ விசெயெத்தெ இன்டெக்கி எப்பிடியாவது கதெச்சி முடிச்சிரணும்.

◂ ஏப்ரல் 2007.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்ஙினெயும் ஒரு மஹ்சர்

அந்தெப் பள்ளிக்கொடம் முத்துலா சனம் நெறெஞ்சி வழிஞ்சிச்சி. வேனிலெயும் பஸ்ஸிலெயும் இன்னுஞ் சனம் வந்திக்கிட்டே இரிந்திச்சி. பள்ளிக்கொடத்துக்குள்ளெ எடெமில்லாதத்தாலெ பள்ளிக்கொட வளவுக்குள்ளெயும். பள்ளிக்கொடத்துக்கு முன்னாலெ ஓடிக்கிட்டிரிந்தெ வாய்க்காலுக்கு பக்கத்திலெயும் ரோட்டோரெத்திலெயும் குடும்பங் குடும்பமா ஆக்கள் இரிந்தாகெ. அதுக்கெடெயிலெ வேறெ ஊருலெ இரிந்து ஆக்கள் வேனிலெயும் லொறியிலெயும் சாமாங் கொண்டு வந்து குடுக்கத் தொவெங்கிட்டாகெ. நியாஸ் பீத்து அஞ்சி பாயும் மூனு பெட்சீட்டும் நாலு தலெவாணியும் வாங்கிட்டு வந்திரிந்தா. றிபாடெ புரிசென் பாண் வாங்கிட்டு வந்தாரு. அவெரு. நாலு நாளா அடிச்செ செல்லிலிருந்து மத்திரந் தப்பேலெ. இன்டெக்கி மத்தியானம்போலெ புலிக்கிட்டெ இரிந்துந் தப்பி வந்திக்காரு. மத்தியானம் எல்லாரும் ஊரெ ஊட்டு வெளிக்கிட்டு, அறுவத்திநாலாங் கட்டெடெயெ தாண்டெக்குள்ளெ, நாலெஞ்சி புலி வந்து மறிச்சானொளு.

"மலையடியாலெ போக வேணாம். அங்க நாங்க கண்ணிவெடி புதைச்சிருக்கிறம். அதால இந்த வழியால போங்க"

தோக்கெக் கையிலெ வெச்சிக்கிட்டு அவெனொள்லெ ஒத்தன் கினாந்திமொனெயாலெ போறெ வழியெக் காட்டினா. எல்லாருந் தெகெச்சிப் பீத்தாகெ. அது புலியிரெ ஏரியாவுல்லவா? அதாலெ எப்பிடிப் போறெ? கரீம் ஹஸரத்தும் இன்னுந் நாலஞ்சி பேரும் புலியொடெ கதெச்சிப் பாத்தாகெ. அவெனொளு கேக்கேலெ.

"உங்கடெ பாதுகாப்புக்காகத்தா இந்த வழியாலெ போகச் சொல்றம். இதாலெ போறதால உங்களுக்கு ஒரு பிரச்சினயுமில்லெ"

அப்பெதான் அந்தோனியார் கோயில் பாதரும் வேதெக்காரக்களும் அந்தெ எடெத்துக்கு வந்தாகெ. ஊரிலெ இரிந்து முஸ்லிமாக்களெல்லாம் வெளிக்கிட்டுட்டாகெ என்டெத்தெக் கேள்விப்பட்டெ ஓடெனெயெ அங்கெ இரிந்தெ வேதெக்காராக்களும் ஊரெ உட்டு வெளிக்கிட்டுட்டாகெ. அந்தெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதர் புலியொடெ கதெச்சிப்புட்டு வந்து சொன்னாரு.

"இந்த வழியால போறதினால ஒரு பிரச்சினயும் நடக்காதாம். பயப்பிடாம போகட்டாம்"

அரெ மனசொடெயும் வேறெ வழியில்லாமெயும், முன்னாலெ போனெ ஆக்கள் திரும்பி, கினாந்திமொனெக்கு போறெ வழியாலெ நடந்தாகெ. அது ஒரு சின்னெ ரோட்டு. தார் ஊத்தாதெ ரோட்டு. ஓரெத்திலெயெல்லா பத்தெ வளெந்திரிச்சி. அதாலெ கொஞ்சக் கொஞ்சப் பேராத்தா அந்தெ வழியாலெ பீத்திக்கிட்டிரிந்தாகெ. ஔ்ளுப்பந் தூரம் போனெத்துக்கு பொறவுதா நெலெபரெம் வெளெங்ஙினிச்சி. முன்னாலெ நாலஞ்சி புலி நின்டானொளு. அதிலெ ஒத்தவன்டெ கையிலெ பெரியெ கம்பு இரிந்திச்சி. அந்தெக் கம்பாலெ ஆம்புளெ பொம்புளெ என்டு பாக்காமெ எல்லாருக்கும் அடிச்சிக்கிட்டு இரிந்தா.

"ஆம்பிளயெல்லாம் வேறாகுங்கெ. பொம்பிளயெல்லா போங்கெ"

கம்பாலெ அடிச்செமாரியே அவெ கட்டளெயிட்டுக்கிட்டிரிந்தா. ஆம்புளெயொள்ளெ எளெந்தாரி ஆக்களெயும் ஒரெபுடியானெ ஆக்கெளெயும் தனியெ எடுத்து, கையெ பின்னாலெ கட்டிக்கிட்டு, மொழெங்காலெ நிக்கெச் சொன்னானொளு. அப்பதா எல்லாருக்கு விசெயெம் வெளெங்ஙினிச்சி.

'முஸ்லிம் பொடியங்களெப் புடிக்கத்தா புலி இஞ்சாலெ போவெச் சொல்லியிரிக்கா.'

"என்டெ அல்லா! என்டெ அவெகளெப் புடிச்சிட்டானே"

"டேய்! தூமேரெ மவெனெ. என்டெ புள்ளெயெ உர்ரா."

தன்டெ மவென்டெ கையெப் புடிச்சிக்கிட்டு போனெ ஒத்தனெப் பாத்து ஒரு உம்மா கத்தினா. அவெனெ இழுத்துப் போவெ உடாமெ கையெ புடிச்சி மத்தெ பக்கத்தாலெ இழுத்தா. ஆனா அவடெ கையிலெ உழுந்தெ அடியாலெ அவ தன்டெ புடியெ உட்டுப்புட்டு ஒரு ஓரெமா பீத்து நின்டா. கண்ணாலெ தண்ணி வடியெ அல்லாக்கிட்டெ துஆ கேட்டா:

"யாரப்பு! என்டெ புள்ளெயெக் காப்பாத்து!"

"இஞ்செ நீங்கெ போவாரிங்கெ"

ஒத்தெக் கையிலெ தன்டெ புள்ளெயயும் மத்தெக் கையிலெ பேக்கெயும் வெச்சிக்கிட்டிரிந்தெ ஒரு எளெம் பொம்புளெ தன்டெ புரிசனெப் பாத்து சொன்னா. ஆனா புலியிரெ வெரெட்டுவெக்கு முன்னாலெ ஒத்தராலெயு ஒன்னுஞ் செய்யெ முடியாமெ பீத்திது. அந்தெச் சின்னெ வழியிலெ ஆக்கள் நெருக்கியடிச்சிக்கிட்டு நின்டாகெ. செலாக்கள் ஓரெத்திலெ இரிந்தெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்காலுக்குள்ளெ உழுந்திட்டாகெ. நெலெமெயெ பாத்துப்புட்டு, பின்னாலெ வந்தெ பொடியந் தெரெவளியெல்லாம் மெல்லெவா மெல்லெவா வந்தெ வழியாலெ திரும்பி போவெத் தொவெங்கிட்டானொளு.

"இங்க! பெண்கள் ஒருத்தரும் இங்க நிக்க வேணாம். எல்லாரும் போங்க. நாங்க ஆமியொட தொடர்புள்ள சிலர விசாரிக்கணும். விசாரிச்சிப் போட்டு எல்லாரயும் விட்டிடுவோம்"

தோக்கெ நீட்டிப் புடிச்சிக்கிட்டு தலெவெமாரி இருந்தவன், வெறெச்சிப் பீத்தும், கத்திக்கிட்டும் நின்டெ பொம்புளெயொளெப் பாத்துச் சொன்னா. ஆனா அவென்டெ சொல்லெ யாருங் கேக்கேலெ. அவெஞ் சொன்னத்தெ ஒத்தெரு நம்பவுமில்லெ.

"இல்லெ, நாங்கெ போவெ மாட்டோ. அவெகெளெயெல்லா விசாரிச்சிப்புட்டு இப்பெவே உடுங்கெ. நாங்கெ போறோ"

ஒரு பொம்புளெயொளும் அசெயேலெ. அந்தெ எடெத்திலெயே நின்டுட்டாகெ. அந்தெ வேகாவெயிலிலெ கத்துவெயும் நெய்யெத்தும் அந்தெ எடெத்தெ நெறெச்சிக்கிட்டிரிந்திச்சி.

ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா புடிச்சி வெக்கிறெ ஆக்கெள்றெ எண்ணிக்கெ கூடிக்கிட்டே இருந்திச்சி. றிபாடெ புரிசனையும் புடிச்சிட்டானொளு. ஒரு புலி வந்து மரெக் கொடியாலெ எல்லார்ரெ கையெயும் கட்டெத் தொவெங்ஙினா. ஆனா எறெச்சிக்கடெ ராசிக்கிடெ கையெ கட்டெப் போவெக்குள்ளெ அவெ கட்டெ உடேல்லெ. அவெ அந்தெ புலியொடெ சண்டெ போட்டா. அதெப் பாத்திக்கிட்டிரிந்தெ இன்னொரு புலி அங்ஙினெ வந்து தோக்கெ ராசிக்கிடெ தலெயிலெ வெச்சா. பொறவு மத்தவெ கையெ கட்டினா. அதுக்கு பொறவு ஒள்ளுப்பந் தள்ளியிரிந்தெ பத்தெக்குள்ளெ ராசிக்கெக் கூட்டிக்கிட்டுப் போனானொளு. செத்தெ சாமத்திலெ அங்ஙின இரிந்து ஒரு வெடிச்சத்தங் கேட்டிச்சி. நிப்பாட்டி வெச்சிரிந்தெ எல்லாருக்கும் விசெயம் நல்லா வெளெங்கிட்டு. 'புலி எல்லாரயு கொல்லெப் போறா.'

அந்தெ நேரத்திலெதா றெமீஸ் மாஸ்டர் எழும்பி புலிக்கிட்டெ கேட்டாரு.

"நாங்கெ தொழெணு. ஒள்ளுப்பொ எடெந் தாங்கெ."

புலி ஓமென்டு சொல்லெ, அவெரொடெ அங்ஙினெ இரிந்தெ இன்னுங் கொஞ்சப் பேருந் தொழெத் தொவெங்ஙினாகெ. றிபாடெ புரிசனும் அவெகளொடெ தொழுதாரு. முன்னாலெ ஒள்ளுப்பந் தள்ளி கையிலெ புள்ளெயெ புடிச்செமாரி, கண்ணாலெ தண்ணி வடியெ தன்னெயே பாத்துக்கிட்டிரிந்தெ றிபாவெ ஒரு தரக்கம் பாத்தாரு. பொறவு மத்தாக்களொடெ சேந்து அவருந் தொழெத் தொவெங்ஙினாரு. கைகாலெல்லாம் நடுங்கெ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொகெமெல்லாம் வெளுத்துப் பீத்திரிந்தெமாரி அவெகெ தொழுதாகெ. தொழுது முடிஞ்சி, ஸலாம் கொடுக்கக்குள்ளெதா அது நடந்திச்சி. மனீரெண்டு எங்ஙினிக்குள்ளெயோ இரிந்து செல்லு வந்து உழெத் தொவெங்ஙினிச்சி. எங்காலெ செல்லு வரூது என்டு ஒத்தருக்குந் தெரியேலெ. மொதெலாவது செல்லு, புடிச்சி வெச்சிரிந்தெ ஆக்களுக்கு பின்னாலெ உழுந்திச்சி. ரெண்டாவரு செல்லு சரியா அந்தெ புலியாக்கள் நின்டெ எடெத்திலெ வந்து உழுந்திச்சி. அவ்வளவுதான், அங்ஙினிக்குள்ளெ நின்டெ எல்லாரு ஓடெத் தொவெங்கிட்டாகெ. வரம்பாலெயும் வயல்வெளிக்குள்ளாளெயும் பத்தெக்குள்ளாளெயும் ஆக்கள் ஓடுனாகெ. கொளெத்தெக் கடெந்து, வாய்க்காலெக் கடந்து, அதிலெ இரிந்தெ தண்ணியெக் குடிச்சி ஓடுனாகெ. சின்னெப் புள்ளெயொள், பெரியாக்கள், ஆம்புளெ, பொம்புளெ, வருத்தக்காரக்கள் என்டெல்லாமில்லாமெ எல்லாரு ஓடுனாகெ. ஓடுனெ வழியெல்லாம் சப்பாத்து கழன்டு உழுந்திச்சி. பேக் உழுந்து கெடெந்திச்சி. சைக்கிள் கெடெந்திச்சி. நாலஞ்சி ஆட்டோ கெடெந்திச்சி. ஆக்கள் களெச்சிப் பீத்து உழுந்து கெடெந்தாகெ. பொறவு எழும்பி ஓடினாகெ. எழும்பேலாதெ ஆக்களெ மத்தாக்கெள் புடிச்சி இழுத்துக்கிட்டு ஓடினாகெ. நடக்கேலாதெ ஆக்களெ முதுவுலெ தூக்கிக்கிட்டும், சைக்கிள்லெ வெச்சி தள்ளிக்கிட்டும் ஓடுனாகெ. பாலத்தோப்பூருக்கு வந்ததுக்குப் பொறவுதா எல்லாரும் நின்டாகெ.

"அந்தெ செல்லு மத்திரம் உழேலென்டா இந்நேரெம் எத்தியோ பேர் மௌத்தாப் பீத்திரிப்போ."

நிம்மதியுஞ் சந்தோசமும் பொங்கி வழியெ எல்லாரு ஆண்டவனுக்கு நன்றி சொன்னாகெ.

"எல்லாம் அந்தெ ஆண்டவன்டெ கொதறுத்துத்தா"

"அதிலெ இரிந்தெ எல்லாப் புலியுஞ் செத்துப் பீத்தாளொளு. ஒத்தவன்டெ தலெயெ காணேலெ"

"அப்பிடித்தா நடக்கெணு. ஒள்ளுப்பொ நேரெத்துக்குள்ளெ அவெனொளு அடிச்செ குளுமாசுக்கு ஆண்டவெ நல்லெ கூலியெக் குடுத்திக்கா"

மனநிம்மதி, ஆவேசம், களெப்பு எல்லாம் ஒன்னாச் சேந்து, அந்தெ எடெத்தில வந்து சேந்தாக்கள்ரெ வாயிலெயிருந்து வாத்தெயா வந்திக்கிட்டிரிந்திச்சி.

அவெகளெயெல்லாம் ஏத்திப் போறத்துக்கு அங்ஙினெ கசனா வேனும் பஸ்ஸும் லொறியும் நின்டிச்சி. றிபா தன்டெ புரிசனெயும் மத்தாக்களெயும் தேடிப் புடிச்சிட்டா. ஒராள் மத்திரம் கொறேது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்செ கன்னாவெ காணேலியெ"

என்ன செய்யிரயென்டு ஒத்தருக்குந் தெரியேலெ. அம்புட்டுச் சனத்துக்குளெ கன்னாவெத் தேர்றதும் கஸ்டம். ஆக்கள் வந்து வந்து நெறெஞ்சிக்கிட்டே இரிந்தாகெ. இனி கன்னாவெத் தேடிப் போவேயும் ஏலா.

"இப்பெ நம்மெ போவோ. பொறவு வந்து அவகெளத் தேடுவோ. அவகெ யாரொடெயாவது வருவாகெ"

றிபாடெ புரிசந்தா சொன்னாரு. அந்தெமாரியானெ நெலெமெயிலெ ஒத்தருக்கும் வேறெ ஒன்னெயும் ரோசிக்கேலாமெ இரிந்திச்சி. எப்பிடியாவது அந்தெ எடெத்தெ உட்டு போயிரணும் என்டதுதா எல்லார்ரெ எண்ணமாவும் இரிந்திச்சி. அதுக்குப் பொறவு அவகெ எல்லாரும் அங்ஙினெ ஆக்களெ ஏத்தெ வந்தெ ஒரு வேனிலெ ஏறி இங்கெ வந்திட்டாகெ.

அவெகள்லாம் நேரெத்தொடெ வந்தெத்தாலெ அவெகளுக்கு பள்ளிக்கொடத்துக்குள்ளெ ஒரு மூலையிலெ எடெங் கெடெச்சிட்டு. எல்லாரும் அதுக்குள்ளதா இரிந்தாகெ. கொண்டு வந்தெ ஒரு சீலெயெ எடுத்து பர்வீன் தன்டெ கைப்புள்ளெக்கு தொட்டில் கட்டிப்புட்டா. அவடெ புரிசனெ இன்னுங் காணேலெ. ஊருலெ இரிந்து அவ புள்ளெயொடெ மெசின் பொட்டியிலெ வரெக்குள்ளெயே எடெயிலெ அவெரெக் காணேலெ. பொறவு அந்தெ செல்லு உழுந்து எல்லாரும் அங்காலயும் இங்காலயும் ஓடுனத்துக்கு பொறவு, இந்தா இப்பெ வரெக்கும் அவெரெக் காணேலெ. யாரு பீத்துத் தேர்றெ, எங்கெ பீத்து தேர்றெ?

அவெகடெ குடும்பத்திலெ இன்னும் வராதெ ஆக்களென்டா பர்வீன்டெ புரிசனுங் கன்னாவுந்தா. அந்தெச் செல்லு உழெக்குள்ளெ அந்தெ மெசின் பொட்டிக்குள்ளெ பர்வீனொடெ, கன்னாவுந்தா இரிந்தாகெ. செல்லு உழுந்தெ ஒடன்னியெ பர்வின்டெ தலெமசிரெல்லா நிமிந்து வெறெச்சிப் பீத்திது. ஒடெம்பு குலுங்கிப் பீத்திது. செத்தெ சாமத்துக்கு அவெக்கு ஒன்னுமே வெளெங்கேலெ. அதுக்குப் பொறவு அவ ஒன்னெயும் பாக்கேலெ. அவடெ புள்ளெயெ இடுப்பிலெ தூக்கி வெச்சிக்கிட்டு பொட்டிக்குள்ளெ இரிந்து கீழெ எறெங்கி, ஆக்கள் ஓடுனெ பக்கத்தாலெ ஓடெத் தொவெங்கிட்டா. அவக்கு எங்ஙினெ இரிந்துதா அம்புட்டுப் பெலெம் வந்திச்சோ தெரியா. வரக்குள்ளெ நடக்கேலாமெ மெசின் பொட்டிக்குள்ளெ ஏறினவெ, பொறவு பாலத்தோப்பூர்லெ வேனிலெ ஏறினெ மொதெல் ஆளா இரிந்தா. அம்புட்டு வெசெயா அவ ஓடி வந்தா.

அந்தெப் பள்ளிக்கொடத்துக்குள்ளெ இப்பெ நடக்கிறத்துக்கே எடெமில்லாமெ பீத்திது. புள்ளெயொள்றெ கத்துவெச் சத்தமும் ஆளெயாள் கூப்புர்றெ சத்தமும் அதெட்ரெ சத்தமும் எல்லா எடெமுங் கேட்டுக்கிட்டே இரிந்திச்சி. ஆனா அதெல்லா ஒத்தருக்குங் கஸ்டமா தெரியேலெ. உசிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழெச்சி வந்ததுதா எல்லாருக்கும் பெரியெ ஆறுதலா இரிந்திச்சி. நாலு நாளா ராப்பகலா நேவிக்காரென் அடிச்செ செல்லுலெ இரிந்தும் புலிக்கிட்டெ இரிந்தும் தப்பிப் பொழெச்சி வந்ததே எல்லாருக்கும் போதுமென்டாப்பலெ இரிந்திச்சி. ஒரு பெரியெ கண்டத்திலெ இரிந்து தப்பி வந்தெ சந்தோசம் எல்லார்ரெ மொகெத்திலெயும் அப்பியிரிந்திச்சி.

"புள்ளெ நீங்களும் இங்கெயா இரிக்கிங்கெ? எல்லாரும் வந்திட்டிங்களா?"

குஞ்சி மாமா வந்து கேட்டாகெ. அவெகளும் அவெகெடெ குடும்பமும் இப்பதா அங்கெ வந்து சேந்திக்காகெ.

"ஓங் குஞ்சி மாமா. எங்கெடெ அவெகளெயும், கன்னாவெயுந்தா இன்னுங் காணேலெ"

பர்வீந்தா சொன்னா.

"ஒன்டெ அவெரு பாலத்தோப்பூர்லரா நிக்கிறாரு. நாங் கண்டே. அவெரு ஆக்களெயெல்லா ஏத்திக்கிட்டு நிக்கிறாரு. உம்மாவெயென்டாக் காணேலெ."

"உம்மாக்குப் பாவெந் தம்பி. அவகளுக்கு நல்லெ வருத்தம். குளிசெயுமில்லெ. ஒழுங்கானெ சாப்பாடுமில்லெ. அவெகளுக்கு நடக்கவு ஏலாரு தம்பி. நியாஸ்தா அவெகளெ தூக்கிக்கிட்டு வந்தா. பொறவுதா அவெகளெ முஸ்தவா நானாடெ மெசின்லெ ஏத்தினெ. பர்வீனுந்தா அந்தெப் பொட்டியிலெ இரிந்தெ. அந்தெச் செல்லு உழுந்தெ ஓடன்னிய இந்தெப் பொட்டெ புள்ளெயத் தூக்கிக்கிட்டு ஓடி வந்திட்டு. உம்மாக்கு என்ன நடந்திச்சென்டு தெரியாரு"

பர்வின்டெ உம்மா சொன்னாகெ.

"பொறு ராத்தா பாப்போ. இப்பதானெ ஒவ்வொராக்களா வந்திக்கிட்டு இரிக்காகெ. ஒள்ளுப்பஞ் சொணெங்கி பாப்பொ"

குஞ்சிமாமா ஆறுதல் சொல்லிப்புட்டு பீத்தாகெ. அதுக்குள்ளெ பள்ளிக்கொடத்திலெ பீக்கர் கொண்டு வந்து கட்டி, தேர்றெ ஆக்களெப் பத்தியும் வந்தாக்களெப் பத்தியும் சொல்லிக்கிட்டு இரிந்தாகெ. நியாஸ் பீத்து கன்னாடெ பேர், விலாசம் எல்லாத்தயுஞ் சொல்லிப்புட்டு வந்தா. அவகடெ பேர் வாசிச்செ செத்தெசாமத்திலெ செய்யதாமது நானா வந்து அவெகளுக்கிட்டெ சொன்னாரு.

"இஞ்செ. நம்மடெ ராசாத்தம்பியு நானு ஒன்னாத்தா வேனிலெ வந்தோ. அந்தெ செல்லு உழுந்தொடன்னியெ ராசாத்தம்பி அந்தெ மெசின் நின்டெ பக்கத்தாலரா ஓடி வந்தானா. அப்பெ அருக்குள்ளெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலு பேர்ரெ மௌயத்து இரிந்தரெ அவெ பாத்தானாம் புள்ளெ"

"என்டெ அல்லா! உம்மா மௌத்தாப் பீத்தாகலாமெ புள்ளெ!"

பர்வீன்டெ உம்மா கத்தெத் தொவெங்கிட்டாகெ.

"சும்மா இரிங்கம்மா. கன்னா மௌத்தா பீத்திரிக்கெ மாட்டாகெ. நானு அவகளொடெதானெ இரிந்தே. எனெக்கி ஒன்னு நடக்கேலரானே."

"இந்தா செய்யதாமது நானா சொல்றாகளெ புள்ளெ"

"அவெகெ பாக்கேலெத்தானெ உம்மா. கன்னா மௌத்தாப் பீத்திரிக்கெ மாட்டாகெ. பாருங்ஙனே. அவகெ கட்டாயம் வருவாகெ"

பர்வீன் கடும் உறுதியொடெ சொன்னா.

• • •

இரு எந்தெ எடம். ஒன்னுஞ் சரியாத் தெரியேலியெ. பாலக்காட்டு கரெச்செயா? எல்லாப் பக்கத்தாலயுந் தண்ணி ஓடிக்கிட்டு இரிக்கி. இஞ்செப் பாரு. நம்மெடெ கந்தெ. இவெ எப்பெ சம்பூர்லெ இரிந்து வந்தா? எளெனியில்லாவா வெட்டிக்கிட்டு இரிக்கா. குடிச்சா சோக்காத்தா இரிக்கு. அடி! அடி! நாய்ச் சனியன். போவுரான்டு பாரு. அடி! அடி! சீ. மோந்து மோந்து பாத்துக்கிட்டு வரூரு. சீ. போ. என்ன சனியன்டா இரு. ஓடெ ஓடெ பின்னாலெ வரூரு. என்டெ அல்லா கால் வெறெச்சிப் பீத்திரு. ஒரு எட்டுக்குடி வெக்கேலாமெ இரிக்கி. எப்பிடி எடுத்தாலு கால் அசெய்யிரே இல்லெ. நாய் கிட்டெ வந்திட்டே. கடிக்கப் போவுரே. யா முகய்யத்தீன்! என்னெ காப்பாத்து அல்லா!

இரென்ன மினாமா கண்டிக்கெ? கண்ணெத் தொறெக்கெ ஏலாமெ இரிக்கி. யாரோ ஒடெம்பெ புடிச்சி அமெத்திறெமாரி இரிந்திச்சி. இப்பெ நா எங்ஙினெ இரிக்கே. றிபா பொட்டேயிர ஊட்டுலெயா? இல்லாட்டி பர்வீன்டெ ஊட்டிலெயா? பொட்டெயொளு தலெவாணிகுடி வெக்காமெப் பீத்திரொளு. நம்மெ எழும்பித்தா தலெவாணியெ தேடி எடுக்கணு. இப்பெயுங் கண்ணெத் தொறெக்கேலாமத்தா இரிக்கி. கண்ணெத் தொறெக்காமெ எப்பிடி எழும்பி போறெ? கஸ்டப்பட்டு கண்ணெ அமெத்தித் தொறெக்கிறெ. இரென்னெ இரு. ஒரே இருட்டுக் கசம்.

இப்பரா நா கண்ணெ முழிச்சிக்கெ. சுத்தெவரெ கண்கடெ தெரியாரெ இருட்டு. கையெ அசெச்சிப் பாக்கிறெ. கை எரிலெயோ முட்டுரு. இரு என்ன செவெர்மாரி இல்லியெ? ஐஸ்மாரிகுளிரா இரிக்கி. தடெவிப் பாத்தா இரும்புமாரி இரிக்கி. தலெக்கி மேலெ நாலஞ்சி வெள்ளி தெரீரு. எனெக்கி இப்பரா ஒள்ளுப்ப ஒள்ளுப்பமா எல்லா யாதுக்கு வரூரு. அந்தெ செல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து உழுந்தத்துக்குப் பொறவு இப்பரா எனெக்கி நெனெவு வந்திக்கி. காது ரெண்டும் அடெச்சிப் பீத்திரு. சரியானெ பசியா இரிக்கி. மத்தியானம் ஊட்டெ உட்டு வெளிக்கிட்டரிலெ இரிந்து, என்டெ வாய்க்குள்ளெ இன்னு ஒன்னும் போவேலெ. பச்செத் தண்ணிகுடி குடிக்கேலெ. தலெ சுத்திறாப்பலெ இரிக்கி. ஒருமாரி பெரெகண்டமாவு இரிக்கி. எனெக்கிச் சீனி வியாரி. இந்தெ நாலு நாள்லெ சீனி கசனா கூடியிரிக்கு. திங்கிறத்துக்கு ஒன்னுமே இல்லாமெ இரிக்கக்குள்ளெ பத்தியச் சாப்பாட்டுக்கு நா எங்கெ போவெ?

இப்பெ ஒரு சத்தமுமில்லெ. சுத்தெவரெ ஒரு குஞ்சிகுறுமானும் இல்லெ. எல்லாரும் எங்கெ பீத்திரிப்பாகளோ தெரியா. மரக்கொப்புக்குள்ளாலெ வானத்திலெ நாலஞ்சி வெள்ளி மத்திரந்தா தெரீரு. அரெத் தவிரெ அங்ஙினெ வேறெ எந்தெ வெளிச்சமும் இல்லெ. மரமெல்லாம் கறுப்பாத்தா தெரீரு. அந்தெ பொட்டிக்குள்ளெ இரிந்தெ மத்தாக்கள் எங்கெ? அவெகள்லெ யாராவரு உசிரொடெ இரிக்காகளோ தெரியா. மத்தியானம் வரெக்குள்ளெயே அரிலெ இரிந்தெ ஒரு பொம்புளெ ஊசாட்டம் எருவுமில்லாமத்தா இரிந்தா. அவக்குச் சரியானெ வருத்தம். அம்புட்டுச் சாமத்துக்கு ஒரு வாத்தெகுடி அவ கரெக்கேலெ. இம்புட்டு நடந்தருக்கு பொறவு அவ உசிரொடெ இரிப்பா என்டு நம்பேலெ. அவ யாரென்டு எனெக்கித் தெரியா. இன்னொரு பொம்புளெ. அவவெயு தூக்கித்தா ஏத்தினாகெ. அவவெயு எனெக்கித் தெரியா. ஆனா விதாப்பாடெ மவளெத் தெரியு. அவக்கு நெஞ்சி வருத்தமா. அவடெ காலெல்லா வீங்கிப் பீத்து இரிந்திச்சி. அவக்கு நடக்கேலாரு. அராலெ அவவெயும் அந்தெ மெசின் பொட்டிக்குள்ளெ ஏத்தினாகெ. என்னொடெ சேத்து வருத்தக்காராக்கள் எல்லாமா நாலு பேரு. இரெ உடெ என்டெ பேத்தியும் அவடெ கைப்புள்ளெயும். என்டெ பேத்தி பர்வீன் பொட்டெ புள்ளெத்தாச்சி. பாவெம். அவக்கு அந்தெ கைப்புள்ளெயெ தூக்கிக்கிட்டு ஒள்ளுப்பந் தூரங்குடி நடக்கேலாரு. அராலெ அவவு அந்தெ பொட்டியிலெ ஏறிக்கிட்டா. கடெசியா அந்தெ குண்டு வந்து உழெக்குள்ளெ அந்தெ பொட்டியிலெ இரிந்தாக்கள் இம்புட்டு பேருந்தா.

இப்பெ அருக்குள்ளெ யாராக்கள் இரிக்கிறாகெ என்டு எனெக்கித் தெரியேலெ. கூப்பிட்டுப் பாக்கவும் பயமா இரிக்கி. யாராவரு புலியென்டாலும் ஆமியென்டாலும் ஒளிச்சிக்கிட்டிரிந்து கேட்டு, தோக்காலெ சுட்டுட்டா என்ன செய்யிரெ? அந்தெப் பக்கத்தாலெ நா இருக்கு முந்தி ஒரு நாளும் வந்தரில்லெ. முந்தி என்டெ அவெகெ கினாந்திமொனெயிலெ கொச்சி, போயிலெயெல்லாஞ் செஞ்சிரிக்காகெ. அவெகெ மௌத்தாப் போனருக்கு பொறவு என்டெ மூத்த மகெ அங்ஙினெ பீத்து சேனெ செஞ்சா. ஆனா இந்தெ புலியிரெ பெரெச்சினெ வந்தருக்கு பொறவு முஸ்லிமாக்கள் யாரு அந்தெப் பக்கம் போறதுமில்லெ, சேனெ செய்யிறெயுமில்லெ. அந்தெப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் முத்துலும் இப்பெ புலிரா. என்டெ அவெகெடெ காணி, மத்தெ முஸ்லிமாக்கள்ரெ காணி எல்லாத்திலயு தமிழாக்கள்தா சேனெ செய்யிரெ. இம்புட்டு காலத்துக்கு பொறவு இன்டெக்கித்தா அந்தெப் பக்கத்தாலெ முஸ்லிமாக்கள் பீத்திரிக்காகெ. அருவு நாங்களா புறியப்பட்டு போவேலெ. புலிப்பொடியனொளுரா இஞ்சாலெ போவெச் சொல்லி வைப்புறுத்தல் பண்ணினானொளு. அராலதா இந்தெ பக்கத்தாலெ நாங்கெ வரெ வேண்டி வந்திச்சி.

நாலு நாளா மலெயிலெ இரிந்து நேவிக்காரெ அடிச்செ செல்லாலெ ஊரெல்லா நொறுங்கிப் பீத்திரு. ஊராக்கள் ஒத்தரு ஊட்டிலெ இரிக்கேலெ. எல்லாரு ஜௌஹறா ஆம்பிளெ மத்ரிசாவிலெ பீத்து இரிந்தோ. அரிலெ இரிந்தாப்பலெ என்ன, அங்ஙினெயாவரு பாருகாப்பாவா இரிந்திச்சி? அந்தெ மத்ரிசாவுலெயும் செல்லு வந்து உழுந்து அஞ்சாறு பேர் மௌத்தா பீத்தாகெ. கசானா பேர் காயப்பட்டு பீத்தாகெ. அந்தாக்களுக்கு கட்டுறத்துக்கு மருந்துகுடி இல்லெ. காயப்படாக்கள்லயும் ரெண்டு மூனு பேர் பொறவு மௌத்தாப் பீத்தாகெ.

நாலு நாளெக்கி முந்தி சுபஹ் தொழெப் பீத்து வந்தெ என்டெ மூத்தெ பேரெ நியாஸ் பதெறித் துடிச்சிக்கிட்டு வந்து சொன்னா:

"கன்னா! ஊருக்குள்ளெ புலி வந்திட்டா. ஆமிக் கேம்பத் தாக்கெப் போறானொளாம்!"

"அந்தெ தூமெயொளு மறுவாடியு வந்திட்டானொளா? அவெனொளாலெ இனி என்னென்னெ கக்கிசமெல்லா வரெப் போவுரோ அந்தெப் படெச்செ றப்புக்குத்தா தெரியு."

எனெக்கிப் பயத்தொடெ கோவெமு வந்திட்டு. அருக்குப் பொறவு நடந்தரெல்லா ஒரு மினாமாரித்தா இரிந்திச்சி. எல்லாப் பக்கத்தாலயு தோக்கு வெடி கேக்கெத் தொவெங்கிட்டு. நாலஞ்சி செல்லு வந்து உழுந்துரு.

"புலி கேம்பெ வளெச்சிட்டா"

அங்காலயு இங்காலயு கத்திக்கிட்டு ஆக்கள் ஓடெத் தொவெங்கிட்டாகெ. செத்தெ சாமத்திலெ ஊர் அடெங்கிப் பீத்திரு. நானும் என்டெ மூனு பொம்புளெ புள்ளேலும் பேரெப் புள்ளேலும் பர்வீன்டெ ஊட்டுலெ ஒரு அறெக்குள்ளெ பீத்து இரிந்திட்டோ. என்ன நடக்குமெண்டு ஒத்தருக்குந் தெரியேலெ. ஒரு பத்து மணியிரிக்கு. அப்பரா அந்தெ செல்லு வந்து உழத் தொவெங்ஙினிச்சி. மொரெல்லெ எனெக்கென்டா அரு என்னென்டு வெளெங்கேலெ. இருக்கு முந்தி செல்லு அடிச்சா ஒன்னொன்னாத்தா வந்து உழும். ஆனா இப்பெ அப்பிடி இரிக்கேலெ. ஒரு தரத்திலெ பத்துப் பதினஞ்சி செல்லு வந்து உழுந்திச்சி. கண்கடெ தெரியாமெ எல்லா எடெத்திலெயு அரு உழுந்திச்சி. மொரெல்லெ நேவியிலெ செல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கிற சத்தம் கேக்கு. ஒள்ளுப்பஞ் சொணெங்கி ஊரிலெ வந்து பத்துப் பதினஞ்சி செல்லு உழும். ஒரு நாள் ரெண்டு நாள் இல்லெ. நாளு நாளா இப்பிடித்தா நடெந்திச்சி.

"நேவிக்காரெ மல்டி அடிக்கிறா"

ஒரு தரத்திலெ கசனா செல்லு வந்து உழுந்தருக்கானெ காரணத்தெ ஆக்கள் கண்டுபுடிச்சிட்டாகெ. மல்டிரா அருக்கு காரணம். மொரெல் நாளே பின்னேரத்திலெ எல்லாரு ஜௌஹறா மத்ரிசாவுலெ பீத்து இரிந்திட்டொ. ஆனா ஒரு ஊரெயே ஒரு மத்ரிசா கொள்ளுமா? ஒத்தருக்கும் காலெ நீட்டெக்குடி எடெமில்லெ. விடியெ விடியெ எல்லாருங் குந்திக்கிட்டே இரிந்தொ. மனிசெ வெக்கெயிலெ அந்தெ எடெம் போறெனொமாரி இரிந்திச்சி. என்டாலு அந்தப் புழுக்கத்திலயுங்குடி யாராலயு வெளியெ போவேலாம பீத்திரு. விடியெ விடியெ செல்லு வந்து உழுந்திக்கிட்டே இரிந்திச்சி. என்டெ புள்ளேல்ரெ மாப்பிளெயொலும் அருக்குள்ளரா இரிந்தாகெ. எனெக்கி மருவாதிக்கு தலெயிலெ சீலெயெகுடி போடேலாமப் பீத்திரு.

கைப்புள்ளெயொளெல்லா செத்தெ சாமத்துக்கு கத்திக்கிட்டு இரிந்திச்சொளு. பொறவு கத்துவெச் சத்தம் அடெங்கி பீத்திரு. விடியெ விடியெ ஒத்தரு கொள்ளெக்குக்குடி போவேலெ. செல்லு உழுந்தத்தாலெ மத்திரமில்லெ. ஒத்தராலயு இரிந்தெ எடெத்தெ உட்டு எழும்பேலாமலே பீத்திரு. எல்லாரு அப்பிடி நெருக்கியிரிந்தாகெ. காத்தாலெயொடெ பாத்தா எல்லார்ரெ காலும் மரத்துப் பீத்திரிந்திச்சி. செலெ பேர்ரெ கால் வீங்கிப் பீத்திரிந்திச்சி. செலெ பேருக்கு காலெ நிமித்தேலாமெ பீத்திரு. ஆனா எல்லாத்தயு உடெ மனவருத்தமானெ சங்கரி என்னென்டா ஜெமீலாடெ கைப்புள்ளெ மௌத்தாப் பீத்திரிந்திச்சி. அருக்கு ஒரு வருத்தமு இல்லெ. ஆனா அந்தெ மனிசெ வெக்கெயிலெ அந்தெப் புள்ளெ அவிஞ்சி பீத்திரு.

விடியக்காத்தாலயொடெ செல்லுச் சத்தம் ஒள்ளுப்பங் கொறெஞ்சமாரி இரிந்திச்சி. எல்லாரு மத்ரிசாவுலெ இரிந்து ஊட்டெப் பாக்கெப் போனாகெ. நா யாரயு பாக்கேலெ. என்டெ வவுறு முட்டிப் பீத்து இரிந்திச்சி. வெசெவெசெயா ஊட்டெ பீத்துக்கிட்டு இரிக்கக்குள்ளரா மத்ரிசாவுக்கு ஒள்ளுப்பந் தள்ளி ரெண்டு புலி செத்துக் கெடெந்தெரெ பாத்தெ. ரெண்டு பேருஞ் சின்னப் பொடியனொளு. ஆக்கள்லா நின்டு பாத்துக்கிட்டு இரிந்தாகெ. நானென்டா நின்டு பாக்கேலெ. எனெக்கி ஒடெனெயே கொல்லெக்கிப் போவணு. போறெ வழியெல்லா செல்லு உழுந்து ஊடெல்லா ஒடெஞ்சி பீத்திரிந்திச்சி.

"யாரப்பு! இரென்னெ கக்கிஸம்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா கொல்லக்கி இருந்துப்புட்டு வரெக்குள்ளெயே என்டெ புள்ளேள்லா வந்திட்டாகெ. கெரிகெரியா அடுப்பு மூட்டி, இரிந்தெ அரிசியெ போட்டு சோறு ஆக்கினிச்சொளு. கறி ஒன்னுமில்லெ. முருங்கெ மரத்திலெ இரிந்தெ கீரெயெ ஆஞ்சி ஆனங் காச்சினிச்சொளு. அருக்குள்ளெ மறுவாடியு மல்டி உழத் தொவெங்கிட்டு. அளவு கனெக்கு இல்லாமெ செல்லு வந்து உழுந்துக்கிட்டே இரிந்திச்சி. அங்காலயு இங்காலயு கத்துவெச் சத்தம் கேட்டுரு. ஒத்தரு ஒன்னெயு எடுக்கேலெ. ஆக்கினெ சோத்தக்குடி எடுக்கேலெ. எல்லாரு மறுவாடியு மத்ரிசாக்கு ஓடினொ. எனெக்கி மத்தாக்கள்மாரி ஓடேலாரு. அராலெ சீலெயெ ஒசெத்திக்கிட்டு ஒரெமா நடந்தே.

நா மத்ரிசாவெ பீத்து சேரெக்குள்ளெயே அங்கெ ஆக்கள் நெறெஞ்சிட்டாகெ. வந்தாக்கள் ஒவ்வொத்தரு ஒவ்வொரு கரெ சொன்னாகெ.

"அன்வர் மௌலவியிரெ ஊட்டுலெ ஒரு செல்லு வந்து உழுந்திச்சி. என்ன நடந்திச்சென்டு தெரியாரு."

"பெரியெ பள்ளிக்கிட்டெயும் நாலஞ்சி செல்லு உழுந்திச்சி. சரியானெ கத்துவச் சத்தமா இரிந்திச்சி."

"பாலநகர் முத்துலா அழிஞ்சி பீத்திரா"

அந்தெ செல்லடிக்குள்ளெயும் மையத்தயெல்லா குளிப்பாட்டி கபனிட்டு அடக்கிப்புட்டுத்தா வந்தாகெ. யாருக்கு யார் ஆறுதல் சொல்றேன்டு ஒத்தருக்குந் தெரியேலெ. கரீம் மௌலவியும் மத்தாக்களும் ஏண்டியெ மட்டுக்கு வெளியிலெ இரிந்தெ ஆக்களொடெ போன்லெ கரெச்சி பாத்தாகெ. ஒண்ணும் நடெக்கேலெ. செல்லடி ஒள்ளுப்பமுங் கொறெயேலெ. ரெண்டா நாத்து மத்தியானம்போலெ அந்த மத்ரிசாவுக்குள்ளெயும் வந்து செல்லு உழுந்திச்சி. ஆண்டவன்டெ பாருகாப்பிலெ இரிந்தெ அந்தெ எடெத்திலெ செல்லு வந்து உழுமென்டு ஒத்தரு நெனெக்கேலெ. பெருத்தெ மொழெக்கத்தொடெ வந்து உழுந்தெ செல்லாலெ அந்தெ எடெம் முத்துலு அதறிப் பீத்திரு. எல்லார்ரெ காதுஞ் செவிடா பீத்திரு. பொகெயெல்லாம் அடெங்கினெ பொறவுதா கத்துவெச் சத்தமும் அனுங்கிறெ சத்தமும் கேக்கத் தொவெங்கினிச்சி. என்டெ அல்லா! அந்தெ எடெத்தெ கண்கொண்டு பாக்கேலாமெ இரிந்திச்சி. அந்தெ எடெம் முத்துலா எரெத்தெ வாறா இரிந்திச்சி. மௌத்தாப் போனெ ஆக்களும் காயம் பட்டெ ஆக்களும் உழுந்து கெடெந்தாகெ. மண்டெ பொளெந்தும், கொடெல் வெளியெ வந்தும் கை, காலெல்லாம் செதெறிப் பீத்தும் ஆக்கள் கெடெந்தாகெ.

எல்லாருந் தெகெச்சிப் பீத்தொ. கண்ணெல்லா பிதுங்கி, மொகெமெல்லா வெளுத்து ஒத்தராலயு ஒன்னும் பேசெ முடியேலெ. நா ஆடிப் பீத்தெ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்டெ தேகெமெல்லா நடுங்கி, குளுந்து பீத்திரு. ஈரெக்கொலெ காஞ்சி பீத்திரு. என்னாலெ எழும்பக்குடி ஏலாமெட் பீத்திரு. ஒத்தருங் கத்தேலெ. கண்முன்னாலெ மௌத்தப் பாத்தராலெ எல்லாரும் இறுவி, ஒறெஞ்சி பீத்தோ. அடுத்தரு நம்மரா என்டு ஒவ்வொத்தர்ரெ மனமுஞ் சொல்லிக்கிட்டிரிந்திச்சி.

அன்டெக்கி முத்துலா ஒத்தரும்ம் ஒன்னுந் திங்கேலெ. மையத்தயெல்லா அடெக்கி முடிஞ்சி, ராவேலரா கடெயிலெ இரிந்தெ விசுக்கோத்து, வாட்ரொட்டி. ரசிக்கு எல்லாத்தயு ஆம்பிளெயாக்கள் கொண்டு வந்து அந்தெ மத்ரிசாவுலெ இரிந்தெ ஆக்களுக்கு குடுத்தாகெ. ஒத்தருக்குந் திங்கெ மனமில்லெ. பயம், எடெநெருக்கடி, வெக்கெ, செல்லுச் சத்தம், காயம்பட்டாக்கள் அணுங்கிறெ சத்தம் என்டு எல்லொஞ் சேந்து அண்டெக்கி ஒத்தரும் நெத்திரெயுங் கொள்ளேலெ.

அடுத்தெ நாத்து செல்லடி ஒள்ளுப்பம் கொறெஞ்சி இரிந்தெ நேரெத்திலெ எல்லாரு ஊட்டெ பீத்து, மிஞ்சியிரிந்தரெப் போட்டுச் சோறாக்கி தின்டோ. எனெக்கி குளிசெயு முடிஞ்சி பீத்திரு. ஒழுங்கானெ சாப்பாடுமில்லெ. என்டெ ஒடெம்பு இப்பெ பெலெகீனமா போவெத் தொவெங்கிட்டு. எடெக்கெடெ தலெ சுத்தத் தொவெங்கிட்டு. எனெக்கி இப்பெ நடெக்கவுங் கஸ்டமா பீத்திரு. அந்தெ நெலெமெயிலெ என்னெப் பாத்துக்கிறத்துக்கு அங்கினெ ஒத்தருமே இல்லெ. நா ஒத்தருக்கிட்டெயு ஒன்னுங் கேக்கயுமில்லெ.

நாலாநாத்து எனெக்கி எழும்பேலாமெ பீத்திரு. காத்தாலெயொடெ எல்லாரு ஊட்டெ போவெக்குள்ளெ நா மத்ரிசாவுலயே படுத்து கெடந்தெ. என்டெ பேத்தி றிபா வந்து கூப்பிட்டா:

"கன்னா! வாங்கனெ ஊட்டெ பீத்துக்கிட்டு வருவோ."

"இல்லெ புள்ளெ. எனெக்கி நடெக்கேலாரு புள்ளெ. தலெயெல்லாஞ் சுத்துரு புள்ளெ. இனிமெ நாந் தப்பெ மாட்டே புள்ளெ"

எனெக்கி சத்தமாவு மறுமொழி சொல்லேலாமெ பீத்திரு. அணுங்கி அணுங்கித்தா சொன்னெ.

அன்டெக்கி வெள்ளிக்கெழெமெ. மத்தியானம்போலெ பெரியாக்கள்லா கூடி ஊரெ உட்டு போறெ என்டு முடிவெடுத்தாகெ. ஒரு ரெண்டு மணித்தியாலத்துக்கு நேவியெ செல்லு அடிக்கிறத்தெ நிப்பாட்டச் சொல்லும்படியு அருக்குள்ளெ ஊரெ உட்டு பீத்திருவோமென்டும் எம்பிமாருக்கிட்டெ போனிலெ சொன்னாகெ.

ஊரெ உட்டுப் போறதா முடிவெடுத்திரிக்கி என்டெ செய்தி செத்தெ சாமத்துக்குள்ளெயே எல்லா எடெமும் பரவிட்டு. ஓடனடியா எல்லாரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கிட்டுட்டாகெ. கையிலெ கொண்டு போவெக் கூடியெ சாமானயெல்லா ஒரு பேக்கிலெ எடுத்துக்கிட்டு எல்லாரு நடெக்கத் தொவெங்கிட்டாகெ. நா ஊட்டுக்கு போவெவே இல்லெ. மத்ரிசாவிலெயே இரிந்தெ. அந்தெ மயக்கெ நெலெமெயிலெயு என்ன நடெக்கிரு என்டது எனெக்கித் தெரிஞ்சிரு. நெலெபரம் நல்லா இல்லெ. எல்லாரு ஊரெ உட்டு போப்பறாகெ. நா எழும்பிப் பாத்தெ. ஏலாமப் பீத்திரு.

"என்டெ றப்பூ!"

என்னாலெ அணுங்கெ மத்திரந்தா முடிஞ்சிரு. 'எப்பிடியாவரு ஊரெ உட்டு போயிரணு. இல்லாட்டி நம்மளு மையத்துத்தா.' அந்தெ எண்ணம் வந்தொடென்னெயே எனெக்கி ஒள்ளுப்பம் பெலெம் வந்தெமாரி இரிந்திச்சி. இன்னுங் கொஞ்சம் முக்கி பாத்தெ. இந்தெத் தரக்கம் என்னாலெ எழும்பியிரிக்கெ முடிஞ்சிரு. செத்தெ சாமத்துக்கு அப்பிடியே இரிந்தெ. பொறவு ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா அரெக்கி, அரெக்கி செவெத்துக்கிட்டெ பீத்து அரெ புடிச்சிக்கிட்டு எழும்புனெ. என்டெ கால் நடுங்கெத் தொவெங்கிட்டு. தலெ கிறுகிறுத்துக்கிட்டு வந்திச்சி. செத்தெ சாமம் அந்தெ செவெத்தெப் புடிச்சிக்கிட்டு அப்பிடியே நின்டே. அருக்குப் பொறவு செவெத்தெ புடிச்சிக்கிட்டு மெருமெருவா நடந்து வெட்டெயாலெ வந்தே.

நா மத்ரிசாவெ உட்டு வெட்டெயாலெ வரெக்குள்ளரா என்டெ புள்ளேளு அங்கெ வந்திச்சொளு. எல்லாரும் பறெபட்டெ அடிச்சிக்கிட்டு இரிந்தாகெ. சின்னெப் புள்ளெயொள்ரெ கையெப் புடிச்சிக்கிட்டும், பேக்கெத் தூக்கிக்கிட்டும் அவெகெ நின்டாகெ. என்டெ எளெயெ பேத்தி பர்வீன் புள்ளெத்தாச்சி. அவ ஒரு கையிலெ பேக்கெயு மத்தெக் கையிலெ தன்டெ புள்ளெயயு தூக்கி வெச்சிக்கிட்டிரிந்தா. என்டெ பேரெ நியாஸ் என்னெ கையெப் படிச்சி கூட்டிக்கிட்டு போனா. ஆனா எனெக்கி கனெசாமத்துக்கு நடக்கேலாமெ பீத்திரு. என்டெ கால் பெலெமில்லாமப் பீத்திரு. நா அப்புடியே கீழெ இரிந்திட்டெ.

"புள்ளேலா, எனெக்கி நடக்கேலா. என்னெ உட்டுப்புட்டு நீங்கெ போங்கெ. நா இங்கினயே கெடெக்கிறே. நடெக்கிறரு நடெக்கட்டு"

சொல்லிப்புட்டு நா அப்பிடியே நெலெத்திலெ படுத்திட்டெ. ஆனா என்டெ பேரெ நியாசி என்னெ உடேலெ.

"வாங்கெ கன்னா!".

தன்டெ முருவுலெ என்னெ தூக்கிக்கிட்டு அவெ பையவாப் பையவா நடெக்கத் தொவெங்கினா. எல்லாரு ஒரு சத்தமுமில்லாமெ நடந்துக்கிட்டிரிந்தாகெ. கெரியா அங்கினெ இரிந்து பீத்திடணுமென்டு எல்லாரு நேந்துக்கிட்டிரிந்தாகெ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒள்ளுப்பந் தூரம் போனத்துக்கு பொறவு பின்னாலெ டெக்டர் சத்தம் கேட்டிச்சி. முஸ்தவாடெ டெக்டர் மெசின். அவெந்தா அரெ ஓடிக்கிட்டு வந்தா. எங்களெக் கண்டெ ஒடெனெயெ மெசினெ நிப்பாட்டினா. பொறவு என்னெ எறெக்கி, என்டெ கையெப் புடிச்சி பொட்டிக்குள்ளெ என்னெ ஏத்தினா.

"நீயு ஏறிக்கெ புள்ளெ"

முஸ்தவா பர்வீனெப் பாத்து சொன்னா. பர்வீன் புள்ளெயயு தூக்கிக்கிட்டு பொட்டிக்குள்ளெ ஏறினா. மெசின் அரெக்கி, அரெக்கி மெல்லவாத்தா போனிச்சி. ரோட்டு முத்துலு அம்புட்டு சனம். என்டெ வாழ்க்கெயிலெ அம்புட்டு சனத்தெ ஒரு நாளு நாங் காணேலெ. அந்தெ மெசினுக்கு முன்னுக்கும் பின்னுக்கும் சனம் நெறெஞ்சி வழிஞ்சிச்சி. கண்ணுக்கெட்டினெ தூரத்துக்கு சனந்தா. ஒத்தரு ஒன்னுங் கதெக்கேலெ. எல்லார்ரெ வாயும் ஆண்டவன்டெ பேரத்தா சொல்லிக்கிட்டிரிந்திச்சி. குர்ஆனெ ஓதினாகெ. நெய்யத்து வெச்சாகெ. ஆயத்து குறிஷி ஓதினாகெ.

"எங்களுக்கு ஏ இப்பிடி நடெக்கிரு? புலி வந்து ஏ இந்தெ கேம்பெ தாக்கினா, நேவிக்காரெ ஏ இம்புட்டு செல்லெ அடிச்சா? ஒரு ஊர் பர்ரெ பாட்டெ இந்தெ கோதாளிலெ போவானொளு ரெண்டு பேரும் ஏ வெளெங்கிக்கேலெ? அவனொளுக்கு எரெக்கமே இல்லியா? யாறப்பு! இவெனொளுக்கு நீ ஒரு அழிவெ குடுக்கெ மாட்டியா?"

எனெக்கி சரியானெ வெப்புசாரமாவு கோவெமாவு இரிந்திச்சி.

அன்டெக்கி சரியானெ வெயில். வானத்திலெ ஒரு சொட்டு மூசாப்பயுங் காணேலெ. காத்து ஒள்ளுப்பமு வீசேலெ. நடந்தும், சைக்கிள்லயு, பேக்கத் தூக்கிக்கிட்டும், புள்ளெயொள்றெ கையெப் புடிச்சிக்கிட்டும், தனியாவும் பீத்துக்கிட்டிரிந்தெ எல்லாரும் வேத்து விறுவிறுத்துப் பீத்திரிந்தாகெ. ஒத்தரும் மத்தாக்களெக் கவனிக்கேலெ. புரிசெ, பொஞ்சாரியயோ இல்லாட்டி பொஞ்சாரி, புரிசெனெயோ பாத்துக்கிட்டு இரிக்கேலெ. உம்மா மவளெ பாக்கேலெ, மவள் உம்மாவெப் பாக்கேலெ. நானா, தம்பியயோ, தம்பி ராத்தாவயோ, ராத்தா தங்கச்சியயோ காத்துக்கிட்டு நிக்கேலெ. மத்தாக்களெக் காத்துக்கிட்டு இரிக்கணுமென்டு ஒத்தரு நெனெக்கேலெ. எல்லார்ரெ மொகெத்திலெயும் அந்தெ ஊரெ உட்டு கெரியாப் போயிரணும் என்டெ விருப்பந்தா தெரிஞ்சிரு. நா எல்லாத்தயு பாத்துக்கிட்டு இரிந்தே. எல்லார்ரெ மொகெத்தயு பாத்தெ. அந்தெ மொகெத்திலெ தெரிஞ்செ பரெபரெப்பயு பயத்தயு பாத்தெ. எல்லாரு தனியாப் போறெத்தெப் பாத்தெ.

"யா றப்பு! இரென்னெ சோரினெ. இரானா மஹ்சர் மைதானம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிடித்தானா அங்கெ எல்லாரு அல்லல்பட்டு திரிவோ? யா அல்லா! நாங்கெ ஒனெக்கி என்னெ பொழெ செஞ்சோ? ஏ இப்பிடி எங்களெ சோதிக்கிறா?"

பையவா பையவா பீத்திக்கிட்டிரிந்தெ மெசின் ஒரெடெத்திலெ அப்புடியே நின்டுட்டு. இம்புட்டு சாமமு பேசாமெ பீத்திக்கிட்டு இரிந்தெ ஆக்கள் இப்பெ முணுமுணுக்கத் தொவெங்கிட்டாகெ. ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா அந்தெ முணுமுணுப்பெல்லா ஒன்னாச் சேந்து பெரியெ எரெச்செலா மாறத் தொவெங்கிட்டு. முன்னாலெ பீத்திக்கிட்டு இரிந்தெ ஆக்கள் இப்பெ பின்னாலெ வந்துக்கிட்டு இரிந்தாகெ. குறிப்பா எளெந்தாரி பொடியனொளு வந்தெ வழியாலெ மறுவாடியு ஊர்ப் பக்கம் போவெத் தொவெங்ஙினானொளு. மொரெல்லெ என்ன நடெக்கிறென்டு எனெக்கி வெளெங்கேலெ. பொறவுரா அந்தெ எரெச்சல்லெயு நாலஞ்சி வாத்தெ வெளெங்ஙினிச்சி.

"புலி நம்மளெ ரோட்டாலெ போவெ உடாமெ, கினாந்திமொனெக்குள்ளாலெ போவெச் சொல்றா. நம்மடெ பொடியங்களெயெல்லாம் புடிச்சி வெச்சிரிக்கானா"

"யா அல்லா! இந்தெ புலித் தூமெயலுக்கு அழிவு வராரா? அவெனொளெ ஒன்னுஞ் செய்யெ மாட்டியா அல்லா"

நா மனம் வெம்பி துஆக் கேட்டெ. முஸ்தவா மெருமெருவா மெசினெ ஒரு எனெல்வாவெ மரத்துக்கு கீழெ கொண்டு பீத்து நிப்பாட்டினா. மெசினெ சுத்தி சனம் நெறெஞ்சி வழிஞ்சிச்சி. ஒத்தரும் முன்னாலெ போவேலெ. ஆக்கள் வரெவரெ, அந்தெ எடெத்திலெ நெருக்கங் கூடிக்கிட்டே இரிந்திச்சி. எனெல்வாவெ மரத்திரெ எனெல் மெசின் பொட்டிக்குள்ளெ உழுந்திச்சி. இம்புட்டுச் சாமமு வேகாவெய்யிலுக்குள்ளெ வந்துக்கிட்டு இரிந்தெ எனெக்கி அந்தெ எனெல், மஹ்சர் மைதானத்திலெ இரிக்கிறெ 'லிவாவுல் ஹம்து' கொடியிரெ எனெலாட்டம் இரிந்திச்சி. நா அப்பிடியே சாஞ்சி, பொட்டிக்குள்ளெ படுத்திட்டெ. நா படுத்து ஒள்ளுப்பஞ் சாமந்தா பீத்திரிக்கு. மலார் என்டு ஒரு பென்னாம்பெரிய வெடிச் சத்தம் கேட்டிச்சி. அருக்குப் பொறவு இன்னொரு சத்தம். அந்தச் சத்தத்துக்கு நா எழும்பெ நெனெச்செ. ஆனா அருக்குள்ளெ இன்னொரு செல்லு வந்து நா இரிந்தெ மெசின் பொட்டிக்கு பக்கத்திலெ வந்து உழுந்திச்சி. என்டெ தலெமசிரு நிமிந்து வெறெச்சி பீத்திரு. ஒடனெயே அரு எரியிறெ நாத்தமு வந்திச்சி. என்டெ காது அடெச்சிப் பீத்திரு. ஒடெம்பெல்லா வெக்கெயாவி, அதெறி, குலுங்கி பீத்திரு. அம்புட்டுத்தா எனெக்கி தெரியு. அருக்குப் பொறவு இப்பரா எனெக்கி யாது வந்திக்கி.

இனி என்ன செய்யிரெ? எம்புட்டுச் சாமத்துக்கு இப்பிடியே கெடெக்கிறெ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடெம்பெல்லா நோவுரு. மெசின் பொட்டியிரெ மேல்பக்கத்தெ புடிச்சிக்கிட்டு மெல்லெவா எழும்பப் பாக்கிறெ. ஏலாமெ இரிக்கி. என்டெ தலெ கிறுகிறுக்கிரு. மறுவாடியு படுக்கிறெ. சில்வண்டு கத்திறெ சத்தம் மத்திரந்தா அங்ஙினெ கேக்கிரு. அருவு காது அடெச்சிப் பீத்திரிந்தத்தாலெ மெல்லவாத்தா கேக்கிரு. வெள்ளியிரெ வெளிச்சத்திலெ மரத்திலெ இரிந்தெ எலெயெல்லா கறுப்பா தெரீரு. நரி ஊளெ உர்ரெமாரி சத்தம் ஒன்னு கேக்கிரு. சனியன் கிட்டெ வந்துருமோ? அந்தெ செல்லு உழுந்தருலெ அங்ஙினெ யாராவரு மௌத்தாப் பீத்து இரிப்பாகெளோ? அந்தெ எரெத்தெ வாடெக்குத்தா நரி வரூரோ? எனெக்கி இப்பெ பயமா இரிக்கி. அப்பிடியொரு எடெத்திலெ நா மத்திரம் தட்டாத்தனியெ இரிக்கே. அந்தெ எடெத்தெப் பத்தி முந்தி என்டெ அவெகெ கனெக்கெ கரெயெல்லாஞ் சொல்லியிரிக்காகெ. அருக்கு ஒள்ளுப்பந் தள்ளித்தா கொய்யாடி மொடக்கு இரிக்கி. அந்தெ எடெத்தெ நெனெச்சாலெ பயமாயிரிக்கி. அருலெ ராவேலெ போறெத்துக்கு எல்லாருக்கும் பயம். அந்தெ எடெத்திலெ பொம்புளெ பேய், சங்கிலி வைரவன் என்டு கனெக்கெ நிக்குமா. வெள்ளெச் சீலெ உடுத்திக்கிட்டு கையிலெ புள்ளெயொடெ ஒரு பொம்புளெயெ கனெக்கெ பேர் கண்டிரிக்காகலாம். அவ ரோட்லெ நின்டுக்கிட்டு வாறாக்களுக்கிட்டெ அந்தெ புள்ளெயெ குடுப்பாவாம். யாராவரு அரெ வாங்ஙினா ஒரே அடிதானாம். அங்ஙினெயே ஆக்கள் மோசம் பீத்திருவாகலா. இரென்னெ கக்கிஸெம். இப்பெ பாத்து எல்லா யாதுக்கு வரூரு. அந்தெ பொம்புளெ, புள்ளெயொடெ இங்ஙினயு வருவாவா? இம்புட்டு வயசி பீத்தும், பேயென்டா எனெக்கி இப்பெயு பயமாத்தா இரிக்கி. சின்னெப் புள்ளெயிலெ இரிந்தே எனெக்கி பேயென்டா பயந்தா. எங்கெடெ உம்மா என்டெ பயத்தெ பாத்து, எனெக்கி முந்தி ஒரெயே ஏசுவாகெ. எங்கெடெ உம்மாக்கென்டா பேய்க்கு ஒரு பயமுமில்லெ. ஒரு தரக்கம் அவகெ பெருநாளெக்கி அச்சுப் பணியாம் சுட்டுக்கிட்டு இரிக்கெக்குள்ளெ ஒரு பேய் குசினிச் செத்தெக்குள்ளாலெ கையெ நீட்டி பணியா கேட்டிச்சாம். அவெகெ என்னெ செஞ்சாங்கென்டா, கொதி எண்ணெயெ அள்ளி அருடெ கையிலெ ஊத்தினாகெலா. அம்புட்டு தெகிரியம் அவெகளுக்கு.

நா மறுவாடியு பொட்டியெப் புடிச்சிக்கிட்டு எழும்பப் பாக்கிறெ.

"யாரு அரு?"

பொட்டிக்குள்ளெ இரிந்து சத்தம் கேட்டிச்சி. அரெக் கேட்டு எனெக்கி திணுக்கெறிஞ்சிட்டு. உத்துப் பாக்கிறெ. அந்தெ பொட்டிக்குள்ளெ யாரோ அசெயிறெமாரி இரிந்திச்சி.

"யாரு புள்ளெ?"

எனெக்கி பயந்தெளிஞ்சிட்டு. யாரோ உசிரொடெ இரிக்காகெ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனெக்கெண்டா சரியானெ சந்தோசம்.

"நாந்தா. விதாப்பாடெ ஜமாலக்கா."

"ஜமாலக்காவா? என்டெ புள்ளெ. நாந்தாம்மா சலாவாப்பு."

எனெக்கி சந்தோசத்திலெ ஒடெம்பெல்லா துடிச்சிட்டு. ஒரு ஆள் உசிரொட இரிக்கா. அருவு எனெக்கி தெரிஞ்செ ஆள்.

"சலாவாப்பா? எப்பிடியிரிக்கிங்கெ?"

"நல்லா இரிக்கெமா? நீ எப்பிடி புள்ளெ இரிக்கா?"

"நெஞ்சி நோவுரு வாப்பு. காதெல்லா அடெச்செமாரி இரிக்கி."

ஜமாலக்கா அணுங்கி அணுங்கிச் சொல்றா. அந்தெ இருட்டுக்குள்ளெ ரெண்டு பேருக்கும் ஆளாள்றெ மொகெந் தெரியேலெ. ஆனா ரெண்டு பேர் உசிரோடெ இரிக்கிறோ, ஆளாள் தொணெயா இரிக்கிறோ. இரெ நெனெச்சா எனெக்கி சந்தோசமாவு தெகிரியமாவு இரிக்கி.

"புள்ளெ எனெக்கி சரியா பசிக்கிரு புள்ளெ. காத்தாலயிலெ இரிந்து ஒன்னும் வாய்க்குள்ளெ போவேலெ புள்ளெ."

ஜமாலக்காக்கிட்டெ என்னமெண்டாலு இரிக்கிமா என்டெ நெனெப்பிலெ வெக்கத்தெ உட்டு நா சொல்றே.

"என்ன சலாவாப்பு செய்யிரெ? எனெக்கிட்டெயு ஒன்னுமில்லெ. ஒள்ளுப்பம் பொறுங்கெ. விடிஞ்சதும் ஏதாவது வழி பாப்போ."

நா பொட்டியெ புடிச்சிக்கிட்டு எழும்பினே. இந்தெ தரக்கம் எனெக்கி எழும்பி இரிக்கெ ஏண்டிச்சி. சுத்துமுத்தும் பாக்கிறே. வெட்டெயாலெ சரியானெ இருட்டுக் கசம். ஒன்னுந் தெரியேலெ. ஒள்ளுப்பந் தள்ளி என்னமோ அரவங் கேட்டிச்சி. திரும்பிப் பாக்கிறெ.

"சீ இரென்ன வெளிச்சம்?"

படாரென்டு என்டெ மொகெத்திலெ லைட் வெளிச்சம் வந்து பட்டிச்சி. என்டெ கண்ணு ரெண்டுங் குருடா போனெமாரி இரிக்கி. அம்புட்டு பவரானெ வெளிச்சம். என்னென்டு ரோசிக்கக்குள்ளயே யாரோ அரெட்ரெ சத்தங் கேக்கிரு.

"கெழவி. யாரெல்லா உள்ள இரிக்கிறீங்க?"

எனெக்கி ஒடம்பெல்லா நடுங்கிரு. வவுறு குளுந்து போவுரு. புலி வந்திட்டா. நா மறுமொழி சொல்றத்துக்கு முந்தியே வந்தவெ பொட்டிக்குள்ளெ லைட்டெ அடிச்சிப் பாக்கிறா. ஜமாலாக்காவு எழும்பி இரிந்திட்டா. லைட் அடிச்சவனுக்கு பக்கத்திலெ இன்னு ரெண்டு பேர் வந்து நிக்கிரானொளு. ஆக்கள் யாரென்டே தெரியேலெ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன கெழவி பயமாயிருக்குதா? பயப்பிடாதிங்க. இப்பிடியே இருந்திட்டு காலயில் எழும்பி போங்க"

லைட் வெச்சிரிந்தெவந்தா சொல்றா. சொல்லிப்புட்டு போனவெ என்னமோ நெனெச்சிக்கிட்டு திரும்பி வாறா.

"சாப்பிர்றத்துக்கு உங்களுக்கிட்ட எதாவது இருக்குதா?"

அவெ எனக்கிட்டரா கேக்கிறா. அரெக்கேட்டு எனெக்கி ஒள்ளுப்பந் தெம்பு வந்திட்டு.

"இல்லெ தம்பி. ஒன்னுமில்லெ. காத்தாலெயிலெ இரிந்து ஒன்னுந் திங்கேலெ தம்பி"

முருவுலெ தொங்கிக்கிட்டு இரிந்தெ பேக்கிலெ இரிந்து ஒரு விசுக்கோத்து பக்கெட்டும் ஒரு தண்ணிப் போத்தலும் எடுத்து அவெ எனெக்கிட்டெத் தாறா. அருக்குப் பொறவு அவெ அந்தெ மெசினிக்கிட்டெ பீத்து. அருடெ லைட்டெ போர்றா. எங்களுக்கு முன்னாலெ பக்கென்டு வெளிச்சம் அடிச்சிரு.

"இந்த வெளிச்சத்திலெ பயமில்லாம இருங்க"

சொல்லிப்புட்டு அவெனொளு போறானொளு. அவெனொளு போனத்துக்கு பொறவு, ரெண்டு பேரு அந்தெ விசுக்கோத்தெ தின்டுபுட்டு தண்ணியயுங் குடிக்கிறொ. இப்பெ எனெக்கி ஒடெம்புலெ ஒள்ளுப்பம் பெலெம் வந்திட்டு. வெளிச்சம் இரிந்தராலெ பயமும் பீத்திரு.

"பாத்தியா புள்ளெ ஆண்டவெ எப்பிடி நம்மளெ பொழெக்கெ வெச்சிக்கானென்டு?"

எனெக்கென்டா கடுஞ் சந்தோசம்.

"ஓஞ் சலாவாப்பு. இம்புட்டு வருத்தத்திலயு நம்மளெ ஆண்டவெ பொழெக்கெ வெச்சிக்கா. மத்தாக்களுக்கெல்லா என்ன நடந்திச்சோ தெரியாரு?"

ஜமாலக்கா இப்பிடிச் சொன்னருந்தா எனெக்கி என்டெ புள்ளயொள்ரெ யாது வரூரு. நா பதறித் துடிக்கிறெ. ஆண்டவனே என்டெ புள்ளயொள்! அருவொளுக்கு என்ன நடந்திச்சோ?

'அல்லா! என்டெ புள்ளெயொளுக்கு என்ன நடந்திச்சென்டு தெரியாரே. அருவொளு எங்கெ போனிச்சொளென்டுந் தெரியாரே! பர்வீன் பொட்டெயு அருடெ புள்ளெயு நம்மளொடானெ இரிந்திச்சொளு. இப்பெ எங்கெ பீத்திரிக்குமொளு? யாறப்பு என்னெ மத்திரம் பொழெக்கெ வெச்சிராரெ யாறப்பு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்புட்டுச் சாமத்துக்கு நா பொழெச்செத்தெ பத்தி சந்தோசப்பட்டுக்கிட்டிரிந்தே. இப்பரா என்டெ புள்ளெயொள்ரெ நெனெப்பு எனெக்கி வந்திக்கி. அருவொலெ நெனெச்செ ஒடெனெ என்டெ சந்தோசம் பீத்திரு. நா பொழெச்சிரிக்கிறரு இப்பெ எனெக்கி பெரிசா தெரியேலெ.

"நம்மெ என்ன செய்ரெ சலாவாப்பு. எல்லா அவென்டெ எழுத்து. அந்தெ எழுத்துப் பிரகாரந்தா எல்லா நடக்கு. நம்மளெ காப்பத்தினெ ஆண்டவெ நம்மடெ புள்ளெயொளெயு காப்பாத்தித்தா இரிப்பா. பொறுங்கெ விடிஞ்சரும் பாப்போ"

ஜமாலக்கா சொன்னெ ஆறுதல் மனசிக்கு ஒள்ளுப்பந் தெம்பெ குடுக்குரு. நம்மெ என்ன செய்யிலா? அருவு இந்தெ இருட்டிலெ இப்பிடியொரு எடெத்திலெ இருந்துக்கிட்டு நம்மலாலெ என்னராஞ் செய்யேலு?

அந்தெ ராவென்டா லேசிலெ விடியிறாப்பலெ இல்லெ. நேரெம் பீத்திக்கிட்டே இரிக்கி. ஆனா பொழுது விடியிதேயில்லெ. நாங்கெ ரெண்டு பேரும் அருக்கு பொறவு நெத்திரெ கொள்ளேலெ. எங்களுக்கு நெத்திரெ வரெயுமில்லெ. எங்கெ ரெண்டு பேருக்குங் கசனா ரோசினெ வந்திக்கிட்டே இரிக்கி. எடெக்கெடெக்கெ ரெண்டு பேரும் என்னென்டாலு கரெக்கிறோ. பொறவு ரோசினயிலெ இரிக்கிறொ. பொறவு செத்தெ சாமஞ் சென்டெ ஒடெனே மறுவாடியு கரெக்கிறொ. இப்பெ ஆள் தொணெ கெடெச்செ ஒடென்னெயெ எனெக்கி எங்களொடெ இரிந்தெ மத்தெ ரெண்டு பேரயும் பத்தினெ ரோசினெ வருரு.

"புள்ளெ நம்மளொடெ இரிந்தெ மத்தெ ரெண்டு பேரு இப்பெ எப்பிடி இரிக்காகெ புள்ளெ"

ஜமாலக்காக்கிட்டெ கேட்டெ.

"தெரியா வாப்பு. பொறுங்கெ பாப்போ"

ஜமாலக்கா மறுமொழி சொல்லிப்புட்டு பொட்டிக்குள்ளெ பாக்கிறா. மெசின்டெ வெளிச்சம் அந்தெப் பொட்டிக்குள்ளெயு உழுந்து, அருக்குள்ளெ இரிந்தெ ஆக்களெ இப்பெ பாக்கேலுரு. அரிலெ ஒரு பொம்புளெ அணுங்கிறமாரி இரிந்திச்சி. ஜமாலக்கா அவடெ வாய்க்குள்ளெ ஒள்ளுப்பந் தண்ணியெ ஊத்திறா. ஆனா தண்ணி அவடெ வாய்க்குள்ளெ போவேலெ. எல்லா வெளியெ வருரு. மத்தெ பொம்புளெக்கிட்டெ இரிந்து ஒரு ஊசாட்டங்குடி இல்லெ. அவெ மௌத்தாப் பீத்தாவா? அருக்குப் பொறவு அந்தாக்களெப் பத்தி ரெண்டு பேரும் கரெக்கேலெ. பக்கத்திலெ இரிந்தெ அந்தெ ரெண்டு பேரெயு தொட்டு பாக்கிறத்துக்குக்குடி எனெக்கி பயமா இரிக்கி. தச்செலா அவகெ மௌத்தாப் பீத்திரிந்தா? அரெ நெனெக்கவே எனெக்கி கடும் பயமாயிரிக்கி. இந்தெ ராவுலெ இப்பிடிப்பட்டெ எடெத்திலெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டு மையத்துக்கு பக்கத்திலெ எப்பிடி இரிக்கிறெ? அராலெ அருக்கு பொறவு விடியுமட்டு அரெப் பத்தி கரெக்கிரெயில்லேண்டு நா முடிவு செய்றே.

விடியிறத்துக்கு செத்தெ சாமத்துக்கு முந்தி எங்கெ ரெண்டு பேருக்கும் நெத்திரெ வந்திட்டு. எங்ஙினியோ இரிந்து கோழி கத்திறே சத்தம் கேக்கிரு. நா வாரிச் சுருட்டிக்கிட்டு எழும்பிறெ. அந்தமாரியானே நெலெமெயிலயு எங்ஙினிக்குள்ளயோ இரிந்து கோழி கத்திரு. அருக்குப் பொறவு அங்காலயு இங்காலயு இரிந்து நாலஞ்சி கோழி கத்திறே சத்தம் கேக்கிரு. ஜமாலக்கா இன்னும் முழிக்கேலெ. அவக்கிட்டெ இரிந்து கொறெட்டெச் சத்தங் கேக்கிரு. இன்னும் வெட்டாப்பு தெரியேலெரா. ஆனா விடியப் போவுரு. எனெக்கென்டா கடுஞ் சந்தோசமாயிரிக்கி. இனிமெ சொணெங்கப்படாரு. ஜமாலக்காவெ தட்டி எழுப்பிரெ.

"புள்ளெ... புள்ளெ. விடியப் போவுரு. எழும்பு புள்ளெ."

"ஆ! என்ன?"

ஒருமாரி வாய் விலாத்திக்கிட்டு ஜமாலக்கா எழும்புரா. எழும்பிப் பாத்தவக்கு வெசெயெம் வெளெங்கிட்டு. அவெடெ மனசிலெ இரிந்தெ சந்தோசம் வாத்தெயிலெ தெரிரு.

"வாப்பு! இனி இங்ஙினெ இரிக்கப்படாரு வானம் வெளிக்காட்டியும் பரவாயில்லெ. வாங்கெ நம்மெ போவம்."

கெரியா பீத்திரணுமெண்டு அவெ அவசரப்படுத்திறா.

"ஆண்டவனே! எங்கெளெ எந்தெ ஆபத்துமில்லாமெ கொண்டு பீத்து சேத்திரு யாறப்பு!"

ஜமாலக்கா ஆண்டவனுக்கிட்டெ துஆ கேக்கிறா. நானு அந்தமாரியே துஆ கேக்கிறெ.

செத்தெ சாமத்திலெ ஒள்ளுப்ப ஒள்ளுப்பமா வெளிச்சம் வரத் தொவெங்கிரு. அந்தெ வெளிச்சத்திலெ அந்தெ பொட்டிக்குள்ளெ இரிந்தெ மத்தெ ரெண்டு பேரெயு நல்லா பாக்கேலுரு. அவகெ ரெண்டு பேரும் எந்தெ அசெவும் இல்லாமெ படுத்துக் கெடெக்கிறாகெ. உசிர் இரிக்கிறெமாரியே தெரியேலெ. அருலெ ஒரு பொம்புளெயிரெ மொகெத்திலெ இரிந்து எரெத்தெம் வழிஞ்சி, காஞ்சி பீத்து இரிக்கி. எனெக்கி இப்பெ பயம் பீத்து தெகிரியம் வந்திட்டு. அவகெ ரெண்டு பேரெயு தொட்டுப் பாக்கிறெ. மொகெத்திலெ எரெத்தெம் வடிஞ்சி பீத்திரிந்தெ மனிசியிரெ ஒடெம்புலெ சூடே இல்லெ. அவ குளுந்து பீத்திரிந்தா. அவ மௌத்தாப் பீத்தா. மத்தெ மனிசிரெ ஒடெம்பிலெ சூடு இரிக்கி.

"இஞ்செ...இஞ்செ... "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவவெ அசெச்சி அசெச்சி கூப்பிட்டுப் பாக்கிறே. ஆனா அவக்கிட்டெ இரிந்து ஒரு ஊசாட்டமுமில்லெ.

"என்ன வாப்பு செய்யிறெ?"

ஜமாலாக்காரா எனெக்கிட்டெக் கேக்கிறா.

"நம்மெ என்ன புள்ளெ செய்யலா? நம்மளே இந்தெ நெலெமெயிலெ இரிக்கோ. நம்மளாலெ என்ன புள்ளெ செய்யேலு. எல்லா ஆண்டவன்டெ எழுத்துப்பிரகாரம் நடக்கு. நம்மெ எப்பிடியாவரு இங்ஙினிக்குள்ளெ இரிந்து பீத்திருவோ. யாராயவரு கண்டா இவெகெளெ பத்தி சொல்லுவோ"

நாஞ் சொன்னரு அவக்குஞ் சரியா பட்டிச்சி.

"சரி வாப்பு. அப்பெ நம்மெ போவம்."

ஆனா எப்பிடி எறெங்கிறெ? இப்பரா எனெக்கி நெலெபரம் வெளெங்கிரு. அம்புட்டு ஒசெரமானெ மெசின் பொட்டியிலெ இரிந்து கீழெ எறெங்கிறெ எப்பிடி? ஆனா எப்பிடியென்டாலு எறெங்கத்தான வேணும்.

"வாப்பு மொதெல்லெ நா எறெங்கிறே."

ஜமாலக்கா சொல்றா.

"புள்ளெ பொட்டிக்கு அடியிலெ ஒரு எடெவெளி இரிக்கி புள்ளெ. அருக்குள்ளெ காலெ வெச்சி பையவாப் பையவா எறெங்கு புள்ளெ"

"பிஸ்மில்லா"

"பாத்து புள்ளெ"

அவ ஒரு கையாலெ பொட்டியெப் புடிச்சிக்கிட்டு, மத்தெக் கையாலெ சீலெயெ மேலெ ஒசெத்திக்கிட்டு ஒரு காலெ தூக்கி வெச்சி எறெங்கிறா. பொறவு மத்தெக் காலெயுந் தூக்கி கீழெ வெக்கிறா. அருக்குள்ளெ அவ களெச்சிப் போனெமாரி இரிக்கி. அவக்கு மூச்சி வாங்கிரு. பாவம், அவ நெஞ்சி வருத்தக்காரி. ஒள்ளுப்ப நேரம் அப்பிடியே இரிந்துப்புட்டு, அவ பொட்டிய புடிச்செமாரி காலெ எடுத்து தரெயிலெ வெக்கெப் பாக்கிறா. அருக்குள்ளெ கால் சறுக்கி கீழெ உழுந்திட்டா.

"யா முகய்யதீன்!"

அவ கத்திறெ சத்தம் கேக்கிரு. அருக்குப் பொறவு செத்தெ சாமத்துக்கு அவக்கிட்ட இரிந்து எந்தெ சத்தத்தெயுங் காணேலெ. நா பதறிப் பீத்தே.

"புள்ளெ.... என்னம்மா நடந்திச்சி?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவக்கு என்னவாவரு நடந்திட்டா? அதெ நெனெக்கவே எனெக்கி பயமா இரிக்கி. எப்பிடி இங்ஙினெ இரிந்து தனியெ போறெ?

"அல்லா!"

ஜமாலக்கா அணுங்கிற சத்தம் கேக்கிரு. அந்தெ சத்தத்தெ கேட்டருக்கு பொறவுரா எனெக்கி நெத்திக்கல் நேரெ உழுந்தெமாரி இரிக்கி.

"புள்ளெ எறெங்கிட்டியா புள்ளெ?"

"ஓம்!. நா கீழெ உழுந்திட்டெ வாப்பு. நீங்கெ பாத்து எறெங்குங்கெ"

இப்பெ நா எறெங்ஙனு. மொரொரால்லெ பொட்டியெ புடிச்சிக்கிட்டு எழும்பி நிக்கேலுமான்டு பாக்கிறெ. கால் ரெண்டும் கடெகடென்டு நடுங்கிரு. செத்தெ சாமத்துக்கு அப்பிடியே நிக்கிறே. பொறவு சீலெயெ ஒசெத்திக்கிட்டு மெல்லவா மெல்லவா எறெங்கப் பாக்கிறெ. என்டெ கையு நடங்கிரு. தலெ கிறுகிறுக்கிரு.

"பயப்புடாமெ எறெங்குங்கெ வாப்பு. நா புடிச்சிக்கிறெ."

அந்தெ நெலெமெயிலெயு ஜமாலக்கா என்டெ காலெ புடிக்கிறா. எனெக்கி ஒள்ளுப்பம் பெலெ உறுதி வந்தாப்பலெ இரிக்கி. எப்பிடியாவரு இங்ஙினெ இரிந்து போயிரணு. ஒருமாரி நடுங்கி, நடுங்கி எறெங்கிறெ. நல்லகாலம். நா உழேலெ. எறெங்கி செத்தெ சாமத்துக்கு அந்தெ பொட்டியெப் புடிச்சிக்கிட்டு அப்பிடியே நிக்கிறெ.

"எதாலெ வாப்பு போறெ?"

எராலெ போறெ என்டு எங்கெ ரெண்டு பேருக்குந் தெரியா. நாங்கெ ரெண்டு பேருமே இருக்கு முந்தி தனியெ இந்தெப் பக்கத்தாலெ வந்தரில்லெ. வழியும் வெளெப்பமில்லெ.

"வாப்பு, நம்மெ தார் ரோட்டாலெ போவம்"

ஜமாலக்காரா மறுவாடியுஞ் சொல்றா. அருதா எனெக்கிஞ் சரியா படுரு. ரெண்டு பேரும் வந்தெ வழியாலெ திரும்பி தார் ரோட்டெ பாத்து போறொ. எனெக்கி இப்பெ அம்புட்டு களெப்பா இல்லெ. மனசிலெயு ஒடெம்பிலெயு நல்லெ பெலெ உறுதி வந்தாப்பலெ இரிக்கி.

"இரென்ன ஒரு ஆட்டோ நிக்கி."

ஒள்ளுப்பந் தள்ளி நின்டெமாரி ஆட்டோக்குள்ளெ பாக்கிறொ. அருக்குள்ளெ ஒரு ஆள் அப்புடியே குந்தினெமாரி இருக்காரு. அவரு மௌத்தாப் பீத்தாரு என்டது பாத்தெ ஒடனெயே தெரிஞ்சிச்சி. அரு யாரென்டு தெரியேலெ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாப்பு அது யாரென்டெலா பீத்து பாக்கேலா. நம்மெ போவொ"

வழியிலெ ரெண்டு மூனு மரம் உழுந்து கெடெக்கு. நாலஞ்சி எடெத்திலெ தரெயிலெ குழி உழுந்திரிக்கி. அங்காலயு இஞ்சாலயு கசனா சப்பாத்தும் பேக்குங் கெடெக்கு. கனக்கெ சைக்கிளுங் கெடெக்கு. ஏண்டெ மட்டுக்கு வெசெவெசெயா வந்து தார் ரோட்டுலெ ஏர்றோ. பொறவு ஊருக்கு போறெ தெசெக்கு எதித்தாப்பலெ அந்தெத் தார் ரோட்டாலெ நடெக்கத் தொவெங்கிறோ. அந்தெ ரோட்டுலெ அந்தெ நேரெத்திலெ ஒரு குஞ்சிகுறுமானயுங் காணேலெ.

நாங்கெ இப்பெ மூனாங்கட்டெ மலெயெத் தாண்டிப் பீத்திக்கிட்டு இரிக்கொ. இப்பெ பொழுது நல்லா விடிஞ்சி பீத்திரு. முன்னாலெ என்னமோ வாறாப்பலெ சத்தங் கேக்கிரு. அந்தெ சத்தம் வரெவரெ பெரிசா கேக்கிரு.

"என்ன புள்ளெ சத்தம்?

"தெரியாரு வாப்பு"

இப்பெ எங்களுக்கு எதுத்தாப்பலெ ரெண்டு மோட்டெ வசிக்கிள் வந்துக்கிட்டு இரிக்கி. நாங்கெ ஓரமா போறொ. அரு கிட்டெ வந்து நிக்கி.

"என்ன ராத்தா நீங்களா?"

தெகெப்பொடெ கேட்டெ அந்தெ கொரெலெ நா மதிக்கேலெ. ஆனா ஜமாலக்கா மதிச்சிக்கிட்டா.

"றகுமாவியாத்தாடெ மகனா! இந்தெ நேரெத்திலெ எங்கெ வாப்பா போறா?"

ஜமாலக்கா சந்தோசந் தாங்காமெ கேக்கிறா.

"ஆமி ஊரெ புடிச்சிட்டா ராத்தா. புலியெல்லா பீத்தானொளு. அரா ஊருக்கு போறோ. நீங்கெ ரெண்டு பேரும் எப்புடி வந்தீங்கெ?"

நாங்கெ வட்டுறுட்டமா நடெந்தரெச் சொல்லி முடிக்கிறோ.

"தம்பி அந்தெ மெசின் பொட்டிக்குள்ளெ இன்னு ரெண்டு பேரு இரிக்காகெ. அரிலெ ஒரு பொம்புளெ உசிரொடெ இரிக்கிறாப்பலரா தெரிஞ்சிரு. ஏலுமென்டா பீத்து பாருப்பா"

ஜமாலக்கா சொல்றா.

"சரி. நீங்கெ ரெண்டு பேரும் இந்தெ மோட்டெ சைக்கிள்லெ ஏறுங்கெ. ஒங்களெ கொண்டு பீத்து அங்கின மல்லியத்தீவுலெ இரிக்கிறெ ஆமிக் கேம்படியிலெ உர்றோ. நீங்கெ அங்கினெ

இரிந்து நடந்து போனா, பாலத் தோப்பூரடியிலெ ஆக்களெ ஏத்தெ வேன் பஸ்ஸெல்லா நிக்கி. அதிலெ ஏறி கந்தளாய்க்கு போங்கெ. அங்கெதா நம்மடெ ஆக்கள்லா இரிக்காகெ."

அந்தெப் கேம்பிலெ இரிந்தெ ஆமிக்காரனுக்கு எங்கெ ரெண்டு பேரெயு பாத்து சரியானெ ஆச்சரியம். இந்தெ வருத்தத்திலெயு இந்தெ வயசிலயு ஒரு ராவு முத்துலும் தனியா இரிந்து தப்பி வந்திரிக்கம் என்டெ த்தெ கேட்டு அவனொளாலெ நம்பெ ஏலாமெ இரிக்கி.

"நல்லெ பெலெசாலியானெ கெளெவிதாங்"

ஒரு ஆமிக்காரெ என்டெ முதுவிலெ தட்றா. எனெக்கென்டா வெக்கமா இரிக்கி.

"ஆ. இந்தா. இதெச் சாப்பிடுங்கோ"

இன்னொரு ஆமிக்காரெ ஒரு கோப்பயிலெ விசுக்கோத்தும் ஒரு பெரியெ போத்தல்லெ சோடாவு கொண்டு வந்து வெக்கிறா. அரெத் தின்டு சோடாவெயு குடிக்கெ இன்னுந் தெம்பு வந்தாப்பலெ இரிக்கி.

"நேனெ. இப்பிடிப் போங்கெ. பாலத்திலெ ஆக்கள் நிக்கிறெ. வேனிலெ ஏறி கந்தளா போறெ"

இன்னொரு ஆமிக்காரெ வழி காட்ரா.

நாங்கெ பாலத்தோப்பூருக்கு வந்திட்டம். அங்கினெ நாலஞ்சி வேனும் பஸ்ஸும் நிக்கி. எங்கெ ரெண்டு பேரயுங் கண்டொடென்னெயெ அங்கினிக்குள்ளெ இரிந்தெ ஆக்களுக்கு சரியானெ ஆச்சரியமாத்தா இரிக்கி. எல்லாருக்கும் என்னெப் பாத்துத்தா தெகெப்பா இரிக்கி.

"என்ன கன்னா நடந்திச்சி?"

"காயம் ஒன்னும் படேலியா கன்னா?"

"டேய் அவகளுக்கிட்டெ கேள்வியெல்லா கேட்டுக்கிட்டு இரிக்காமெ அவகளெ ஒரு ஊட்டெ கூட்டிக்கிட்டுப் போங்கடா"

யாரோ ஒரு ஆள் அதெட்ராரு. எங்கெ ரெண்டு பேரெயு ஒரு வேனிலெ ஏத்திப் போறாகெ. இப்பெ எனெக்கி சரியானெ களெப்பா இரிக்கி. இம்புட்டுச் சாமத்துக்கு என்டெ ஒடெம்பிலயு மனிசிலயு இரிந்தெ பெலெ உறுதி இப்பெ கொறெஞ்சப்பாலெ இரிக்கி. வேன் நிக்கிரு. எங்கெ ரெண்டு பேரெயு கையெப் புடிச்சி ஒரு ஊட்டுக்குள்ளெ கூட்டிப் போறாகெ. அங்கினெ இரிந்தெ குந்திலெ நாங்கெ ரெண்டு பேரும் இரிக்கிறோ.

"இந்தாங்கெ மொரெல்லெ இந்தெ தேத்தண்ணியெ குடிங்கெ"

ஒரு எளெம்பொட்டெ எங்களுக்கு தேத்தண்ணி தரூரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கெணெத்தடியிலெ தண்ணி அள்ளி வெச்சிக்கி. பீத்து மொகங் கழுவிப்புட்டு வாங்கெ"

ரெண்டு பேரும் பீத்து மொகங் கழுவிப்புட்டு வாரோ. ஊட்டுக்குள்ளெ ரெண்டு பேருக்கும் பாய் விரிச்சிரிக்கிறாகெ. அரிலெ படுத்தரு மந்திரந்தா எனெக்கித் தெரியும்.

"கன்னா... கன்னா!"

யாரோ என்னெ உசுப்புறாகெ. கண்ணெத் தொறொந்து பாக்கிறெ. காத்தாலெயொடெ தேத்தண்ணி தந்தெ பொட்டரா.

"வாங்கெ கன்னா. வந்து சோறு தின்னுங்கெ"

அஞ்சி நாளெக்கி பொறவு இன்டெக்கித்தா நா நல்லெ சோத்தெக் கண்ணாலெ காண்றெ. பசியிரெ வெகெர்லெ மூசுமூசென்டு திங்கிறே.

"ராத்தா ஒங்கடெ பேர் என்ன ராத்தா?"

"கன்னா நீங்கெ எங்ஙினெ இரிக்கீங்கெ?"

சோத்தெத் திண்டத்துக்கு பொறவு, நாலெஞ்சி பொம்புளெயொளும் ரெண்டு மூனு ஆக்களும் எங்களுக்கிட்டெ கரெக்கிறாகெ. நாங்கெ எல்லாத்தெயுஞ் சொல்றொ.

"இஞ்செ! இன்டெக்கி நீங்கெ போவெ வாணா. கந்தளாயிலெ ஒங்கடெ ஆக்கள் எங்ஙினெ இரிக்காகெ என்டு தெரியாரு. நாங்கெ போறாக்களுக்கிட்டெ ஒங்களெப் பத்தி சொல்லி உர்ரோ. நாளெக்கி ஒங்களெ வந்து யாராவரு கூட்டிக்கிட்டு போவாகெ."

அவெக சொன்னருஞ் சரியாப் பட்டிச்சி. புள்ளேலெப் பாக்கெனுமென்டெ ஆசெ இரிந்தாலும், கந்தளாய்க்கு பீத்து அலெஞ்சி திரியிறத்தெ உடெ, இங்ஙினெ இரிந்து நாலெக்கி போறதாஞ் சரி.

• • •

அடுத்தெ நாத்து காத்தாலெயொடெயே அந்தாக்கள் சொன்னெமாரி எங்கெளெ ஏத்திப் போவெ வேன் ஒன்னு வந்திட்டு. ஜமாலக்காடெ மவெந்தா வேன் புடிச்சி வந்திரிக்கா. என்டெ புள்ளேலு ஒத்தரு வரேலெ.

மவென கண்டெ ஒடெனெயெ அவடெ கண்ணாலெ தண்ணி வரெத் தொவெங்கிட்டு.

"என்டெ ராசா. வந்திட்டியாடா. நா அந்தெ காட்டுக்குள்ளெ மௌத்தாப் போவெப்பாத்தென்டா. எல்லாரு சொகெமா இரிக்காகளாடா? என்டெ அல்லாவே எனெக்கித் தாங்கேலாதே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ அப்பிடியே அவடெ மவெனெ புடிச்செமாரி மயங்கிப் பீத்தா. ஒடனடியா அவவெயும் என்னெயும் அங்ஙினெ இரிந்தெ வேறெ ரெண்டு மூனு பேரெயும் ஏத்திக்கிட்டு அந்தெ வேன் கந்தளாப் பக்கமா ஓடெத் தொவெங்கிட்டு.

"கன்னா! ராவுதா எங்களுக்கு ஒங்களெப்பத்தி செய்தி வந்திச்சி. ஒங்கெடெ ஆக்கள் எந்தெ முகாமிலெ இரிக்காகெ என்டு தெரியேலெ. அதாலதா ஒங்கெடெ புள்ளேலுக்கிட்டெ எனெக்கிச் சொல்லேலாமெ பீத்திது. கந்தளாய்க்கு போனெதும் ஒங்கெடெ ஆக்களுக்கிட்டெ ஒங்கெளெ கொண்டு பீத்து உட்ருவோ."

வேன் ஓடிக்கிட்டு இரிக்கக்குள்ளெ ஜமாலக்காடெ பெயெல் வெசெயெத்தெ சொல்றா. எனெக்கென்டா புள்ளோலெ பாக்கெப் போறெ சந்தோசத்திலெ ஒன்னுமே வெளெங்கேலெ. அந்தெ ரோட்டிலெ குழிக்குள்ளெயெல்லா உழுந்து எழும்புனெ வேன்டெ குலுக்கங்குடி எனெக்கி கஸ்டமா தெரியேலெ. ஆண்டவன்டெ புண்ணியத்திலெ இன்னு ஒள்ளுப்பெ நேரெத்திலெ என்டெ புள்ளேலெ நா பாப்பெ.

◂ ஜூன் 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்னும் வெளெங்கேலெ

ஆண்டவெ சல்மாவெ எனெக்கித்தா படெச்சிக்கா. இரிலெ இப்பெ எனெக்கி ஒரு கொளெப்பமுமில்லெ. ஏனென்டு சொன்னாக்கா அவ அப்புடித்தா நடக்கிறா. மறுவாடி பின்னெ என்னெ? நா எப்பெ அவடெ ஊட்டுப் பக்கத்தாலெ போனாலும் அவ என்னத்தா பாக்கிறா. நா எப்பெப்பயெல்லா அவடெ ஊட்டுப் பக்கத்தாலெ போவேன்டு அவக்கு நல்லாத் தெரிஞ்சிக்கி. காத்தாலெயொடெ ஒம்பது மணிக்கிட்டெ ஒரு தரக்கம். பொறவு மத்தியானம் ஒரு மணிக்கிட்டாலெ. அருக்குப் பொறவு பின்னேரம் அஞ்சி மணிக்கிட்டெ. கடெசியா ராவுலெ இஷாவுக்குப் பொறவு. இப்பிடி கொறெஞ்சரு நாலு தரக்கமென்டாலு அவடெ ஊட்டுப் பக்கத்தாலெ நா போவெ. அப்பிடிப் போறெ ஒவ்வொரு தரக்கமு அவ என்னெப் பாக்கிறத்துக்காகெ நிப்பா. நிண்டு என்னெப் பாத்துச் சிரிப்பா. செலெ நேரெத்திலெ அவெ கடெப்புக்கிட்டெ கூட்டிக்கிட்டு நிப்பா. செலெ நேரெத்திலெ அவடெ ராத்தாடெ புள்ளெயெ தூக்கி வெச்சிக்கிட்டு நிப்பா. இல்லாட்டி ஏராவரு சாமா வேண்ட்றத்துக்காகெ நிப்பா. இப்பிடி என்னெப் பாக்கிறத்துக்கு அவெக்கு எரென்டாலு சாக்குக் கெடெச்சிரு. ஒரு தரக்கம் இப்பிடித்தா அவெ ராத்தாடெ புள்ளெயெ தூக்கி வெச்சிக்கிட்டு நிண்டா. என்னெக் கண்டரு இந்தக் கூளெப் பொட்டெ என்ன செஞ்சாவன்டா, தூக்கி வெச்சிக்கிட்டிரிந்தெ அந்தெ புள்ளெயெ கனெக்கெ தரக்கம் மோரெத் தொவெங்கிட்டா. எனெக்கெண்டா சரியானெ வெக்கெமா பீத்திரு.

அவெ என்னெப் பாக்கிறா என்டெ சங்கரியே எனெக்கி ஒள்ளுப்ப நாளெக்கி முந்தித்தா தெரியும். ஒரு தரக்கம் மன்சுரொடெ அவடெ ஊட்டுப் பக்கத்தாலெ பீத்திக்கிட்டிரிந்தே. அப்பரா அவ மொரெமொரெலா என்னெப் பாத்துச் சிரிச்சா. நா ஒருநாளும் பொம்புளெ புள்ளேலெ பாக்கிறேல்லெ. ஏனென்டா எனெக்கிச் சரியானெ வெக்கம். மத்தரு என்டெ நெலெமெ. நா ஒள்ளுப்பங்குடி வடிவில்லெ. ஒசெரமா, சரியானெ நோஞ்சானா இரிப்பே. எனெக்கி பெரியெ முண்டெக்கண். சப்பெ மூக்கு. மேல் பல் ஒரெட்டுக்கு வெட்டெயாலெ நீட்டிக்கிட்டு இரிக்கு. என்டெ தலெமுடி சரியானெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிஸ் முடி. இப்பிடிப்பட்டெ நெலெமெயிலெ எனெக்கி பொம்புளெ புள்ளெயொளெ பாக்கிறெண்டா சரியானெ வெக்கமா இரிந்திச்சி. எங்ஙினியென்டாலு பொம்புளெ புள்ளெயொளெ பாத்தாலும் தலெயெ கவுண்டுக்கிட்டு பீத்திருவெ.

ஆனா இப்பெ என்னென்டாக்கா இந்தெ சல்மா என்னெப் பாத்துச் சிரிக்கிறா. அரு மத்தாக்கள் சிரிக்கிறெமாரி இல்லெ. மத்தாக்களென்டா என்னெப் பாத்துச் சிரிக்கக்குள்ளெ ஒரு நக்கல்தா தெரியு. ஆனா இரு அப்பிடியில்லெ. இரு வேறெமாரி இரிந்திச்சி. அரெ எப்பிடிச் சொல்றேண்டு எனெக்கித் தெரியேலெ. ஆனா அரு நல்லெ சிரிப்பு. ஒடெம்பத் தடெவிக் குடுக்கிறெமாரி. ஒருநாள் நா மன்சுரொடெ அவடெ ஊட்டுப் பக்கத்தாலெ பீத்திக்கிட்டிரிந்தே. அப்பெ அவ வாசல்லெ நிண்டுக்கிட்டு இரிந்தா. நா வெக்கத்திலெ அவவெ பாக்காமெ தலெயெக் குனியெ நெனெச்செ. ஆனா அருக்குள்ளெ அவ என்னெப் பாத்து சிரிச்சிட்டா. எனெக்கி ஒடெம்பெல்லாம் கூசிப் பீத்திரு. செத்தெ சாமாத்துக்கு நடுங்கிப் பீத்தே. அவவெ தாண்டிப் போனத்துக்குப் பொறவு சாடெயாத் திரும்பிப் பார்த்தே. அவ கடெப்படியிலேயே நிண்டுக்கிட்டு என்னெப் பாத்துக்கிட்டு இரிந்தா. இப்பவும் என்னெப் பாத்து சிரிச்சா.

பொறவு நாலஞ்சி தரக்கம் அவடெ ஊட்டுப் பக்கம் போனே. ஒவ்வொரு தரக்கமும் அவ சிரிச்சா. எனெக்கென்டா ஒடெம்பெல்லாம் குளுந்து பீத்திரு. என்டெ உள்ளங்கால்லெ தொவெங்கி உச்சந்தலெ வரெக்கும் யாரோ ஐஸ் தண்ணியெ ஊத்தினெமாரி இரிந்திச்சி. அருக்குப் பொறவு எனெக்கி நெத்திரெ கொறெஞ்சி பீத்திரு. படுத்தா நெத்திரெ வாராரு. மோட்டெப் பாத்துக்கிட்டு அப்புடியே கெடெப்பே. மோட்டுலெ அவெதா நிப்பா. கண்ணெ மூடினா கண்ணுக்குள்ளெயு அவரா. மின்வெட்டம் பூச்சிமாரி பளிச்சுப் பளிச்சென்டு சிரிச்சிக்கிட்டு பறந்து திரிவா. கனெ சாமத்துக்குப் பொறவு நெத்திரெ கொண்டாலும் மினாமிலயு அவரா வருவா. ராத்தாடெ புள்ளெயெ மோந்துக்கிட்டு இல்லாட்டி கடெப்பக் கூட்டிக்கிட்டு.

எனெக்கென்டா இரெயெல்லாம் நம்பேலாமத்தான் இரிக்கி. எப்பிடி நம்புறெ? அவடெ லெச்சனத்துக்கும் என்டெ கோலத்துக்கும் மினாமிலயு முடிச்சிப் போடேலா. அவ அழகு சுந்தரி. சுத்துலும் ஹுர்லீன் பொம்புளெமாரியே இரிப்பா. செவெப்பு நெறெத்திலெ மெல்லிசா இரிந்தா. அவ எப்பவும் ரோஸ் இல்லாட்டி மஞ்சள் நெறெத்திலரா பாவாடெ சட்டெ போட்டிரிப்பா. மஞ்சள் உடுப்பிலெ அவவெ பாத்தா, எனெக்கி மாம்பழக் குருவிரா யாதுக்கு வரு.

எனெக்கிட்டெ இப்பெ ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா மாத்தம் வரெத் தொவெங்கிட்டு. ஒடெம்புக்கு மணச் சவுக்காரமெல்லா போடெத் தொவெங்கிட்டே. எங்கெடெ ஊட்டுலெ பெருநாளெக்கி மந்திரந்தா மணச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவுக்காரம் வாங்கிறெ. அருவும் ஆமெக்குட்டிச் சவுக்காரந்தா. பெரியெ ராத்தாரா காசி தருவா. மத்தெ நாள்லேல்லாம் நீலெக்கட்டிச் சவுக்காரந்தா. இப்பெ தண்ணி அள்றெ காசிலெ மிச்சம் புடிச்சி நா மணச் சவுக்காரம் வாங்கிட்டே. அரு எனெக்கி மந்திரந்தா. தேச்சி முடிஞ்சரும், அரெ அந்தெ பொட்டிக்குள்ளயே போட்டு குசினிச்செட்டெக்குள்ளெ சொருவி வெச்சிடுவெ. முந்தியென்டா நா தலெயெல்லா வார்றேல்லே. மொகத்துக்கு பவுடரும் போர்றேல்லெ. இப்பெ அப்பிடியில்லெ. இப்பெ காத்தாலயொடெ எழும்பினா கண்ணாடிக்கு முன்னாலரா நிக்கிறெ. கனெசாமத்துக்கு நின்டு, நீட்டு நீட்டா இருந்தெ என்டெ தலெ முடியெ வாரிக்கிட்டேயிரிப்பே. எண்ணெ பூசி, பொறவு தண்ணி போட்டு வாரிவாரி அமெத்தி வெப்பே. மன்சூர்ரெ தலெ முடிமாரி அலெஅலெயா வாறெத்துக்கு சீப்புடெ பின்பக்கத்தாலெ அமெத்தி அமெத்தி வெப்பே. இப்பிடியெல்லாஞ் செஞ்சரிலெ, கொஞ்செ நாளெயில்லெ அரு ஒருமாரி மடெங்கி தலெயொடெ அமெந்திட்டு. இப்பிடியெல்லா நா செஞ்சிக்கிட்டு வந்தரெ குஞ்சாத்தா கண்டுட்டா.

"என்னெ மூசி. இப்பெ ஒரேஒரேயெ கண்ணாடிக்கு முன்னாலெ நின்டுக்கிட்டு தலெயெல்லா வார்ராப்பலெ இரிக்கி. யாரெயென்டாலும் பாத்துத் திரியிரியா?"

எனெக்கிச் சரியானெ கோவம் வந்திட்டு. அவவெ பாத்து கீசிக் கத்திட்டுட்டே.

"செவுடி நீ ஒன்டெ வேலெயெ பாத்துக்கிட்டு போ."

எனெக்குஞ் சல்மாக்கும் எடெயிலெ நடெக்கிற இந்தெ சிரிப்பு வெசெயத்தெ நா யாருக்கிட்டெயுஞ் சொல்லேலெ. சொன்னாக்கா ஒத்தனு நம்பவு மாட்டானொளு. அரோடெ இரெ மத்தாக்களுக்கிட்டெ சொல்லெப் பயமாவும் இரிந்திச்சி. ஏனென்டாக்கா, சல்மாடெ வாப்பா எங்கடெ ஊரிலயே பெரியாள். அவரு மக்காவுக்கெல்லா பீத்து வந்தீக்காரு. இந்தெ வெசெயொ தெரிஞ்சா எரென்டாலுஞ் செஞ்சாலுஞ் செஞ்சிடுவாரு. அராலெ இரெப்பத்தி ஒத்தருக்கிட்டயு சொல்லப்படாரென்டு முடிவு செஞ்சிட்டே. மன்சுருக்கிட்டெகுடி சொல்லேலெ. மன்சுருதா என்டெ கூட்டாளி. அவெ மத்தாக்கள்மாரி இல்லெ. அவெ மத்திரந்தா என்னெ பகிடி பண்ரேல்லெ. அவெனொடெரா எப்பவு நா சல்மாவெ பாக்கப் போறே. ஆனா சல்மா என்னெப் பாத்துச் சிரிக்கிறெ வெசெயம் அவனுக்கு தெரியா. ரெண்டு மூனு தரக்கம் அவெனுக்கிட்டெச் சொல்லத்தா நெனெச்சே. ஆனா எனெக்கிச் சரியானெ வெக்கமா இரிந்தராலெ சொல்லேலெ.

மன்சூர் நல்லெ வடிவு. அவெனுக்குச் சுருட்டெத் தலெ. அவெ நல்லெ வெள்ளெ. அரோடெ நல்லெ ஒசராமாவு இரிப்பா. அவென்டெ வாப்பா ஒஸ்தா. அவெரும் அவெனெமாரித்தா நல்ல வெள்ளெயாவும் ஒசராமாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிப்பாரு. எனெக்கி அவர்ரா சின்னத்துப் பண்ணினெ. சின்னத்துப் பண்ணினெ நேரெத்திலெ அவெர்லெ எனெக்கிச் சரியானெ கோவம். அவெருக்கு எரெக்கமே கெடெயாரு. முறுக்கு ஒடெக்கக்குள்ளெ நோவுரென்டெலாம் பாக்கெ மாட்டாரு. பிச்சி எடுத்துப்புடுவாரு. மன்சூர் அவென்டெ வாப்பாமாரி தலெமுடி வெட்ரேல்லெ. சுன்னத்துப் பண்ணயும் போறேல்லெ. அவெ படிச்சி பாஸ் பண்ணிக்கா. மாஸ்டரா போவனுமென்டர்ரா அவென்டெ ஆசெயும், நெனெப்பும். அவெ அன்டெக்கி ஒரு தரக்கம் கேட்டா.

"என்ன மூசி. புருச் சட்டெ, சாரனெல்லா வாங்ஙினாப்பெலெ இரிக்கி?"

எனெக்கி வெக்கம் வந்திட்டு. இப்பெ ரெண்டு நாளா சல்மாவெ பாக்கப் போவெக்குள்ளெ நா புருச் சட்டெயும் சாரணும் உடுத்திக்கிட்டுத்தா போறே. ஒருமாரி கஸ்டப்பட்டு இந்தெச் சட்டெயயு சாரனயு வாங்கிட்டே. ஒஸி காக்காடெ கடெக்கு தண்ணி அள்ளி நெறெக்கிறதா என்டெ வேலெ. ஒரு நாளெக்கி ரெண்டு தரக்கம் அவெர்ரெ கடெயிலெ இரிக்கிற பெரியெ பறெல்லெ நல்லெ தண்ணி நெறெக்கணு. காத்தாலெயொடெ பத்து மணிக்கு ஒரு தரக்கம், பொறவு பின்னேரம் நாலு மணிக்கு ஒரு தரக்கம். மெல்லுக் கெணெத்திலெ இரிந்துரா தண்ணி அள்றெ. நா ஒரு தள்ளு வண்டில் வெச்சிரிக்கே. அரிலெ ஒரு தரத்திலெ நாலு கொடெத்தெ வெச்சி தள்ளெலா. பத்துத் தரக்கம் பீத்து வந்தா அந்தெ பறெல் நெறெஞ்சிடும். ஒரு கொடெத்துக்கு பத்திச்சம் தருவாரு. ராவெக்கும் பவலெக்கும் தண்ணி நெறெச்சா ஒரு நாளெக்கி எட்டு ருவா கெடெக்கும். அரோடெ ஒரு கெழெமெயா கொள்ளி கொத்திறெ மரெக்காங் காக்கா வரேலெ. அவருக்கு சொகெமில்லியாம். அராலெ ஒரு வண்டிக் கொள்ளியயு நாந்தா கொத்தினே. அருக்கு பத்து ருவா தந்தாரு. உம்மாக்கிட்டெ எல்லாக் காசெயுங் குடுக்கேலெ. ஒள்ளுப்ப ஒள்ளுப்பமா மிச்சம் புடிச்சி, செவெப்பு கலெர்லெ ஒரு சட்டையும் ஒரு பச்செக் கோடு போட்டெ சாறனும் வாங்கிட்டே. மறுவாடி என்ன, ஒரே ஒரெயெ கூடாரெ உடுப்பப் போட்டுக்கிட்டு சல்மாவெ பாக்க போவேலுமா?

சல்மா என்னெப் பாக்கத் தொவெங்கி இப்பெ ரெண்டு மாசமா பீத்திரு. இன்டெக்கி வரெக்கும் நா அவெக்கிட்டெ ஒரு வாத்தெயுங் கரெக்கெலெ. கரெக்கிறத்தெ உடுங்கெ. அவவெ மொகத்துக்கு நேரா நிமிந்துகுடி இன்னும் பாக்கேலெ. எல்லாங் கடெக்கண்ணாலெரா பாக்கிறெ. கடெக்கண்ணாலெ பாக்கிறெ என்டு சொல்லக்குள்ளரா முந்தி ஓதுரெ பள்ளியிலெ லெவ்வெப்பாக்கிட்டெ அடி வாங்கினரு யாதுக்கு வருரு. நா அப்பெ சின்னாள். ஓதுரெ பள்ளியிலெ மொரெலாவரு ஜுஸ் ஓதிக்கிட்டிரிந்தே. எனெக்கிப் படிப்புமாரி ஓதலும் நல்லா ஏறெலெ. ஒரு ஜுஸ்குடி நா ஓதி முடிக்கேலெ. அஸருக்கு பாங்கு சொன்னரும், லெவ்வெப்பா என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வாரென்டா, யாரெயாவரு ஒரு பெரியெ பொடியனெ எழுப்பி, எங்கெளெயெல்லாம் பாக்கெச் சொல்லிப்புட்டு தொழெப் பீத்திருவாரு. அந்தெப் பொடியெ நாங்கெ சாடெயா திரும்பினாலும் எழுப்பிப்புடுவா. போறவென்ன. லெவ்வப்பா வந்தரு வேறெ பேச்சில்லெ. அடிரா. பெரெப்பங் கம்பாலெ அடிச்சி நொறுக்கிப்புடுவாரு.

இப்பிடித்தா ஒரு தரக்கம் குட்டி நிஸாரெ பாக்கச் சொல்லிப்புட்டு லெவ்வப்பா தொழெப் பீத்தாரு. ஒள்ளும்பஞ் சாமம் போனரு அவெ டக்கென்டு.

"மூசி, எழும்பி நில்லு"

என்டு என்னெ எழும்பி நிக்கச் சொன்னா. இருக்கென்டா நா ஒன்னுஞ் செய்யேலெ. என்டெ பாட்டுக்கு ஓதிக்கிட்டுத்தா இரிந்தே. எனெக்கி ஒடெம்பெல்லா நடுங்கி, டிங்கமெல்லா கலெங்கிப் பீத்திரு. லெவ்வப்பா வந்தரு, குட்டி நிஸார் அவருக்கிட்டெ என்னெக் காட்டிச் சொன்னா.

"லெவ்வெ. இவெ கடெக்கண்ணாலெ பாத்திக்கா லெவ்வெ"

எனெக்கென்டா ஒன்னும் வெளெங்கேலெ. கடெக்கண்ணாலெ பாக்கிறென்டா என்னென்டுகுடி அப்பெ எனெக்கித் தெரியா.

"முண்டெ நாயே. இந்தெப் பெரியெ கண்ணெ வெச்சிக்கிட்டு கடெக்கண்ணாலயா பாக்கிறா?"

சொல்லிச் சொல்லி சுத்தும் பித்தும் லெவ்வெப்பா என்னெ அடிச்சி நொறுக்கிப்புட்டாரு. பொறவு கனெநாள் பீத்துத்தா கடெக்ண்ணாலெ பாக்கிறென்டா என்னென்டு எனெக்கி தெரிஞ்சிச்சி. இப்பெ என்னென்டா ஒரு நாளெக்கி நாலஞ்சி தரக்கம் நா சல்மாவெ கடெக்கண்ணாலெ பாக்கிறே.

ரெண்டு மூனு நாளா மன்சூர் நல்லா இல்லெ. அவெ சந்தோசமா இரிக்கிறாப்பலெயுந் தெரியேலெ. ஒத்தரொடெயு அவெ பெரிசா கரெக்கவுமில்லெ. ராவேலெ வெள்ளெக்கண்ணிக் காக்காடெ குந்திலெ வந்து இரிந்தாலு, ஒத்தரொடயுங் கரெக்காமெ சும்மாரா இரிக்கா. முந்தியென்டா எப்பெ பாத்தாலு அவெனுக்கு சிரிப்புத்தா. ஒரே பவுடி உடுவா. எனெக்கி அவெஞ் சொல்ரெ பவுடி வெளெங்காட்டியு, அவெ சொல்றெ மொறெயெப் பாத்தே எனெக்கிச் சிரிப்பு வந்துரு. ஆனா இப்பெ நாலஞ்சி நாளா அவென்டெ மொகெத்திலெ சிரிப்பெயே காணேலெ. இருக்கெல்லா என்ன காரணமென்டு எனெக்கித் தெரியேலெ. அவெனுக்கிட்டெ கேக்கவு ஒருமாரியா இருந்திச்சி. நேத்து ராவு வெள்ளெக்கண்ணி காக்காடெ குந்திலெ இரிந்து கரெச்சிக்கிட்டு இரிக்கக்குள்ளெயு அவெ ஒருமாரியாத்தா இரிந்தா. பொறவு நேரெத்தொடெயே அவெ பீத்தா.

••••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்மா அவடெ ராத்தாடெ புள்ளெயெ தூக்கி வெச்சிக்கிட்டு இரிந்தா. என்னெக் கண்டரு எப்பவுமாரி சிரிக்கிறா. எனெக்கி இப்பெ வெக்கம் வரேலெ, பயமும் வரேலெ. நா அவவெயே நேரா பாத்தெமாரி அவக்கிட்டெ போறெ. அவக்குத்தா இப்பெ வெக்கம் வந்தமாரி இரிந்திச்சி. சிரிச்சிக்கிட்டு அவெகடெ வளவுக்குள்ளெ போறா. நா கடெப்பெத் தொறெந்திக்கிட்டு அவக்கு பின்னாலெ போவெப் பாத்தே. ஆனா மன்சூர் உடேலெ. அவெ என்டெ கையெப் புடிச்சி இழுக்கிறா. நா அவென்டெ கையெத் தட்டிப்புட்டு, பேவெப் பாக்கிறே. அவெ உடேலெ. என்டெ தோளெ ஒரெமா புடிச்சி இழுக்கிறா.

"மூசி! மூசி!"

குஞ்சாத்தா என்டெ தேளெ அசெச்சி என்னெ எழுப்புறா. நா திணுக்கெறிஞ்சி எழும்புறே.

"மன்சூர்ரெ உம்மா வந்திக்காகெ. ஒன்னெப் பாக்கணுமா"

நா கொட்டாவி உட்டுக்கிட்டு வெட்டெயாலெ வந்தே. இன்னு நல்லா விடியேலெ. மன்சூர்ரெ உம்மா முத்தத்திலெ நின்டுக்கிட்டு இரிந்தாகெ. அவகெடெ மொகெத்திலெ சரியானெ மனவருத்தம் தெரிஞ்சிச்சி. அவகெ பயந்து பீத்தும் இரிந்தாகெ. என்னெப் பாத்தரும் வெசெவெசெயா கேட்டாகெ.

"தம்பி, மன்சூர் எங்கெ பீத்திருப்பான்டு ஒனெக்கித் தெரியுமா தம்பி?"

அவகெடெ கொரெல் கம்மிப் பீத்திரிஞ்சிச்சி. எனெக்கி ஒன்னும் வெளெங்கேலெ. இந்தெ விடியக் காத்தாலெயொடெ அவெ எங்கெ பீத்திரிப்பா?

"இல்லியே. எனெக்கித் தெரியாரெ. ராவு வெள்ளெக்கண்ணிக் காக்காடெ குந்திலெ இரிந்து அவனுந்தா கரெச்சிக்கிட்டு இரிந்தா. அருக்குப் பொறவு ஒங்கெடெ ஊட்டெதானெ வந்தா."

"ஊட்டாந் தம்பி வந்தா. காத்தாலெயொடெ பாத்தா அவெனெக் காணேலெ. அரா ஒனெக்கிட்டெ என்னென்டாலுஞ் சொன்னானான்டு கேக்கத்தா வந்தே"

எனெக்கி இன்னுங் கொளொப்பமா பீத்தீரு. ராவு ஊட்டுலெ படுத்தவெனெ காத்தாலெயொடெ காணேலியா. எங்கெ பீத்திரிப்பா? நா கடுமெயா ரோசிச்சே. அப்பெ குஞ்சாத்தா மன்சூர்ரெ உம்மாக்கிட்டெ சொன்னா.

"இஞ்செ பாருங்கெ ராத்தா. ஒங்களுக்கு மூசினெத் தெரியுந்தானே. அவெனுக்கு இரெல்லா வெளெங்காரு. நீங்கெ வேறெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கிட்டயாவரு பீத்து கேட்டுப் பாருங்கனே"

மன்சூர்ரெ உம்மா தலெயெ ஆட்டிக்கிட்டு திரும்பிப் போறாகெ. போவெக்குள்ளெ முந்திச் சீலெயாலெ கண்ணெத் தொடெக்கிறது எனெக்கித் தெரீரு. அவகெ கத்திறமாரி இரிக்கி. எங்கெ பீத்தா இந்தெக் கூளெ மன்சூர்? எனெக்கிக் கோவெந்தா வருரு. பாவம், மன்சூர்ரெ உம்மா. அவகெ நல்லெ ஒரெபுடியான ஆள். அவகெ மெல்லவாவெல்லா நடெக்கெ மாட்டாகெ. அவகெ நடந்து வந்தாகென்டா வாறெ சத்தம் எல்லாருக்குங் கேக்கும். அம்புட்டு ஒரெமா, திடுக்குதிடுக்கென்டு நடெப்பாகெ. இப்பெ என்னென்டா தலெயெக் கவுந்துக்கிட்டு, அசெந்து பீத்து, மெல்லெவா மெல்லெவா போறாகெ.

இனி இருக்குப் பொறவு படுக்கேலா. ஒள்ளுப்ப நேரம் குந்திலெ குந்திக்கிட்டு இருந்தே. பொறவு மொகெங் கழுவிப்புட்டு, தேத்தண்ணியொடெ பாணெத் தொட்டுத் தின்டுப்புட்டு கண்ணாடிக்கு முன்னாலெ பீத்து நின்டெ. அரெ மணித்தியாலமா மெனெக்கெட்டு ஒருமாரி தலெயெ வாந்து முடிச்செ. புருச் சட்டெயெ போட்டு, சாறனெயு உடுத்தினே. இனிமெ சல்மாவெப் பாக்கெப் போவணு. அரெ நெனெச்சாலே நெஞ்சி துடிச்சிர்ரு. அப்பரா மன்சூர் இல்லாமெ தனியாப் போவணுமே என்டெ நெனெப்பு வந்திச்சி. இம்புட்டு நாளா சல்மாவெ பாக்கெ, மன்சூர் இல்லாமெ போனரில்லெ. இன்டெக்கித்தா அவெ இல்லாமெ தனியாப் போவெ வேண்டி இரிக்கி. நல்லெ காலம். வாப்பா இன்டெக்கி வயலுக்கு போவேல்லெ. அவெகெடெ சைக்கிள் ஊட்டுலெரா இரிந்திச்சி. அரெ எடுத்துக்கிட்டு வெளிக்கிட்டே. தனியெ நடந்து போறத்தெ உடெ, சைக்கிள்லெ போனா தெம்பா இரிக்கிம். அரோடெ சுருக்கனாவும் பீத்திடெலாம். என்டாலும் மன்சூர் இல்லாமெ தனியெ போறெத்தெ நெனெச்சா வெக்கெமாத்தா இரிக்கி.

சல்மாடெ ஊடு இரிக்கிறெ ரோட்டுக்கு வந்திட்டே. தூரத்திலெ வெச்சி தலெயெ நிமித்திப் பாத்தே. அவவெக் காணேலெ. வழக்கமா அவ இந்தெ நேரெத்திலெ ஊட்டு வாசெலெ கூட்டிக்கிட்டு நிப்பா. இப்பெ காணேலெ. ஆனா அவடெ ஊட்டு வாசல்லெ நாலஞ்சி ஆக்கள் நின்டு கரெச்சிக்கிட்டு இரிந்தாகெ. அரிலெ சல்மாடெ மாமா சீனிமம்மரும் இரிந்தா. அவனெ பாத்தாலே எனெக்கிப் பயம். பெரியெ மீசெ வெச்சிக்கிட்டு சரியானெ ஒசெரமா இரிப்பா. அவென்டெ கண் எப்பவு கோவம் பழம்மாரி செவெந்து பீத்துத்தா இரிக்கிம். இப்பெ அவெ சாரனெ மடிச்சிக்கட்டிக்கிட்டு இரிந்தா. கையெ ஆட்டி, ஆட்டி சத்தம் போட்டு கரெச்சிக்கிட்டு இரிந்தா. நா ஒருமாரி பயந்து பயந்து சல்மாடெ ஊட்டுக்கிட்டெ பீத்தே. அப்பரா சீனிமம்மரு என்னெப் பாத்தா. பாத்தரு அவெ கோவெமா எனெக்கிட்டெ ஓடி வந்தா.

"எங்கெடா அந்தெ மன்சூர்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திக்கிட்டு என்டெ சைக்கிளெப் புடிச்சித் தள்ளி உட்டா. நா அப்பிடியே தள்ளம்பாறிக்கிட்டு பீத்து, காணுக்குள்ளெ உழுந்திட்டே. அவெ காலெ ஓசெத்திக்கிட்டு என்னெ ஒதெக்கெ வந்தா. அருக்குள்ளெ சல்மாடெ வாப்பா வந்து அவெனெ புடிச்சிக்கிட்டாரு.

"டேய். இவெனெ ஏன்டா போட்டு அடிக்கிறா? இவெ ஒரு அப்பிராணி. இவெனுக்கு என்னடா வெளெங்கு?"

"இல்லெ மச்சா. இவெனு அந்தெ ஒஸ்தாடெ நாயுந்தா ஒரு நாளெக்கி பத்துத் தரக்கம் இந்தெ ரோட்டாலெ வந்து போறெ. இவெனுக்கு எல்லாந் தெரிஞ்சிருக்கு."

"போடா இவெனுக்கு என்னடா தெரியு? நம்மடெ புள்ளெ செஞ்சிரிக்கிறெ வேலெக்கி, இவெனெ போட்டு அடிச்சி என்ன செய்யிறெ?"

"டேய், முண்டெ. எங்கெடெ புள்ளெக்கி என்னென்டாலு நடந்திச்சென்டாக்கா, ஒங்கெ ரெண்டு பேரெயு கொன்டு போட்ருவே. அந்த நாயெ புடிச்சனென்டா கோழியிரெ செறெவெ பிக்கிரெமாரி, அவென்டெ கை, காலெயெல்லா பிச்சி எடுத்துப்புடுவே."

சீனி மம்மரு கத்திக்கிட்டே போனா. எனெக்கி கை, காலெல்லாம் நடுங்கி, ஒடெம்பு முத்துலா வேத்தும் பீத்திரு. அவெ சொன்னரு ஒன்னுமெ எனெக்கி வெளெங்கேலெ. காத்தாலெயொடெ மன்சூர்ரெ உம்மா வந்து அவெனெக் கண்டியா என்டு எனெக்கிட்டெ கேட்டாகெ. இப்பெ என்னடான்டா இந்தெ சீனி மம்மரு, மன்சூர் எங்கயென்டு கேக்கிறா. ஏ ரெண்டு பேரு மன்சூரெக் கேக்கிறாகெ?! எனெக்கி எல்லாந் தெரியுமென்டு சீனி மம்மரு சொன்னானே. எனெக்கி என்ன தெரியு. மன்சூரொடெ சேந்தத்தாலெ இப்பெ எனெக்கிமுள்ளவா பெரெச்சினெயா பீத்திரு. அவெ என்னத்தெச் செஞ்சி தொலெச்சானோ தெரியேலெ.

புருச் சாறென்லெ காண் தண்ணி பட்டுட்டு. சட்டெயிலயும் புழுதியெல்லா அப்பியிரிக்கி. கீழெ கெடெந்தெ சைக்கிளெ எடுத்துக்கிட்டு வந்தெ வழியாலெ போவெத் திரும்பினே. இம்புட்டுக்குஞ் சல்மா எட்டிக்குடிப் பாக்கேலெ. அரா எனெக்கிப் பெரியெ மனவருத்தமா இரிக்கி. இந்தெ ரெண்டு மூனு மாசத்திலெ அவ இன்டெக்கித்தா என்னெப் பாக்கெ வாசல்லெ நிக்கேலெ. அவ ஏ இன்டெக்கி என்னெப் பாக்கெ வாசல்லெ நிக்கேலெ? எனெக்கென்டா ஒன்னும் வெளெங்கேலெ.

◂ ஏப்ரல் 2008.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெண்டு தெசெ

நிலாம் சேர் கோப்பெயெல்லாத்தையும் கழுவி வெச்சிட்டாரு. புள்ளெயொள் ரெண்டு பேரும் டீ.வி. பாத்துக்கிட்டு இரிந்தாணொளு. அவெர்டெ பொஞ்சாதி இப்பதா குளிசெ போட்டு தண்ணியு குடிச்சிப்புட்டு இரிக்கா. கொஞ்செ நாளா அவக்கு ஒடெம்பு நல்லா இல்லெ. இடுப்புலெ நோக்காடு. ராவுலெ சித்தாலேபெ போட்டு நல்லாத் தேச்சாத்தா சொஞ்சம் படுப்பா. அவக்கு டீ.வி. பாக்கிறத்திலெ அவ்வளவு விருப்பமில்லெ. எப்பவாவது ஒரு தரம் அவக்கு புடிச்செ ஆக்கெள் நடிச்செ படமெண்டா இல்லாட்டி நல்ல படமெண்டு யாராவது சொன்னா பாப்பா. ஆனா புள்ளெயொள் அப்பிடியில்லெ. அவனொளு ரெண்டு பேரும் வாப்பா மாதிரி. என்னெ படமெண்டாலும் பாப்பானொளு. அதுவுஞ் சண்டெப் படம் இல்லாட்டி ஆங்கிலப் படமெண்டா நல்ல விருப்பம். அதோடெ நாடகம், கார்ட்டூன் எண்டு எல்லாத்தெயு பாக்கிறதா. இப்பெ கேபிள் சனல் வந்ததுக்குப் பொறவு எதெத் தொறெந்தாலும் எதெண்டாலும் இருந்திக்கிட்டே இரிக்கி. என்னெ நிகழ்சியெண்டாலும் பின்னேரெம் ஆறு மணியிலெ இரிந்து ராவு எட்டு மணி வரெக்கும் டீ.வியைத் தொறெக்கிரேல்லெ. அந்தெ நேரத்திலெ படிப்புத்தா. அந்தெ நேரெத்திலெ நிலாம் சேரும் பாக்கெ மாட்டாரு. புள்ளெயொளொடெ இரிந்து, தெரியாதத்தெ சொல்லிக் குடுப்பாரு, இல்லாட்டி வெளெங்காதது இரிந்தா வெளெங்கப்படுத்துவாரு. இல்லாட்டி ஸ்கூல் வேலெயிருந்தா செய்வாரு.

நிலாம் சேர் ஊட்டு வேலெயெல்லாஞ் செய்யிறெது அவெர்டெ ஊட்டாக்களுக்கு அவ்வளவு விருப்பமில்லெ. அவெர்ரெ உம்மா எப்பவுஞ் சொல்லிக்கிட்டே இரிப்பாகெ.

"தம்பி. ஆம்புளெப் புள்ளேலு இப்பிடி ஊட்டு வேலெயெல்லாஞ் செய்யப்படாரு. ஊருலெ ஒத்தரு ஒன்னெ மரிக்கெ மாட்டாகெ."

ஆனா அவரு உறுதியாச் சொல்லிட்டாரு.

"இஞ்செ பாருங்கம்மா. ஒங்கெடெ காலம் வேறெ. எங்கெடெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் வேறெ. நீங்கெ வேலெக்கெல்லாம் போவேலெ. நம்மெடெ ஊட்டுலெ முந்தி உம்மம்மா, கன்னா, சின்னம்மா எல்லாரும் இரிந்தாகெ. அதாலெ ஓங்களுக்கு நல்லெ ஒதெவியா இரிந்திச்சி. ஆனா நாங்கெ அப்பிடியில்லெ. நாங்கெ தனியத்தா இரிக்கோ. நீங்களு எங்களொடெ வந்து இரிக்கெ மாட்டேங்கிறிங்கெ. அவெடெ உம்மாவு வரெ மாட்டேங்கிறாங்கெ. அப்பெ நாங்கெ என்னெ செய்யிறெ? அவெவு என்னெமாரித்தானே வேலெக்குப் போறா. நானென்டாலும் ரெண்டு மணிக்கெல்லா ஊட்டுக்கு வந்திர்ரே. அவ அஞ்சி மணிக்கிட்டெத்தானெ வாறா. அப்பெ ஊட்டு வேலெய்லெ நா அவக்கு கொஞ்சம் ஒதெவி செஞ்சா என்ன?"

ஆனா அவெர்ரெ உம்மாக்கு இதெல்லா மண்டெயிலெ ஏறாது. அடுத்தெ தரம் ஊருக்கு போனாலும், திருப்பியும் அவர் ஊட்டு வேலெ செய்றத்தெப் பத்தித்தா கதெப்பாகெ. பொறவு அவரு ஒன்னும் உம்மாவொடெ இதெப் பத்திக் கதெக்கிறேல்லெ.

ஒவ்வொரு தரமும் ஊருக்கு போய் வந்ததுக்குப் பொறவு நிலர் சேர்ரெ பொஞ்சாதி சொல்லுவா.

"நீங்க உங்கடெ வீட்டெ போனா சரியா அந்தெ ஊராக்கள் மாதிரியே கதெக்கிறீங்கெ"

ஒரு கிராமத்திலெ பொறெந்து வளெந்தெ நிலாம் சேர், நகரத்திலெ தமிழாக்களொடெ கூடுதலாப் பழகினெ ஒரு பொம்புளெயெ கலியாணம் முடிக்கிறெ நெலெமெ வந்திட்டு. ஆரம்பத்திலெ அவெங்கெ ரெண்டு பேர்ரெ பாசெ வித்தியாசம் ஒரு பெரிய பிரச்சினையா இரிந்திச்சி. அவெரு கதெக்கிறெ மொறெ அவக்கு ஒரு மாதிரியா இரிந்திச்சி. அதுவும் அவெரு அவடெ கூட்டாளிமாரொடெ கதெக்கிறெதெப் பாத்து அவக்கு வெக்கமாவும் இரிந்திச்சி. அதாலெ ரெண்டு மூனு தரம் அவங்களுக்குள்ளெ பிரெச்சினெயும் வந்திட்டு, பொறெவு போகெப் போகெ ஓரளவுக்கு அவெரு தன்டெ கதெயெ மாத்திக்கிட்டாரு. அவங்கெடெ புள்ளெயொளுக்கு பிரெச்சினெ இல்லெ. பொறெந்தத்திலெ இரிந்து இங்கெயே வளெந்து வந்தத்ததாலெ அவனொளு உம்மாமாரியே கதெக்கெப் பழகிட்டானொளு. அவெரு 'ஊடு', 'தோக்கு', 'கோப்பெ' என்டெல்லா சொல்றெத்தெக் கேட்டா செலெ நேரெத்திலெ சிரிப்பானொளு.

அவக்குப் பாவம். இந்தெ புள்ளெயொளெ வளெக்கெ அவ பட்டபாடு. பொறெந்தத்திலெ இருந்தே ரெண்டு பேராலயும் பெரியெ கனகாட்டுத்தா. ரெண்டு பேருமே ராவேலெ நித்திரெ கொள்றதில்லெ. விடியவிடிய முழிச்சிக்கிட்டே இரிக்கணு. அதெப் பாத்துப்புட்டு நிலாம்டெ உம்மா சொன்னாகெ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி பொறெந்தெ புள்ளெயொளு இப்பிடித்தா தம்பி. நெத்திரெ கொள்ளாரொளு. நாப்பது போனா சரியாப் பீத்திடு."

நாப்பது வந்ததுக்குப் பொறவும் அவனொளுக்கு நெத்திரெ வரேலெ. அவடெ உம்மா சொன்னாகெ.

"நாலு மாசத்திலெ எல்லாஞ் சரியா வந்திடும்."

அப்பவும் அவெனொளுக்கு நெத்திரெ வரேலெ. இப்பிடியே ஒரு வரிசமும் போய், இப்பெ இந்தா மூத்தவெ ஏழாம் வகுப்பு படிக்கிறா, மத்தவெ நாலாம் வகுப்பு படிக்கிறா. இன்னும் அந்தெ ரெண்டு பேர்ரெ நெத்திரெப் பிரெச்சினெயும் தீரேலெ. ராப்பட்டா ரெண்டு பேருக்கும் நெத்திரெ வராது. கதிரெயிலெ குந்திக்கிட்டு, டீ.வி. பாப்பானொளு. இல்லாட்டி கொம்பியூட்டர்லெ கேம் விளெயாடுவானொளு. இல்லாட்டி என்னத்தையாவது கீறிக்கிட்டு இருப்பானொளு. அதாலெ நிலாம் சேருக்கும் அவெர்ரெ பொஞ்சாதிக்கும் படுக்கேலாது. அவனொளு படுக்கும் வரெக்கும் யாராவது ஒத்தர் முழிச்சிக்கிட்டு இருக்கணு. அவக்கு நெத்திரெ முழிக்கெ ஏலா. அதாலெ அவெருதா எதையாவது படிச்சிக்கிட்டு அவனொளொடெ முழிச்சிக்கிட்டு இரிப்பாரு. படுங்கடா என்டு அவெனொளுக்கிட்டெ சொல்லி என்ன செய்யிற? நெத்திரெ வந்ததாத்தானே படுப்பானொளு.

இப்பவும் அப்பிடித்தா ராச்சாப்பாடு முடிஞ்சி, கோப்பெயெல்லா கழுவிப்புட்டு நிலாம் சேர் இந்தா வந்து இரிக்காரு. ரெண்டு பேரும் 'கொட்ஸில்லா' கார்ட்டுன் பாக்கிறத்துக்காகக் காத்துக்கிட்டு இரிக்கானொளு. முந்தியே ரெண்டு மூணு தரம் 'கோட்ஸிலா' படமே பாத்திட்டானொளு. இப்பெ இந்த கார்ட்டுனெயு ஒவ்வொரு நாளும் பாக்கிறத்துக்கு இருக்கானொளு. அவெரு ஒரு புத்தகத்தெ எடுத்துக்கிட்டு கதிரெயிலெ இருந்தாரு.

"டேய். படுவா எப்பிடிடா இரிக்கா?"

வாசல் பக்கத்திலெ இரிந்து தெரிஞ்செ குரெலொன்டு கேட்டுது. எழும்பிப் போய் பாத்தாரு. முஜீத்.

"என்டல்லா! எவ்வளவு காலன்டா உன்னெப் பாத்து? வாடா. வா, வா! உள்ளெ வா"

தெகெப்புஞ் சந்தோசமும் நெஞ்செ நெறெக்கெ அவெனெ கூப்பிட்டாரு. அவெ அப்பிடியேதா இரிந்தா. கொஞ்சமும் மாறேலெ. அதே முஸ்பாத்தி, சிரிப்பு, பகிடி என்டு கொஞ்செ நேரெத்துக்கு அந்தெ ஊட்டெ ஆட்டி எடுத்துப்புட்டா. படுக்கப் போனெ அவவு எழும்பி வந்திட்டா. அவ இன்டெக்கித்தா முஜீத்தெ பாக்கிறா. கனெகாலத்தக்கு முந்தி ஊரெ உட்டுப் போனெவெ இப்பதா வந்திக்கா.

"டேய், நீ இங்கெதா கலியாணம் முடிச்சிக்கிட்டு இரிக்கான்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றபீக்தா சொன்னா. இப்பெ அவென்டெ ஊட்லதா நிக்கிறே. இஞ்செ எனெக்கி ஒரு வேலெ இரிக்கி. அதெ முடிக்கணு."

"ஏன்டா அவெனெயு கூட்டி வந்திரிக்கலாந்தானே."

"இல்லெ. அவெ ஒரு கலியாணெ ஊட்டுக்கு போறா. அதா நா வந்திட்டே."

"எத்தினெ நாளெக்கிடா நிப்பா?"

"என்டெ வேலெ முடியெ ரெண்டு நாளாப் போவும். அதுமட்டு இங்கெதா நிப்பே."

"அப்பெ நாளெக்கி சாப்பாட்டுக்கு வாடா."

"நாளெக்கி வரேலா மச்சா. நாளண்டக்கி வேணுமென்டா ராச்சாப்பாட்டுக்கு வாறே"

ஒரு அரெ மணித்தியாலத்திக்கிட்டெ அவெ அவெரொடெ கதெச்சிக்கிட்டு இரிந்தா. முஜீப் போவெக்குள்ளெ வாசல் வரெக்கும் அவெர் கூடெப் போனாரு. அவெ ஒரு மோட்டெ சைக்கிள்லெ வந்திரிந்தா. சைக்கிள்லெ ஏறி ஸ்டாட் எடுக்கிறத்துக்கு முந்தி முஜீப் சொன்னா.

"மச்சா, றஹிமா, அதா முந்தி ரீ.சி.யிலெ வேலெ செஞ்செ மன்சூர் ஓவிசியர்ரெ மகெள். அவெ என்னொடெதான்டா வேலெ செய்யிறா. ஒன்னெக் கேட்டாடா"

அவெ போய்த்தா. அந்தெ எடம் மழெ பேஞ்சி உட்டெ எடெமாட்டம் அமெய்தியா இரிந்திச்சி. அவெரு கேட்டெப் பூட்டிப்புட்டு ஊட்டுக்குள்ளெ வந்தாரு. அவவும் வாசல்லதா நின்டா.

"ஒங்கெடெ கூட்டாளி எப்பிடியெல்லா ஜோக் அடிக்கிறாரு. முந்தி சின்னாக்களா இருக்கக்குள்ளெ எப்பிடியெல்லா கூத்தடிச்சிரிப்பீங்கெ?"

எல்லாரும் படுத்திட்டாகெ. அவ படுத்தொடெனெ நெத்திரெ கொன்டுடுவா. புள்ளெயொளும் படுத்திட்டொளு. அவெருக்கு நித்திரெ வரேலெ. எவ்வளவு காலம் போய்த்துது. அவெரே எல்லாத்தெயும் மறந்திட்டாரு. ஆனா அவ இப்பவும் அவெரெ ஞாபகம் வெச்சிரிக்கா. அதெ நெனெக்கெ அவெர்டெ ஒடம்பு ஒரு தரம் அதிர்ந்து, குளுந்து போய்த்துது. றஹிமா! அவவெ கொஞ்சங் கொஞ்சமா தன்டெ நெனெவுக்கு கொண்டு வரெப் பாக்கிறாரு. கஸ்டமா இரிந்திச்சி. எதுவுந் தெளிவாத் தெரியேலெ. கிட்டத்தட்ட முப்பது வரிசம் இரிக்கும். அப்பெ நிலாம் ஏ.எல். எடுத்துப்புட்டு இரிந்த நேரெம். எங்கெயோ அவெ ஒரு நாளும் கேள்விப்படாதெ ஒரு ஊரிலெ இரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் குடும்பம் வந்துது. நிலாம்டெ ஊட்டுக்கு கொஞ்சந் தள்ளி இருந்தெ ஊட்டுக்குத்தா அவெகெ வாடெகெக்கு வந்தாகெ.

அவெகெ வந்து ரெண்டு மூனு நாள் இரிக்கிம். பின்னேரெம் தேத்தண்ணி குடிக்கெ நிலாம் ஊட்டுக்கு போனா. அவ அவெகடெ ஊட்டு உஞ்சில்லெ ஆடிக்கிட்டு இரிந்தா. அவெனெக் கண்டதும், அவ எழும்பியெல்லாம் போகேலெ. ஒருதரம் ஆர்ரெத்தெ நிப்பாட்டிபொட்டு, யாரெண்டமாதிரி அவெனெப் பாத்தா. பொறவு தன்டெ பாட்டுக்கு அவ திரும்பவும் ஆடெத் தொவெங்கிட்டா.

"யாரும்மா இது?"

குசினிக்குள்ளெ தேத்தண்ணி குடிச்சிக்கிட்டு இரிக்கக்குள்ளெ உம்மாக்கிட்டெக் கேட்டா.

"நம்மெடெ ராசாத்தம்பி நானாடெ ஊட்டுக்கு புருசா குடி வந்திக்காகளெ. அவெகெடெ மகள். நம்மெடெ எளெயெ பொட்டெயொடெதா படிக்கிறா"

அதுக்குப் பொறெவு அவ ஒவ்வொரு நாளும் நிலாம்டெ ஊட்டுக்கு வந்தா. அவென்டெ தங்கெச்சியு அவவு நல்ல கூட்டாளியா போய்த்தாங்கெ. அவெகெடெ ஊட்டெ வந்தா அவக்கு உஞ்சில் ஆர்ரெதா வேலெ. ஒரு நாள் அவ உஞ்சில் ஆடிக்கிட்டு இரிக்கக்குள்ளெ நிலாம் அதாலெ போனா. அவெ மட்டுந்தா இரிந்தா. தங்கெச்சியெ காணேலெ.

"எந்தென் தாரொடெயு பேஷியெ இல்லெ போலெ?"

நிலாம் திரும்பிப் பாத்தா. அவ அவெனுக்கிட்டெத்தா சொன்னா. அவெ தெகெச்சிப் பீத்தா. ஒடெம்பு நடுங்கிறெமாரி இரிந்திச்சி. வெக்கமாவும் இரிந்திச்சி. ஒன்னும் பேசாமெ அவெ பீத்தா. பொறவு அவென்டெ கூட்டளிமாரொடெ கதெச்சிக்கிட்டு இரிக்கெக்குள்ளெயு அவெ கேட்டதுதா ஞாபகம் வந்திக்கிட்டு இரிந்திச்சி.

'என்னெ பொட்டடா இது? இவ்வளவு துணிச்சலா என்னொடெ கதெக்கிது?'

அன்டெக்கி அவெனுக்கு மத்தாக்கள்றெ கதெயிலெ கவனம் போகேலெ. அதுக்குப் பொறவும் அவெ அவெகெடெ ஊட்டுக்கு ஒவ்வொரு நாளும் வருவா. உஞ்சில் ஆடுவா. ஊட்டாக்களொடெ சிரிச்சிக் கதெச்சிகிகிட்டு இரிப்பா. நிலாமெப் பாத்துஞ் சிரிப்பா. இப்பிடியே இரிக்கக்குள்ளதா ஒரு நோன்புப் பெருநாளெக்கி அவக்கு நிலாம் ஒரு வாழ்த்து அனுப்புனா. அவனே கீறி, வாழ்த்தும் எழுதி அனுப்பினா. பெருநாள் அன்டு பின்னேரம் அவ அவெகெடெ ஊட்டுக்கு வந்திருந்தா. அப்பெ அவெனுக்கிட்டெ சொன்னா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காட் கெடெச்சியெ. நல்லெ பசுந்து. தேங்க்ஸ்"

ஒரு வரிசத்துக்கிட்டத்தா அவெகெ அந்தெ ஊரிலெ இரிந்தாகெ. அந்தெ ஒரு வரிசத்திலெ நிலாமும், றஹிமாவும் அஞ்சாறு தரந்தா கதெச்சிரிப்பாகெ. அதுவும் அவதா கதெப்பா. அவெ சும்மா தலெயெ ஆட்டுவா. இல்லாட்டி ரெண்டு மூனு சொல்லெச் சொல்லுவா. அவ்வளுவுதா. அதுக்குப் பொறவு அவடெ வாப்பாக்கு மாத்தங் கெடெச்சி வேறெ எடெத்துக்குப் பீத்தாகெ. போவெக்குள்ளெ எல்லாருக்கிட்டெயுஞ் சொல்றெமாதிரி அவெனுக்கிட்டெயும் சொல்லிப்புட்டுப் போனா. அவெ போனத்துக்குப் பொறவு மொதெல்லெ கொஞ்செ நாளா அவெனுக்குக் கஸ்டமா இரிந்திச்சி. பொறவு எல்லாம் மறந்து, அவென்டெ மூளெயிலெ இரிந்து அவெடெ நெனெவுத் தடம் முழிசா அழிஞ்சி பீத்துது. இப்பெ முஜீப் வந்து சொன்னத்துக்குப் பொறவுதா அவெடெ ஞாபகமெ வந்திரிக்கி.

காலம்பொறெயிலெ நேரெஞ் சென்டுதா நிலாம் சேர் எழும்பினாரு. கண் எரிஞ்சிக்கிட்டு இரிந்திச்சி. ஸ்கூலுக்கு இன்டெக்கி பிந்தித்தா போப்போவுது. அவசரமா வெளிக்கிடெத் தொவெங்கினாரு. ஆனா சாதாரணமா வெளிக்கிர்றத்தப் பாக்கெ இன்டெக்கி அவசரமா வெளிக்கிட்டும் நேரெங் கூடெப் போறெமாரி இரிந்திச்சி. எல்லாம் மறந்து பீத்திது. எதெ எங்கெ வெச்சேன்டு தெரியேலெ. கோபத்திலெ சத்தம் போடெத் தொவெங்கினாரு. புள்ளெயொளெ வெளிக்கிடுத்திக்கிட்டு இரிந்தெ அவ ஓடி வந்தா.

"என்னெ? என்னெ வேணு?"

"ம். மசிரு. வெச்செ எடெத்திலெ ஏதாவது இரிக்கா. ஒவ்வொரு நாளுந் இப்பிடித்தா"

அவ தெகெச்சி போய்த்தா. அவெரு எதுக்கு கோவிக்கிறாரென்டு அவக்குத் வெளெங்கேலெ.

"இல்லெ. எதெக் காணேலெ?"

அவ தயக்கமா கேட்டா.

"மணிக்கூடு எங்கெ போய்த்திது? இந்தெ மேசெயிலெதானெ வெச்சே?"

அவெ ஒன்னுஞ் சொல்லாமெ ஒரு கொப்பியெ தூக்கிப் பாத்தா. அதுக்குக் கீழெ மணிக்கூடு.

"டேய்! கெதியா வாங்கெடா"

ரெண்டு பேரும் பயந்து போய், பேக்கெயுந் தூக்கிக்கிட்டு வந்தானொளு.

"சனியென். இன்டெக்கென்டு இந்தெ சைக்கிளும் ஸ்டார்ட் வருதில்லெ."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முணுமுணுத்துக்கிட்டு ஓங்கி அடிச்சாரு. ஸ்டார்ட் வந்திட்டு.

"வாரே"

திரும்பிப் பாக்காமலெயெ அவக்கிட்டு சொல்லிப்புட்டு வெளிக்கிட்டிட்டாரு.

• • •

மொதெல் பாடம் முடிஞ்சி, டாப் மாக் பண்ணக்குள்ளெ மூனு எடெத்திலெ பொழெயா மாக் பண்ணிட்டாரு. பிளேட் கேட்டு, அந்தெ வகுப்பிலெ அது இல்லாமெ, மத்தெ வகுப்புக்கு அனுப்பி வாங்கி, திருத்தி மாக் பண்ணி முடியெ, கோபம் ஒடெம்பெ நெறெச்சி இரிந்திச்சி. ரெண்டாம் பாடம் ப்ரீ. நல்லதாப் பீத்துது. லைப்ரரிக்குள்ளெ போய் இரிந்தாரு. மனசு எதிலெயு ஒட்டாதெ மாதிரி இரிந்திச்சி. மனசுக்குள்ளெ ஒரேயொரு கேள்விதா கொடெஞ்சிக்கிட்டு இரிந்திச்சி.

'இவ்வளவு காலத்துக்குப் பொறவு, அவ ஏன் என்னெ விசாரிக்கணும்?'

பேப்பரெ எடுத்துப் பாத்தாரு. பாக்கிறமாதிரி மனமில்லெ.

'இப்பவும் அவ என்னெ ஞாபகம் வெச்சிரிக்காவெண்டா அதுக்கு ஏதாவது காரணம் இரிக்கணும். என்னெ காரணமா இரிக்கும்? அவக்கு என்னிலெ விருப்பமா? அதுதா இவ்வளவு காலத்துக்குப் பொறவும் என்னெ நெனெச்சிப் பாத்திருக்கணு. இல்லெ அப்பிடி இரிக்காது. அவ சும்மதா விசாரிச்சிரிக்கா'

'என்ன சேர் கடும் யோசனையா இருக்கிறீங்க'

மல்லிகா ரீச்சர் கேட்டா. அவெ லெப்பரரிக்குள்ளெ வந்ததுகூட அவெருக்குத் தெரியேலெ.

'இல்லே. இரவு கொஞ்சம் நித்திரெ வரேலெ. அதுதா.'

மூனாம் பாடத்துக்கு பெல் அடிச்சிட்டு. அந்தெ பத்தாம் வகுப்புக்குப் படிச்சிக் குடுத்துக்கிட்டு இரிக்கக்குள்ளதா அந்தெ பொம்புளெ புள்ளெயெ பாத்தாரு. அவக்கு கனகாலமா படிப்பிக்கிறாருதா. ஆனா இன்டெக்கி அவ அவெருக்கு கொஞ்சம் வித்தியாசமா தெரிஞ்சா.

'இப்பிடித்தா முந்தி றஹிமாவும் இருந்தா. இந்தெப் புள்ளெக்கி மாதிரித்தா அவெக்குஞ் சிரிக்கக்குள்ளெ சொக்கிலெ குழி உழும். மூக்கும் இவக்கு மாதிரித்தா. தலெ முடியும் இப்பிடித்தா. நல்லெ சுருட்டெ முடி. நெறெந்தா வேறெ. அவெ நல்லெ வெள்ளெ."

"சேர்! நீங்க 'கோடினேஷெனெ' பிழையா எழுதியிருக்கீங்க சேர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கூல் முடிஞ்சி ஊட்டுக்கு வந்து, சாப்பிட்டதும் படுத்திட்டாரு. நெத்திரெ வரேலெ.

"ஏன் றஹிமா என்னெ விசாரிச்சா?"

காரணம் புடிபடேலெ.

"ஒருவேளெ அவெடெ குடும்ப வாழ்க்கெ நிம்மதியாயில்லியோ? என்னெப்போலெ ஒராளொடெ வாழ்ந்தா நல்லாயிருந்திருக்குமே என்டதாலெ என்னெப் பத்தினெ நெனெப்பு வந்திருக்குமோ?"

அன்டு ராவு அவெரு புள்ளேலுக்கு படிப்பிக்கேலெ. அவெர்ரெ நெலெமெயெப் பாத்து அவெங்களும் அவெருக்கிட்டெ வரேலெ.

"ஏன் ஒருமாதிரி இருக்கிறீங்க?"

அவதா தயங்கித் தயங்கிக் கேட்டா.

"ஒண்ணுமில்லெ. தலெயிடிக்கிறாப்பலெ இருக்குது"

அன்டெக்கி ராவு நிலாம் சேர் கோப்பெ, பீங்கானெ கழுவேலெ. டீவியை சும்மா வெறிச்சிப் பாத்துக்கிட்டு இரிக்கக்குள்ளெ, குசினிக்குள்ளெ அவ கோப்பெ, பீங்கான் கழுவுறெ சத்தம் கேட்டிச்சி.

அடுத்த நாள் சொன்னமாதிரியே முஜீப் சாப்பாட்டுக்கு வந்திட்டா. கனெநேரமா ரெண்டு பேருஞ் சிரிச்சிக் கதெச்சிக்கிட்டு இரிந்தாகெ. நிலாம் சேர்ரெ மனுசி வந்து அவனெ வரவேத்தா. அதுக்குப் பொறவு அவ பெரிசா ஒன்னுங் கதெக்கேலெ. குசினிக்குள்ளெ சமெயல் வேலெயிலெ எறெங்கிட்டா. கிட்டத்தட்ட முப்பது வரிசத்துக்கு முந்தினெ அவெகெடெ ஊர், இப்பெ அந்தெ ஊட்டுக்குள்ளெ வந்து குடியேறினெமாதிரி இரிந்திச்சி. நிகழ்காலம் முழிசா மறெஞ்சி போய்த்துது. மனசு இளெமைக்காலெ நினெவுகளாலெ நெறெஞ்சி, துடிச்சிக்கிட்டு இரிந்திச்சி.

அவெ நல்லா சாப்பிட்டா. புட்டு, வெள்ளெக் கறி, முட்டெப் பொரியல், தயிர் என்டு அவெர்ரெ மனுசி ஸ்பெசலா செய்திருந்தா. சாப்பிட்டுப்புட்டு அவெ மோட்டெ சைக்கிள்லெ ஏறெக்குள்ளெ நிலாம் சேர் ஒரு பேப்பர் துண்டெ அவனுக்கிட்டெ குடுத்தாரு.

"மச்சா. இதிலெ என்டெ மொபைல் நம்பெர் இருக்கு. தேவெயென்டா போன் பண்ணு. மத்தது ஏலுமென்டா இந்தெ நம்பெரெ றஹிமாக்கிட்டெயுங் குடே"

அவெ நிமிந்து என்னெப் பாத்தா. பொறவு கொடுப்புக்குள்ளாலெ சிரிச்சா.

"டே.....ய் என்னெ பழெயெ நெனெப்பு வந்திட்டா? சரி குடுக்கிறே"

அவெ பீத்தா.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றஹீமா வூட்டுக்கு முன்னாலெ இரிந்தெ ஜேம் மரத்துக்குப் பணியெ இரிந்தா. அவெடெ மூத்தெ பொடியென் டியூசனுக்குப் பேய்த்தெ. அவென் இப்பெ ஏ.எல். படிக்கியெ. இந்தெ வரிசம் சோதினெ எடுக்கியெ. மத்தது பொம்புளெ புள்ளெ. ஓ.எல். படிக்கியெ. கடேசிப் புள்ளெயும் பொம்புளெப் புள்ளதா. ஆறாம் வகுப்பு படிக்கியெ. அவெடெ மாப்புளெ பூக்கண்டுக்கு தண்ணி ஊத்திட்டு வந்து, அவக்கு முன்னாலெ இரிந்தெ கதிரெயிலெ இரிந்தாரு. அவெரு நல்ல ஒசெரெமா. அந்தெ வயசிலயு பொடியென் மாதிரியே இருந்தாரு. றஹிமா அவெரெ பாத்துச் சொன்னா.

"இஞ்செ நா முந்தி சென்னதானே. நாங்க பெமிலியா மூதூர்லெ கொஞ்ச காலம் பேய்த்து இருந்தேண்டு. அஹினெ ஈக்கக்குள்ளெ எங்கெடெ ஊட்டுக்குப் பொறெத்தாலெ நிலாமென்டொரு போய் ஈந்தெ. அவெர் சரீ நல்லெ போய். பொம்புளெயெ நிமிந்து பாக்கவே மாட்டெ. அவெர்டெ தங்கச்சியொடெ நா நல்லெ கூட்டாளியா ஈந்தெ. பொறவு ஒரு கனெக்ஷனுமில்லெ. இப்பெ அவெங்கெடெ ஊரெச் சேர்ந்த ஒத்தர் என்னொடெ வேலெ செய்யிறெ. அவெர் அந்தெ நிலாமிடெ டெலிபோன் நம்பரெத் தந்தீக்கியெ. அவருக்கு போன் பண்ணி பாக்கோ? மிச்சம் காலம் பேய்த்து. அவெங்கெடெ ஊரிலெ சுனாமி வந்தெ, பொறவு கொட்டி அவெகளையெல்லா ஊராலெ தொரத்தியெ. இப்பெ எப்பிடி ஈக்கியோ தெரியா. பேசிப் பாக்கோ"

றஹிமா மூச்சி உடாமெ சொல்லி முடிச்சிட்டா. அவடெ மாப்புளெ தலெயெ ஆட்டி மெல்லெவாச் சிரிச்சாரு. பொறவு சொன்னாரு.

"என்னெ, அந்தெ நாள் ஞாபகம் வந்தோ?"

"அப்பிடியெல்லாமில்லப்பா. பாவெந்தானே."

"இதுக்கெல்லா எனெக்கிட்டெ கேக்கணுமோ? போன் பண்ணுங்கெ. ஏலுமெண்டா அவெரெ இஹினெ வரெச் செல்லுங்கோ. ஏதென் தேவெப்பட்டா ஹெல்ப் பண்ணுவோ"

றஹிமாடெ தலெயெ தடவித் தட்டிக்கிட்டு அவரு சென்னாரு. பொறவு எழும்பி ஊட்டுக்குள்ளெ போனாரு. றஹிமாவும் பின்னாலெ போனா. எல்லாருக்கும் டீ ஊத்தனும்.

◀ 2007

# மத்தம்மா

சின்னெ வயசிலெ இரிந்தே எனெக்கி மத்தம்மாவெத் தெரியும். அவெகெ எங்கெடெ ஊட்டுக்குப் பக்கத்திலதா இரிந்தாகெ. அதொடெ அவகெடெ பேரென் நாபிர் என்டெ கூட்டாளி. நாபிருக்குத்தா அவகெ மத்தம்மா. எனெக்கித் தெரியெ நாபிர் அவென்டா உம்மாக்கிட்டெ இரிந்தத்தெ நா ஒரு நாளுங் காணேலெ. எப்பெ பாத்தாலும் அவெ மத்தம்மாவொடெதா இரிப்பா. திங்கிறெண்டாலு, படுக்கிறெண்டாலு மத்தம்மாக்கிட்டெத்தா. அவெ பீ பேன்டா, தண்ணி ஊத்ரதும் மத்தம்மாதா.

காத்தாலெயொடெ இரிந்தே "மத்தம்மா!, மத்தம்மா!" என்டு நாபிர் கத்தெத் தொவெங்கிடுவா. ஒரு நிமிசம் மத்தம்மாவெக் காணாட்டிப் போதும், கத்தெப் புடிச்சிடுவா. அவென்டெ கத்துவெச் சத்தம் இந்தெ எளுகெயெல்லாங் கேக்கும். அது சும்மா கிம்மா கத்துவெ இல்லெ. ஓலெகெமெ பெரெண்டெமாரி அவெ கத்துவா. கத்திக்கிட்டு இங்ஙினெ இரிந்து அங்ஙினெ ஓடுவா, பொறவு அங்ஙினெ இரிந்து இங்ஙினெ ஓடுவா. கடெசியா கத்தி ஏலாமெ களெச்சிப் பீத்து, ரோட்டிலெ கெடெக்கிறெ குப்பெக்கு மேலெ உழுந்துடுவா. அப்பெதா மத்தம்மா வெத்திலெயெ துப்பிக்கிட்டு வருவாகெ.

> "பாரு பொட்டெ! இந்தெக் கொள்ளெயிலெ போயிருவா என்னெ ஒண்ணுஞ் செய்யெ உர்ரானில்லெ. இவெனாலெ கொளெத்தெக்குக்குடி பேவேலாமெ இரிக்கி."

மத்தமாவெக் கண்டது நாபிர் எழும்பிடுவா. முதுவுலெ ரெண்டு அடியெப் போட்டுப்புட்டு அவகெ திட்டுவாகெ.

> "தூமெச் சீலெயிரெ மவனே. செத்தெ சாமத்துக்கொண்டாலு என்னெ உட்டுப்புட்டு இரியன்டா."

ஆனா நாபிருக்கு அதெல்லா வெளெங்காது. அடியெ வாங்கிப்புட்டு, மத்தம்மாடெ கையெப் புடிச்சிக்குவா. இப்பிடிப்பட்டெ நாபிர் என்னொடெ மத்திரம் வெளெயாடெ வருவா. மத்தியானஞ் சோறு திண்டத்துக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறவு மத்தம்மா. அவகெடெ ஊட்டுத் திண்ணெயிலெ படுத்து நெத்திரெ கொன்றுவாகெ. அந்தெ நேரெத்திலெ யாரென் ாலு அவகெடெ நெத்திரெயெ கொளெப்பினா போதும், அம்புட்டுத்தா. கொன்டுபுடுவாகெ. அதாலெ அப்பெ மத்திரந்தா நாபிர் மத்தம்மாவெ உட்டுப்புட்டு என்னொடெ வெளெயாடெ வருவா. எங்கெடெ ஊட்டு முத்தத்திலெ ஒரு பெரியெ கொய்யா மரம் இரிந்திச்சி. சீனிக் கொய்யா. பின்னெரத்திலெ அந்தெ எடெத்திலெ நல்லெ எனெலா இரிக்கு. அதுக்குக் கீழெதா நாங்கெ வெளெயாடுவோ. மொதெல்லெ அலரிக் கொட்டெ அடிச்சி வெளெயாடுவோ. பொறவு சில்லுக்கோடு வெளெயாடுவோ. அதுக்குப்பொறவு மரத்திலெ ஏறி கொய்யாப் பளம் ஆஞ்சி திம்போ. அதுக்குப் பொறவு கடெ வெச்சி வெளெயாடுவோ.

ராப்பட்டா எல்லாம் மாறிப் பீத்திரு. இசாவுக்குப் பாங்கு சொல்லி, எல்லாரு ராச்சாப்பாடு தின்டத்துக்குப் பொறவு, அந்தெத் தெருவிலெ இரிக்கிறெ பொம்புளெயெல்லாம் எங்கெடெ குந்திலெ வந்து இரிந்திடுவாகெ. மத்தம்மாவு வெத்திலெயெச் சப்பிக்கிட்டு வந்திருவாகெ. நாபிர் அவகெடெ கையெப் புடிச்சிக்கிட்டு வருவா. அந்தெ நேரெத்திலெ மத்தம்மாதா பெரியாள். வேறெ யாரும் அப்பெ கனெக்கக் கதெக்கெ மாட்டாகெ. மத்தம்மாதா கொள்ளெயா கதெப்பாகெ. நா எங்கெடெ கன்னாக்குப் பக்கத்திலெயோ இல்லாட்டி உம்மாக்குப் பக்கத்திலெயோ இரிப்பே. செலெ நேரெத்திலெ அவெகடெ கதெ எனெக்கி வெளெங்காது. அப்பிடிப்பட்டெ நாளெயில்லெ செத்தெ சாமத்திலயெ நா யாராவது ஓராள்ரெ மடிக்குளெ நெத்திரெ கொன்ருவே.

ஆனா செலெ நேரெத்திலெ மத்தம்மா கதெ சொல்லத் தொவெங்கிடுவாகெ. அந்தெ நேரெத்திலெ நாங்கெ சின்னாக்கள் ஒத்தரும் நெத்திரெ கொள்ளெ மாட்டோ. கதெ முடியிரெ வரெக்கும் முழிச்சிரிந்து அதெக் கேட்டுக்கிட்டே இரிப்போ. இப்பிடித்தா ஒரு தரக்கம் அவகெ கதெ சொல்லெத் தொவெங்கினாகெ. அதுக்கு முந்தி யாரும் அப்பிடியாப்பட்டெ கதெ சொல்லேலெ. இம்புட்டுக் காலம் பீத்தும், எனெக்கி இப்பயும் அந்தெக் கதெ அப்பிடியே யாதிலெ இரிக்கி.

காணுக்குள்ளெ வெத்திலெயெ துப்பிப்புட்டு மத்தம்மா கதெ சொல்லெத் தொவெங்கினாகெ.

"ஒரு காட்டுக்குள்ளெ கனெக்கெ மான் இரிந்திச்சாம். அந்தெ மானெல்லாம் ஒரு பெரெச்சினெயுமில்லாமெ கனெகாலமா சந்தோசமா வாழ்ந்து வந்திச்சாம். அப்பிடி அதெல்லாம் சந்தோசமா வாழ்ந்துக்கிட்டு இரிக்கக்குள்ளெ ஒரு நாள் அந்தெக் காட்டுக்குள்ளெ நாலஞ்சி சிங்கம் வந்திச்சாம். அதுக்கு முந்தி அந்தெக் கா டிலெ சிங்கமே இரிக்கேலெ. சிங்கத்திரெ உருவெத்தெயும் சத்தத்தெயும் கேட்டு மானெல்லாம் பயந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீத்திது. அந்தெப் பயத்திலெ மானெல்லாம் அங்காலயும், இங்காலயும் ஓடெத் தொவெங்கிட்டு. வந்தெ சிங்கத்திலெ ஒரு பெரிய சிங்கம், ஒரு புத்துக்கு மேலெ ஏறி நின்டுக்கிட்டு சத்தம் போட்டுச் சொன்னிச்சி.

"நாந்தா இனி இந்தெக் காட்டுக்கு ராஜா"

மானெல்லாம் நல்லா பயந்து பீத்திது. அதிரெ ஈரக் கொலெயெல்லாங் காஞ்சி, நாக்கெல்லா வறண்டு பீத்திது. அதுக்கெல்லா என்ன செய்யிரென்டே வெளெங்கேலெ. எங்ஙினியோ இரிந்து வந்தெ சிங்கம் இப்பெ அந்தக் காட்டுக்கு ராஜாவாப் பீத்திது. ஒவ்வொரு நாளுஞ் சிங்கமெல்லா ஒன்னாச் சேந்து, ஒவ்வொரு மானாப் புடிச்சித் திங்கத் தொவெங்கிட்டு. ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா மானெல்லாம் அந்தக் காட்டெ உட்டு வேறெ காட்டுக்கு போவெத் தொவெங்கிட்டு. இப்பெ அந்தக் காட்டுக்குள்ளெ முந்திமாரி கனெக்கெ மான் இரிக்கேலெ. கொஞ்சத்தெ சிங்கம் படிச்சித் தின்டிட்டு. இன்னுங் கொஞ்சம் வேறெ காட்டுக்குப் பீத்திது.

இப்பிடியே காலம் பீத்துக்கிட்டு இரிந்திச்சி. அந்தக் காட்டிலெ வாழ்ந்தெ மானெல்லா, முந்திமாரி இப்பெ எல்லா எடமு ஓடித் திரியிறேல்லெ. காட்டுக்கு நடுவுலெ இரிந்தெ கொளெத்திலெ தண்ணியெக் குடிச்சி, அங்ஙின இரிந்த மரம், பத்தெயெத் தின்டு, வாழெத் தொவெங்கிட்டு. என்டாலு அதுக்கு முந்திமாரி சந்தோசமில்லெ. சிங்கம் வந்து தங்களெப் புடிச்சித் தின்டுடும் என்டெ பயம் அதுக்கெல்லா எப்பவும் இரிந்திக்கிட்டே இரிந்திச்சி. அதாலெ மேயிரத்துக்கு மானெல்லாம் கனெக்கத் தூரத்துக்கு போறெதேயில்லெ. பக்கத்திலெயே மேஞ்சி, தண்ணியெக் குடிச்சி வாழ்ந்து வந்திச்சி. அதாலெ அதுவளோடெ முந்தி ஒன்னா இரிந்து, இப்பெ வேறெ காட்டுக்கு போனெ மானயெல்லா அதுவொளுக்கு பாக்கேலாமெ பீத்திது. இப்பிடியே கனெகாலம் பீத்திது.

ஒருநாள், ஒரு மான் துள்ளிப் பாஞ்சிக்கிட்டு ஓடி வந்திச்சி. அதிரெ மொகெத்திலெ சரியானெ பயம் தெரிஞ்சிச்சி. கண்ணெல்லாம் பிதுங்கெ அந்தெ மான் மத்தெ மானுக்கிட்டெ திக்கித் திக்கிச் சொன்னிச்சி.

"கேட்டிங்களா சங்கதியெ! இன்டெக்கி நம்மடெ கொளத்துப் பக்கம் ஒரு புரு மிருகத்தப் பாத்தே"

"புரு மிருகமா?" என்டு எல்லா மானும் பயத்தொடெ கேட்டிச்சி.

"ஓம்! புரு மிருகந்தா. இதுக்கு முந்தி நா ஒரு நாளும் அதெப் பாக்கேலெ. அதிரெ ஓடெம்பெல்லாம் வரிவரியா கோடு இரிக்கி. அதிரெ கண்ணெப் பாக்கவே பயமா இரிக்கி." என்டு அந்தெ மான் நடுங்கி, நடுங்கிச் சொன்னிச்சி.

"மத்தம்மா அது என்ன மத்தம்மா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாபீர் தாங்கேலாமெ கேட்டுட்டா.

"அதா, அது புலிடா."

மத்தம்மா சொல்லிப்புட்டு கதெயெத் தொடந்து சொன்னாகெ.

"மத்தெ நாத்து தண்ணி குடிக்கப் போனெ ஒரு பொட்டெ மானெ அந்தெ புரு மிருகமெல்லாஞ் சேந்து புடிச்சித் தின்டுட்டு. அதெப் பாத்து மத்தெ மானெல்லா பயந்து பீத்திது. இனி என்ன செய்யிறெ என்டு எல்லாருஞ் சேந்து யோசிச்சாகெ. பொறவு அந்தெ எடெத்தெயும் உட்டுப்புட்டு வேறெ எடெத்துக்குப் பேறென்டு முடிவு செஞ்சாகெ.

இப்பிடியே மானெல்லாம் ஒவ்வொரு எடெமா மாறி, மாறிப் பீத்துக்கிட்டே இரிந்திச்சி. இப்பெ அந்தக் காட்டிலெ மான் நல்லா கொறெஞ்சி பீத்திது. சிங்கமும் புலியும் மாறி, மாறிப் புடிச்சித் தின்டத்திலெ அதிரெ வங்கிசம் அழிஞ்சிக்கிட்டே இரிந்திச்சி. ஆனா சிங்கமும் புலியும் இப்பெ அந்தக் காட்டிலெ நல்லா கூடிட்டு. மான் வாழ்ந்து வந்தெ எடெத்தெயெல்லா அது ரெண்டும் புடிச்சிட்டு. அதாலெ மான் வாழ்றெ எடெமும் நல்லா சுருங்கிப் பீத்திது. சிங்கம் இல்லாட்டி புலி புடிச்சிப்புடும் என்டெ பயத்தொடெயே மானெல்லாம் வாழ்ந்து வந்திச்சி."

"மானுக்குப் பாவம்மா."

எனெக்கிப் பக்கத்திலெ இரிந்தெ அனிவாத்தாடெ நாசிர் சொன்னா. எனெக்கும் பாவெமாத்தா இரிந்திச்சி. 'பாவம்! மான் ஒத்தருக்கு ஒன்னுஞ் செய்யிரேல்லெ. ஆனா அதெத்தான் இந்தச் சிங்கமும் மானும் இந்தப் பாடு படுத்திது' எனெக்கிச் சிங்கத்திலெயும் புலியிலெயும் சரியானெ கோவெம் வந்திட்டு.

மத்தம்மா வெத்திலெயெத் துப்பிப்புட்டு மறுவாடியும் கதெயெத் தொடெந்து சொன்னாகெ.

"இப்பிடி இரிக்கக்குள்ளெ ஒருநாள் சிங்கத்துக்கும் புலிக்கும் சண்டெ வந்திட்டு. சிங்கமும் புலியும் கசனா பெருவுனத்தாலெ அந்தெக் காட்டிலெ அவெகெ ரெண்டு பேரும் இரிக்கக் கஸ்டமாப் பீத்திது. அதாலெ சிங்கமும் புலியும் அடிக்கடி சண்டெ புடிக்கத் தொவெங்கிட்டு. இந்தெமாரிச் சண்டெ புடிக்கக்குள்ளெ செலெ நேரெத்திலெ சிங்கம் வென்ரும், செலெ நேரெத்திலெ புலி வென்ரும். ஆனா யாரு வென்டாலுந் தோத்தாலும் மானுக்கு எப்பவும் அழிவுதா வந்திக்கிட்டு இரிந்திச்சி.

இப்பிடியே கனகாலம் பீத்திது. மான்டெ அளவு சரியா கொறெஞ்சிக்கிட்டே வந்திச்சி. அதுக்கு இப்பெ இரிக்கிறத்துக்கும் எடெமில்லாமெ பீத்திது. அந்தெக் காட்ரெ ஒரு பக்கத்தெ சிங்கமும் மத்தெ பக்கத்தெ புலியும் புடிச்சிட்டுது. அதாலெ மான் ஒரு பக்கத்தாலயும் போவேலாமெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லா கஸ்டப்பட்டுக்கிட்டு இரிந்திச்சி. இப்பிடி இரிக்கக்குள்ளதா புலிக் கூட்டத்துக்கு புருசா ஒரு புலி தலெவனா வந்திச்சி. அது ஒரு பெரிய புலி. நல்லாத் துணிஞ்செ புலி. அது வந்து எளெந்தாரி புலியெயெல்லா ஒன்னாச் சேத்திச்சி.

"இந்தெக் காட்டிலெ இப்பெ நம்மெ இரிக்கிறெ எடெத்திலெ நம்மடெ ஆக்கள் பரம்பரெ பரம்ரெயா இரிந்து வாறாகெ. அதாலெ இந்த எடெம் நமக்குத்தாஞ் சொந்தம். இந்த எடெத்திலெ இரிந்து எல்லாச் சிங்கத்தெயு நம்மெ தொரெத்தணு."

என்டு அது சொன்னிச்சி. அதிரெ சொல்லெ மத்தெப் புலியெல்லாங் கேட்டிச்சி. அதுக்குப் பொறவு புலியெல்லாஞ் சிங்கத்தெ வெரெட்டெத் தொவெங்கிட்டு. புலிக்குஞ் சிங்கத்துக்கு அடிக்கடி சண்டெ வரத் தொவெங்கிட்டு. கனெ சண்டெயிலெ புலிதா வெண்டிச்சி. சிங்கமெல்லாம் ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா புலி இரிந்தெ காட்டெ உட்டு மத்தெப் பக்கத்துக்கு பீத்திக்கிட்டு இரிந்திச்சி.

இப்பிடி புலி வெண்டு, சிங்கமெல்லா வேறெ பக்கத்துக்குப் பீத்திக்கிட்டு இருந்தத்தாலெ, புலிக்கெல்லாங் கெப்பர் கூடிட்டு.. அதாலெ இப்பெ எல்லாப் புலியு நெனெச்செ நேரெத்திலெயெல்லாம் மானெப் புடிக்கத் தொவெங்கிட்டு. அதாலெ மானுக்கு ஒன்னுஞ் செய்யேலாமெ பீத்திது. அடிக்கடி எடெத்தெ உட்டுப் போறதும் பொறவு திரும்பி வாறதுமா மானெல்லாம் நல்லா கஸ்டப்பட்டுக்கிட்டு இரிந்திச்சி. மானுக்கெல்லாம் போறத்துக்கு வேறெ எடெமுமில்லெ. அதுவொளுக்கு வேறெ ஒரு எடெத்தெயுந் தெரியா. அதுவொளு பொறெந்தத்திலெ இரிந்து அந்தெக் காட்டுக்குள்ளதா வாழ்ந்து வருவுதொளு. என்ன செய்யிரெண்டு தெரியாமெ எல்லா மானு ஒன்னாச் சேந்து,

"யா அல்லா! எங்களுக்கு நீதாந் தொணெ. ஒன்னெ உட்டா எங்களுக்கு ஒதெவி செய்யிறத்துக்கு வேறெ யாருமில்லெ. அதாலெ எங்களெ இந்தப் புலிக்கிட்டெ இரிந்துஞ் சிங்கத்துக்கிட்டெ இரிந்துங் காப்பாத்து யா அல்லா!" என்டு ஆண்டவனுக்கிட்டெ துஆக் கேட்டிச்சி.

கனெ நாளெக்கி பொறவு நெலெமெ ஒள்ளுப்பம் மாறி வாறாப்பலெ இரிந்திச்சி. சிங்கத்துக்குத் தலெவனா ஒரு புருச் சிங்கம் வந்திச்சி. அது நல்ல துணிஞ்செ சிங்கம். நல்லெ ஒரெபுடியானெ சிங்கம். அது என்ன செஞ்சிச்செண்டா. பயந்து ஓடிப் பீத்திரிந்தெ சிங்கத்தெயெல்லா ஒன்னாச் சேத்திச்சி.

"இந்தெக் காட்டிலெ நம்மடெ ஆக்கள்தா அந்தெ நாள்லெ இரிந்து வாழ்ந்து வாறாகெ. அதாலெ இந்தெக் காடு நமக்குத்தாஞ் சொந்தம். நம்மதா இந்தெக் காட்டுக்கு ராஜா. நம்மெ எல்லாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்னாச் சேந்து, எல்லாப் புலியெயும் இந்தெக் காட்டெ உட்டுத் தொரெத்தணும்."

என்டு சொன்னச்சி. அதிடெ சொல்லெ மத்தெச் சிங்கமெல்லாங் கேட்டிச்சி. அதுக்குப் பொறவு, அந்தெச் சிங்கம், புலியொடெ சண்டெ புடிக்கிறத்துக்கு கசனாச் சிங்கத்தெ கூட்டிக்கிட்டு வந்திச்சி. ஒரு நாள் புலிக்குஞ் சிங்கத்துக்குஞ் சரியானெ சண்டெ தொவெங்கிட்டு. சண்டெயென்டா சும்மா, கிம்மா சண்டெ இல்லெ. எங்ஙினெ பாத்தாலும் எரெத்தெ வொறு. ரெண்டிலெ ஒன்னு பாக்கிறென்டு ரெண்டுமே முடிவு செஞ்சிட்டு. நாலஞ்சி நாளா சரியானெ சண்டெ நடந்திச்சி. புலியெப் பாக்கெ சிங்கம் பெலெசாலிதானெ. அதோடெ சிங்கத்திலெ ஆக்களுங் கூடெ. அதாலெ ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா புலியெல்லாந் தோத்துக்கிட்டு வந்திச்சி. கசனாப் புலி செத்துப் பீத்துது. சின்னெப் புள்ளெயொள், பெரியாக்கள், பொம்புளெ, வயசானாக்கள் என்டெல்லா பாக்காமெ எல்லாப் புலியயுஞ் சிங்கம் கொன்டுட்டு. கடெசியிலெ சிங்கம் புலியிரெ தலெவெனயு கொன்டுட்டு. அவெனெப் படிச்சி நாலு சந்தாக் கிழிச்சி, ஒவ்வொரு சந்தெயும் ஒவ்வொரு மரத்திலெ தொங்கெ உட்டாகெ. சிங்கத்துக்கெல்லாஞ் சரியானெ சந்தோசம். எல்லாச் சிங்கமுஞ் சேந்து, பெரியெ கிடாரத்திலெ சோறு கறியெல்லா ஆக்கி, ஊராக்களயெல்லாங் கூப்பிட்டு சாப்பாடு குடுத்தாகெ. நானும் பீத்து நல்லாத் தின்டுபுட்டு, ஒரு வாய்க்கு வெத்திலெயும் போட்டுப்புட்டு வந்தே. கதெயும் முடிஞ்சிட்டு கத்தரிக்காயுங் காச்சிட்டு."

மத்தம்மா கதெ சொல்லி முடிச்சிட்டாகெ. புலியெ நெனெச்சி எனெக்கி சரியானெ மனவருத்தமா இரிந்திச்சி. பாவம்! குட்டிப் புலியெல்லா என்ன செஞ்சிச்சி? அதெயும் பீத்து இந்தெச் சிங்மெல்லாங் கொன்டுட்டு. எனெக்கென்டா கதெ முடிஞ்சமாரித் தெரியேலெ. அப்பெ மானுக்கு என்ன நடந்திச்சி? மத்தம்மாக்கிட்டெ கேக்கவும் எனெக்கி ஒருமாரியா இரிந்திச்சி. அதுக்குப் பொறவும் ஒரு நாளும் நான், மானுக்கு என்ன நடந்திச்சென்டு அவெகளுக்கிட்டெ கேக்கேலெ. ஆனா மானெல்லாஞ் சந்தோசமா இரிந்திருக்காது என்டு, என்டெ மனஞ் சொல்லிக்கிட்டே இரிந்திச்சி.

• • •

மத்தம்மாக்கு இப்பெ நல்லா வயசி பீத்திது. கண்ணுந் தெரியிரேல்லெ. இப்பெ முந்திமாரி அவெகெ கதெயெல்லாஞ் சொல்றேல்லெ. சொன்னாலும் அதெக் கேக்கிறத்துக்கு ஒத்தருமில்லெ. புள்ளேளுக்கெல்லாம் இப்பெ டீவி பாக்கிறெத்திலெயும் கொம்பியூட்டர் வெளெயார்ரத்திலெயுந்தா விருப்பமா இரிக்கி. இல்லாட்டி ரியூசனுக்குப் பீத்திர்ரொளு. அதொளுக்கு கதெ கேக்கெ நேரமுமில்லெ. என்டெ புள்ளேலும் இப்பிடித்தா. நாபிர் உசிரொடெ இரிந்தானென்டா அவென்டெ புள்ளேளுக்கு மத்தம்மா கதெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிரிப்பாகளொ தெரியா. அவெ மௌத்தாப் போனெ நேரெத்திலெ மத்தம்மா கத்தினெ கத்துவெயெ இப்பெ நெனெச்சாலுந் தாங்கேலாமெ இரிக்கி.

ஒரு நாள் ராவேலெ நாபிர் அவென்டெ வயல்லெ பன்டிக் காவல் பாக்கப் போனா. போனெவெ மத்தெ நாத்து கனெசாமமாப் பீத்தும் வரேலெ. மத்தம்மாதான் ரோட்டிலெ நின்டு வாறெ போறெ ஆக்களுக்கிட்டெ நாபிரெக் கேட்டுக்கிட்டு இரிந்தாகெ.

"தம்பி! எங்கெடெ நாபிரெக் கண்டியாடா தம்பி? ராவு வயலுக்குள்ளெ காவல் பாக்கெப் போனெவன்டா. இன்னு வரேலெடா"

ஆனா ஒத்தரும் அவனெப் பாக்கேலெ. நேரெஞ் செல்லெச், செல்லெ மத்தம்மாடெ மொகம் மாறிப் பீத்திது. ஆக்களுக்கிட்டெ கேட்டுக் கேட்டு, அவகெடெ கொரலும் கம்மிப் பீத்திது. கடெசிலே கத்திக் கத்தி ஊரெல்லாம் ஓடத் தொவெங்கிட்டாகெ.

"என்டல்லா! என்டெ புள்ளெயெக் காணேலியெ. யாராவது பீத்துப் பாருங்ஙனே"

எல்லார்ரெ நெஞ்சிலெயு பயம் உழுந்திட்டு. என்னமோ நடெந்திக்கி. ஊரெல்லாம் அமுங்கிப் பீத்திது. யாருஞ் சத்தம் போட்டுக்குடி கதெக்கேலெ. அப்பெதா சின்னெ நெய்னாக் காக்காடெ மூத்தெ மகெ ஊருக்குள்ளெ வந்தா. அவெ பேயாடிச்சவெமாரி இரிந்தா. ஒடெம்பெல்லாஞ் சேறு. மொகம் வெளிறிப் பீத்திரிந்திச்சி. அவெனாலெ கதெக்கேலாமெ இரிந்திச்சி. ஓடி வந்தவெ ஆக்களெ பாத்ததும், அறுத்தெ ஆடு கத்திறெமாரி கத்திக்கிட்டு கீழெ உழுந்திட்டா. அவனுக்குத் தண்ணி குடுத்து, பொறவு சூடா தேத்தண்ணியும் குடுத்தத்துக்குப் பொறவுதா அவெ நடந்தத்தச் சொன்னா. அவென்டெ வயலும், நாபீர்ரெ வயலும் பக்கத்திலெ பக்கத்திலெதா. ரெண்டு பேருந்தா ராவு வயலுக்குப் பீத்திரிக்காகெ. ஒரு ஒம்பது மணிபோலெ, இவெ பீ முடுக்குதென்டு ஒள்ளுப்பந் தள்ளியிருந்தெ பத்தெக்குள்ளெ பீத்து பீ பேளெக்குள்ளெ நாலஞ்சி பேர் நாபீர்ரெ காவலுக்குள்ளெ போறெத்தெப் பாத்திரிக்கா. செத்தெ சாமத்துக்குப் பொறவு அங்ஙினெ இரிந்து வெடிச் சத்தம் கேட்டிக்கி. கொஞ்ச நேரெத்திலெ வந்தாக்கள் பீத்தானொளு. இவெ அப்பிடியே இரிந்து மெல்லவா மெல்லவா வேறெ பக்கத்தாலெ பீத்து, ராவு முத்துலும் வயலுக்குள்ளாலயுஞ் சேத்துக்குள்ளாளயும் தவெண்டு தவெண்டு வந்து சேந்திக்கா.

அதுக்குப் பொறவு நாப்பது அம்பது பேர் பீத்து நாபீர்ரெ மையத்தெ தூக்கிக்கிட்டு வந்தாகெ. அவென்டெ தலெயிலெ சுட்டிரிக்கானொளு. மண்டெ பின்பக்கமா செதெறிப் பீத்திரிந்திச்சி. மையத்தெக் கண்டதும், மத்தம்மா அப்படியே தரெயிலெ உழுந்து, நெஞ்சிலெ அடிச்சிக்கிட்டு கத்தினாகெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்துவெ. அதெப் பாத்து அங்ஙினெ இரிந்த எல்லாருங் கத்தினாகெ.

அதெல்லா நடந்து இப்பெ பதினஞ்சி வருசத்துக்கும் கூடுதலாப் பீத்திது. இந்தெ எடெப்பட்டெ காலத்திலெ எனெக்குத் தெரிஞ்சி எங்கெடெ ஆக்கள் எத்தினயோ பேர் மௌத்தாப் பீத்தாகெ. ஒத்தருஞ் சும்மா மௌத்தாப் போவெல்லெ. எல்லாருஞ் சுடுபட்டு இல்லாட்டி வெட்டுப்பட்டுத்தா மௌத்தாப் பீத்திரிக்காகெ. இதெ யாரு செஞ்சேண்டு ஒத்தருக்குந் தெரியா. புலிதாஞ் செஞ்சேண்டு ஆமி சொல்றா, ஆமிதாஞ் செஞ்செண்டு புலி சொல்றா. ஆனா யாரு செஞ்சாலும், கடெசிலே எங்கெடெ ஆக்கள் மௌத்தாப் பீத்திக்கிட்டே இரிக்காகெ.

◂ ஜூன் 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுவெ

1

அத்துக்கார் கடுஞ் சந்தோசத்திலெ இரிந்தா. என்டாலு அந்தெ சந்தோசத்தெ அவெ வெளிக்காட்டேலெ. வாப்பா சொல்லியிரிக்காகெ வள்ளத்திலெ போவெக்குள்ளெ அங்காலெ இஞ்சாலெ ஆடாமெ இரிக்கணுமென்டு. அதாலெ மனசுக்குள்ளெ எழுந்தெ சந்தோசத்தெ அடெக்கிக்கிட்டு அத்துக்கார் வள்ளத்துக்குள்ளெ சும்மா இரிந்தா. வாப்பாதா வள்ளத்தெ வலிச்சிக்கிட்டு வந்தாகெ. அத்துக்காருக்கு பின்னாலெ சீனிக்கண்டு சின்னாப்பா அணியத்திலெ இரிந்தாகெ.

அத்துக்கார் சுத்திச் சுத்தி எல்லாத்தையு பாத்தா. ஆத்துக்கு ரெண்டு பக்கத்திலயு கரெ முத்துலு கண்டல் மரம் வளந்திரிந்திச்சி. அந்தெ மரத்திலெ கொக்கு, மீன் கொத்தி என்டு கனெக்கெ பறவெயெல்லா இரிந்திச்சி. ஆத்து தண்ணி கடும்பச்செ நெறெத்திலெ இரிந்திச்சி. எடெக்கெடெ ஆத்துக்குள்ளெ குஞ்சிக் குஞ்சி மீனெல்லா பாஞ்சிது. வெறெப்பா, வாலெ வளெச்சிக்கிட்டு மீன் பாயக்குள்ளெ அத்துக்காருக்கு சரியானெ மலெப்பா இரிந்திச்சி. வாப்பா சவெலெ ஒரேமாரியே வலிச்சிக்கிட்டு வந்தாகெ. சவெலாலெ தண்ணியெ வலிக்கக்குள்ளெ அந்தத் தண்ணி வெள்ளியாட்டம் சுழிச்சிக்கிட்டு பின்னாலெ போனிச்சி.

அத்துக்கார் இப்பதா மொதெமொதெலா பட்டிக்கு போறா. இதுக்கு முந்தி கனெக்கெத் தரக்கம் வாப்பாக்கிட்டெ கெஞ்சிப் பாத்தும் வாப்பா கூட்டிப் போவேலெ. இன்டெக்கித்தா வாப்பா கூட்டிப் போறாகெ. அதுவு உம்மா சொன்னத்தாலதா.

"அவெந்தா ஒவ்வொரு நாளு கேக்கிறானில்லவா. இனிமெ அவெனெ பட்டிக்கு கூட்டி போவெலாந்தானே. அவெனுக்குத்தா இப்பெ ஒம்பது வயசா பீத்திருதானே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிடி உம்மா சொன்னத்துக்கு பொறெவுதா வாப்பா அத்துக்காரெ பட்டிக்கு கூட்டிக்கிட்டுப் போவெ ஓம்பட்டாகெ.

கோரெப் பத்தெ வளந்திருந்தெ ஒரு கரெக்கிட்டெ வாப்பா வள்ளத்தெ நிப்பாட்டினாகெ. பொறவு வள்ளத்தெ கரெயிலெ இழுத்து வெச்சிப்புட்டு, மூனு பேரும் பத்தெக்குள்ளாளெ தெரிஞ்செ ஒரு ஒத்தெ வழியாலெ நடெக்கத் தொவெங்கினாகெ. அத்துக்காருக்கு பயமா இரிந்திச்சி. வாப்பாடெ கையெ புடிச்சிக்கிட்டு, அவெகளுக்குப் பின்னாலெ தொங்கோட்டத்திலெ போனா. கனெசாமத்துக்கு பொறவு அவெகெ ஒரு பெரிய வெட்டெவெளிக்கு வந்தாகெ. அங்ஙினெ மூனு எடெத்திலெ காளெ கட்டப்பட்டிரிந்திச்சி. அந்தெ காளெக்குள்ளெ இரிந்தெ மண் சரியானெ கறுப்பா இரிந்திச்சி. அந்தெ எடெம் முழுக்க சாணிப்பீ நாத்தமா இரிந்திச்சி.

மூனு பேரு பட்டிக்குள்ளெ போனாகெ. வாப்பாவுஞ் சீனிக்கண்டு சின்னாப்பாவு ஒரு மரத்துக்குக் கீழெ சாத்தியிருந்தெ கோளெத்தெ எடுத்து, அந்தெ மூனு காளெயயு கூட்டினாகெ. அதுக்குப் பொறவு, அந்தெ மாட்டுக்காளெயிரெ நாலு மூலெயிலெயு இரிந்தெ அடுப்பயெல்லா கூட்டி சுத்தமாக்கினாகெ. பொறவு வாப்பா அத்துக்காரயு கூட்டிக்கிட்டு போய், ஒள்ளுப்பம் தள்ளியிரிந்தெ பத்தெப் பக்கம் கொள்ளி முறிச்சிக்கிட்டு வந்து அடுப்படியிலெ போட்டாகெ. அத்துக்காருக்கு அந்தெ கொள்ளியெ தூக்கக்குள்ளெ சரியானெ கெப்பரா இரிந்திச்சி.

'ஆ! நம்மளு இப்பெ பெரியாளாட்டம் வேலெ செய்யிறோ'. சந்தோசத்திலெ அவெ ஒடியோடி வேலெ செஞ்சா.

எல்லா முடிஞ்சத்துக்கு பொறவு வாப்பா அத்துக்காருக்கிட்டெ சொன்னாகெ.

"டேய் தம்பி. நீ இந்தெ பூவரச மரத்துக்கு மேலெ ஏறி இரிந்துக்கெ. கீழெ எறெங்கிடெப்படாரு. நானு சின்னாப்பாவு பீத்து மாட்டெயெல்லா சாச்சிக்கிட்டு வாறோ."

ஒரு காளெக்குப் பக்கத்திலெ நின்ட பூவரச மரத்தெக் காட்டி வாப்பா சொன்னாகெ. அத்துக்கார் மரத்திலெ ஏறினா. வாப்பாவுஞ் சின்னப்பாவும் அங்காலெ தூரத்துக்கு பீத்தாகெ.

அத்துக்கார் மத்திரந்தா இப்பெ அங்ஙினெ தனியெ இரிந்தா. அவெனுக்கு பயமா இரிந்திச்சி. பயத்திலெ கத்துவெயு வாறாப்பலெ இரிந்திச்சி. என்டாலு தூரத்திலெ எடெக்கெடெ வாப்பா இல்லாட்டி சின்னாப்பா மாட்டெ அதெட்றெ சத்தம் கேட்டுக்கிட்டு இரிந்தத்தாலெ ஒள்ளுப்பம் பயந் தெளிஞ்சிட்டு. செத்தெ சாமத்துக்கு பொறவு தூரத்திலெ ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா செறெப்பெச் சத்தம் கேக்கெத் தொவெங்கினிச்சி. அந்தெச் சத்தம் வரெ வரெ பெரிசா கேட்டிச்சி. அதோடெ வாப்பாடெயுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னாப்பாடெயுஞ் சத்தமும் ஓரமா கேட்டிச்சி.

"தா....தா.... டேய் பெரியவெ அங்காலெ போவாரெ. இந்தா வள்ளி இஞ்சாலெ வா. தா....தா...."

அத்துக்கார் மரத்துக்கு மேலெ இரிந்தாப்பலயே எல்லாத்தயு கேட்டா. இப்பெ செறெப்பெச் சத்தம் நல்லா கிட்டெக் கேட்டிச்சி. ஒரு பெரியெ எருமெ மாடு தலெயெ ஆட்டிக்கிட்டு முன்னாலெ வந்திச்சி. அது தலெயெ ஆட்டெ ஆட்டெ அதிடெ கழுத்திலெ இரிந்த செறெப்பெயிலெ இரிந்து பெரியெ சத்தம் வந்திச்சி. அந்தெ மாட்டுக்கு பின்னாலெ ஒரு அம்பாரம் மாடு வந்திச்சி. எல்லாஞ் சாம்பலாவு கறுப்பாவு இரிந்திச்சி. கொம்பெல்லாம் வளெஞ்சி சுருண்டு இரிந்திச்சி. கண்ணெ ஒருமாரி முழிச்சி முழிச்சிக்கிட்டு வந்திச்சி. அதெப் பாக்கவே பயமா இரிந்திச்சி. அந்தெ மாடெல்லா தலெயெ ஆட்டிக்கிட்டு, ஒன்னடெ ஒன்னு முட்டி தள்ளிக்கிட்டு வந்திச்சி. எல்லாத்திடெ வாயிலெயும் மூக்கிலெயும் இரிந்து நொரெ வழிஞ்சிக்கிட்டு இரிந்திச்சி.

"டேய் கறுப்பா. அங்காலெ போவாரெ. இந்தா.... இந்தா.... இஞ்சாலெ வா."

வாப்பாவுஞ் சின்னாப்பாவும் மாட்டெடெ கதெச்சிக்கிட்டு அதெல்லாத்தெயும் காளெக்குள்ளெ கொண்டு வந்து சேத்தாகெ. கன்டுகுட்டியயெல்லா ஒரு காளெக்குள்ளெயும் பெரியெ எருமெ மாட்டெயெல்லா இன்னொரு காளெக்குள்ளெயும், கிடா மாட்டெயெல்லா மத்தெக் காளெக்குள்ளெயும் சாச்சிக்கிட்டு போனாகெ. பொறவு மூனு காளெக்குள்ளெயு நாலு பக்கத்திலயு நெருப்பு மூட்டினாகெ. அதுக்குப் பொறவு நாலஞ்சி பெரிய கம்ப எடுத்து, காளெயிரெ கடப்பயெல்லா மூடினாகெ.

அத்துக்கார் மரத்திலெ இரிந்து எறெங்கி வாப்பாடெ கையெ புடிச்சிக்கிட்டு, கன்டுகுட்டியயெல்லா தொட்டுத் தொட்டுப் பாத்தா. செலது சும்மா நின்டிச்சி. செலது பின்னாலெ பின்னாலெ தள்ளி போனிச்சி. செலது தலெயாலெ அவனெ முட்டெ வந்திச்சி. அத்துக்காருக்கு பயமாவும் இரிந்திச்சி, சந்தோசமாவும் இரிந்திச்சி.

மாடு கட்டி முடிஞ்சதும் வாப்பா அத்துக்காரயுங் கூட்டிக்கிட்டு ஒள்ளுப்பந் தள்ளியிரிந்தெ பத்தெப்பக்கம் போனாகெ. அது பெரெப்பங்காடு. அது நெறெயெ பெரெப்பங்காயும் பழமுமாத்தா இரிந்திச்சி. அத்துக்கார் ஆசெயிலெ தொலி மஞ்சளாயிரிந்தெ நாலஞ்சி பெரப்பம் பழத்தெ ஆஞ்சா. அதெ ஆய்யிரது கடுங் கஷ்டமா இரிந்திச்சி. ஒரமா இழுத்தாத்தா அது கழன்டு வந்திச்சி. கையிலெ பெரெப்பமுள்ளுங் குத்திப்புட்டுது. அந்தெ பெரெப்பம் பழம் புளிக்கேலெ. இனிப்பா இரிந்திச்சி. வாப்பா கத்தியாலெ பழமிரிந்தெ பெரெப்பங்கொடியெ வெட்டி வெட்டி போட்டாகெ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதெயெல்லா அத்துக்கார் ஒன்னாச் சேத்தா. வாப்பா ஒரு மரத்திலெ இரிந்து நார் வெட்டி பெரெப்பங்கொடியயெல்லா கட்டி, அத்துக்காருக்கிட்டெக் குடுத்தாகெ. இப்பெ முள்ளுக் குத்தாமெ அதெத் தூக்கெ அவெனுக்கு ஏன்டுது.

வாப்பாவுஞ் சின்னப்பாவும் பட்டியெ ஒரு தரக்கம் நல்லா பாத்தாகெ, அடுப்புக்குள்ளெ கொள்ளியயும் நல்லா தள்ளி வச்சாகெ. பொறவு மூனு பேரு அங்ஙினெ இரிந்து வெளிக்கிட்டாகெ. மஹ்ரி பர்ரெ நேரமா பீத்திது. அத்துக்கார் பீச்செக்கையாலெ வாப்பாடெ கையெப் புடிச்சிக்கிட்டு, சோத்துக்கையாலெ பெரெப்பங் கொடியெ புடிச்செமாரி நடந்து வந்தா. அவென்டெ மனசு துள்ளிப் பாஞ்சிக்கிட்டிருந்திச்சி. ஊட்டுக்கு பீத்து பட்டியிலெ நடந்தெ எல்லாத்தயு எல்லாருக்கிட்டயுஞ் சொல்லணு, பெரெப்பம் பழத்தெ எல்லாருக்குங் குடுக்கணுமென்டெல்லா அவென்டெ மனசு கெடெந்து துடிச்சிக்கிட்டிரிந்திச்சி. அவெனுக்கு கடுங் கெப்பராவு இரிந்திச்சி. மொதெமொதெல்லெ பெரியாளாட்டம் பட்டி கட்ரதுக்கு அவென் வந்திக்கா. இனி அடுத்தெ தரக்கம் உம்மாகிட்டெ சொல்லி எப்பிடியென்டாலும் பால் கறக்கவு வந்திரணு.

## 2

அத்துக்காருக்கு இப்பெ பதிமூனு வயசாப் பீத்திது. அவெ இப்பெ வளந்து நல்லெ பெரியாளாட்டம் இரிக்கா. இப்பெ ஒவ்வொரு நாளும் பால்கறக்கிறதுக்கும் பட்டி கட்ரதுக்கும் அவெ வாப்பாவொடெ பட்டிக்கு வாறா. காத்தாலயொடெ பால் கறக்கக்குள்ளெ, மொதெல்லெ ஒரு எருமையிலெ பால் கறந்து அதுக்குள்ளெ கோப்பியுஞ் சீனியுஞ் சேத்து அடுப்பிலெ வெச்சிருவாகெ. அதுக்குப் பொறவு எல்லா மாட்டிலயு பால் கறந்துபுட்டு, மாட்டயெல்லாம் மேச்சலுக்கு அனுப்பினத்துக்குப் பொறவுதா அடுப்பிலெ இரிந்து பாலெ எறெக்கி குடிப்பாகெ. அந்தெ பால் அடுப்பிலெ கெடெந்து முறுவி, ஆடெயெல்லாம் படிஞ்சு சோக்காத்தா இரிக்கும். அத்துக்கார் ஒரு பெரியெ செறெட்டெ நெறெயெ ரெண்டு தரக்கம் பாலெக் குடிப்பா. அதுக்குப் பொறவு காத்தாடிக் கம்பிலெ ரெண்டு பக்கமும் பால் முட்டிய தொங்கெ உட்டுக்கிட்டு நடெக்கத் தொவெங்கிருவாகெ.

அத்துக்காருக்கு இப்பெ பட்டி வேலெயெல்லாம் நல்லாத் தெரியும். வாப்பா அவெனுக்கிட்டெ ஒன்னுஞ் சொல்லெத் தேவெயில்லெ. பட்டியெ கூட்றெ, கொள்ளி பொறெக்கிறெ, நெருப்பு மூட்றெ, மறுவா கன்டெ அவுத்து உர்றெ, கன்டெ கட்றெ என்டு அவெனுக்கு எல்லா வேலெயுஞ் செய்யத் தெரியு. அத்துக்கார்ரெ வாப்பாக்கு இப்பெ அவெனாலெ நல்லெ ஒதெவி. அவெனெ இப்பெ பட்டிக்கு கூட்டி வாறத்துக்கு அவெருக்கு விருப்பமில்லதா. ஆனா இனி அவெனெ ஊட்டுலெயு வெச்சிருக்கேலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தியென்டாலு அவெ பள்ளிக்கொடத்துக்கு பீத்துக்கிட்டிரிந்தா. இப்பெ அதுக்கும் போறேல்லெ. சட்டாம்பியொடெ அவெ சண்டெ புடிச்சிக்கிட்டு வந்திட்டா. எழுவுறெ பொஸ்தகம் கொண்டு போகேல்லெ என்டு அருளப்பு சட்டாம்பி அவெனுக்கு அடிச்சிப்புட்டாரு. அத்துக்காருக்கு நல்லா நொந்துட்டு. அவெனுக்கு கோவமும் வந்திட்டு. அவெ என்ன செஞ்சானென்டா சட்டாம்பிக்கு பின்னாலெ பீத்து நின்டு அவெர்ரெ தலெயிலெ ஓங்கி குட்டிப்புட்டு ஓடி வந்திட்டா. அதுக்குப் பொறவு அவெ பள்ளிக்கொடத்துக்கு போறெத்துக்கு தொடுவரெக்கும் மாட்டேன்டுட்டா. அதாலெ வாப்பா அவெனெ பட்டிக்கு கூட்டி வரெத் தொவெங்கிட்டாகெ.

அந்தெ பட்டியிலெ இரிந்தெ எல்லா மாட்டுக்கும் பேர் வெச்சிரிந்தாகெ. கறுப்பி, வள்ளி, பெரியெ பொட்டெ, சின்னப் பொட்டெ, ஒத்தக் கொம்பி என்டு எல்லா மாட்டுக்கும் பேர் இரிந்திச்சி. அத்துக்காருக்கு இப்பெ எல்லா மாட்றெ பேருந் தெரியு. இப்பெ அவெ முந்திமாரி மரத்திலெ ஏறி நிக்கிறேல்லெ. எல்லா மாடும் அவெனொடெ நல்லா பழகிட்டு. அவெனுக்கு இப்பெ ஒரு பயமுமில்லெ. அவெ மாட்றெ தலெயயெல்லா தடெவிக் குடுப்பா. அதிடெ முதுவுலெ ஒட்டியிரிக்கிறெ உண்ணியயெல்லா எடுத்துருவா. தலெயெ ஆட்டிக்கிட்டு, பெருமூச்சு உட்டுக்கிட்டு அந்தெ மாடெல்லா சும்மா நிக்கும்.

• • •

இப்பெ சீனிக்கண்டு சின்னாப்பா பட்டிக்கு வாறேல்லெ. போனெ மாசம் அவெகெ ஊட்டெ வந்து வாப்பாக்கிட்டெச் சொன்னாகெ,

"காக்கா. இனிமெ நா பட்டிக்கு வரேலெ. மாட்டெயெல்லாம் நீங்களே பாத்துக்குங்க. நா நம்மடெ ஆட்டெ எடுத்துக்கிறே. மறுவா, இந்தெ கை உழுந்தா கொளத்துப் பக்கத்திலெ காணி வெட்டி வெள்ளாமெ செய்யெப் போறெ."

"ஏன்டா தம்பி, இப்பிடி முடிவெடுத்தா? கை உழுந்தா கொளத்து பக்கம் ஆனெக் கஷ்டமில்லவா? அந்தெப் பக்கந்தானெ நாலஞ்சி அலியன் திரீது"

"இல்லெ காக்கா. நம்மடெ பொடியனெ இங்கிலிசி படிக்கெ வெக்கெப் போறே. என்ன விசயமென்டாலு வேதக்காரெ ஆக்களுக்கிட்டெத்தானெ நம்மெ போவெ வேண்டி இரிக்கி. ஒரு கடிதம் எழுவுறென்டாலும், ஒரு போம் நெரெப்பிறெயென்டாலும் அவெனொளுக்கிட்டத்தானெ நம்மெ போறோ. அவெனொளு நம்மெ பாத்திரிக்கெ இங்கெ வந்தாக்கள்தானெ காக்கா. அவெனொளுக்கிட்டெ போறது நமெக்கு வெக்கெமில்லியா காக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரா நம்மடெ பொடியனெ புளியந்தீவுக்கு உட்டு படிக்கெ வெக்கெ நெனெச்சிக்கே. பட்டிக்குத் தனியெ வந்து போறதுங் கஸ்டமாயிரிக்கி காக்கா."

வாப்பா எல்லா ஆட்டெயும் சீனிக்கண்டு சின்னாப்புக்கு குடுத்திட்டாகெ. ஒரு பொட்டெ ஆட்டெ மத்திரம் ஊட்டிலெ கட்டி வெச்சாகெ. எல்லா மாட்டெயும் தனியெ பாக்கிறது வாப்பாக்கு கஸ்டமாயிருந்தத்தாலெ அத்துக்காரயும் பட்டிக்கு கூட்டி போகெ வேண்டி வந்திட்டு. சீனிக்கண்டு சின்னாப்புக்கு முந்தியே கண்ணு வாப்புச் சின்னாப்பா பட்டிக்கு வரமாட்டேன்டு சொல்லிப்புட்டு, தச்செ வேலெ செய்யெத் தொவெங்கிட்டாகெ. அதாலெ இப்பெ அந்தெ குடும்பத்துக்கு சொந்தமானெ முழு மாட்டயும் வாப்பாதா பொறுப்பெடுக்கெ வேண்டி வந்திட்டு. அதாலெ வாப்பா என்ன செஞ்சாங்கென்டா, எல்லாரயும் குடும்பத்தொடெ பால் தொறெக்கே குடியா கூட்டிக்கிட்டு வந்திட்டாகெ. நல்லெ மேடாயிரிந்தெ தெக்குப் பக்கத்திலெ வாப்பா கல்லாலெ ஒரு ஊடு கட்டினாகெ. அந்தெ எடெத்திலெ முந்தி ஒரு மால் கட்டியிரிந்திச்சி. முன்னுக்கு ஒரு திண்ணெ, பின்னாலெ ஒரு ஊடு. வாசல் பக்கமா ஒரு ஒத்தாப்பு எறெக்கி, ஒரு குசினி. அதோடெ அந்த ஊட்டுக்கு பக்கத்திலெ ஒரு மாலுங் கட்டினாகெ. அதிலதா குஞ்சித் தம்பிக் காக்காவும் அவெகெடெ உம்மாவும் குடியிரிந்தாகெ. அவெகெ ரெண்டு பேரும் அந்தெ குடும்பத்தொடதா கனெகாலமா இரிந்து வாறாகெ.

அத்துக்காருக்கு புரு எடெம் நல்லா புடிச்சிப் பீத்திது. காத்தாலெயொடெ பால் கறெக்கப் பீத்து, பொழுது உச்சிக்கு வாறத்துக்கு முந்தியே ஊட்டெ வந்திருவாகெ. பொறவு அத்துக்கார் தூண்டலெ எடுத்துக்கிட்டு மூத்தெ தம்பியயுங் கூட்டிக்கிட்டு ஆத்திலெ மீன் புடிக்கப் பீத்திருவா. கயமீன், உழுவெ, செத்தல் என்டு எப்படியாவது கறிக்கு மீன் கொண்டு வந்திருவா. உம்மா ஆத்துக்கு பக்கத்திலெ சேனெ செஞ்சிரிந்தாகெ. அதிலெ மையறுக் கெழெங்கு, கத்திரி, வெண்டி, கொச்சி, பயித்தெ என்டு கனெக்கெ காய்கறி செஞ்சிரிந்தாகெ. ஒரு பக்கத்திலெ வத்தாளெ, கச்சான், சோளமெல்லா போட்டிரிந்தாகெ. ஊட்டுக்குள்ளெ சாக்குச் சாக்கா நெல்லு இரிக்கிம். ஒழெவடிக்கிறதுக்குஞ் சூடடிக்கிறதுக்கும் வாப்பாடெ கிடாமாட்டத்தா கனெக்கப் பேர் கொண்டு போவாகெ. வெள்ளாமெ வெட்டினத்துக்குப் பொறவு ஒவ்வொராக்களும் ஒரு அவணம் ரெண்டு அவணம் என்டு நெல்லுத் தருவாகெ. அதாலெ அந்தெக் குடும்பத்துக்கு ஒரு நாளும் சாப்பாட்டுக்கு கஸ்டம் வந்ததில்லெ.

ஒழெப்புஞ் சாப்பாடுஞ் சேந்து அத்துக்காரெ நல்லெ ஒரபுடியானெ ஆளா ஆக்கிப்புட்டுது. ஒள்ளுப்பஞ் சாமத்திலேயே அவெ நாலஞ்சி மாட்டிலெ பாலெக் கறந்துபுடுவா. காத்தாடிக்கம்பிலெ பால் முட்டியெ கொளுவி, அதெ தோளிலெ வெச்சானென்டாக்கா வள்ளத்திலெ ஏறுமட்டுக்கு அதெக் கீழெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறெக்கெ மாட்டா. அவெனெப் பாத்தா பதிமூனு பதினாலு வயசுப் பொடியன் என்டு யாருஞ் சொல்லெ மாட்டாகெ. ஒரு பெரியெ எளெந்தாரிமாரியே அவெ இரிந்தா. அவெ நல்லா திம்பா. என்ன கறியென்டாலுஞ் சரிதா. மூனு, நாலு கோப்பெ சோத்தெ அவெ திம்பா. உம்மா ஒவ்வொரு நாளுந் தயிர் காச்சுவாகெ. தயிர் காச்சக்குள்ளெ எடுக்கிறெ ஆடயயெல்லாங் கடெஞ்சி நெய்யெடுத்து வெச்சிரிப்பாகெ. ஊட்டுலெ எப்பவும் போத்தல் போத்தலா நெய்யிரிக்கு. கை நெறெயெ நெய்யெ எடுத்து அதெ சுடு சோத்துக்குள்ளெ போட்டு பெனெஞ்சி திங்கிறென்டா அத்துக்காருக்கு நல்லெ விருப்பம். சுடெச்சுடெ ஒரு கோப்பெச் சோத்தெ அப்பிடியே திண்டு முடிப்பா.

ஒரு நாள் அவெகெடெ ஊட்டுக்கு ஒரு பக்கீர் வந்தாரு. பச்செ தலெப்பா கட்டி, பாக்கு குத்தியிரிந்தெ ஒரு கம்பியெ காதிலெ சொருவி, தடிச்செ மீசையுந் தாடியும் வெச்சிக்கிட்டு அவெரு இரிந்தாரு. அவெருக்கிட்டெ வெள்ளியாலயும், செம்பாலயும் செஞ்செ கை, கால், தலெ, உருவமெல்லா இரிந்திச்சி.

"காணிக்கைகள். நாகூருக்கு நேர்ந்தவை." என்டு ஒரெமா சத்தம் போட்டு சொல்லிக்கிட்டு அவெரு வந்தாரு. உம்மா அவெருக்கிட்டெ செம்பாலெ செஞ்செ ஒரு காலெ வாங்கி, அதெப் பொறவு அவெருக்கிட்டெயெ குடுத்தாகெ. பொறவு அவெருக்கு காசும் அரிசியு முட்டெயு வெச்சிக் குடுத்தாகெ. அது சாப்பாட்டு நேரமென்டத்தாலெ அந்தெ பக்கீரெயுங் கூப்பிட்டு உம்மா சோறு குடுத்தாகெ. எல்லாருந் திண்டுகிட்டு இரிக்கக்குள்ளெ அந்தப் பக்கீர் அத்துக்காரெ பாத்தாரு. அவெ திங்கிறத்தெ ஆச்சரியமா பாத்தாரு. போவெக்குள்ளெ அவரு சொல்லிப்புட்டு போனாரு.

"ஓங்கெடெ மூத்தெ பொடியன் ஒங்களுக்கு நல்லெ ஒதெவியா இரிப்பா."

அன்டெக்கி பின்னேரம் பட்டி கட்டப் போவெக்குள்ளெ அத்துக்காருக்கு வவுத்தாலெ போவெத் தொவெங்கிட்டு. வவுறு வலிச்சி, வலிச்சி ஒள்ளுப்பமும் நிக்காமெ வவுத்தாலெ பீத்திக்கிட்டே இரிந்திச்சி. அத்துக்கார் சுருண்டு பீத்தா. அவெனாலெ எழும்பி நிக்கவே முடியேலெ. வாப்பா நல்லா பயந்து பீத்தாகெ. கெரிகெரியா மாட்டயெல்லா சாச்சி வந்து பட்டிக்குள்ளெ அடெச்சிப்புட்டு, அத்துக்காரெ தூக்கிக்கிட்டு ஊட்டுக்கு வந்தாகெ. அத்துக்காரப் பாத்தெ ஓடனெயே உம்மா கத்தெத் தொவெங்கிட்டாகெ.

"என்டெ ராசா. ஒனெக்கி என்னமா நடெந்திட்டு. அந்தெ கொள்ளெயிரெ போயிருவா, தூமச்சீலையிரெ மவெ பக்கீர்டெ கண்தா என்டெ புள்ளெயெ இந்தெ பாடுபடுத்திக்கி. ஆண்டவனே என்டெ புள்ளெயெ சொகெப்படுத்திக் குடு. நா அருக்கு ரெண்டு நோம்பு புடிப்பே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மா திட்டி, திட்டி, கத்தி, கத்தி அத்துக்காருக்கு மருந்து செஞ்சாகெ. ரெண்டு நோம்பு புடிக்கிறத்துக்கு நெய்யத்து வெச்சாகெ. மொதெல்லெ இஞ்சிக் கெழெங்கெ அரெச்சி சாறு புழிஞ்சி, அதுக்குள்ளெ தேனும் இலுமிச்சம் புளியுஞ் சேத்து குடுத்தாகெ. பொறவு கோப்பியெ நல்லா கடுக்கக் காச்சி அதெயுங் குடிக்கக் குடுத்தாகெ. பொறவு சுடு சாம்பலெ எடுத்து அத்துக்கார்ரெ வவுத்திலெ ஒத்துப் போட்டாகெ. அதுக்குப் பொறவுதா ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா வவுத்து நோக்காடு கொறெஞ்சி வவுத்தாலெ போறதும் நின்டுது. என்டாலும் அதுக்குப் பொறவு அத்துக்கார் பழெயெ ஆளா எழும்பி நடெக்கிறத்துக்கு மூனு நாள் சென்டிச்சி.

## 3

அந்தெத் தரக்கம் மாரி மழெ நல்லா பேஞ்சிது. ஒரு கெழமெக்கு மேலெ மழெ அடிச்சி ஊத்தினிச்சி. ஆத்திலெ தண்ணி நெறெஞ்சி, வழியெத் தொவெங்கிட்டு. ஒத்தருக்கும் ஒரு எடெமும் போவேலாமப் பீத்திது. சேனையிலெ இரிந்தெ பயிரெல்லாம் அழுகிப் பீத்திது. வவுத்துப்பாடப் பாக்கிறது பெரியெ பிரெச்சினெயா பீத்திது. கறி ஒன்னுமேயில்லெ. அடுப்பு மூட்டெக் கொள்ளியுமில்லெ. உம்மா கனெக்கெக் கஸ்டப்பட்டாகெ. நல்லெ காலம்! ஊட்டிலெ அரிசி இரிந்திச்சி. தண்ணிக்குள்ளெ கெடெந்தெ காய்கறியெ எல்லாம் ஆஞ்சி ஒருமாரி எல்லாரு சோறாக்கி தின்டாகெ.

ஒரு கெழெமெக்கு பொறவு மழெ நின்டிச்சி. மழெ நின்டெ ஒடெனெயெ வாப்பா அத்துக்காரயுங் கூட்டிக்கிட்டு பட்டிக்கு போனாகெ. பட்டிக்குள்ளெ ஒரு மாட்டயுங் காணேலெ. பட்டி நெறெயெ மழெத்தண்ணி. சாணம்பீயொடெ கலந்து கறுத்துப் பீத்திரிந்தெ தண்ணிக்குள்ளெ காலெ வெக்கேலாமெ இரிந்திச்சி. வாப்பாவும் அத்துக்காரும் நாலஞ்சி எடெத்தாலெ வாய்க்காலெத்ந் தோண்டி தண்ணியெ வடியெ உட்டாகெ.

பொறவு ரெண்டு பேரு மாட்டெயெல்லா தேடெத் தொவெங்கினாகெ. அந்தெ எளுகைக்குள்ளெ ஒரு மாட்டெயுங் காணேலெ. கனெசாமம் நடெந்து போனத்துக்கு பொறவு தூரத்திலெ செறெப்பெச் சத்தங் கேட்டுது. ரெண்டு பேருஞ் சத்தம் வந்தெ தெசெப்பக்கம் போனாகெ. மேடா இரிந்தெ ஒரு எடெத்திலெ மாடெல்லா தலெயெ ஆட்டிக்கிட்டு நின்டிச்சி. ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா எல்லா மாட்டயும் சேத்தெடுத்து, பட்டிக்கிட்டெ சாச்சிக்கிட்டு வந்தாகெ.

வாப்பா ஒவ்வொரு மாடா பாத்து பாத்து பட்டிக்குள்ளெ உட்டாகெ. ஒரு எருமெக்கு மத்திரம் வயிறு வீங்கியிரிந்திச்சி. அதிடெ மொகமு ஒரு சாங்கமா இரிந்திச்சி. வாயிலெ இரிந்து வீணி வடிஞ்சிக்கிட்டு இரிந்திச்சி. அதெ பட்டிக்குள்ளெ உடாமெ பக்கத்திலெ நின்டெ ஒரு மரத்திலெ வாப்பா கட்டி வெச்சாகெ. பொறவு ரெண்டு பேருமா சேந்து கொள்ளி பொறெக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனாகெ. காஞ்செ கொள்ளி எடுக்கிறது பெரிய பாடா இரிந்திச்சி. ஒருமாரி கொள்ளியயெல்லாஞ் சேத்து நல்லா நெருப்பு மூட்டிப்புட்டு ஊட்டுக்கு வந்திட்டாகெ.

மத்தெநாத்து காத்தாலெயொடெ வாப்பாவும் அத்துக்காரும் பால் கறக்கிறத்துக்காகப் பால்முட்டியெல்லா எடுத்துக்கிட்டு பட்டிக்கு போனாகெ. பட்டிக்கிட்ட போவெப் போவெ மாடெல்லா ஒருமாரி கத்திறெ சத்தம் கேட்டிச்சி. வழக்கமா மாடு அப்பிடி கத்திறேல்லெ. வாப்பாவும் அத்துக்காரும் வெசெயா நடந்து, பட்டியெப் பீத்து பாத்தா, பட்டிக்குள்ளெ ஒரு மாட்டெயு காணேலெ. காளெ கட்டியிரிந்தெ கம்பு கட்டயெல்லா ஒடெஞ்சி கெடெந்திச்சி. மாடெல்லா தூரத்தூரெ நின்டு பயத்தொடெ அங்காலயும் இங்காலயும் பாத்துக்கிட்டு நின்டிச்சி. தனியெ மரத்திலெ கட்டி வெச்செ மாட்டெக் காணேலெ. வாப்பா மரத்துக்கிட்டெப் பீத்துப் பாத்தாகெ. மரத்தடியிலெ எரெத்தமா இரிந்திச்சி. அந்தெ மாட்டெ என்னமோ இழுத்துக்கிட்டு போனெ அடெயாளம் ஈரத்தரையிலெ நல்லா தெரிஞ்சிச்சி. வாப்பா அந்தெ எடெத்தெ நல்லா பாத்தாகெ. மாட்டிரெ கொம்ரெ அடையாளத்துக்கெடெயிலெ பூமாரி சின்னெச் சின்னெ அடெயாளந் தெரிஞ்சிது.

வாப்பா அத்துக்கார்ரெ கையெப் புடிச்சாகெ. அவெகெடெ கை பயத்திலெ நடுங்கினிச்சி. பால் முட்டியயெல்லாம் அங்கினெயெ உட்டுப்புட்டு, பாறாங்கத்தியெ மத்திரம் எடுத்துக்கிட்டு, அத்துக்காரெ கையிலெ புடிச்செமாரி வாப்பா வெசெயா நடந்து தொறெயடிக்கு வந்தாகெ. அருமட்டுக்கு வாப்பா அத்துக்காரொடெ எதுவுங் கதெக்கேலெ. வள்ளத்திலெ ஏறி ஒள்ளுப்பந் தூரம் வந்ததுக்குப் பொறவு, வாப்பா சொன்னாகெ.

"தம்பி, பட்டிக்குள்ளெ புலி வந்திரிக்கிடா."

ஊட்டுக்கு வந்தெ ஒடெனெயே வாப்பா ஊருக்குள்ளெ பீத்தாகெ. பட்டிக்குள்ளெ பாத்தெ எல்லாத்தயு அத்துக்கார் உம்மாக்கிட்டெயும் மத்தாக்களுக்கிட்டெயுஞ் சொன்னா. எல்லாத்தயுங் கேட்டுப்புட்டு உம்மா சொன்னாகெ.

"வாப்பா ராசங்காக்காவெப் பாக்கத்தா பீத்திக்காகெ. அவருதா புலியயெல்லா சுடுவாரு"

அன்டெக்கி பின்னெரெமே ராசங்காக்கா வந்திட்டாரு. வரெக்குள்ளெ நல்லெ நீட்டாயிரிந்தெ ஒரு ரெட்டெக் கொழெல் தோக்கெயும் அவெரு எடுத்துக்கிட்டு வந்தாரு. பொறவு வாப்பாவும் ராசங்காக்காவும் பட்டிக்குப் போனாகெ. அவெகெ போனெ ஒடென்னெயெ உம்மா கியாத்து நபி அப்பா பேராலெ நெய்யத்து வெச்சாகெ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கியாத்து நபி அப்பாவே! எந்தெ வில்லங்கமுமில்லாமெ அந்தெ புலியெ கொன்டுப்புட்டு எங்கெடெ மாட்டெயும் குடும்பத்தெயும் காக்கிறதுக்கு அல்லாகிட்டெ துஆ செய்யுங்கெ. எல்லாம் நல்லெபடியா முடிஞ்சிரென்டாக்கா பத்துக் கொத்து அரிசியிலெ பால் புக்கெ காச்சி ஊருக்கெல்லாங் குடுப்பே."

பட்டிக்குள்ளெ போனெ ஒடென்னெயெ ராசங்காக்கா அந்தெ எடெத்தெ நல்லா ஆராஞ்சி பாத்தாரு. ஆத்துக்கு எதித்தெ பக்கமா இரிந்தெ காட்டுப் பக்கமா மாடு இழுபட்டுப் போனெ அடெயாளந் தெரிஞ்சிச்சி. எடெக்கெடெ எரெத்தமுங் காஞ்சி கெடெந்திச்சி. அந்தெ அடெயாளத்தெ வெக்கா வெச்சி அவெகெ ரெண்டு பேரும் மெல்லவா மெல்லவாப் போனாகெ. ஒள்ளுப்பந் தூரம் போனத்துக்குப் பொறவு வாப்பாதா அதெ மொதெல்லெ பாத்தாகெ. ஒரு விண்ணாங்கு மரத்துக்கு மேலெ, ரெண்டு கப்புக்கெடெயிலெ அந்தெ மாடு தொங்கிக்கிட்டு கெடெந்திச்சி. வாப்பா ராசங்காக்காடெ தோளெத் தொட்டு அதெக் காட்டினாகெ. அதெப் பாத்ததும் ராசங்காக்கா சொன்னாரு,

"ஹும்.... இரு பெரியெ சைஸ் காக்கா. இந்தப்பெரியெ மாட்டெ மரத்திலெ கொண்டு பீத்து வெச்சிரிக்கென்டா அரு நல்லெ பெரிசாத்தா இரிக்கு."

அந்தெ எடெத்தெ சுத்தும் முத்தும் நல்லா பாத்துப்புட்டு ராசங்காக்கா வாப்பாக்கிட்டெச் சொன்னாரு.

"காக்கா. புலி பன்வெட்டான் காட்டுக்குள்ளெ பீத்திரிக்கி. காலடியெப் பாத்தா அரு தனியனாத்தான் வந்திக்கி. அரு அந்தெ மாட்டெ விடியக் காத்தாலயிலதா புடிச்சிப் பீத்திரிக்கி. அரெத் திங்கெ ராவெக்கித்தா வரு"

பொறவு ராசங்காக்கா காத்து வீசிறெ தெசெயெப் பாத்தாரு. பாத்துப்புட்டு வாப்பாக்கிட்டெச் சொன்னாரு,

"காக்கா காத்து தெக்குப் பக்கமா வீசிரு. நம்மெ அந்தா அங்கின இரிக்கிறெ வேப்பெ மரத்துக்குப் பின்னாலெ பீத்து இரிப்போ. அருதா காத்துக்கு எதுக்கெ இரிக்கி. புலிக்கு நம்மெடெ மணெம் வெளெங்காரு."

வாப்பாவும் ராசங்காக்காவும் அந்தெ வேப்பெ மரத்துக்குப் பக்கத்திலெ பீத்து அந்தெ எடெத்தெ ஆராஞ்சி பாத்தாகெ. வேப்பெ மரத்தெ ஒட்டினாப்பலெ ரெண்டு பக்கத்திலெயும் பத்தெ வளந்திரிந்திச்சி. மரத்துக்குப் பின்னாலெ, ஒரு சின்னெக் குட்டெ இரிந்திச்சி. எல்லாத்தெயும் பாத்துப்புட்டு, ராசங்காக்கா சொன்னாரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரு நல்லெ பொருத்தமானெ எடெங் காக்கா. புலி பின்னாலெ இரிந்தெல்லா வராரு."

பொறவு ஊட்டுலெ இரிந்து கொண்டு வந்தெ சாமானெயெல்லாம் பத்தெக்குப் பக்கத்திலெ வெச்சிப்புட்டு, அவெகெ ரெண்டு பேரும் மரத்துக்குப் பின்னாலெ பீத்து இரிந்தாகெ. கட்டுச் சோறு, தண்ணிப்பானெ, வெத்திலெ பாக்கு, ஆறு கட்டெ லைட்டு, தோட்டாப்பொட்டி வெச்சிரிந்தெ சாக்குப்பை, தோக்கு எல்லாம் அங்ஙினெ இரிந்திச்சி.

ராசங்காக்கா தோக்கெ எடுத்து, அதுக்குள்ளெ ரெண்டு தோட்டாவெ போட்டாரு. போட்டுப்புட்டு வாப்பாக்கிட்டெச் சொன்னாரு,

"காக்கா, புலி இப்பெ வந்தாலும் வரும். இல்லாட்டிக்கி, ராப்பட்டத்துக்கு பொறவு வரு. நீங்கெ இந்தெ லைட்டெ வெச்சிக்கிங்கெ. நா சொல்லெக்குள்ளெ நீங்கெ புலிக்கு அடிச்சா போரும்."

இப்பெ மஹ்ரிபட்டு அந்தெ எடெம் முத்துலா இருட்டுபடத் தொவெங்கிட்டு. வாப்பாவும் ராசங்காக்காவும் சுத்திச் சுத்தி பாத்துக்கிட்டு இரிந்தாகெ. ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா இருட்டுக்கு கண் பழக்கப்படத் தொவெங்கிட்டு. நேரெம் போவெப் போவெ வெள்ளி உதிச்சி. அந்தெ எடெம் முத்துலா சாடெயானெ வெளிச்சம் தெரியெத் தொவெங்கிட்டு. அந்தெ வெளிச்சத்திலெ மரத்திலெ தொங்கிக்கிட்டிரிந்த மாடு, சுத்தெ வரெ உள்ளெ மரம் எல்லாம் நல்லா தெரிஞ்சிச்சி.

இப்பெ இருட்டொடெ சேந்தெ ஒரு கனெமான அமைதி அங்ஙினெ நெறெஞ்சி இரிந்திச்சி. சில்வண்டு, பூச்சி, எடெக்கெடெ ஆக்கட்டியெல்லாம் அங்காலெ இங்காலெ என்டு சத்தம் போட்டுக்கிட்டு இரிந்தாலும், அதெயெல்லா தாண்டி, பயம் வாறெமாரியானெ அமைதி அங்ஙினெ நெறெஞ்சிரிந்திச்சி. எடெக்கெடெ தூரத்திலெ நரி கத்திறெ சத்தம் கேட்டுக்கிட்டு இரிந்திச்சி.

"நரிச்சனியன் இஞ்செ வராமெ இரிந்திரணு."

ராசங்காக்கா ராசியமா சொன்னாரு.

நேரெம் பீத்துக்கிட்டே இரிந்திச்சி. எந்தெ ஊசாட்டமும் இப்பெ இல்லெ. புலி வாறெ சாங்கமே தெரியேலெ. வாப்பா லைட்டெப் பக்கத்திலெ வெச்சிப்புட்டு வெத்திலெ போடெத் தொவெங்கினாகெ. ராசங்காக்கா எல்லா எடெத்தயும் உத்துப்பாத்துக்கிட்டே இரிந்தாரு. எல்லா சத்தத்தயு கேட்டாரு. சடெக்கென்று ஆக்கட்டி ஒன்னு கத்திக்கிட்டு பறந்திச்சி. ஒள்ளுப்பந் தள்ளியிரிந்தெ பத்தைக்குள்ளெ அடெஞ்சிரிந்தெ கொக்கெல்லா செறெகடிச்சிக்கிட்டு பறெக்கத் தொவெங்கிட்டு. ராசங்காக்கா தோக்கெக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலெ எடுத்துக்கிட்டாரு.

"காக்கா. புலி வாறப்பலெ இரிக்கி."

வாப்பா லைட்டெக் கையிலெ எடுத்துக்கிட்டாகெ. வாய் வெத்திலெ சப்பிறதெ நிப்பாட்டிட்டு. ரெண்டு பேர்ரெ கண்ணும் பத்தெப்பக்கமே பாத்துக்கிட்டு இரிந்திச்சி. ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா பத்தெ அசெயிறெ சத்தம் கேட்டிச்சி. வரெ வரெ அந்தெச் சத்தம் ஒரெமா கேக்கெத் தொவெங்கிட்டு. ராசங்காக்கா தோக்கெத் தோளிலெ வெச்சிக்கிட்டு, வில்லேத்தினாரு. வாப்பாவும் லைட்டெத் தோளிலெ வெச்சிக்கிட்டு அதெ அசெயாமெப் புடிச்சாகெ.

வாப்பாதா அதெ மொதெல்லெ பாத்தாகெ. ஒரு ஈச்சம் பத்தெக்குப் பின்னாலெ இரிந்து அது எட்டிப் பாத்திது. அந்தெ இருட்டுக்குள்ளெயும் அதிடெ உருப்படி நல்லா தெரிஞ்சிது. அது ஒரு பெண்ணாம் பெரியெ புலி. ஒரு அளவானெ எருமெக் கன்ரெ சைஸிக்கு அது இரிந்திச்சி. வாப்பாடெ நெஞ்சி ஒரெமா அடிக்கெத் தொவெங்கிட்டு.

"ராசன் புலி வந்திட்டு."

வாப்பா ராசியமா சொன்னாகெ. ராசங்காக்காவும் அதெப் பாத்திட்டாரு. அவர்ரெ நெஞ்சும் ஓரமாத்தா அடிச்சிது. என்டாலு அவரு பயப்பிடேலெ. தோக்கெப் பெலெமா புடிச்சிக்கிட்டு குறி பாத்தாரு.

வெள்ளி வெளிச்சத்திலெ புலி என்ன செய்யிது என்டெதெ ரெண்டு பேராலயு நல்லா பாக்கெ முடிஞ்சிது. ஈச்சம் பத்தெக்கு பின்னாலெ இரிந்து எட்டிப் பாத்தெ புலி, இப்பெ பதுங்கிப் பதுங்கி முன்னுக்கு வந்திச்சி. ஒரு தரக்கம் அங்காலயும் இங்காலயும் பாத்தெ புலி, மாடு தொங்கிக்கிட்டு இரிந்தெ மரத்துக்கிட்டெ போவெத் தொவெங்கினிச்சி. மரத்தெ அடெஞ்சதும், மறுவாடியும் சுத்தும்பித்தும் பாத்துப்புட்டு, மரத்திலெ ஏறெத் தொவெங்கினிச்சி.

"காக்கா லைட்டெ அடிங்கெ."

ராசங்காக்கா ராசியமா சொன்னாரு. வாப்பா லைட்டெ அடிச்சாகெ. அது சரியா புலியிரெ தலெயிலெ பட்டிச்சி. திடீரெண்டு உழுந்தெ லைட் வெளிச்சத்தாலெ புலி திரும்பிப் பாத்திச்சி. அதிடெ கண் நெருப்புக் குண்டுமாரி செவெப்பு நெறெத்திலெ பயங்கரமா மின்னினிச்சி.

"டமார்"

மொதெலாவது வெடி அதிடெ கழுத்திலெ பட்டிச்சி. வெடி பட்டெ ஒடனிய புலி மரத்திலெ இரிந்து தரெயிலெ மல்லாக்கெ உழுந்திட்டு. மத்தெ வெடி அதிடெ வவுத்திலெ பட்டுது. புலி தலெயெ உளுப்பிக்கிட்டு எழும்பெ பாத்திச்சி. ஆனா அதுக்கு ஏலாமெப் பீத்திது. காலெ அடிச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுமிக்கிட்டு அது கொஞ்செ நேரம் துடிச்சிது. அதுக்கு பொறவு அதிடெ துடிப்பு அடெங்கிப் பீத்திது.

வாப்பாவும் ராசங்காக்காவு ம்ஒள்ளுப்ப நேரம் மரத்துக்குப் பின்னாலெயே இரிந்தாகெ. ரெண்டு பேர்ரெ நெஞ்சும் இப்பவும் சரியானெ வெசெயா அடிச்சிக்கிட்டுத்தா இரிந்திச்சி. ரெண்டு பேர்ரெ ஈரக்கொலெயும் காஞ்சி பீத்திது. வாய்க்குளெ ஒள்ளுப்பமுந் துப்பணி இல்லெ.

"வாங்கெ காக்கா பீத்து பாப்பம்".

சொல்லிப்புட்டு ராசங்காக்கா மரத்துக்குப் பின்னாலெ இரிந்து வெளியெ வந்தாரு. வாப்பாவும் பின்னாலெ வந்தாகெ. ஒரு கப்பிலெ தொங்கிக்கிட்டிரிந்தெ அரிக்கன் லாம்பெ வாப்பா கொளுத்தினாகெ. இப்பெ புலியெ நல்லா பாக்கெ ஏன்டுது. அதுடெ முன்னங்கால் மேலெ நீட்டியிரிந்திச்சி. வாய் பொளெந்தெபடி இரிந்திச்சி. கண் இப்பெயும் முழிச்சமாரித்தா இரிந்திச்சி. ராசங்காக்காடெ மொகத்திலெ நல்லெ சந்தோசம். வாப்பாக்குஞ் சந்தோசமாவும் நிம்மதியாவும் இரிந்திச்சி.

"காக்கா நம்மெ சொணெங்கப்படாரு. இப்பவே எல்லா வேலெயெயும் முடிச்சிரணு"

ரெண்டு பேரும் கெரிகெரியா வேலெயெ தொவெங்கினாகெ. ராசங்காக்கா புலியிரெ பின்னங்கால்ரெ குதிநரம்புக்கு பக்கத்திலெ கத்தியாலெ ஒரு ஓட்டெ போட்டாரு. பொறவு ரெண்டு பேருமாச் சேந்து புலியெ தூக்கி, ஒரு பெலெமானெ மரக்கந்திலெ தொங்கெ உட்டாகெ. அதுக்கு பொறவு ராசங்காக்காதா மத்தெ வேலெயெல்லாஞ் செஞ்சாரு. மொதெல்லெ புலியிரெ தோலெ உரிச்சி எடுத்தாரு. பொறவு அதிடெ பல்லு, நகம் எல்லாத்தையும் வெட்டி வெட்டி எடுத்தாரு. பொறவு வவுத்தெ வெட்டி ஈரெல் கொலெயெ அப்படியே எடுத்தாரு. ஒரு பெரிய சமுளெ எலெயெ பிச்சி அதிலெ அந்தெ ஈரெல் கொலெயெ வெச்சி சுத்தினாரு.

"காக்கா. எல்லாஞ் சரி. இனிமெ புலியெ ஆத்திலெ கொண்டு பீத்து போடுவோ. மொதெலெயெல்லா ராவெயொடெயே அதெத் தின்டுபுடு."

ரெண்டு பேருமாச் சேந்து புலியெ இழுத்துக்கிட்டு பீத்து ஆத்திலெ போட்டாகெ. எல்லாம் முடிஞ்செ ஒடென்னெயெ ராவுராவா ரெண்டு பேரு வள்ளத்திலெ ஏறி ஊட்டெ வந்து சேந்திட்டாகெ. புலியிடெ தோல், அதிடெ பல், நகம், ஈரல் எல்லாத்தயும் ராசங்காக்காவே கொன்டு போனாரு. வாப்பா ஒன்னெயும் எடுக்கேலெ.

உம்மாக்கென்டா கடுஞ் சந்தோசம். அந்தெ ராவுலெயே உம்மா வாப்பாக்கிட்டச் சொன்னாகெ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்செ, நம்மெ கறெக்கிறெ மொரெல் பால்லயே புக்கெ ஆக்கி பாத்தியா ஓதிப்புடணு."

அடுத்தெ நாத்து வாப்பாவும் அத்துக்காரும் பட்டிக்குப் பீத்து, அங்கெ இங்கெயெல்லா நின்டுக்கிட்டிரிந்தெ மாட்டெயெல்லா சாச்சி வந்து பட்டியிலெ சேத்தாகெ. புதுசா கம்பெல்லாம் நாட்டி காளெயெ கட்டினாகெ. அதுக்குப் பொறவு மத்தெ நாத்து கறந்து வந்தெ பாலெயெல்லா எடுத்துக்கிட்டு எல்லாரும் பக்கீரப்பா கபுரடிக்கு போனாகெ. அங்கெ பெரியெ கிடாரத்திலெ பால்புக்கெ காச்சி ஊரிலெ இரிந்தெ எல்லாருக்கு குடுத்தாகெ.

• • •

பட்டிக்குப் பீத்து வரெக்குள்ளெ வாப்பா அத்துக்காருக்கிட்டெ கனெக்கெச் சங்கதியெல்லாங் கதெப்பாகெ. வாப்பாடெ வாப்பா, அவெகெடெ வாப்பாவெல்லாம் எப்பிடி இரிந்தாகெ, கஸ்டப்பட்டாகெ என்டெதெப் பத்தியெல்லாஞ் சொல்லுவாகெ.

"தம்பி, நம்மடெ குடும்பந்தான்டா இந்தெ ஊருக்கு மொரெமொரெல்லெ வந்தெ. அவெகெ இந்தெ ஊருக்கு வாறெத்துக்கு முந்தி கெங்கெயிலெதா இருந்தாகெ. கெங்கெயிலெதா நம்மடெ வங்கிசமே பொறந்து வளெந்திச்சாம். ஒரு தரக்கம் அங்ஙினெ தண்ணியில்லாமெ பீத்துதாம். அப்பெ எங்கெடெ பழெயெ ஆக்கள்லெ ஒரு காக்காவுந் தம்பியும் இந்தெ ஊருக்கு வந்து, குடியேறினாகலாம். அவெகெ ஆடு, மாடு வளெக்கிறெ தொழில்தாஞ் செஞ்சி வந்திக்காகெ. அதாலெ முந்தியிருந்தே நம்மடெ குடும்பம் இந்தெ பால்தொறெ, பன்வெட்டான் பக்கந்தா இரிந்து, தொழில் செஞ்சிக்காகெ. அப்பெ இங்ஙினெ எல்லாங் காடுதானாம். பொறவுதான் காடு வெட்டி இப்பெ இரிக்கிறெ இந்தெ ஊர் வந்திச்சாம். எங்கெடெ வாப்புச்சி இந்தெ பால்தொறெயிலெயே இரிந்திட்டாகெ. அவெகடெ தம்பி ஊருக்குள்ளெ குடியேறிட்டாகெ. நம்மடெ குடும்பத்தெச் சேந்தாக்கள் இங்ஙினெ வந்து குடியேறி, கனெகாலத்துக்குப் பொறவுதான் மத்தாக்கள் இந்தெ ஊருக்கு வந்தாகலாம்."

"தம்பி எங்கெடெ வாப்பாடெ தம்பி நல்லெ வடிவுடா. அவெகெடெ பேர் வெள்ளெத்தம்பி. அவெகெ சுத்துலும் வெள்ளெக்காரன்மாரியே இரிப்பாகெ. அவெகெ சின்னப் புள்ளெயா இரிக்கக்குள்ளெ ஒரு தரக்கம் வெள்ளெகாரத் தொரெயும் அவென்டெ பொஞ்சாரியும் நம்மெடெ ஊருக்கு வந்தாகலா. அப்பெ அவெகெளெப் பாக்கெ ஊராக்கவெல்லாம் போனாகலா. எங்கெடெ வாப்பு, சின்னாப்பாவெயுந் தூக்கிக்கிட்டு பீத்திரிக்காகெ. தொரெயிடெ பொஞ்சாரிக்கு சின்னாப்பாவெ பாத்தெ ஒடென்னெயெ புடிச்சிப் பீத்திச்சா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவெகெளெ தூக்கி வெச்சிக்கிட்டாவா. புள்ளெய தாறிங்களா என்டு வாப்புக்கிட்டெ கேட்டாவா. ஆனா வாப்பு குடுக்கேலெ. கனெ சாமத்துக்கு தொரெயிடெ பொஞ்சாரி சின்னாப்பாவெ தூக்கி வெச்சிரிந்தாவா. பொறவு அவெகெ போவெக்குள்ளெ எங்கெடெ குடும்பத்துக்கிட்டெ இரிந்து வரி எடுக்கப்படாரு என்டு இஞ்செ இரிந்தெ பெரியாளுக்கிட்டெ வெள்ளெக்காரெத் தொரெ உத்தரவு போட்டுப்புட்டு போனாராம். அருக்குப் பொறவு நாங்கெ வரி குடுக்கிறெதில்லெ. யாரென்டாலும் பெரியாக்கள் நம்மடெ ஊருக்கு வந்தா எங்கெடெ வாப்புச்சிரா அவெகளுக்கு ஆடு அறுத்து சாப்பாடு குடுப்பாகெ. வெள்ளெத்தம்பிச் சின்னாப்பா ஒரு அளவானெ வயசா இரிக்கக்குள்ளெயெ மௌத்தா பீத்தாகெ. இப்பிடித்தா பட்டிக்கு பீத்துப்புட்டு வரெக்குள்ளெ நெஞ்சிக்குள்ளெ நோவுரு என்டு சொல்லிப்புட்டு ஒரு மரத்துக்குக் கீழெ இரிந்தாகலா. பொறெவு அங்ஙினிக்குள்ளெயெ மௌத்தாப் பீத்தாகலா."

"தம்பி, கோட்டயாத்து கெணெத்துக்கு முன்னாலெ ஒரு பெரியெ புளியெ மரம் இரிக்கில்லவா. அருக்குள்ளெ இரிந்தெ பெரியெ பொந்துக்குள்ளரா ஒரு வெள்ளெக்காரெ ஓடி வந்து ஒளிச்சானாம். அப்பெ எகெலப்பொலரா ராசாவா இரிந்தானா. அவென்டெ படெதா அந்தெ வெள்ளெக்காரனெ தொரெத்திக்கிட்டு வந்திச்சாம். அந்தெ நேரெத்திலெ நம்மடெ குடும்பத்தெ சேந்தெ ஒரு பொம்புளெப் புள்ளெ கெணெத்திலெ தண்ணியள்ளெ வந்திக்கா. புளியெ மரத்து பொந்துக்குள்ளெ அந்தெ வெள்ளெக்காரெ ஒளிச்சத்தெ அந்தெ புள்ளெ பாத்திக்கா. அந்தெ நேரெத்திலெ எகெலப்பொலெயிரெ ஆக்களும் அங்ஙினெ வந்திட்டானொளா. வந்து இவக்கிட்ட இங்காலப் பக்கம் ஒரு வெள்ளெக்காரன் வந்தானா என்டு கேட்டானொளா. அவக்கு அந்தெ வெள்ளெக்காரனெ காட்டிக் குடுக்கிறத்துக்கு மனமில்லியா. அருக்காக பொய் சொல்றத்துக்கு விரும்பேலியாம். அராலெ அவ ஒன்னுஞ் சொல்லாமெ சும்மா நின்டுக்கிட்டு இரிந்தாவா. அருக்கு பொறவு எகெலப்பொலேயிரெ ஆக்கள் அங்காலயும் இங்காலயும் தேடிப் பாத்து, மரப் பொந்துக்குள்ளெ ஒளிச்சிக்கிட்டு இரிந்தெ அந்தெ வெள்ளெக்காரனெப் புடிச்சிக்கிட்டு பீத்தானொளாம்."

## 4

மனாபு ஊருக்கு வந்திரிந்தா. கனெ காலத்துக்கு பொறவு இப்பதா அவெ ஊருக்கு வந்திக்கா. பள்ளிக்கொடத்திலெ அவெனுக்கு கடெசிச் சோதினெ முடிஞ்சிட்டாம். அதாலதா போனெ லீவுக்கு ஊருக்கு வராமெ அங்ஙினெயெ நின்டு படிச்சா. அவெ இப்பெ நல்லெ ஒசெரமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளந்திரிந்தா. ஆனா எல்லாத்தையும் பாக்கெ முக்கியமானெ சங்கதி என்னென்டா, அவெ தலெமுடி வளத்திரிந்தா. ஊரிலெ அது ஒரு பெரியெ பிரெச்சினயா பீத்திது. ஊரிலெ இரிக்கிறெ ஆம்பிளெயெல்லா மொட்டெ அடிச்சி இரிக்கக்குள்ளெ இவெ மத்திரம் எப்பிடி கிராப்பு வெக்கலா? ஒடனடியா பள்ளிவாசல் மத்திசமார் கூடிட்டாகெ.

பள்ளிவாசல்ரெ முன்திண்ணயிலதா எல்லாரு கூடியிரிந்தாகெ. வாப்பு மரெக்கார், நெயினாக்குஞ்சி காக்கா, குப்பத்தம்பி வட்டவிதா, தூள்புட்டு பிச்செத்தம்பி காக்கா, ஒத்தெவெட்டு சின்னத்தொரெ என்டு மத்திசமார் எல்லாரு வந்திரிந்தாகெ. அவெகெ பாய் விரிச்சி நடுவிலெ இரிக்கெ, ஊராக்கள் அவெகெளெச் சுத்தி வெறுந்தரெயிலெ இரிந்தாகெ. எளெந்தெரெவெளிப் பொடியனொளு பள்ளிவாசலுக்கு வெளியிலெ நின்டுக்கிட்டு இரிந்தானொளு. இவெகளுக்கு எடெயிலெ சின்னப் பொடியமார் பூந்து பொறப்பட்டு, அங்ஙினெ நடக்கிறத்தப் பாக்கிறதுக்கு எடெந்தேடி திரிஞ்சானொளு.

"நெத்தலி குஞ்சாட்டம் இரிந்துக்கிட்டு பாரு நெரிக்கித் தள்றத்தெ."

"டேய் இஞ்சாலெ வராரடா. அங்காலெ போ"

பள்ளிவாசலுக்கு வெளியிலெ ஒரே நெருக்கடியாவும் எரெச்சலாவும் இரிந்திச்சி.

"எல்லாருஞ் சத்தம் போடாமெ இரிங்கெ."

வாப்பு மரெக்கார் சத்தம் போட்டு கத்தினாரு.

"இன்டெக்கி நம்மெ ஒரு முக்கியமானெ விசெயமா கரெக்கெ போறெம். நம்மடெ சீனிக்கண்ட்ரெ பெயெல் மனாபு கிராப்பு வளத்திக்கா. இது நம்மடெ ஊர் வளக்கத்திலெ இல்லெ. அராலெ அவெனெ கூப்புட்டு விசாரிக்கணும்"

"காக்கா, நீங்க சொல்றது சரிதா. நம்மடெ ஊர் வளக்கத்துக்கு மாத்தமா யாரும் நடெக்கப்படாரு. அராலெ இப்பவே அவெனெ கூப்பிட்டு விசாரிச்சி மொட்டெ அடிக்கெ வெக்கணும்" ஒத்தெவெட்டு சின்னெத்தொரெ சரியானெ கோவெத்திலெ சொன்னாரு.

"அரானெ, ஊரிலெ எல்லாரு கிராப்பு வெக்கெத் தொவெங்கினா நம்மடெ ஒஸ்தாடெ நெலெமெ என்னாவுறெ? அவெருக்கு ஒளெப்பே இல்லாமெ பீத்துருமே" குப்பத்தம்பி வட்டவிதானயார் சொன்னாரு.

"அவெர்ரெ ஒளெப்புக்கு எங்கெடெ தலெதானா கெடெச்சிரு?" வெளியாலெ நின்டுக்கிட்டிரிந்தெ எளெந்தாரி பொடியனொள்றெ பக்கத்திலெ இரிந்து யாரோ இப்பிடிச் சொல்லெ, அங்ஙினெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியெ சிரிப்பு சத்தம் கேட்டுது.

"இஞ்செ! சின்னாக்கள் யாரும் இங்ஙின கரெக்கப்படாரு. அரெப் பத்தி பெரியாக்கள்தா கரெச்சி முடிவெடுப்பாகெ." வாப்பு மரெக்கார் அதட்டிச் சொன்னாரு. பொறவு நெயினாக்குஞ்சி காக்காவெயும் பிச்செத்தம்பி காக்காவெயும் பாத்து சொன்னாரு.

"நீங்கெ ரெண்டு பேரும் பீத்து சீனிக்கண்டெயு அவென்டெ பெயெலெயு இங்ஙினெ கூட்டிக்கிட்டு வாங்கெ"

ரெண்டு பேரு சீனிக்கண்டு சின்னாப்பாடெ ஊட்டெ போனாகெ. அவெகளுக்கு பொறத்தியாலெ சின்னெப் பொடியங்களுஞ் சத்தம் போட்டுக்கிட்டு போனானொளு.

செத்தெ சாமத்துக்கு பொறவு சின்னாக்கள் பொறத்தியாலெ வரெ, சீனிக்கண்டு சின்னாப்பாவும், மனாபும் பள்ளிவாசலுக்கு வந்தாகெ. சின்னப் பொடியனொளெல்லாம் வாயெப் பொளெந்துக்கிட்டு மனாபுடெ தலெமுடியயே பாத்துக்கிட்டு வந்தானொளு. எளெந்தாரிப் பொடியனொளுக்கு மனாபுடெ தலெயப் பாக்கெ கடும் ஆச்சரியமாத்தா இரிந்திச்சி. அவென்டெ தலெமுடி நல்லெ கறுப்பா, அலெஅலெயா இரிந்திச்சி. அதுக்கு எண்ணெ போட்டு, படியெ வாந்திரிந்தா. வெயில் படக்குள்ளெ தலெமுடி பளபளென்டு மின்னினிச்சி. சீனிக்கண்டு சின்னாப்பாவும், மனாபும் காலெக் கழுவிக்கிட்டு பள்ளிவாசலுக்குள்ளெ வந்தாகெ. வந்து திண்ணயிலெ ஒரு ஓரெமா நின்டாகெ.

செத்தெ சாமத்துக்கு அங்கினிக்குள்ளெ ஒரு சத்தமுங் கேக்கேலெ. பொறவு வாப்பு மரெக்கார் சொன்னாரு.

"இஞ்செப் பாரு சீனிக்கண்டு. நம்மடெ ஊரு வளக்கம் ஒனக்கு தெரியுந்தானெ. ஒன்டெ பொடியனெ காபிர்ரெ பள்ளிக்கொடத்துக்கு பெரியெ படிப்புப் படிக்க வெக்கெ நீ புளியந்தீவுக்கு அனுப்பினருக்கு நாங்கெ ஒன்னுஞ் சொல்லேலெ. இப்பெ என்னடான்டா ஒன்டெ பெயெல் கிராப்பு வெச்சிக்கிட்டு வந்திரிக்கான். அரு நம்மடெ ஊருக்கு மாத்தமானெ விசெயம். அராலெ ஒடெனடியா நம்மடெ ஒஸ்தாவெ கூப்பிட்டு அவெனுக்கு மொட்டெ அடிச்சுடு."

"அரு காக்கா அவெ வேணுமென்டு கிராப்பு வெக்கேலெ. இப்பெ அவெ பெரியெ வகுப்பு படிக்கிறா. அவென்டெ வகுப்பிலெ எல்லாரு கிராப்புத்தா வெச்சிரிக்கானொளா. அராலெ இவெனயு வெக்கெச் சொல்லியிரிக்காகெ." சீனிக்கண்டு சின்னாப்பா மருவாதியொடெ சொன்னாகெ.

"அரெல்லாம் எங்களுக்கு தெரியா. நம்மடெ ஊர் வளக்கத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தமா யாரும் நடக்கப்படா." ஒத்தெ வெட்டு சின்னெத்தொரெ சத்தம் போட்டு சொன்னாரு.

"நானா, என்னெப் பிழையா நினைக்காதீங்க. நான் வேணுமென்டு முடி வளக்கேலெ. அந்த ஸ்கூல்ல கட்டாயமா முடி வளர்க்க வேணும் என்டு ஓர்டர் போட்டுட்டாங்க. அதனாலதான் நான் வளர்க்க வேண்டி இருக்குது." மனாபு இப்பிடி சொன்னதும், அந்தெ எடெத்திலெ ஒள்ளுப்ப நேரத்துக்கு ஒரு சத்தமும் கேக்கேலெ. எல்லாரு கொழெம்பிப் பீத்து, ஆளெயாள் பாத்தாகெ.

'இவெ என்ன பாசெயிலெ கரெக்கிறா?'

வாப்பு மரெக்கார் சொன்னாரு.

"பாத்தியா சீனிக்கண்டு ஒன்டெ பெயெலெ. அவெஞ் சுத்துலும் தம்மளவெமாரியே கரெக்கப் பளவிட்டா. இருக்குத்தா அவனெப் படிக்கெ உடெக்குள்ளெயெ நாங்கெ எல்லாரும் விருப்பமில்லாமெ இரிந்தெ. இப்பெ பாத்தியா, அவெ கிராப்பு வளத்தருமில்லாமெ தம்மளவெனாட்டம் கரெக்கவு பளவிட்டா"

அதுக்கு பொறவு எளெந்தாரிப் பொடியனொளு கூர்றெ எடெத்திலெயெல்லாம், "என்னெப் பிழையா நினைக்காதீங்கெ" என்டெ வாத்தெயெச் சொல்லி சொல்லி சிரிச்சிக்கிட்டேயிரிந்தானொளு. மனாபு மத்திரமில்லெ, அவென்டெ குடும்பத்தாக்களு ஒள்ளுப்ப ஒள்ளுப்பமா தமிழாக்கள்மாரி கதெக்கத் தொவெங்கிட்டாகெ. அதிலெயு மனாபுடெ மூத்தெ தங்கச்சி சுத்துலு தமிழாக்கள்மாரியே கதெக்கப் பளவிட்டா. மனாபு லீவுளெ வரெக்குள்ளெ அவெனொடெ கதெச்சிக் கதெச்சி அவவு தமிழாக்களாட்டமே கதெக்கெ தொவெங்கிட்டா.

மனாபு மொட்டெ அடிக்கேலெ. மத்திசமாரும் அதுக்கு பொறவு அதெப் பெரியெ விசெயமா எடுக்கேலெ. ஒள்ளுப்ப ஒள்ளுப்பமா ஊரிலெ இரிந்தெ எளெந்தாரி பொடியனொளு கிராப்பு வெக்கெத் தொவெங்கிட்டானொளு. மொதெல்லெ கிராப்பு வெட்ரத்துக்கு காளிராசா அம்பட்டன்டெ கடெக்கித்தா போனானொளு. வேறெ வழியில்லாமெ ஒஸ்தாக் காக்காவும் கிராப்பு வெட்டெப் பழகிட்டாரு. இப்பயெல்லா கனெக்கெ ஆக்கள் ஒஸ்தாக் காக்காக்கிட்டயு கிராப்பு வெட்டெ தொவெங்கிட்டாகெ.

• • •

சீனிக்கண்டு சின்னாப்பா பெரிய ஊடொன்னு கட்டினாகெ. அந்தெ ஊரிலெயே அதா பெரியெ ஊடு. நடுவுலெ பெரியெ திண்ணெயும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டு பக்கத்திலெயும் ரெண்டு ரெண்டு அறெயுமா அந்தெ புரு ஊடு பென்னாப் பெரிசா இரிந்திச்சி. ஊட்டுக்குள்ளயே பின்பக்கமா குசினியு கட்டினாகெ. ஊடு கட்டி முடியிறெ வரெக்கு சீனிக்கண்டு சின்னாப்பா மேசெனொடேயே நிண்டாகெ. மேசென்டெ விருப்பப்படி அவெகெ ஒன்னுஞ் செய்யெ உடேலெ. சீனிக்கண்டு சின்னாப்பா சொன்னமாரித்தா சின்னக்குட்டி மேசென் ஊட்டெ கட்டினா. செலெ நேரெத்திலெ கட்டினத்தெ ஒடெச்சி, மறுவாடியும் புருசா திருப்பி கட்டெ வேண்டியும் வந்திச்சி. சின்னக்குட்டி மேசெனுக்கு வாணான்டு பீத்திது. ஆனா ஒன்டு. சீனிக்கண்டு சின்னாப்பா பாத்தும் பாக்காமயு, மேசெனுக்கு நல்லா கூலி குடுத்தாகெ. அராலெ அவெகெ குடுத்தெ எல்லா கக்கிசத்தையும் பொறுத்துக்கிட்டு அவெ ஊட்டெ கட்டி முடிச்சா.

சீனிக்கண்டு சின்னாப்பாடெ புரு ஊட்டெப் பத்தித்தா ஊரெல்லா கதெ. எல்லாரு பீத்து பீத்து அந்தெ ஊட்டெ பாத்தாகெ. அதெப் பாத்தெ ஒத்தருக்கும் அதெ நம்பேலாமெ பீத்திது. எம்புட்டு பெரியெ ஊடு! ஊட்டுக்குள்ளேல்லவா குசினியெ வெச்சி கட்டிக்காரு! தனியத்தனியெ நாலு அறெ! அந்தெ ஊருலெ அது ஒரு பெரியெ சங்கதிதா. அங்கெ இரிந்தெ கல்லூடெல்லா ஒன்னுக்கு பின்னாலெ ஒன்னு என்டு மூனு அறெ ஊடாத்தா இரிந்திச்சி. முன்னுக்கு ஒரு திண்ணெ, நடுவுலெ ஊடு, பின்னுக்கு ஒரு பொறெத்திண்ணெ. குசினி தனியெ, வேறெயா இரிக்கும். இப்பிடித்தா இம்புட்டு காலமா அங்கெ கல் ஊடு கட்டியிரிந்தாகெ. ஆனா இப்பெ சீனிக்கண்டு சின்னாப்பா எல்லாத்தயும் மாத்திப்புட்டாகெ.

சீனிக்கண்டு சின்னாப்பாக்கு வெள்ளாமெ நல்லா வெளெஞ்சிச்சி. ஒவ்வொரு செய்கெக்கும் அவெகளுக்கு அம்பது அறுவது அவனம் நெல்லு மிச்சப்பட்டுது. புரு ஊட்டுலெ ரெண்டு அறெ நெறெயெ எப்பவும் நெல்லுச் சாக்கு அடுக்கியிரிக்கு. அதெப்போலெ அவெகெடெ ஆட்டுப் பட்டியும் நல்லா பெருகிட்டு. வெளி ஊரிலெ இரிந்தெல்லாம் ஆடு வாங்கிறத்துக்கு ஆக்கள் வந்தாகெ. இப்பெ சீனிக்கண்டு சின்னாப்பா ஊரிலெ பெரிய பணக்காரனா பீத்தாகெ. அவெகளெ பள்ளிவாசல் மத்திசத்திலயும் ஓராளாச் சேத்திட்டாகெ.

• • •

**ஊ**ர் முத்துலும் தொறெயடிக்கு வந்திட்டு. எல்லார்ரெ மொகெத்திலயுஞ் சந்தோசம். சீனிக்கண்டு சின்னாப்பாடெ வத்தெ இன்டெக்கித்தா மொதெமொதெல்லெ கடெல்லெ போப்போவுது. ரெண்டு மாசத்துக்கு முந்தி, சீனிக்கண்டு சின்னாப்பா யாழ்ப்பாணத்திலெ இரிந்து இந்தெ வத்தெயெ வேங்கி வந்தாகெ. இந்தெ ரெண்டு மாசமா அதெத் திரித்தி, கலர் அடிச்சி புரு வத்தெயாட்டம் ஆக்கிட்டாகெ. சாணாம்பிப் பச்செ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலெர்லெ அந்தெ வத்தெ பாக்கெ சோக்கா இரிந்திச்சி. அது சரியானெ பெரிய வத்தெ. அதுடெ முன்பக்கத்திலெ நல்லெ நீட்டா, தடிப்பா பாய்கம்பு நாட்டியிரிந்திச்சி. இப்பெ அதுலெ பாய் ஏத்தியிரிந்தாகெ. கச்சான் காத்து படைப்படை அந்தெ பாய் படக்கு படக்கென்டு விரியிரெ சத்தம் எல்லாருக்கும் கேட்டிச்சி.

வத்தெக்குள்ளெ செங்கக்கல்லும், சட்டி, பானெயும் ஏத்தியிரிந்திச்சி. ஒரு பக்கமா கனெக்கெ நெல்லுச் சாக்கு அடுக்கியிரிந்திச்சி. குஞ்சாலிமிசாதா பாத்தியா ஓதினாரு. ஓதி முடிஞ்செ ஒடெனெ சீனிக்கண்டு சின்னாப்பா பிஸ்மில்லா சொல்லி வத்தெக்குள்ளெ வலது காலெ வெச்சி ஏறினாகெ. அவெகெளுக்கு பொறெத்தியாலெ மனாபு, மத்திசமாரானெ ஒத்தெவெட்டு சின்னத்தொரெ, தூள்புட்டு குஞ்சித்தம்பி, குப்பத்தம்பி வட்டவிதா, மம்மது முதாரு தண்டெயல் என்டு எல்லாரு ஏறினாகெ. அதுக்குப் பொறவு கட்டெ அவுத்துப்புட்டு, வத்தெயிலெ வேலெ செய்யிறெ ஆக்கள் ஏறினாகெ.

"அல்லாஹு அக்பர்"

வத்தெக்குள்ளெயும் கரெயிலெயும் நின்டெ ஆக்கள் எல்லாருமா ஒரேநேரெத்திலெ தக்பீர் சொல்லெ, வத்தெ மெதுமெதுவா ஓடெத் தொவெங்கினிச்சி. ஒரு நீட்டுக் கம்பாலெ மம்மது முதாரு தண்டெயல் குத்திகுத்தி உடெ, அந்தெ வத்தெ மெதெந்து மெதெந்து சென்டிச்சி.

வத்தெ வாங்கிறெ எண்ணம் சீனிக்கண்டு சின்னாப்பாக்கு மொதெல்லெ இரிக்கேலெ. ஆனா அவெகெளுக்கிட்டெ ஆடு வேங்கெ வாறெ நல்லையா மொதெலாளிதா வத்தெ வேங்குங்கெ என்டு சின்னாப்பாக்கிட்டெச் சொன்னாரு. மாசத்துக்கு ஒரு தரக்கம் யாழ்ப்பாணத்திலெயிரிந்து கொட்டியாரத்துக்கு வத்தெ கொண்டு வாறெ நல்லையா மொதெலாளி, சீனிக்கண்டு சின்னாப்பாவொடெ நல்லெ கூட்டாளியாப் பீத்தாரு. அவெரு இஞ்செ வாறெ நேரெத்திலெ சின்னாப்பாடெ ஊட்டுலெதான் தங்கிறெ. அப்பிடி ஒரு தரக்கம் தங்கக்குள்ளதா, சீனிக்கண்டு சின்னாப்பாக்கிட்ட அவெரு இப்பிடி சொன்னாரு,

"இங்கெ பாரும் சீனிக்கண்டு. திருக்குணாமலைக்கும் கொட்டியாரத்துக்கும் இடையிலெ சாமான் ஏத்தி, இறெக்கிற வத்தைகள் காணாதப்பா. உம்மக்கிட்டதான் நல்லெ வசதி இருக்குதில்லே. பேசாமெ ஒரு வத்தெய வாங்கி ஓடெவிடும். கனக்க யோசியாதையும். நான் உமக்கு ஒருநல்ல வத்தெ வாங்கி தாறன்"

சொன்னமாரி நல்லையா மொதெலாளிதா எல்லா வேலெயுஞ் செஞ்சி முடிச்சாரு. ஒரு தரக்கம் செங்கக்கல் ஏத்திறதுக்கு கொட்டியாரத்துக்கு வந்து போவெக்குள்ளெ சீனிக்கண்டு சின்னாப்பாவெயும் யாழ்ப்பாணத்துக்கு கூட்டிப்பீத்து இந்தெ வத்தெயெ வாங்கி குடுத்தாரு. வத்தெ வாங்கிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தெ கையோடெயெ செல்லெத்தம்பி மொதெலாளியிடெ வத்தெயிலெ தண்டெயலா இரிந்தெ மம்மது முதாரு தண்டெயலுக்கிட்டெப் பேசி, வத்தெய அவருக்கிட்டெ பொறுப்புக் குடுத்திட்டாகெ.

## 5

சீனிக்கண்டு சின்னப்பா மக்கத்துக்கு போறதுக்கு முந்தியே அத்துக்கார்டெ வாப்பா மௌத்தாப் பீத்தாகெ. அவெகெடெ மௌத்து லேசாத்தா இரிந்திச்சி. அவெகெ மௌத்தாப் போவெக்குள்ளெ ஒரு கஸ்டமும்படேல்லெ. அது பட்டிக்கு போவாதெ காலம். கன்டெல்லாம் முதியானாப் பீத்திது. அதாலெ கிடாமாட்டயெல்லா ஒழெவடிக்கெ உட்டுப்புட்டு, மிஞ்சியிரிந்தெ மாட்டெயெல்லா ஆத்தாலெ பாச்சி, பால்தொறெச் சேனெக்குள்ளெ கொண்டு வந்து மேயெ உட்டிரிந்தாகெ. அதாலெ இப்பெ ஒத்தரும் பால் தொறெயிலெ இரிக்கேலெ. ஊருக்குள்ளெ இரிந்தெ ஊட்டுலதா இரிந்தாகெ. ஒரு நாள் காத்தாலெயோடெ அந்தெ மாட்டெயெல்லாம் மேச்சலுக்கு உட்டுப்புட்டு ஊட்டெ வந்தெ வாப்பா நெஞ்சி நோவுதென்டு சொன்னாகெ. வாயுவா இரிக்கலாமென்டு நெனெச்சி, உம்மா வெள்ளெ வெங்காயத்தெ புழுக்கிக்கிட்டு வந்து பாக்கக்குள்ளெ வாப்பா பாயிலெ படுத்தமாரியே மௌத்தா பீத்திரிந்தாகெ.

வாப்பா மௌத்தாப் போவெக்குள்ளெ அத்துக்காருக்கு பத்தொம்பது வயசி. அவெனோடெ ஒடனொத்தாக்களெல்லாங் கலியாணம் முடிச்சிட்டாகெ. ஆனா அத்துக்கார் இன்னுங் கலியாணம் முடிக்கேலெ. அவெனுக்கு மூனு தம்பிமாரும் மூனு தங்கச்சிமாரும் இரிந்தாகெ. மூத்தெ தங்கச்சி ஓமறு நாச்சியாக்கு பதினாறு வயசாப் பீத்திது. அவக்கு இன்னுங் கலியாணம் முடிக்கேலெ. அடுத்தெ தங்கச்சி செயினம்புக்கு பதினாலு வயசி. இப்பெ வாப்பாவு மௌத்தா பீத்திரிக்கக்குள்ளெ ஒரு தங்கச்சிக்காவது கலியாணம் முடிச்சிக் குடுக்கணு. அதுக்கு பொறவுதா அத்துக்கார்ரெ கலியாணத்தப் பத்தி யோசிக்கலா.

உம்மா இத்தா இருந்து எழும்பினத்துக்கு பொறவுதா, ஓமறு நாச்சியாம்க்கு மாப்பிளெ பாத்தாகெ. புரு ஊடு கட்டி, நகெ, நட்டு வாங்கி, கலியாணத்தெயு முடிக்கிறத்துக்கு கனெக்கெக் காசி தேவெப்பட்டிச்சி. சீனிக்கண்டு சின்னாப்பாக்கிட்டெயும், மத்தச் சொந்தக்காராக்களுக்கிட்டெயும் ஒள்ளுப்பங் கடன் வேங்கி, ஓமறு நாச்சியாடெ கலியாணத்தெ நல்லெ செறெப்பா செஞ்சி முடிச்சாகெ. அத்துக்கார்தா எல்லாத்தெயு முன்னின்டு செஞ்சா. கலியாணம் முடிஞ்சி மூனா நாத்து பொண்ணலெச்சி போனத்துக்கு பொறவு காட்டுக் கட்டிலிலெ, தலெக்குக் கீழெ கையெ வெச்சி படுத்தமாரி அத்துக்கார் யோசிச்சிக்கிட்டு இரிந்தா. கையிலெ இரிந்தெ காசெல்லா முடிஞ்சிட்டு. இனி புருசா மொதெல்லெ இரிந்து எல்லாத்தயுந் தொடெங்கணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னு ரெண்டு தங்கச்சிமார் இரிக்கிதொளு. அதொளுக்கும் ஊடு கட்டி, நகெயெல்லா வாங்கணு. பட்டியாலெ வாறெ வரும்படியெக் கொண்டு இதெல்லாத்தெயு ஒப்பேத்தேலா. புருசா வேறெ ஏதாவது தொழில் செஞ்சாத்தாஞ் சரி.

காட்டுக் கட்டிலிலெ வானெத்தெப் பாத்தமாரி படுத்துக் கெடெந்தெ அத்துக்கார்ரெ மனசிலெ கனெக்கெ ரோசினெ வந்து பீத்திக்கிட்டிரிந்திச்சி. வானெத்திலெ நெலெவு வந்திட்டு. ஓமறு நாச்சியாடெ கலியாணத்தெ சரியா பதினாலாம் பொறெயிலதா நடெத்தியிரிந்தாகெ. இப்பெ தேய் பொறெ. இந்தெ நேரெத்திலயு வானெத்திலெ கனெக்கெ வெளவால் பறந்து பீத்திக்கிட்டு இரிந்திச்சி. கடெசியா அத்துக்கார் முடிவெடுத்தா.

"நம்மளும் வெள்ளாமெச் செய்யணும்"

• • •

சீனிக்கண்டு சின்னாப்பாடெ வயலுக்குப் பக்கத்திலெ இரிந்தெ காட்டெ அத்துக்காரும் அவென்டெ மூத்தெ தம்பி ஒசனும் வெட்டினாகெ. சமுலெ மரமும், பனிச்செ மரமும் ஒசெரமா வளந்திரிந்தெ அந்தெ காட்டிலெ, பெரெப்பெ மரமுந் தொட்டாச்சிணிங்கியும் நெறெஞ்சிரிந்திச்சி. ரெண்டு பேரும் மொதொல்லெ தொட்டாச்சிணுங்கியயும், பெரெப்பெ மரத்தெயும் வெட்டிக் குமிச்சி நெருப்பு வெச்சாகெ. அதுக்குப் பொறவு, காசின் ஓடாவியெக் கூட்டிக்கிட்டு பீத்து சமுலெ மரத்தெயெல்லா வெட்டி, பலவெயாக்கி ஆளுக்கு அரெவாசியா எடுத்தாகெ. இம்புட்டும் முடியெ மூனு மாசத்துக்குமேலெ பீத்திது. பனிச்செ மரத்தெ வெட்டி எடுத்தெ கட்டெயாலெ சுத்தெ வரெ வேலி அடெச்சி முடிச்சத்துக்கு பொறெவுதா வயலுக்கு வரம்பு போட்டாகெ. சீனிக்கண்டு சின்னாப்பா வயலுக்குள்ளெ வந்து எப்பிடி வரம்பு கட்டணுமென்டு சொல்லிக் குடுத்தாகெ.

அத்துக்காரும் ஒசனும் வெட்டினெ காணி அப்பிடியிப்பிடியென்டு பாத்தாலும் ஒரு பதினஞ்சி ஏக்கர் மட்டுக்கு வரும். அம்புட்டுஞ் சோக்கானெ காணி. பள்ளம், படுகுழி, திட்டி என்டு ஒன்னுமில்லெ. அத்துக்காருக்கும் ஒசனுக்கும் கடுஞ் சந்தோசம். ராச்சோத்துக்கு பொறெவு, குந்திலெ இரிந்திக்கிட்டு, ரெண்டு பேரு உம்மாக்கிட்டெ வயலெப் பத்தி சொல்லுவாகெ.

"உம்மா புளுகிறேன்டு நெனெக்காரிங்கெ. நம்மெடெ வயல்மாரி அந்தெ பக்கம் ஒரு வயலுமில்லம்மா. பாருங்ஙனெ, நம்மெடெ வயல் எப்பிடி வெளெயெப் போவுரென்டு."

"அல்லா நாடணும் தம்பி. ஒங்கடெ பெரெயாசக்கி அந்தெ றப்பு நல்லா தருவா." சந்தோசமும், கெப்பரும் சேந்து உம்மா சொல்லுவாகெ. அப்பிடிச் சொல்லெக்குள்ளெ அவெகெட கொரெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளதளத்து பீத்துரும்.

• • •

சீனிக்கண்டு சின்னாப்பா மக்கத்துக்கு போறெதுக்கு மூனு நாளெக்கி முந்தி ரெண்டு மாடறுத்து பாத்தியா ஓதி ஊருக்கெல்லாம் சாப்பாடு குடுத்தாகெ. அஞ்சி சப்பிலெ ஆக்கள் சாப்பிட்டாகெ. ஒவ்வொரு சப்பும் முஸ்பாத்தியாவும், நல்லெ ராஹத்தாவும் முடிஞ்சிது.

"டேய் வெள்ளெக்குட்டி. பாத்து தின்னு. மத்தாக்களுக்கும் வேணும்."

"ஓ! ஒன்னெத் தெரியாரா. ஒட்டவம்மாரி நாலு நாள் சோத்தெ ஒன்னாத் திங்கிறவந்தானெ."

"என்ன மம்மர்சா. காலம்பறெ ஒங்கெடெ கெணெத்தடியிலெ இரிந்து கொடெல் கழுவுனெ சத்தம் கேட்டிச்சே. நல்லா புடி. இனி எப்பெ இப்பிடிச் சாப்பாடு கெடெக்கிறெ"

"என்ன செய்யராமரு, சாறெனெ எளெக்கி உர்றாப்பலெ இரிக்கி."

"இஞ்செ கெரியென்டு சோத்தெ வெங்கெ. இல்லாட்டி இவெ தண்ணியயெல்லா குடிச்சி முடிச்சிருவா"

நக்கலும், கிண்டலும், பகிடியுமா வந்திருந்தெ எல்லாரும் ஒரு புடி புடிச்சித்தா எழும்பினாகெ.

சீனிக்கண்டு சின்னாப்பா அவெகெடெ வத்தெயிலதா மலெவூருக்கு போனாகெ. அங்ஙினெ இரிந்து கோச்சியிலெ கொழும்புக்கு பீத்து, பொறெவு தண்ணிக் கப்பல்லெ மக்கத்துக்கு போவாகெ. மக்கத்துக்கு பீத்து வாறத்துக்கு ஆறு மாசம் எடுக்கும். சீனிக்கண்டு சின்னாப்பாவெ பெரியெ பள்ளிவாசல்லெ இரிந்து தொறெயடி வரெக்கும் பைத்துச் சொல்லி ஊர்வலமா கூட்டிக்கிட்டு போனாகெ. மம்மறாயன் சின்னாப்பாவொடெ வாப்பு மரெக்கார், குஞ்சித்தம்பி காக்கா, சின்னாப்பாவொடெ குடும்பத்தாக்கள் எல்லாரு வத்தெயிலெ மலெவூருக்கு போனாகெ. அந்தாக்களொடெ அத்துக்காரும் போனா.

அந்தெ வத்தெயிலெ இரிந்தெ கனபேருக்கு அதுதா மொதெலாவது கடெல்பயணம். வத்தெயிலெ போறெது எல்லாருக்குஞ் சந்தோசமாவு இரிந்திச்சி, பயமாவும் இரிந்திச்சி. நல்லெ காலம்! கடெல் கொளமாட்டம் இரிந்திச்சி. காத்துக்கு சாயெ பெரியெ ஆட்டங் கீட்டம் இல்லாமெ வத்தெ பீத்திக்கிட்டிரிந்திச்சி. வில்லுண்டியிலெ எறெங்கி, எல்லாரும் கோச்சி நிக்கிறெ எடெத்துக்கு நடெந்து போனாகெ. அங்ஙினெ செங்கம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறெத்திலெ நீட்டு கோச்சி நிண்டிச்சி. ஒன்னுக்கு பின்னாலெ ஒன்னா கனெக்கக் கோச்சிப்பொட்டியெ பூட்டியிரிந்தாகெ. எல்லாருங் கோச்சிப் பொட்டியெ தொட்டுத் தொட்டுப் பாத்தாகெ.

சீனிக்கண்டு சின்னாப்பாவோடெ மனாபும், காரின் சின்னாப்பாவும் வாப்பு மரெக்காருந்தா கொழும்புக்கு போனாகெ. மத்தாக்களெல்லா அஸருக்கு முந்தியே வத்தெயிலெ ஊருக்கு வெளிக்கிட்டுட்டாகெ. எல்லாருக்கும் பெரியெ சந்தோசம். வத்தெயிலெ பீத்து வந்தது மத்திரமில்லெ, கோச்சியயும் பாத்திட்டாகெ. ஊருலெ இரிக்கிறெ யாரும் இன்னுங் கோச்சியெ பாக்கேலெ. அதோடெ மலெயிலெ கிரெண்ட் இரிக்கி. அங்கெ பகல்லயும் பல்ப் பத்திது. அதாலெ ஊருக்குப் போனெ ஒடென்னெயெ தெரிஞ்சாக்கள் எல்லாருக்கிட்டெயும் எல்லாத்தயுஞ் சொல்லணும் என்டு ஒவ்வொத்தருந் துடிச்சிக்கிட்டிரிந்தாகெ.

## 6

அத்துக்காருக்கு கலியாணம். வாப்பா மௌத்தா பீத்து பத்து வரிசத்துக்கு பொறவு அவென்டெ கலியாணம் நடக்கிது. முப்பது வயசி மட்டுக்கு கலியாணம் முடிக்காமெ எந்தெ ஆம்பிளெயும் இம்புட்டு காலத்துக்கும் அந்தெ ஊரிலெ இரிந்ததில்லெ. ஒமறு நாச்சியாக்கு கலியாணம் முடிஞ்செ கையொடெ, அத்துக்காரக் கலியாணம் முடிக்கெச் சொல்லி எல்லாரும் கேட்டு பாத்திட்டாகெ. ஆனா அத்துக்கார் ஒரேயடியா மறுத்திட்டா.

"நா ஒரு நல்லெ நெலெக்கி வந்தருக்கு பொறவுரா கலியாணம் முடிப்பே."

யார் கேட்டாலும் அவெ இதெத்தாஞ் சொன்னா. அவெ சொன்னமாரியே இந்தெ பத்து வரிசத்திலெ அவெ ஒரு நல்லெ நெலெக்கி வந்திட்டா. ரெண்டு தங்கச்சிக்கு ஊடு கட்டிப்புட்டா. அதொளுக்குத் தேவையானெ நகெ, நட்டெயு வாங்கிப்புட்டா. அவென்டெ வயலுக்கு பக்கத்திலெ இரிந்தெ சுருட்டு மம்மருமீராசாடெ அஞ்சேக்கர் வயலயும் வாங்கிப்புட்டா. அவென்டெ உம்மா நேந்தெமாரியே ஆண்டவன் அவனுக்கு ஒதெவி செஞ்சிட்டா. அவெனுக்கிட்டெ சொந்தமா கிடாமாடு இரிந்தது எல்லாத்துக்கும் பெரியெ ஒதெவியாப் பீத்திது. ஒழெவடிக்கிறதுக்குஞ் சூடடிக்கிறதுக்கும் அவெனுக்கு ஒரு பெரெச்சினெயும் வந்ததில்லெ. அதாலெ எல்லாத்தயும் அந்தந்தெ நேரெத்துக்கு அவெனாலெ செய்யெ ஏண்டிச்சி. எல்லாத்தயும் உடெ அவென்டெ ரெண்டு தம்பிமாரும் கடெசி தங்கச்சி ஆசியத்தும்மாவும் அவெனுக்கு பெரியெ ஒதெவியா இரிந்தாகெ. தம்பிமார் ரெண்டு பேரும் அவெனுக்கு கூடெ இரிந்து, சரியப்பிரயத்தனஞ் செஞ்சி ஒத்தாசெயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிந்தாகெ. ஆசியத்தும்மாதா கணக்கு வழக்கயெல்லா பாத்துக்கிட்டா. ஒரு கொத்து நெல்லு, ஒரு சுண்டு பால், ஒரு சதங்சுடி அவ பொழெ உடெமாட்டா. இத்தினெக்கும் அவ படிக்கிறெ பள்ளிக்கு போனதேயில்லெ. ஓதுறெ பள்ளிக்கு மட்டுந்தா பீத்திரிக்கா. ஆனா அவக்கு கணக்கு வழக்கெல்லா நல்ல அத்துப்படி. எல்லாம் பழக்கத்திலெ வந்ததுதா, எல்லாம் மனக்கணக்குத்தா.

இப்பிடி எல்லாம் ஒரு நல்லெ நெலெக்கி வந்ததுக்கு பொறவுதா அத்துக்கார் கலியாணம் முடிக்கெ ஓம்பட்டா. கனெ எடெங்கள்லெ இரிந்து அத்துக்காரெ மாப்பிளெ கேட்டு வந்தாகெ. கடெசியா, வவுத்து மீராசாடெ மூத்தெ மவெ பிச்சம்மாவெ அத்துக்காருக்கு பேசி முடிச்சாகெ. பிச்சம்மாக்கு அப்பெ பதினஞ்சி வயசி. அத்துக்காரெ உடெ பதினஞ்சி வயசி எளெமெ. பிச்சம்மா சரியானெ வடிவு. வெள்ளெவெளேரெண்டு நல்லெ ஒசெரமா இரிந்தா.

கலியாணத்தண்டக்கி மாப்பிளெயெ குதிரெயிலதா அளெச்சிக்கிட்டு போனாகெ. தம்பன்கடுவெயிலெ இரிந்து குதிரெயயும் குதிரெயோட்டியயும் காசு குடுத்து கூட்டி வந்தாகெ. சீனிக்கண்டு சின்னாப்பாதா அதுக்கானெ வேலெயெல்லாஞ் செஞ்சாகெ. அந்தெ குடும்பத்திலெ அத்துக்கார்டெ கலியாணந்தா மொதெலாவதா நடெக்கிறெ ஆம்பிளெக் கலியாணம். அதாலெ அந்தெ குடும்பத்தெச் சேந்தெ எல்லாரு அதெச் செறெப்பா நடத்தணுமெண்டு நல்லா பெரெயாசெப்பட்டாகெ.

மஹ்ரிபு தொழுகைக்கு பொறவு மாப்பிளெயெ அளெச்சிக்கிட்டு போனாகெ. அத்துக்கார் பட்டுலெ செஞ்செ பச்செத் தலெப்பா கட்டி, பளெயகாட் சாரனும், மஸ்லின் சட்டயும் போட்டிரிந்தா. குதிரெயோட்டி குதிரெயிடெ மூக்கனாங் கயித்தெப் புடிச்சிக்கிட்டு பக்கத்தாலெ நடந்து வந்தா. அத்துக்கார் குதிரெயிலெ இரிந்தா. குதிரெக்கு முன்னாலயு பின்னாலயு பக்கத்தாலயு நாலஞ்சி பெட்ரோல்மெக்ஸ் லைட் கொளுத்தி புடிச்சிக்கிட்டு வந்தாகெ. அதாலெ அத்துக்காரெ அளெச்சிக்கிட்டு போனெ எடெமெல்லா பட்டாப்பகலாட்டம் வெளிச்சமா இரிந்திச்சி. எல்லா ஊட்டுலயும் வேலிக்கு மேலாலயும் கடப்புக்குள்ளாளயும் பொம்புளயெல்லா பாத்துக்கிட்டு இரிந்தாகெ. அந்தெ ஊருலெ எல்லாருக்கும் அது பெரியெ புதுனந்தா. இப்பிடி குதிரெயிலெ மாப்பிளெயெ அளெச்சிக்கிட்டு போறது எப்பவாவது ஒரு தரக்கந்தா நடக்கும். கடப்புக்கு பின்னாலயும் வேலிக்கு பின்னாலயும் நின்டுக்கிட்டிரிந்தெ பொம்புளயலெல்லா பிச்சம்மாவெ நெனெச்சி புறாமப்பட்டாகெ. பிச்சம்மா குடுத்து வெச்செவதா.

• • •

அந்தெத் தரக்கம் ஒடுக்கத்து புதனுக்கு எலெக்கந்தெக்கு சோறாக்கித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்னெப் போறெண்டு அத்துக்கார் முடிவு செஞ்சாரு. மொத்தமா மூனு வண்டில்லெ எல்லாரும் வெளிக்கிட்டாகெ. அத்துக்கார்ரெ குடும்பம், மனாபுடெ குடும்பம், அதோடெ ஓமறு நாச்சியாடெ குடும்பம். முஸ்தபாக்கென்டா சொல்லி மாளேலாதெ சந்தோசம். ரெண்டு நாளா அவெனுக்கு நெத்திரெ வரேல்லெ. அவெனுக்கு இப்பெ ஏழு வயசிதா. இந்தெ வயசிலயே எல்லாத்தயு செஞ்சி பாத்திடணுமெண்டு அவெனுக்கு சரியானெ ஆசெ. கண்ணிலெ காண்றத்தெயெல்லாங் கழட்டுவா, பூட்டுவா, இல்லாட்டி தட்டிப் பாப்பா. கடெசியிலெ ஒடெப்பா. இப்பெ சோறாக்கித் தின்னெப் போப்பறாகெ என்டு தெரிஞ்செ ஒடெனெ எப்பெ போறேன்டு அவெ பரபரத்துத் திரிஞ்சா. கடெசியா ஒருநாள் அஸருக்கு பொறவு வண்டிலெ பூட்டினாகெ. முஸ்தபா இரிந்தெ வண்டிலுக்கு கூடாரம் அடிச்சிரிந்திச்சி. அதாலெ மழெ பேஞ்சாலும் வெயில் அடிச்சாலும் ஒரு பெரெச்சினெயுமில்லெ. வண்டிலெ ஓட்டி வந்தெ ஆளெ முஸ்தபாக்கு தெரியாது. என்டாலு அவெ அவெருக்கு பக்கத்திலயே இரிந்து மாடு போறெத்தப் பாத்துக்கிட்டு இரிந்தா.

ஒள்ளுப்பந் தூரம் போனதும் ஒரு மாடு வாலெத் தூக்கிக்கிட்டு பீ பேண்டுது. அருக்கு பொறவு இன்னுங் கொஞ்சச் சாமத்தாலெ மத்தெ மாடு மூத்திரம் அடிச்சிது. இதெயெல்லா பாக்கெப் பாக்கெப் முஸ்தபாக்கு சரியானெ ஆச்சரியமாவும் முஸ்பாத்தியாவும் இரிந்திச்சி. எடெக்கெடெ அவெ மெதுவா கையெ நீட்டி தனக்கு பக்கத்திலெ பீத்திக்கிட்டிரிந்தெ மாட்ரெ முதுவுப் பக்கத்தெ தொட்டுப் பாப்பா. மாட்ரெ முதுவுலெ கை பட்டதும் அவென்டெ ஒடெம்பு சிலித்துப் பீத்திரும். மஹறி பர்ரெ நேரத்திலெ அவெகெ ஒரு எடெத்திலெ வண்டிலெ நிப்பாட்டினாகெ. அதுக்கு முந்தியே அத்துக்காரும் இன்னொரு ஆளும் தோக்கெயும் நீட்டு லைட்டெயும் எடுத்துக்கிட்டு காட்டுக்குள்ளாலெ பீத்தாகெ.

வண்டிலெ நிப்பாட்டினெ எடெத்திலெ ஒரு அளவானெ கட்டிடமும் கெணெறும் இரிந்திச்சி. அந்தெக் கட்டிடத்துக்குள்ளெ சாமா எல்லாத்தயு கொண்டு பீத்து வெச்சாகெ. அது ஒரு பள்ளிக்கொடம். அதிடெ செவெத்திலெ நாலஞ்சி எடெத்திலெ கரும்பலகெ செஞ்சிரிந்திச்சி. அது வேடெப் புள்ளெயளுக்காகெ கட்டப்பட்டெ பள்ளிக்கொடம். அதிலெ பள்ளி நடக்கிறெ காலத்தெ உடெ, இப்பிடி சோறாக்கித் தின்னெ வாறாக்கள் தங்கிறதா கசனா.

செத்தெ சாமத்துக்கு பொறவு, வாப்பாவும் மத்தெ ஆளும் வாறெத்தெ முஸ்தபா பாத்தா. வாப்பாடெ தோள்லெ தோக்கு இரிந்திச்சி. அவெகெ ஒரு கையிலெ என்னத்தெயோ தூக்கிக்கிட்டு வந்தாகெ. அதேமாரி, அந்தெ மத்தாள்றெ கையிலயு என்னமோ தொங்கிக்கிட்டு இரிந்திச்சி. முஸ்தபா ஓடிப்பீத்து பாத்தா. ரெண்டு பேர்ரெ கையிலயும் ரெண்டு மொசல் இருந்திச்சி. ரெண்ட்ரெ கழுத்திலயும் இரிந்து எரெத்தம் வழிஞ்சி காஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீத்திரிந்திச்சி. ரெண்டெயும் பள்ளிக்கொடத்து குந்திலெ போட்டாகெ. முஸ்தபா அதெத் தொட்டுப் பாத்தா. பஞ்சிமாரி இரிந்திச்சி. வாப்பாவும் மனாப் சின்னாப்பாவுந்தா அதெ உரிச்சாகெ. வவுத்துக்கு குறுக்காலெ கத்தியாலெ வெட்டிப்புட்டு, ரெண்டு பக்கத்தாலயும் புடிச்சி இழுக்கெ தொலி அப்பிடியே கழன்டு வந்திச்சி. அதுக்கு பொறவு அது ரெண்டெயும் ஆக்கி, புட்டு அவிச்சித் திண்டாகெ. மொசல் எறெச்சி பஞ்சிமாரி நல்லெ ருசியா இரிந்திச்சி. முஸ்தபா கனெக்கெ திண்டா. ஆனா முஸ்தபாடெ உம்மாவும் மனாப் சின்னாப்பாடெ சின்னம்மாவும் எறெச்சியெ திங்கேலெ. வெறும் ஆணத்தெ மத்திரம் ஊத்தி புட்டெத் திண்டாகெ.

காத்தாலெயொடெ முஸ்தபா முழிச்சிப் பாக்கக்குள்ளெ தெகெச்சிப் பீத்தா. அவென்டெ வாய் பொளெந்திட்டு. கெணெத்தடிக்கு பக்கத்திலெ ஒரு மானும், ஒரு பெரிய மாடும் கெடெந்திச்சி. ரெண்டெயும் தக்பீர் பண்ணியிரிந்தாகெ. ராவு எல்லாரு படுத்தத்துக்கு பொறவு பீத்து, இது ரெண்டெயும் வெடிவெச்சி கொண்டு வந்திக்காகெ. முஸ்தபாவும் மத்தச் சின்னாக்களும் மான்டெ கொம்பயும் தொலியயும் தொட்டு தொட்டுப் பாத்தாகெ. புள்ளி உழுந்தெ மான்டெ தொலிய தொட்டுப் பாக்கெ எல்லாருக்கு சந்தோசமாயிரிந்திச்சி. அந்தெ மாடு சரியானெ குண்டா இரிந்திச்சி. அதுதா குழுமாடாம். முஸ்தபாடெ வாப்பா சொன்னாகெ. ஒள்ளுப்பந் தள்ளியிரிந்தெ பெரியெ மரத்திலெ மானெயும், மாட்டெயும் ஒன்னொன்னா தூக்கி கட்டி, உரிச்சாகெ. அதுக்கு பொறவு கனெக்கெ கம்பு வெட்டி வந்தாகெ. அதிலெ நாலு கெட்டுக் கம்பெ எடுத்து நாலு மூலெயிலயு நாட்டி. அதுக்குக் குறுக்காலெ வரிச்சி கம்பெ வெச்சி பந்தல்மாரி கட்டினாகெ. அதுக்கு கீழெ கனெக்கெ கொள்ளியெப் போட்டு நெருப்பு பத்தெ வெச்சாகெ. பொறவு எறெச்சியெ நீட்டு நீட்டு துண்டா வெட்டி அந்தெ பந்தல்லெ வெச்சாகெ. எறெச்சியெல்லா அந்தெ நெருப்பிலெ காயத் தொவெங்கிட்டு. அது காய்றெ மணத்திலெ முஸ்தபாக்கு நாக்கிலெ தண்ணி வந்திட்டு. எறெச்சி காஞ்சி வரெக்குள்ளெ நல்லெ துண்டாப் பாத்து வெட்டி, வெட்டி சின்னாக்களுக்கு குடுத்தாகெ. அது நல்லெ ருசியா இரிந்திச்சி. முஸ்தபா கனெக்கெத் திண்டா. காத்தாலெயும் மத்தியானமும் பெரியெ பானெயிலெ கனக்கெ எறெச்சி ஆக்கி, எல்லாரும் அள்ளி, அள்ளித் திண்டாகெ.

அன்டெக்கிப் பின்னேரெத்திலெ வேடாக்கள் அங்ஙினெ வந்தாகெ. அவெகெள்லெ பெரியாக்களுஞ் சின்னாக்களும் இரிந்தாகெ. அவெகெடெ தலெமயிரெல்லா நீட்டா வளந்திரிந்திச்சி. பழெயெ, கிழிஞ்சி பீத்திரிந்தெ உடுப்பத்தா அவெகெ போட்டிரிந்தாகெ. முஸ்தபாடெ வாப்பாவும் மத்தெ பெரியாக்களும் அந்தெ வேடாக்களொடெ என்னமோ கதெச்சாகெ. அதுக்கு பொறவு அந்தெ வேடாக்கள் கனெக்கெ கொள்ளி முறிச்சி வந்து முத்தத்திலெ நெருப்பு மூட்டினாகெ. நெருப்பு நல்லா பத்தெத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொவெங்கினத்துக்குப் பொறவு அவெகெ அதெச் சுத்தியிரிந்து பாட்டு படிச்சாகெ. சின்னாக்கள் டான்ஸ் ஆடினாகெ.

"தாந்தி மித்தினி தனக்குனாரே

தீந்தி மித்தினி தினக்குனாரே"

மோளம், செரெட்டெ, கம்பு எல்லாத்தயு அடிச்சி பாட்டு படிச்சாகெ. சின்னாக்கள் நெருப்பச் சுத்தி சுத்தி டான்ஸ் ஆடினாகெ. சோறாக்கி தின்னெப் போனாக்கள்லா வலெச்சிரிந்து அதெயெல்லா பாத்தாகெ. எல்லாம் முடிஞ்சி. அந்தெ வேடாக்கள் போவெக்குள்ளெ அவெகளுக்கு அரிசி, மா, சூட்டெறச்சி எல்லா குடுத்தாகெ.

மூனு நாளெக்கி பொறவு அவெகெ அங்கினெ இரிந்து வெளிக்கிட்டாகெ. அதுக்கெடெயிலெ காட்டுக்குள்ளெ பீத்து, பாலப்பழமும் வீரப்பழமும் ஆஞ்சாகெ. மரமுத்துலும் அம்பாரம் பழம் இரிந்திச்சி. மரத்திலெ எலெயயே காணேலெ. கந்தெல்லா மஞ்சளாவுஞ் செவெப்பாவுமே இரிந்திச்சி. பாலப்பழத்தத் தின்டு தின்டு முஸ்தபாடெ ஒதடெல்லா ஒட்டிப் பீத்திது. பொறவு ஆஞ்செ பழத்தெயெல்லாம் பானெயிலெயும் சட்டியிலெயும் போட்டு ஊட்டெ கொண்டு வந்தாகெ.

மத்தெ நாத்து பள்ளிக்கொடத்துக்கு போனெ ஒடென்னெயெ முஸ்தபா எல்லாருக்கிட்டெயும் சோறாக்கித் தின்னெப் போனத்தெப் பத்தித்தா கதெச்சா. அவெனுக்கு பெரியெ கெப்பர். மொசல், மான், குழுமாடு எல்லாத்தயும் அவெ கண்ணாலெ பாத்திக்கா. அதோடெ அவெகெடெ வாப்பா மான் கொம்பெக் கொண்டு வந்திக்காகெ. அதெ அவெகெடெ ஊட்டுலெ பொறெத்திண்ணெயிலெ கொழுவியிரிக்காகெ. அவெகெடெ வகுப்பிலெயே அவெந்தா இப்பிடி மொதெமொதெல்லெ சோறாக்கி தின்னெ பீத்திக்கா. பாலப்பழம், வீரப்பழம் எல்லாத்தயு அவெ மரத்திலெ இரிந்தே ஆஞ்சி தின்டிக்கா. அவெ தின்டமாரி பாலப்பழம், அந்தெ வகுப்பிலெ ஒத்தரு தின்டிரிக்க மாட்டாகெ. அம்புட்டு பெரியெ பழம்.

அவெகெ சோறாக்கித் தின்னெப் பீத்து வந்து ரெண்டா நாத்து, பன்னென்டா மௌலத்து தொவெங்கிட்டு. எல்லா ரோட்டிலெயும் மௌலத்து ஓதினாகெ. ஓதிரெ பள்ளியிலெ ஓதிரெ சின்னாக்கள், வயசி போனாக்கள் என்டு எல்லாருமா சேந்து மௌலத்து ஓதினாகெ. ராகத்தெ மாத்தி மாத்தியெல்லா அவெகெ ஓதினாகெ. முஸ்தபாவும் அவென்டெ கூட்டாளிமாரும் மௌலத்து ஓதிற எடெத்திலெ இரிக்கிறெ குந்திலெ இரிப்பாகெ. மௌலத்து ஓதி முடிஞ்சதும் எல்லாருக்கும் நார்சா குடுப்பாகெ. செலெ நேரத்திலெ ஜேம் பூசினெ பாண் குடுப்பாகெ. பன்னென்டா மௌலத்துதா நல்லெ விசேசம். மாடு அறுத்து, நார்சாச் சோறு ஆக்கி அந்தெ ரோட்டிலெ இரிந்தெ எல்லாருக்கும் குடுத்தாகெ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னென்டா மௌலத்து முடிஞ்செ ஒடென்னெயெ மீலாத் விழா நடெந்திச்சி. அன்டெக்கி காத்தாலெயொடெ எல்லாப் புள்ளெயொளும் பள்ளிக்கொடத்திலெ இரிந்து, பச்செக் கொடி புடிச்சிக்கிட்டு, பாட்டு படிச்சிக்கிட்டு ரோட்டாலெ ஊர்வலமா போனாகெ.

"நாளிதே நம் நாளிதே – நம்

நபி பொறெந்தெ நாளிதே!..........."

ரோட்டிலெ எடெக்கெடெ ஆக்கள் நின்டு, பானக்கம், சர்பத் எல்லாம் குடுத்தாகெ. புள்ளெயலுக்கென்டா சரியானெ சந்தோசம். எல்லாப் பள்ளிக்கொடத்திலெ இரிந்தெ புள்ளெயளும் ஊர்வலமா வந்தாகெ. ரோட்டு முத்துலும் பச்செக் கொடி புடிச்செ புள்ளெயளும் பாட்டுச் சத்தமுமாத்தா இரிந்திச்சி. முஸ்தபாவும் கொடியெப் புடிச்சிக்கிட்டு பாட்டுப் படிச்சிக்கிட்டு வந்தா.

"நாளிதே நம் நாளிதே - நம்

நபி பொறெந்த நாளிதே"

எல்லாரும் அப்பிடியே பீத்து, முத்தெவெளியிலெ போட்டிரிந்தெ மேடெக்கு முன்னாலெ, புடிச்சி போனெ கொடியெயெல்லா நாட்டினாகெ. பொறவு எல்லாரு ஊட்டெ திரும்பிப் பீத்தாகெ. தூரத்திலெ இரிந்து பாத்தா முத்தெவெளி பச்செ நெறெமா தெரிஞ்சிச்சி. அதுக்கு பொறவு பின்னெரெத்திலெ இரிந்து ராவு பன்னென்டு மணி மட்டுக்கு அங்கினெ கூட்டம் நடெந்திச்சி. முஸ்தபாவு அவென்டெ உம்மாவொடெ பீத்திரிந்தா. மொதெல்லெ சின்னப் புள்ளெயள் பாட்டுப் படிச்சாகெ. பேச்சுப் பேசினாகெ. அதுக்கு பொறவு வாவாமார் மோளங் கொட்டி பாட்டுப் படிச்சாகெ. முஸ்தபா கச்சாங் கொட்டெ, கடலெக் கொட்டெ, பூந்தி எல்லாம் வேங்கித் தின்டா. பெரியாக்கள் பேசெத் தொவெங்கி ஒள்ளுப்ப நேரெத்திலெ அவெனுக்கு நெத்திரெ வந்திட்டு. பொறவு கூட்டம் முடிஞ்சி போவெக்குள்ளதா அவெனெ உம்மா எழுப்பி கூட்டிக்கிட்டுப் போனாகெ.

• • •

அத்துக்கார் சாய்மானக் கதிரெயிலெ படுத்துக் கெடெந்தாரு. அவருக்கு நல்லெ களெப்பு. சாடையா இருமலாவு இரிந்திச்சி. பிச்சம்மா அத்துக்காருக்கு முட்டெக்கோப்பி கொண்டு வந்து குடுத்தா. அதுதா ஒடெம்புக்கு பெலமாவும் வருத்தத்துக்கு மருந்தாவும் இரிக்கும். அத்துக்கார் கோப்பியெக் குடிச்சுப்புட்டு, கோப்பெயெ பக்கத்திலெ வெச்சாரு. சாய்மானக் கதிரெயிலெ ஒள்ளுப்பம் நிமிந்து இரிந்துக்கிட்டு பிச்சம்மாக்கிட்டெ சொன்னாரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கேட்டியா! நம்மடெ வெள்ளாமெ இந்தெத் தரக்கமும் அம்புட்டு நல்லா வெளெயேலெ. இதோடெ அஞ்சி தரக்கம் நமக்கு வெள்ளாமெ நட்டமா பீத்துரு. செய்யதலிக் காக்காக்கிட்டெ வாங்கினெ கடெனயு குடுக்கேலாமெ இரிக்கி. என்ன செய்யிறெண்டு தெரியேலெ."

அத்துக்கார்டெ ஒடெம்புமாரி இப்பெ மனசும் பெலெகீனமா பீத்திது. நெலெமெ இப்பெ முன்னமாரி இல்லெ. வெள்ளாமெ நட்டமா போறத்துக்கு கனெக்கெக் காரணம் இரிக்கி. மொதெலாவது இப்பெ வெதெக்கிறெ நெல்லு முந்திமாரி இல்லெ. முந்தியெண்டா நெல்லெ வெதெச்சிப்புட்டு வந்தாப் போதும். அது தானா மொளெச்சி, வளந்து பயிராப் பீத்திரும். நோயும் பெரிசா வாறேல்லெ. பசளையும் போர்ரதில்லெ. ஆனா இப்பத்தெயெ நெல்லு அப்பிடியில்லெ. வெதெச்சத்திலெ இரிந்து வெட்டும் வரெக்கும் அதுக்குப் பின்னாலெயே திரியணும். நாலஞ்சி தரக்கம் பசளெ போடணும், எண்ணெ அடிக்கணும். இதுக்கெல்லாம் கனெக்கெச் செலெவு போவுது. அப்பிடியும் வெளெச்சல் நல்லா இல்லெ. அதெ உடெ இப்பெ ஒழுங்கா தண்ணி கட்டேலாமெ இரிக்கி. வாய்க்கால்லெ வாறெ தண்ணியெ மாத்தெயா மறிச்சிப் போட்டுர்ரா, இல்லாட்டி தண்ணியெ கண்டமாரி தொறந்துட்டுர்ரா. அத்துக்கார்ரெ வெள்ளாமெ நல்லா வராமெ போறதுக்கு மாத்தயாடெ கக்கிஸந்தா முக்கியெ காரணம்.

அஞ்சி வரிசத்துக்கு முந்தித்தா மாத்தயா இங்கினெ வந்தா. அவெ தனியெ வரேலெ. பத்துப் பன்னெண்டு ஆக்களெ ஒதெவிக்கு கூட்டிக்கிட்டுத்தா வந்தா. எங்கினயோ கந்தரெ பக்கத்திலதா அவென்டெ ஊராம். ஆரம்பத்திலெ அத்துக்கார்தா அவெனுக்கு ஒதெவி செஞ்சாரு. அத்துக்கார்ரெ வயலுக்குத் தெக்கு பக்கமா இரிந்தெ காட்டெயு அதோடெ ஒட்டியிரிந்த காணியயு அவெ வெட்டி எடுக்கிறத்துக்கு அத்துக்கார் ஒதெவி செஞ்சாரு. அவென்டெ வயலுக்குள்ளாளதா அத்துக்கார்டெ வயலுக்கு தண்ணி பாச்சிறெ வாய்க்கால் வரூது. மொதெல்லெ மாத்தயாவாலெ ஒரு பெரெச்சினெயும் வரேலெ. அவெ நல்லெ மருவாதியாத்தான் நடந்துகிட்டா. ஆனா ஒரு ரெண்டு வரிசத்துக்குப் பொறவு நெலெபரெம் மாறிட்டு. மாத்தயாவொடெ வந்தெ ஆக்கள் ஒன்னுக்கும் பயப்பர்ரேலெ. எதெ நெனெச்சாலும் அவெனொளு செஞ்சி முடிப்பானொளு. ஒரு தரக்கம், அத்துக்கார்ரெ லைசென்ஸ் தோக்கெ களவெடுத்துக்கிட்டு பீத்தானொளு. பன்டிக்காவலுக்கென்டு தோக்கெ கொண்டு வந்து, வயலுக்குள்ளெ இரிந்தெ காவலுக்குள்ளெ வெச்செமாரி அத்துக்கார் நெத்திரெ கொன்டுட்டாரு. காத்தாலெயொடெ முளிச்சிப் பாக்கக்குள்ளெ தோக்கெக் காணேலெ. இன்னொரு தரக்கம் வெள்ளாமெ நல்லா வெளெஞ்சி இரிந்தெ நேரெத்திலெ ராவொடெ ராவா வேலியெ பிரிச்சி மாட்டயெல்லா வயலுக்குள்ளெ மேயெ உட்டுட்டானொளு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துக்காருக்கு எதுவுஞ் செய்யேலாமெ பீத்துது. வட்டவிதான்டெ சொல்லெயு மாத்தெயா கேக்கிறெமாரி இல்லெ. பொலிசுக்கிட்டெப் போவலாமென்டாலும் அவெனொளு எல்லானுஞ் சிங்களவெ. அதோடெ அவெனொளு மாத்தெயாவொடெ நல்லெ கூட்டாளி. ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா அத்துக்கார்ரெ பாடு கஸ்டமாகிட்டு இரிந்திச்சி.

அதோடெ இப்ப முன்னமாரி ஒளெவடிக்கிறதுக்குஞ் சூடடிக்கிறதுக்கும் கனபேர் கிடாமாட்டெ எடுக்கிறேல்லெ. இப்பெ டெக்டர் மிசின் வந்திட்டு. எல்லாரும் இப்பெ டெக்கடரத்தா வயல் வேலெக்கி எடுக்கிறாகெ. அதாலெ மாட்டாலா வாறெ வருமானமும் இப்பெ அத்துக்காருக்கு கொறெஞ்சி பீத்திது. ஏக்கனவே மாட்டெயும் வயலெயும் ரெண்டு தம்பிமாருக்கும் அத்துக்கார் புறிச்சிக் குடுத்திட்டாரு. அதாலெ வயல்றெ அளவும், மாட்றெ அளவும் அவருக்கு நல்லா கொறெஞ்சி பீத்திது. இதெல்லாஞ் சேந்து அத்துக்கார்ரெ குடும்பத்துக்கு கஸ்டத்தெக் குடுக்கத் தொவெங்கிட்டு.

இம்புட்டு கஸ்டத்துக்குள்ளெயு தன்டெ புள்ளயொளெ வயல் வேலெக்கோ பட்டி வேலெக்கோ வரப்படாது என்டு அத்துக்கார் சொல்லிப்புட்டாரு. அவெருக்கு மொதெல்லெ பொறெந்தெ மூனும் பொம்புளெப் புள்ளெ. அதுக்கு பொறவு அடுக்கடுக்கா நாலு ஆம்புளெப் புள்ளெ. இப்பெ மூனு பொடியனொளு பள்ளிக்கொடத்துக்கு போறானொளு. மூத்தவெ முஸ்தபா இப்பெ ஜே.எஸ்.சி. படிக்கிறா. இன்னு மூனு வரிசம் படிச்சி, எஸ்.எஸ்.சி பாஸ் பண்ணினா கட்டாயம் ஒரு வேலெ கெடெச்சிரும். பிச்சம்மாக்கு தன்டெ மூத்தெ மகென்டெ எதிர்காலத்தெ பத்தி கனெக்கெ ஆசெ. எப்பிடியும் அவெனெ ஒரு அரசாங்கெ உத்தியோகத்திலெ சேத்திடனும். அதுக்கு பொறவு அவெனாலெ தங்கடெ குடும்பக் கஸ்டமெல்லாம் ஒரு நாளைக்கு தீந்திடுமென்டு அவ மனசாரெ நம்பிக்கிட்டிருந்தா.

முன்குந்திலெ இரிந்தெமாரி பிச்சம்மா அத்துக்காருக்கிட்டெச் சொன்னா,

"இஞ்செ, நம்மடெ சுல்தானிக்கு இப்பெ இருவரு வயசாப் பீத்திரு. இவடெ வயசிலெ இப்பெ ஊரிலெ ஒரு புள்ளெயும் சும்மா இல்லெ. எல்லாங் கலியாண முடிச்சி, கொளெந்தெ குட்டியொடெரா இரிக்கிறொளு. ஊரிலயும் நம்மளெப் பத்தி ஒருமாரியா கரெக்கிறாகெ. இன்னு ஒள்ளுப்ப நாள் போனா, நம்மடெ புள்ளெக்கி மாப்பிளெயு கெடெக்காமெ பீத்திரு. அவக்கு பொறவு இன்னு ரெண்டு புள்ளெயொளு இரிக்கீ. நம்மளும் எல்லாத்தெயும் ரோசிக்கனு"

"நீ என்ன கரெ கரெக்கிறா. அருதா ஒமறு நாச்சியாடெ மகெ பரீத்தெ நம்மடெ சுல்தானிக்கு தாரதா அவ சொல்லியிரிக்காவுளவா. பொறவென்னெ சும்மா கரெச்சிக்கிட்டிரிக்கா. அவென்டெ படிப்பு முடிஞ்சொடென்னெயெ கல்யாணத்தெ முடிச்சிடுவொ."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரில்லிங்கெ. ஊரிலெ கரெ வேறெமாரி போறாப்பலெ இரிக்கி. நம்மடெ செய்லத்தும்மா நேத்து சொன்னா. ஓங்கெடெ தங்கச்சிடெ மவெனுக்கு நம்மடெ சுல்தானியெ கட்றத்திலெ புறியமில்லியாம்."

"நீ என்ன சொல்றா?"

அத்துக்கார் அசெந்து பீத்தாரு. பத்து வரிசத்துக்கு மேலெ இரிந்து வாறெ நம்பிக்கெயிலெ ஒரு பெலெத்தெ அடி உழுந்திட்டு. ஒமறு நாச்சியாடெ புருசன் மௌத்தாப் பீத்து இப்பெ எட்டு வரிசமா பீத்திது. அப்பயிலெ இரிந்து அத்துக்கார்தா அந்தெ குடும்பத்துக்கு எல்லா ஒதெவியுஞ் செஞ்சி வாறாரு. பரீத் வெளியூர்லெ பீத்து படிக்கிறத்துக்கு தன்டெ கஸ்டத்தோடெ கஸ்டமா அத்துக்கார்தா காசும் அனுப்பி வாறாரு. சுல்தானிக்கு இம்புட்டு காலமா மாப்பிளெ பாக்காமெ இரிக்கிறத்துக்கும் பரீத்தாங் காரணம். ஒமறு நாச்சியா அத்துக்காருக்கிட்ட சொல்லியிரிக்கா.

"காக்கா! என்டெ மகெ பரீத் ஓங்கெடெ மவெ சுல்தானிக்குத்தா"

எழுதப்படாதெ ஒப்பந்தமா இந்தெ வாத்தெ அந்தெ ரெண்டு குடும்பத்துக்கெடெயிலும் இம்புட்டு காலமா கடெப்பிடிக்கப்பட்டு வந்திரிக்கி. பெருநாளெக்கி பணியா செஞ்சி அனுப்பிறெ, பரீத் வெளியூரிலெ இரிந்து வந்தா கோழி அறுத்து சோறாக்கி அனுப்பிறெ என்டு அத்துக்கார்ரெ குடும்பம் பெருத்தெ நம்பிக்கெயோடெ இம்புட்டுக் காலமும் இரிந்து வந்திக்கி.

• • •

பரீத் உடுப்பு மினுக்கிக்கிட்டு இரிந்தா. போத்தலுக்குள்ளெ சுடுதண்ணியெ எடுத்து, அதாலெ ஒவ்வொரு உடுப்பா அவெ மினுக்கிக்கிட்டு இரிந்தா. முந்தியெல்லா உடுப்பெ மினுக்கனுமென்டு நெனெக்கிறெதில்லெ. ஆனா இப்பெ வெளியூருக்கு படிக்கப் போனெதிலெ இரிந்து உடுப்பெ மினுக்காமெ போர்ரது கஸ்டமா இரிந்திச்சி. அதுக்காகெ கட்டாடிடெ கடெயிலெ குடுத்து மினுக்கிறதுக்குங் காசில்லெ. அதாலெ போத்தலுக்குள்ளெ சுடுதண்ணியெ எடுத்து அவனாவே உடுப்பெ மினுக்கிக்குவா.

ஒமறு நாச்சியா பரீத்துக்கு பக்கத்திலெ வந்து நின்டா. மகெனப் பாக்கெப் பாக்கெ அவக்கு சரியானெ கெப்பறா இரிந்திச்சி. அவெ நல்லெ ஒரபுடியா வளந்து சுத்துலும் அவென்டெ வாப்பாமாரியே இரிந்தா.

"என்டெ புள்ளெயிரெ வாப்பாக்குத்தா இதெயெல்லாம் பாக்கக் குடுத்து வெக்கேலெ. அவரு எடெமௌத்திலெ பீத்தாரு. மகெ இப்பெ சோதினெயு எழுதி முடிச்சிட்டா. இவெ இம்புட்டு படிக்கிறதுக்கு மூத்தெ காக்காரா காரணம். காக்கா மத்திரம் மாசமாசம் காசி கட்டாட்டி என்டெ புள்ளெக்கி வெளியூருக்கு பீத்து படிக்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலாமெப் பீத்திருக்கும்."

ஓமறு நாச்சியா பரீத்தெப் பாத்து ரோசிச்சிக்கிட்டு இரிந்தா. அத்துக்கார் காக்காடெ மூத்தெ புள்ளெக்கி பரீத்தத் தாறதா ஓமறு நாச்சியா வாக்குக் குடுத்திட்டா. ஆனா இப்பெ எல்லாங் கொழெம்பிப் பீத்திடும் போலெ இரிக்கி. அத்துக்கார் மாமாடெ மவளெ முடிக்கெ மாட்டேன்டு முந்தநேத்து பரீத் அவென்டெ மூத்தெ தங்கச்சிக்கிட்டெ சொல்லிப்புட்டா.

"தம்பி"

ஓமறு நாச்சியா தணிஞ்செ கொரெல்லெ, பயந்தெமாரி கூப்பிட்டா.

"என்ன?"

பரீத்திடெ கொரெல் ஓரமா கேட்டுது.

"இல்லெ தம்பி. அத்துக்கார் மாமாடெ மவளெ முடிக்கெ மாட்டேன்டு சொன்னியாமே. அருதா என்னென்டு கேக்கலாமென்டு..."

ஓமறு நாச்சியா பல்லெ இளிச்சிக்கிட்டு கேட்டா. அவடெ கொரெல் கொளெறி கொளெறி வந்திச்சி.

"அதா தங்கச்சிக்கிட்டெ சொல்லிட்டனே. உம்மா நாஞ் சொன்னா சொன்னதுதா. எனக்கு அங்கெ முடிக்கெ விருப்பமில்லெ"

பரீத் உறுதியாச் சொன்னா.

"என்ன தம்பி, நீ இப்பிடிச் சொல்லலாமா? மாமாதானெ ஒன்டெ படிப்புக்கு ஒரெவி செஞ்சிரிக்காகெ. நானு அவெகளுக்கு வாக்கு குடுத்திரிக்கன்டா. எம்புட்டு காலமா அவெகளுங் காத்திக்கிட்டு இரிக்காகெ. இப்பெ பீத்து நீ இப்பிடி சொல்லலாமாடா?"

ஓமறு நாச்சியா கெஞ்சினா.

"உம்மா. நீங்கெ எனெக்கிட்டெக் கேட்டா முடிவு சொன்னீங்கெ. நீங்களா சொல்லிப்புட்டு இப்பெ என்னெ முடியென்டா நா என்ன செய்யெ? மாமாக்கிட்டெ வசதி இரிந்திச்சி. அதாலெ ஒதெவி செஞ்சாகெ. அதோடெ அது ஒங்களுக்குஞ் சேரெ வேண்டியெ குடும்பெச் சொத்துத்தானெ."

பரீத் தெளிவா மறுமொழியெச் சொன்னா. அவெனெப் பொறுத்தவரெ இனிமெ அவெ வாழெ வேண்டியெ காலம். அத்துக்கார் மாமாடெ ஊட்டிலெ கலியாணம் முடிச்சா இதேமாரித்தா வாழ்க்கெ இரிக்கிம். சுடுதண்ணிப் போத்தலாலெதான் எப்பவும் உடுப்பு மினுக்கெ வேண்டியிரிக்கும். அதுக்கு அவெந் தயாராயில்லெ. அவெனெ மாப்பிளெ கேக்கெ கனெக்கெ ஆக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிக்கிறாகெ. மம்மெ சுல்தான் ஹாஜியார், சுலைமான் போடியார், காசிம் மொதெலாளி என்டு கனெக்கெ பேருக்கிட்டெ இரிந்து கதெ வந்திட்டு.

"என்டெ காக்காக்கு நா என்ன மறுமொழி சொல்லுவே? யாரப்பு என்டெ நெலெமெயெ பாத்தியா"

ஒமறு நாச்சியா நெஞ்சிலெ அடிச்சிக்கிட்டு கத்தெத் தொவெங்கிட்டா.

## 7

மனாபு அத்துக்காரெப் பாக்கெ ஊட்டுக்கு வந்திருந்தாரு. அத்துக்கார்ரெ எளெயெ மகள் சுபுஹானியிடெ மூத்தெ பொடியெ சாஹிர் உம்மாக்கிட்டெச் சொன்னா.

"உம்மா, மனாபப்பா வந்திக்காகெ. நம்மடெ அப்பா எங்கெ?"

"அப்பா அந்தெ மடத்திலரா இரிப்பாகெ. சைக்கிளெ எடுத்துக்கிட்டு பீத்து அவெகளெ கூட்டிக்கிட்டு சுறுக்கணா வாடா"

'பொய்யர் மடம்' என்டு பேரெடுத்திரிக்கிறெ அந்தெ மடம் பல ஆக்கள் ஒன்டு சேர்ரெ எடெமா மாறிப் பீத்திது. ஒரு காலத்திலெ சுகாதார அலுவலுக்காகெ கட்டப்பட்டெ அந்தெ சின்னெக் கட்டிடம் இப்பெ ஆக்கள் ஓய்வெடுக்கிறெ எடெமா பீத்திது. அதிலெ சின்னெப் பொடியனொளு தொவெக்கம் வயசி போனெ ஆக்கள் வரெக்கும் ஒன்டு சேந்து இரிப்பாகெ.

அது ஒரு அற்புதமான எடெம். வெயில் கொளுத்திறெ கோடெ காலத்திலெ அது காத்தோட்ட முள்ளெ ஓய்வறையா இரிக்கு. அது டாம் வெளெயார்ரதுக்கும், முன்னூத்தி நாலு வெளெயார்ரதுக்கும் பயன்படும். அதுக்குப் பக்கத்திலெ இரிக்கிறெ எனெல்வாவெ மரத்தடியிலெ சோனாப் பானால் வெளெயாடுவாகெ. இதெல்லாத்தயு உடெ அந்தெ மடத்திலெ கதெக்கப்பர்ரெ சங்கதியெக் கேட்டா, அது அந்தெ ஊர்ரெ வரலாத்தெயும் அங்கு வாழ்ந்தெ மக்களையும் பத்தி கதெகதெயாச் சொல்லும். அந்தெமாரி கதெயெக் கேக்கிறதுக்குத்தா அந்தெ எடெத்திலெ ஒவ்வொரு நாளும் பின்னேரெத்திலெ ஆக்கள் கூடுவாகெ. ஒவ்வொரு நாளும் அஸருக்கு பொறவு அத்துக்காரும் தவறாமெ அங்கெ பீத்துடுவாரு. எகெலப்பொலெயிரெ காலத்திலெ வெள்ளெக்காரன் புளியமரப் பொந்திலெ ஒளிச்சத்திலெயிரிந்து, அவெரும் ராசாத்தம்பி காக்காவும் புலி வெடிவெச்சதுவரெ ஒவ்வொன்னா சொல்லுவாரு.

அத்துக்காரும், அவெரமாரி வயசாளிகளுஞ் சொல்றெ சங்கதி வெறுங் கதெ இல்லெ. அதெக் கேக்கிறெ ஆக்களுக்கு, அதெல்லாங் கண்முன்னாலெ நடெக்கிறமாரியே இரிக்கும். அப்பிடி அவெகெ சொல்லுவாகெ. மரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுக்கெப் போவெக்குள்ளெ அவெகெ பட்டெ கஸ்டம், அவெகெ வெடிக்கு போனது, மான், மரயெல்லாம் சுட்டது, பம்முஸ் மூட்டத்திலெ சாப்பாடு இல்லாமெ கஸ்டப்பட்டது, ஜப்பாங்காரென்டெ பறெவெக் கப்பல் ஊருலெ வந்த உழுந்தது. பெரு வெள்ளெ மூட்டத்திலெ மானெத் தெரெத்திப்புடிச்சது என்டு அந்தெ ஊர்ரெ வரலாறு அந்த மடத்துக்குள்ளெ விரிஞ்சி செல்லும். அந்தெக் கதெயிலெ பொய்யும் இரிக்கும், புளுவலும் இரிக்கும். ஆனா அதெல்லாத்தயும் உடெ உண்மெ இரிக்கும்.

அத்துக்காருக்கு அந்தெ மடம் அவெர்ரெ வாழ்க்கெயிலெ ஒரு பிரிக்கெ முடியாதெ அம்சமா இப்பெ மாறிப் பீத்திது. மூனு பொம்புளெப் புள்ளெக்குங் கலியாணம் முடிச்சி குடுத்து, வயலெயு மூனு பேருக்குஞ் சீதனமா குடுத்தத்துக்குப் பொறவு அவெருக்கு வேலெயுங் கொறெஞ்சி பீத்திது. ஒமறு நாச்சியாடெ மகெ பரீத், சுல்தானியெ கலியாணம் முடிக்கெ மாட்டேன்டு சொன்னத்துக்குப் பொறவு, அத்துக்கார் கடுங் கஸ்டப்பட்டுத்தா சுல்தானிக்கு மாப்பிளெ பாத்தாரு. வயல்லெ அரெவாசியச் சீதனமாக் குடுத்துத்தா அந்தெ கலியாணம் முடிஞ்சிது. அதுக்குப் பொறவு இரிந்தெ வயலெ ரெண்டா புறிச்சி ரெண்டு புள்ளெக்குங் குடுத்து, கொஞ்செ மாட்டெயும் வித்துத்தா மத்தெ ரெண்டு பொம்புளெப் புள்ளெக்குங் கலியாணங் கட்டி குடுத்தாரு.

அத்துக்கார்ரெ மூத்தவெ முஸ்தபா கடெசிவரெக்கும் எஸ்.எஸ்.சீ பாஸ் பண்ணவே இல்லெ. நாலஞ்சி தரக்கம் சோதினெ எடுத்து பாத்தா. ஆனா பாஸ் பண்ணேலலெ. கடெசியா இரிந்தெ மாட்டெயெல்லா வித்துப்புட்டு, ஒரு பழெயெ டெக்ரர் மிசின் வேங்கி ஓடெத் தொவெங்கிட்டா. வயலடிக்கப் போனெ எடெத்திலெ கட்டயன் மம்ம சுல்தான் காக்காடெ பொட்டெயெ பாத்து, ஊட்டாக்களுக்குந் தெரியாமெ ராவொடெ ராவா கலியாணமும் முடிச்சிப்புட்டா. அடுத்தெ ரெண்டு பொடியங்களும் படிச்சி பாஸ் பண்ணி இப்பெ மாஸ்டர் வேலெ பாக்கிறானொளு. கடெசிப் பொடியனும் பாஸ் பண்ணிப்புட்டு இரிக்கிறா. இரிந்தாலும் பிச்சம்மாக்கு மூத்தெ பொடியன் பாஸ் பண்ணாமெ போனதுதா பெரியெ கவலெ. எப்பவு அவெனப் பத்தித்தா அவெ கதெப்பா.

"இந்தெ கொள்ளெயிலெ போவானெ எங்கெயெல்லா உட்டுப் படிப்பிச்சே. கடெசி வரெக்கு அவெ பாஸ் பண்ணாமெ பீத்தானே."

சாஹிர் மடத்துக்கு பீத்துப் பாக்கக்குள்ளெ, அத்துக்கார் அங்ஙினதா இரிந்தாரு.

"அப்பா, மனாப்பப்பா ஒங்களெப் பாக்கெ வந்திக்காகெ."

"சரி. நீ போ. நா பின்னாலெ வாறே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லப்பா. சைக்கிள்லெ ஏறுங்ஙனெ. ஏத்திக்கிட்டு போறெ"

ரெண்டு பேரு ஊட்டெ வந்தபோது, மனாபு முத்தத்திலெ கதிரெயிலெ இரிந்தாரு. அத்துக்காரக் கண்டதும் எழும்பிட்டாரு.

"வாங்கெ காக்கா"

"இரி தம்பி. புள்ளெ அப்பாக்கு தேத்தண்ணி குடுத்தியா?"

"இல்லெ வாப்பா. இப்பரா கலெக்கிறெ. இரிங்கெ ஒங்களுக்குங் கொண்டு வாறெ."

தேத்தண்ணியெ குடிச்சிக்கிட்டு மனாபு வந்தெ சங்கதியெச் சொன்னாரு.

"காக்கா என்டெ கடெசி பொடியன் ரஹீம் கொழும்பிலதானே வேலை செய்யிறான். அவனெ கொழும்பிலெ ஒரு முதலாளி மாப்பிளெ கேக்கிறார் காக்கா. அவனும் விருப்பப்பர்றா. அந்த புள்ளயும் அவனோடதான் வேலை செய்யிறவாம். இனி நம்ம என்ன செய்யலாம் காக்கா? அதுகள்ர விருப்பப்படி செஞ்சிடுவம் என்டு நினைக்கிறே காக்கா."

மனாபு இப்பெ பென்சன் எடுக்கிறாரு. அவர்டெ புள்ளெயொளெல்லாம் நல்லெ நெலெமயிலெ இரிக்கிதொளு. அவர்ரெ மூத்தெ பொம்புளெப் புள்ளெ படிச்சி இப்பெ டீச்சர் வேலெ பாக்கிறா. மூத்தெ பொடியன் பேங்கிலெ வேலெ செய்யிறா. அடுத்தவெ வீ.சீ கந்தோர்லெ வேலெ செய்யிறா. அவருக்கு நாலு புள்ளயொள்தா. மூத்தது மூணும் கலியாணம் முடிச்சி புள்ளெ குட்டியளொடெ இரிக்கிதொளு.

மனாபுடெ வாப்பா சீனிக்கண்டு ஹாஜியார் மௌத்தாப் போனதுக்குப் பொறவு அவர்டெ வத்தெயெப் பாக்கிறத்துக்கு ஆளில்லாமெ பீத்துது. அதோடெ இப்பெ நாலஞ்சி லாஞ்சியும் ஓடெத் தொவெங்கிட்டு. அதாலெ முன்னெமாரி இப்பெ வத்தெக்கு வேலெ இல்லெ. கடெசியிலெ வத்தெயெக் கொண்டு வந்து, கரெக்கடெயிலெ ஏத்தி வெச்சிட்டாகெ. கனெகாலமா சின்னெபுள்ளெயொளு அதுக்கு மேலெ ஏறி வெளெயாடிக்கிட்டு இரிந்திச்சொளு. பாசி புடிச்சி, குவாட்டியெல்லாம் பத்தி, அது எறெந்து பீத்திரிந்திச்சி. ஒரு நாள் மனாபு, அந்தெ வத்தெய கழட்டி அதிலெ இரிந்தெ பலகையெல்லா எடுத்திட்டாரு.

"நீ சொல்றெ சரிதாந் தம்பி. ஆனாலொன்டு. இனிமெ ஒன்டெ பொடியெ ஒன்னெப் பாக்கெ வாறது நல்லா கொறெஞ்சி பீத்திரும்."

"என்ன செய்யிறெ காக்கா. பிள்ளெகள்றெ விருப்பத்துக்கு மாறா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்ம ஒன்னுஞ் செய்யேலாது. இப்ப முன்ன மாதிரி இல்ல. நம்ம இல்லேன்டு சொன்னா அவன் போய் தன்டெ விருப்பப்படி கலியாணம் முடிச்சிடுவான்."

"சரி தம்பி. ஒன்டெ விருப்பப்படி செய்."

## 8

ஆசியத்தும்மாடெ எளெயெ பொடியன் நிசாரும், ஒசன்டெ பொடியன் அபூபக்கரும் நல்ல கூட்டாளிமார். அவெனொளு ரெண்டு பேரும் மச்சான்மார்தா. ஆனா அவெனொளு ஒண்ணா போவெக்குள்ளெ பாத்தா நானா, தம்பியென்டுதா யாருஞ் சொல்லுவாகெ. சுத்துலும் ரெண்டு பேர்டெ சாங்கமும் ஒரேமாரித்தா இரிக்கும். ரெண்டு பேருக்குங் கிட்டத்தட்டெ ஒரே வயசிதா. பக்கத்து பக்கத்து ஊட்டுலெ இரிந்தத்தாலெ ரெண்டு பேரும் நல்லெ கூட்டாளியா பீத்தானொளு. ரெண்டு பேருக்கும் ஒரு பதினேழு வயசி இரிக்கக்குள்ளெயே ரூம்லெ படுக்கத் தொவெங்கிட்டானொளு. ரெண்டு பேர்ரெ ஊட்டுலெயு ஆக்கள் கூடெ. அவெகடெ ஊட்டுலெ மூணு அறெதா. ஒரு பொறெத்திண்ணெ, அதுக்கு அடுத்ததா ஒரு ஊடு, அதுக்குப் பொறவு ஒரு திண்ணெ. இது மூணும் ஒன்னுக்குப் பின்னாலெ ஒன்னா ஒட்டிக்கிட்டு இரிந்திச்சி. திண்ணெக்குள்ளெயு பொறெத்திண்ணெக்குள்ளெயு நெல்லு மூட்டெ அடுக்கி இரிக்கும். அதாலெ ராவேலெ படுக்கிறென்டா நெருக்கிக்கிட்டுத்தா படுக்கணு. அங்கெ எல்லா ஊடும் இப்பிடித்தா. அதாலெ ஆம்புளெப் புள்ளெயொளுக்கு ஒள்ளுப்பம் வயசி வரெக்குள்ளெயே கூட்டாளிமாரொடெ சேந்து எங்ஙினியாவது சும்மா இரிக்கிறெ ஊட்டிலெ படுக்கத் தொவெங்கிருவானொளு. படுக்கிறென்டா என்ன ராவு பன்னென்டு, ஒரு மணிக்குப் பொறவுதா படுக்கிறெ. அது மட்டுக்கும் ரோட்டிலெ இரிந்து கதெக்கிறெ, இல்லாட்டி செகென்ட் சோ படம் பாக்கெப் போறெ.

ராவு ஓம்பது மணிச் செய்தி முடிஞ்சி ஒள்ளுப்ப நேரத்தாலெ குந்திலெ ஆக்கள் கூடெத் தொவெங்கிருவாகெ. வயசிக்கு ஏத்தாப்பலெ பாட்டி பாட்டியா குந்திலெ இரிந்து கதெச்சிக்கிட்டு இரிப்பாகெ. செகென்ட் சோ படம் முடிஞ்சி வாறெ ஆக்கள் ஸ்டார் ஹோட்டல்லெ தேத்தண்ணி குடிச்சிப்புட்டு வருமட்டு குந்திலெ யாராவது கதெச்சிக்கிட்டே இரிப்பாகெ. அதுக்குப் பொறவுதா சிரிப்புச் சத்தமுங் கதெச் சத்தமும் ஓஞ்சி போவும்.

அபூபக்கரும் நிசாரும் சோத்து நெய்னா காக்காடெ காதரொடெ சேந்து அவெகெடெ பழெயெ ஊட்டுலதா படுத்தாகெ. படுக்கிறத்தொடெ ஏ.எல். பாடத்தெயு அங்கதா படிச்சாகெ. சோதினெயிலெ அபூபக்கர் நல்லா பாஸ் பண்ணி கெம்பசுக்கு எடுபட்டுட்டா. ஆனா நிசார் பெயிலா பீத்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவெனொளு சோதினெ எடுக்கிறெ காலத்திலதா ஊரிலெ வன்செயல் வந்திச்சி. தமிழ்ப் பொடியனொளு ஊருக்குள்ளெ பூந்து கடெயெ கொள்ளெ அடிக்கிறெ, ஆக்கனெக் கடத்திறெ, கொல்றெ எண்டு ஒவ்வொரு நாளும் ஏதாவது நடந்துக்கிட்டே இரிந்திச்சி. அதுக்குப் பொறவு ஊர் நெலெமெ முத்துலும் மாறிப் பீத்திது. இப்பெ யாருங் குந்திலெ இரிக்கிறேல்லெ. தியேட்டர்லெ படம் ஓர்ரெதில்லெ. இசாவுக்கு பொறவு ஒத்தரும் ரோட்டிலெ நிக்கிறேல்லெ. வெள்ளாமெ செய்யிறதெல்லா பெரியெ பெரெச்சினெயா பீத்திது. ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா ஆக்கள் வெள்ளாமெ செய்யிறதெ உட்டுட்டாகெ. அதாலெ ஊரிலெ கனெக்கெ ஆக்களுக்கு தொழிலில்லாமெ பீத்திது. கஸ்டமும் வந்திட்டு. அதாலெ ஆம்பிளெயும் பொம்பிளெயுமெண்டு கனெ சனம் வெளிநாட்டுக்கு போவெத் தொவெங்கிட்டாகெ.

நிசார் ரெண்டு தரக்கம் சோதினெ எடுத்துப் பாத்தா. பாஸ் பண்ணேலாமெ பீத்திது. கடெசியா, சப்பு வேலெ பாக்கிறெ மக்கீனெப் புடிச்சி முப்பதாயிரம் ரூவா காசுங் கட்டி ஒருமாரி சவூதிக்கு ரைவரா வந்திட்டா. பரீத் நானாதான் அவெனுக்கு காசி கடனாக் குடுத்தாரு. அவெரு இப்பெ நல்லெ வசதியா இரிக்காரு. சுலைமான் போடியார்ரெ மகெளத்தான் அவரு கல்யாணம் முடிச்சிக்காரு. அவரு பேங்கிலெ வேலெ செய்யிறாரு. அதோடெ பெரியெ கடெ, லொறியெல்லா வெச்சிக்காரு.

நிசார்ரெ கெட்டெ காலம். அவெ வேலெக்கு வந்தெ எடெம் ஒரு மிஸ்கீன் பொம்புளெயிரெ ஊடு. அவெ ஒரு கெழெவி. அவெடெ மொகெத்திலெ சிரிப்பெண்டெ சாமானெயே பாக்கேலா. அவெ மிஸ்கீன்தா. ஆனா அவெக்கிட்டெ மூனு கார் இரிக்கி. அதுலெ ஒன்னெத்தான் நிசார் ஓர்ரான். காத்தாலெயொடெ அந்தெக் கெழெவியெ ஏத்திக்கிட்டு அவெ சொல்றெ ஊட்டுக்குப் போவான். அவெ அந்தெ ஊட்டுக்குள்ளெ பீத்து, அவெகெ குடுக்கிறெ காசெ வேங்கிக்கிட்டு வருவா. இல்லாட்டி அவெவெ ஏத்திக்கிட்டு கடெக்கு போவான். அவெ அங்ஙினெ சாமானெ வாங்குவா. அதெயெல்லாம் ஏத்திக்கிட்டு மறுவாடியும் ஊட்டுக்கு வருவான். இதுதா அவென்டெ வேலெ. வேலெ ஒன்னுங் கஸ்டமில்லதா. ஆனா கெழெவி ஒழுங்கா சம்பளம் குடுக்கெ மாட்டா. அதோடெ ஒரு மிஸ்கீன் பொம்புளெக்கிட்டெ வேலெ செஞ்சி அவெக்கிட்டெ கை நீட்டி சம்பளம் வாங்கிறத்தெ நெனெக்கெ நிசாருக்கு சரியானெ வெக்கமா இரிந்திச்சி. என்டாலு என்ன செய்யலா? முப்பதாயிரம் ரூவா கட்டி இங்கெ வந்திக்கா. அதுவும் பரீத் நானாக்கிட்டெ கடன் வாங்கித்தா வந்திக்கா. அந்தெ கடனெத் திருப்பி குடுக்கணு. இனி ஊட்டு நெலெமெ வேறெ, பெரியெ கஸ்டமா இரிக்கி. எல்லாத்தயு நெனெச்சி அவெ பல்லெக் கடிச்சிக்கிட்டு இங்ஙினெ வேலெ செய்யிறா. வெள்ளிக் கெழெமெ அவெனுக்கு லீவு. அன்டெக்கி கெழெவிக்கிட்டெ எப்பிடியாவது சண்டெ புடிச்சி, காரெ எடுத்துக்கிட்டு, அவென்டெ ஊராக்கள் இரிக்கிறெ எடெத்துக்கு பீத்திருவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாராவரு ஒராள்ரெ ரூமிலெ தங்கி, சோறு கறியாக்கி தின்டுபுட்டு ராவுலதா திரும்பி வருவா. அன்டு மட்டுந்தா அவெ சந்தோசமா இரிப்பா. வன்வே ரோட்டுலெ சரியானெ வெசெயா காரெ ஓர்றெ, ஊராக்களொடெ முஸ்பாத்தியா இரிக்கிறெ, ஊர்க் கதெயெல்லா கதெக்கிறெ என்டு அந்தெ ஒரு நாளும் நல்லெ சந்தோசமா பீத்திரும். பொறவு ராவுலெ கெழெவிடெ ஊட்டுக்கு வந்தா மத்தெ நாள்லெ இரிந்து மறுவாடியு அதே வேலெ தொவெங்கிடும்.

நிசார் மஹ்ரிப் தொழுதுபுட்டு ரூமிலெ இரிக்கக்குள்ளதா அவனுக்கு போன் வந்திச்சி. மொக்கன் முஸ்தபா காக்காடெ பொடியெ அனீஸ்தா போன்லெ கதெச்சா. அவெனுஞ் சவூதியிலதா வேலெ செய்யிறா.

"டேய் நிசார் ஊர்லெ கொழப்பமான்டா. இப்பதா போன் வந்திச்சி. ஆக்களெல்லா பள்ளிக்கொடத்திலெ பீத்து இரிக்காங்களா. பிளேன்லெ இரிந்து குண்டு போட்டத்தாலெ பெரியபாலத்திலெ பள்ளிவாசலுக்குள்ளெ இரிந்தெ கனெக்கெ ஆக்கள் மெளத்தாப் பீத்தாகலா. யாராக்களென்டு இன்னுஞ் சரியா தெரியேலியாம். ஒங்கடெ பெரியெ மாமா, அதா அத்துக்கார் மாமா அவெகளும் மெளத்தா பீத்தாகலா. கனெக்கெ பேருக்கு காயமாம்."

ரெண்டு நாளெக்குள்ளெ ஒள்ளுப்பம் ஒள்ளுப்பமா எல்லாச் சங்கதியு தெரியெ வந்திச்சி. புலிக்கும் அரசாங்கத்துக்கும் எடெயிலானெ சமாதான ஒப்பந்தம் முறிஞ்சி பீத்திதா. அதுக்கு பொறவு புலி ஊரிலெ இரிந்தெ பொலிஸ் ஸ்டேசனெத் தாக்கியிரிக்கானொளு. அதிலெ பொலீஸ்காரன் அடிச்செ செல் உழுந்து பன்னென்டு பேர் மெளத்தா பீத்தாகெ. இருவத்தஞ்சி பேருக்கிட்டக் காயமா. அதிலெ ஒரு செல் அத்துக்கார் மாமாடெ சுபுஹானி மச்சியிடெ ஊட்டுலயும் பீத்து உழுந்திரிக்கி. அதிலதா அத்துக்கார் மாமா மெளத்தாப் பீத்திரிக்காகெ. சுபுஹானி மச்சியிரெ எளெயெ பொடியன் சாஹிருக்கு ஒரு கால் கழன்டு பீத்திது.

ரெண்டு கெழெமெக்குப் பொறவு அபூபக்கர்க்கிட்டெ இரிந்து நிசாருக்கு கடிதம் வந்திரிந்திச்சி. அது ஒரு பெரிய கடிதம்.

அஸ்ஸலாமு அலைக்கும்

அன்புள்ளெ நிசார்.

இஞ்செ நாங்கெ எல்லாருஞ் சொகமா இரிக்கம். ஒன்டெ சொகத்துக்கு எல்லாம் வல்லெ அல்லாவெப் பிரார்த்திக்கிறேன்.

நம்மடெ ஊரிலெ கொஞ்செ நாள்லெ கனெக்கெச் சங்கதி நடந்து பீத்துது. நீயுங் கேள்விப்பட்டிரிப்பா. எல்லாம் இந்த புலிகளாலெ வந்ததுதா. நம்மடெ மார்க்கட்டுக்கிட்டெ இரிந்து அவெனொளு பொலிஸ் ஸ்டேசனத் தாக்கிக்கானொளு. அதுக்கு பதிலா பொலிஸ்காரன் அங்கினெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிந்து செல் அடிச்சிக்கா. அதெல்லாம் வந்து நம்மடெ ஊருக்குள்ளதா உழுந்திச்சி. பெரியெ பாலத்தடியிலெ நின்டு புலி விமானத்துக்குச் சுட்டிக்கா. விமானத்திலெ இரிந்தவெ போட்டெ குண்டு பெரியபாலப் பள்ளிவாசலுக்குள்ளெ வந்து உழுந்துட்டு. அதிலெ பதினொரு பேர் மௌத்தா பீத்தாகெ. நம்மடெ பெரிய மாமாவு மௌத்தாப் போனதெக் கேள்விப்பட்டிரிப்பா. அவெகெ செல் உழுந்துதான் மௌத்தாப் போனாகெ. பாவம். அவெகெ ஒத்தருக்கு ஒன்னுஞ் செய்யாதெ ஆள். இவ்வளவு வயசிக்குப் பொறவு இப்பிடி செல் உழுந்து மௌத்தாப் பீத்திரிக்காகெ. எல்லாம் அல்லாடெ எழுத்து. சுபுஹானி மச்சிடெ சாஹிருக்கு வலது காலெக் கழட்டியாச்சி. அவெ சரியானெ கெட்டிக்காரன். இனிமெ என்ன செய்யப் போறானோ தெரியேலெ. அவெகடெ ஊட்டெ பீத்து பாக்கேலாமெ இரிக்கி. அம்புட்டு மனவருத்தமா இரிக்கி. பிச்சம்மா பெரியம்மா இத்தா இரிக்காகெ. சாஹிரெ கண்டி ஆசுபத்திரியிலெ வெச்சிரிக்காகெ. இன்னும் ரெண்டு மூனு மாசத்துக்கு பொறவுதா ஊட்டெ கூட்டிக்கிட்டு வரலாமாம்.

இப்பெ நம்மடெ ஊரிலெ கனெக்கெப் பேர் ஊர்காவல் படெயிலெ சேந்திரிக்காகெ. ராவேலெ எல்லாரும் ஊரெச் சுத்தி காவல் பாக்கிறாகெ. நாலஞ்சி பேர் ஆமியிலயும் சேந்திரிக்காகெ. சுபுஹானி மச்சிடெ ரெண்டாவது பொடியன் சனூஸ் அவனும் ஆமியிலெ சேந்திட்டா. அவனுக்கு பெரியமாமா மௌத்தா போனது, அவென்டெ தம்பி சாஹிருக்கு காலெக் கழட்டினது எல்லாஞ் சரியானெ கோவம். அதாலெ அவெ ஆமியிலெ சேந்திட்டா.

நம்மடெ ஊர் இப்பெ முந்திமாரி இல்ல. ராவேல்லெ எல்லா முந்திமாரி கனெநேரத்துக்கு ரோட்டிலெ திரியேலா. இசாவுக்கு பொறவு யாரும் வெளியெ போறெதில்லெ. ராவேலெ ஒத்தரும் குந்திலயு இரிக்கிறேல்லெ. தமிழாக்களும் இப்பெ முந்திமாரி நம்மடெ ஊருக்குள்ளெ வாறேலெ. பொம்புளெயொளு மத்திரந்தா வாறாகெ. அதுவும் ஆசுபத்திரிக்கு இல்லாட்டி கொள்ளி விக்கிறத்துக்கு. நம்மடெ ஆக்களும் இப்பெ தமிழாக்கள்ரெ பக்கத்துக்குப் போறேல்லெ. நம்மடெ ஆக்கள்லெ கொஞ்செப் பேர் செஞ்செ வெள்ளாமயயு பீத்து பாக்கேலாதெ நெலெமெ வந்திக்கி. இனி இந்தெ நெலெமெ எப்பெ தீருமென்டு தெரியேலெ. எல்லாரும் ராப்பட்டா பயத்தொடதான் இரிக்கோம். நீ இந்தெ நாளெயிலெ ஊருக்கு வாறெத்தெப் பத்தி ரோசிக்காதெ. எனெக்கிக் கெம்பஸ் முடிஞ்சிட்டு. இனிமெ எப்பிடியாவது ஒரு வேலெ எடுக்கணும். பாப்பம். ஆண்டவன் நாடினெமாரித்தா எல்லாம் நடக்கும்.

இத்துடன் இதெ முடிக்கிறேன்.

இப்படிக்கு

அன்புள்ளெ

அபூ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிசார் அன்டெக்கி ராவு நல்லா நெத்திரெ கொள்ளேலெ. அவென்டெ மனசிலெ பெரிய மாமாதா வந்து வந்து பீத்திக்கிட்டு இரிந்தாகெ. அவெகெடெ மையத்துக்குக்குடி போவெக் கெடெக்கேலியே எண்டு அவெ சரியா மனவருத்தப்பட்டா. அத்துக்கார் மாமாடெ ஒசெந்தெ கறுத்தெ உருவம் அவென்டெ மனசிலெ தெளிவாத் தெரிஞ்சிச்சி. கடெசியா அவெ சவூதிக்கு வரெக்குள்ளெ அவெகளுக்கிட்டெ பீத்து சொல்லிப்புட்டுத்தா வந்தா. அவெகளுக்கு வயசி பீத்து, தோலெல்லாஞ் சுருங்கி பீத்திரிந்திச்சி. என்டாலும் எப்பவும் போலெ அவனுக்கு புத்தி சொன்னாகெ.

"தம்பி, இஞ்செ பாருப்பா. நீ வெளிநாட்டுக்கு போறா. கனெக்கெ காசி செலெவழிச்சித்தா போறா. அராலெ பாத்து நடெந்துக்கெ. சொந்தக்காரக்கள் இல்லாரெ ஊரென்டு நெனெச்சமாரியெல்லா நடெக்காரெ. ஏராவரு பொழெ செஞ்சா அங்கயெல்லா கையெ காலெ வெட்டுவானொளா. நீ ஒழெக்கத்தா போறா என்டெத்தெ மறந்திடாரெ. நமக்கு ஹறாமானெ சொத்தெல்லா வாணா."

ஒருதரக்கம் ராச்சாப்பாடு தின்டுபுட்டு எல்லாருந் திண்ணெயிலெ இரிக்கக்குள்ளெ உம்மா சொன்னது இப்பெ நிசாருக்கு நெனெவுக்கு வந்திச்சி.

"என்டெ புள்ளொயளா. அத்துக்கார் மாமாக்கோ இல்லாட்டி அவெகெடெ புள்ளெயளுக்கோ நீங்கெ ஒரு நாளும் பொழெயா நடெக்கப்படா. எனெக்கி எங்கெடெ வாப்பாவெ யாபகமில்லெ. நாஞ் சின்னெப்புள்ளெயா இரிக்கக்குள்ளியே அவெகெ மெளத்தாப் பீத்தாகெ. எனெக்கி என்டெ மூத்தெ காக்காரா வாப்பாமாரி. அவெகரா எங்களெ எல்லாரயும் பாத்தாகெ. வளத்து ஆளாக்கினாகெ. எங்களுக்கு ஊடு கட்டி தந்து கலியாணமும் முடிச்சி வெச்சாகெ. அவெகெ ஒத்தருக்கும் ஒரு கொறெயும் வெச்செரில்லெ. யாருக்கும் பொழெ செஞ்சருமில்லெ."

எத்தினியோ ஆயிரம் மைலுக்கப்பாலெ ஒரு ரூமுக்குள்ளெ தட்டத்தனியா படுத்திருந்தெ நிசார்ரெ மனசி கனெத்து பீத்திரிந்திச்சி. அவென்டெ தொண்டெ வெப்புசாரத்தாலெ கட்டிப் பீத்திது. கண்ணிலெ இருந்து தண்ணி வடிஞ்சிக்கிட்டே இரிந்திச்சி. அவெ தேம்பித் தேம்பி கத்தினா.

◀ டிசம்பர் 2006.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரைத் தேடி...

எங்கினெ தாண்டிரிக்கி என்டெ வேர்?
கனமாத் தாக்கும் ஒரு வரலாற்று மௌனம்
அறியாமெயிலெ ஒழெலும் ஓர் அறிவார்ந்தெ சமூகம்

தேடெத்தேடெ விரிந்தொசரும் கொழெப்பம்
தோண்டெத்தோண்டெ தொடெந்தொளிரும் இருட்டு
மிஞ்சிக் கெடெக்கிற மணிகளெயும்
ஒருக்கி தள்றெ நெலெமெயிலெ
வேரெத் தேர்றது அர்த்தமில்லாதெ வேலெயா?

அரெபியெ ஆனிடெ வீரியெ விந்து மத்திரம்
என்டெ கர்ப்பத்துக்கு காணாது.
அரெபியிலும் குறைஷியிலெ
ஒன்டெ பொறெப்பிடெ ஒசெத்தியெ நீ தேடெலாம்.
என்டாலும்,
இங்கினெ நம்மடெ இருப்பு நெலெச்சி நிக்கெ
இன்னும் கனெக்கெ வேணும்
எளியதென்டாலும் வலியதாய்.

ஒரு நூறே கொண்டெ பழங்குடியினர்
தமெக்கென்டு ஒரு கலாச்சாரம் பேணெக்குள்ளெ
நா மத்திரம் ஏன் வறெண்டெ வெற்றிடத்திலெ??
எது ஒன்டெ அடையாளம்??
என்னெப் பாத்து ஒத்தன் ஏளெனமாக் கேக்கெக்குள்ளெ

ஒரு பூர்வீகத்திரெ அவெமானத்தெச் சொமெக்கிறெ
வலி எனெக்கு.

இசெயில்லாதெ ஒரே மனிசன்
இந்தெ ஒலெகத்திலெ நா ஒத்தந்தானா?
உசிரெ தடவுறெ ஒரு பாட்டு எனெக்கென்டு இல்லியா?
இதெல்லாம் தேவெப்படாதெ
தனிச்செ பொறவி நானென்டா,
இதெயத்தெ உசுப்புறெ இசெஞனாய் என்டெ காக்காவும்,
உசிரெ உருவுறெ கொரெலொடெ என்டெ ராத்தாவும்
கலெயிலெ கரெயிறெ உருவமாட்டம் நானும்
இருப்பதேன்?

கூட்டு மறதியிடெ கொடுவினெயா இது?
தன்னெ மறுக்கிறெ தாழ்வொணெத்தியிரெ
சொச்சமா? இல்லேன்டா,
தன்னெயே மறக்கிறெ இழிநெலெயிரெ உச்சமா?

நெஞ்சழுத்திறெ கனெத்தொடெ
இதுக்குப் பொறவும் என்னாலெ படுக்கேலா.

காத்துப் பெருவெளியிலெ கரெஞ்சி கெடெக்கிறெ
என்டெ முன்னோர்ரெ பாட்டு
என்டெ உசிரெ மீட்டும்.

கோடிச்சிரிப்பொடெ கும்மாளமிட்டெ
கும்மியெசெயும் கம்படியும்
என்டெ வழியெ எனெக்கிக் காட்டும்.
எட்டித் தள்ளினாலும் ஒட்டி வந்து
கம்பீரமாய் ஒலிக்கிறெ பக்கீர்சையின்
வழித்தொணெயொடெ
என்டெ பயணம் நீளும்....

ஒடெஞ்சி கெடெக்கிறெ சியாரங்களும்
காலத்தாலெ முந்தினெ
அந்தெ நீண்டெ கபுறுகளும்
என்டெ முன்னோர்களெ
எனெக்கு அடெயாளங் காட்டும்!

ஒசெந்து நிக்கிறெ அந்தெ பாவாதமலெ
என்டெ பூர்வீகத்திரெ பழெமெயெ
என்டென்டைக்கும் புருசரச் சொல்லும்!

என்டெ வேர்
இந்தெ மண்ணிலெதா!

கலகம்
Kalaham Publication, Main Cross Road,
Valaichchenai - 05.
Tel: +94 65 2257176,
Mob: +94 77 3657428, +94 71 5123482
Email : kalahamsi@yahoo.com
ISBN 978-955-0397-00-6
9 789550 397006 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org